இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56

சுடர் 32 | கதிர் 120 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 13 ஞாயிற்றுக்கிழமை 26.03.2017

## கூட்டமைப்பின் நம்பிக்கையை பொய்யாக்கும் புதிய அரசமைப்பு

*பிரதியமைச்சர் ஹரீஸ் ஆரூடம்*

கொழும்பு, மார்ச் 26
தமிழர்களுக்கு முழுமையான தீர்வைத் தென்னிலங்கை தரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதீத நம்பிக்கையில் இருக்கின்றது. கூட்டமைப்பின் நம்பிக்கையைப் >> 52

## தமிழரின் பங்களிப்பின்றி நல்லிணக்க முயற்சிகள்

### சந்திரிகா முன்பாக வடக்கு முதல்வர் விக்கி விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 26
தமிழ் மக்களைப் பங்காளிகளாகக் கொண்டிராமல் நல்லிணக்க அமைதியைக் கட்டியெழுப்பும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் குற்றம் சுமத்தினார். இந்த முயற்சிகளை முன்னெடுக்கும் பணியகத்தின் தலைவி சந்திரிகா முன்பாகவே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.
தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய முதலமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:
முன்னாள் அரச தலைவர் சந்திரிகாவை வரவேற்பதில் மகிழ்சியடைகின்றேன். இந்த அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாமும் மிக முக்கியமானவை என்பதில் சந்தேகமில்லை. ஆனால், போர் முடிந்து 8 வருடங்களின் பின்னர் இவை செய்யப்பட்டுள்ளன. போரின் பாதிப்புக்கள் எப்படி அணுகப் >> 50

## பன்னாட்டு விசாரணைக்கு முன்னர் இணங்கிய மகிந்த இப்போ முதலைக் கண்ணீர்

*சாடுகிறார் சரத் பொன்சேகா*



கொழும்பு, மார்ச் 26
போர் முடிந்த கையோடு பான் கீ-மூனை இலங்கைக்கு அழைத்து போர்க்குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணை நடத்த இணங்கிய மகிந்த, இராணுவத்தைக் காட்டிக் >> 52

*விவசாய நிலங்களை விடுவிக்கக் கோரி*

## இராணுவத்துக்கு எதிராக திங்களன்று போராட்டம்

கிளிநொச்சி, மார்ச் 26
கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்கள அலுவலகங்களிலும் திணைக்கள நிலங்களிலும் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்றுமாறு கோரி அந்த மாவட்ட விவசாயிகள் நாளை திங்கட்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்தனர்.
வட்டக்கச்சிப் பண்ணையிலிருந்து கிளிநொச்சி மாவட்டச் செயலகம் வரை ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளதாக விவசாய >> 52

# காரணமின்றி படுகொலைகள் புரிந்தோருக்கு உரிய தண்டனை

**யாழ்ப்பாணத்தில் நேற்று வலியுறுத்தினார் சந்திரிகா**
**ராணுவத்துக்கு எதிராகச் செயற்படோம் என்றும் தெரிவிப்பு**



யாழ்ப்பாணம், மார்ச் 26
காணாமற்போன தங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று உறவினர்கள் கேட்கின்றனர். அவர்கள் இராணுவத்தைத் தூக்கு மேடைக்கு அனுப்புவது தொடர்பில் கூறவில்லை. போரில்லாமல் பொதுமக்களைக் காரணமின்றிக் கொலை செய்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். நாட்டைப் பாதுகாப்பதற்குப் போராடிய எமது ராணுவ வீரர்களுக்கு எதிராகச் >> 53

*நெல்சிப் முறைகேடு;*

## 22 மாதங்கள் கடந்தும் முடியாத விசாரணை

யாழ்., மார்ச் 26
"வடக்கு மாகாணத்தில் நெல்சிப் திட்டத்தில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான விசாரணை 22 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இன்னமும் முடிவடையவில்லை."
இவ்வாறு வடக்கு மாகாண தலைமைச் செயலாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
வடக்கு மாகாணத்தில் நெல்சிப் திட்டத்தில் நடந்ததாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட குழுவின் விசாரணை அறிக்கையை >> 52

*யாழ். மாநகர சபை ஊழல்;*

## குற்றவாளிகள் மீது உடனடி நடவடிக்கை

*வடக்கு முதல்வரைக் கோரும் பிரேரணை அடுத்த அமர்வில்*

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழல் மோசடிகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில் குற்றவாளியாகக் காணப்பட்டோர் >> 52

## தீர்மானத்தை நிறைவேற்ற தந்திரோபாயம் அவசியம்

*இலங்கை அரசிடம் வலியுறுத்துகிறது பிரிட்டன்*

கொழும்பு, மார்ச் 26
ஐ.நா. தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கான கால எல்லையுடனான தந்திரோபாயத்தை இலங்கை உருவாக்க வேண்டும்.
இவ்வாறு பிரிட்டன் அயலுறவுத்துறை மற்றும் பொதுநலவாய பிரதி அமைச்சர் ஜொய்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்படி விடயத்தைச் >> 52




அப்ப இரகசியக் கடத்தலும் செய்யலாம் எண்டு சொல்லுவாரோ...!

## இரகசியக் கூலிப் படையை வைத்திருக்கலாம் ராணுவம்

*கூறுகின்றார் கோத்தபாய*



கொழும்பு, மார்ச் 26
இராணுவத் தளபதியின் கண்காணிப்பில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இரகசியக் கூலிப் படையைச் செயற்படுத்த முடியும். இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
கோத்தபாய ராஜபக்ச தனக்குக் >> 52

## பயங்கரவாதிகளால் கண் இழந்தும் கோபமே கொள்ளாதவர் சந்திரிகா

*மாவையின் முன்னிலையில் கூறினார் ஆளுநர்*

யாழ்., மார்ச் 26
"முன்னாள் அரச தலைவர் சந்திரிகா மீது பயங்கரவாதிகள் குண்டுத் தாக்குதல் நடத்தினர். அவர் ஒரு கண்ணை இழக்கவேண்டிய நிலை வந்தது. இந்தச் சம்பவம் நடந்திருந்தாலும் அவருக்குக் கோபம் எதுவுமில்லை".
இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.
'பயங்கரவாதிகள்' என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா முன்பாகவே ஆளுநர் மேற்கண்டவாறு உரையாற்றினார்.
தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக் >> 52

*நீதிப் பொறிமுறையில் பங்கேற்றாலும்*

## வெளிநாட்டு நீதிபதிகள் விசாரணைக்கு வரார்

*கூறுகிறார் ஹர்ச டி சில்வா*

கொழும்பு, மார்ச் 26
நிலைமாறுகால நீதிப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்றாலும் விசாரணைகளில் ஈடுபடமாட்டார்கள் என்று பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார். >> 52

## யாழ்ப்பாணப் பயணத்தை கைவிட்டார் ரஜினிகாந்த்

*இனிமேல் அப்படி ஒரு வாய்ப்பு வந்தால் அதனை அரசியலாக்காதீர் என்வும் கோரிக்கை*

சென்னை, மார்ச் 26
யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் தனது பயணத்தைக் கைவிடுவதாகத் தெரிவித்துள்ள சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த், இனிவரும் காலங்களில் இலங்கைக்குச் செல்லும் பாக்கியம் கிடைத்தால் தயவு >> 52






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொலிகண்டியில் நீர்வழுங்கலை ஆரம்பித்து வைத்தார் சந்திரிகா

யாழ்ப்பாணம், மார்ச் 26

தேசிய நல்லிணக்க ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் அனுசரணையுடன் வடமராட்சியில் பொலிகண்டி தெற்கு கிராமிய நீர் வழுங்கல் திட்டத்தை முன்னாள் அரச தலைவரும் செயலணியின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று ஆரம்பித்து வைத்தார்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் த. ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், செயலணியின் வடக்கு மாகாண இணைப்பாளர் வே.விஸ்வலிங்கம் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் உட்பட செயலணி அதிகாரிகள், பிரதேச அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர் .



தேசிய நல்லிணக்க ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் அனுசரணையுடன் உடுப்பிட்டியில் நிறுவப்பட்ட பொருளாதாரப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டம் செயலணியின் பணிப்பாளர் நாயகம் எஸ். ஜெயசிங்கவால் சம்பிரதாயபூர்வமாக நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

தேசிய நல்லிணக்க ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் நிதிப் பங்களிப்புடன் சுமார் 30 இலட்சம் ரூபா செலவில் உடுப்பிட்டி தெற்கு ஆனைவிழுந்தான் குளம் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் சந்திரிகா கலந்துகொள்வதாகத் திட்டமிட்ட போதும், இறுதி நேரத்தில் அவர் பங்கேற்கவில்லை. இதனால் அவர் சார்பாக நிகழ்வில் கலந்துகொண்ட செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சிவஸ்ரீ தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் செயலணி அதிகாரிகள், பிரதேச அலுவலர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அதன் பின்னர் வடமராட்சி, கரணவாய் மேற்கு கல்லுவம் பகுதியில் 4 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அன்னாசிப் பயிர்ச் செய்கையைத் தேசிய நல்லிணக்க ஒருங்கிணைப்பு அலுவலக நிகழ்ச்சித் திட்டச் செயலணியின் பணிப்பாளர் நாயகம் எஸ்.ஜெயசிங்க பார்வையிட்டார். (த-4-26-108)



# குழந்தையின் தொப்பி மீது சந்திரிகாவுக்கு வந்த ஆசை

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட ஒரு குழந்தை அணிந்திருந்த தொப்பியை எடுத்துவைத்துக் கொண்டு அன்பாகக் கதை கேட்டுச் சிறிது நேரம் செல்லமாக நேரத்தைப் போக்கினார். அதனைப் பார்த்து அந்த இடத்தில் நின்றிருந்தவர்களும் சந்தோசத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார். அதில் மாம்பழக் கிராமங்கள் அமைக்கும் திட்டத்தின் ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார். அந்த நிகழ்வில் மா மரக் கன்றுகளை நட்டுவைத்த சந்திரிகா அங்குள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போது அங்கு குடும்பத் தலைவர் ஒருவர் தூக்கி வைத்திருந்த கைக்குழந்தையை சந்திரிகா அன்பாகக் கதை கேட்டார். அந்தக் குழந்தையிடம், தொப்பியைத் தருகின்றீர்களா? என்று கேட்டுச் சிறிது நேரம் குழந்தையுடன் தனது நேரத்தைப் போக்கினார். (த-4-8)

*ரஜினியின் வருகை ரத்து*

# எதிரும் புதிருமான கருத்து தமிழகத்தில்

சென்னை, மார்ச் 26

சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த் யாழ்ப்பாணத்துக்கான தனது பயணத்தை இரத்துச் செய்துள்ள நிலையில், இது தொடர்பில் தமிழகத்தில் எதிரும் புதிருமான கருத்துக்கள் அரசியல்வாதிகளினாலும், திரைத்துறையினராலும் வெளியிடப்பட்டு வருகின்றன.

தமிழக பா.ஜ.க தலைவர் தமிழிசை சௌந்தரராஜன், ரஜினிகாந்த் இலங்கை சென்றிருந்தால் அங்குள்ள தமிழர்களுக்கு ஆறுதலாக இருந்திருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கூறுகையில், இலங்கைப் பயணத்தை ரஜினிகாந்த் ரத்து செய்தது மகிழ்ச்சி தருகிறது. விளம்பரம் தேடுவதற்காக நாங்கள் யாரும் தலையிடவில்லை. ரஜினிகாந்த் வந்தால் பாதகமாக அமையும் என்று இலங்கைத் தமிழர்கள் கூறினர். அவர் மீது எங்களுக்கு எந்தக் காழ்ப்புணர்ச்சியும் இல்லை. லைக்கா ஏற்பாட்டில் நான் இலங்கை செல்வதாகத் தமிழிசை கூறுவது தவறு. சிங்களர்களின் போர் புனிதப் போர் அல்ல. தமிழர்களின் போர்தான் புனிதப்போர்என்றார்.

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, ரஜினியிடம் அலைபேசியில் கூறியதை நான் விளம்பரம் செய்யவில்லை. விளம்பரத்துக்காக ரஜினிகாந்தின் பயணத்தை அரசியலாக்கவில்லை. ரஜினி தவறான தகவல்கள் அடிப்படையில் இலங்கை செல்லவிருந்தார். ரஜினி ஒரு மாபெரும் மனிதர் என்றார்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன், இலங்கைப் பயணத்தை ரத்து செய்ததற்கு ரஜினிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். முள்ளிவாய்க்கால் துன்பங்களை ரஜினிகாந்த் நேரில் கேட்டறிய வேண்டும்' என்றார்.

அ.தி.மு.க அம்மா கட்சியின் செய்தித் தொடர்பாளர் வைகை செல்வன் கூறுகையில், தமிழர்களின் உணர்வைப் புரிந்து பயணத்தை ரஜினி ரத்துச் செய்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

எச்.ராஜா தெரிவிக்கையில், மகிந்த ராஜபக்சவிடம் பரிசு பெற்றவர்கள் கூறிய கருத்துக்கு ரஜினி அடிபணிந்திருக்கக் கூடாது என்றார். (த-5)

# எமது நிலங்களை மீட்டெடுப்பதற்கு உதவி புரியுங்கள்

## *வலி. வடக்கு மக்கள் நேற்று சந்திரிகாவிடம் கோரிக்கை*

யாழ்ப்பாணம் மார்ச் 26

இராணுவம் அமைத்துள்ள முகாம்களை அகற்றி எங்கள் நிலங்களை மீளக் கையளிக்குமாறு காணிகளைப் பறிகொடுத்த மக்கள் முன்னாள் அரச தலைவர் சந்திரிகாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட முன்னாள் அரச தலைவர் சந்திரிகா தெல்லிப்பழை, வீமன்காமம் பகுதியில் சிறுவர்களுக்கான ஆரம்ப சுகாதார வைத்தியசாலைக் கட்டட அடிக்கல் நடும் விழாவில் கலந்து கொண்டார்.

இதில் பங்கேற்ற வயோதிபப் பெண்மணி ஒருவர், எங்கள் காணிகளை விடுவதாகப் பல தடவைகள் வாக்குறுதிகள் தந்தும் இன்று வரை காணிகள் விடுவிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார்.

அவர் தெரிவிக்கையில், அடிக்கல் நடும் விழா நடைபெற்ற பிரதேசத்துக்கு அண்மையில் உள்ள எங்கள் விவசாய நிலத்திலேயே இராணுவ முகாம் அமைந்துள்ளது. நாங்கள் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றோம். நீண்ட காலமாக எங்களின் காணிகளை இராணுவம் கையகப்படுத்தி வைத்துள்ளது என்றார்.

இதன்போது சந்திரிகா, உங்கள் காணிகளில் இராணுவத்தினர் தற்போதும் விவசாயம் செய்து வருகின்றனரா? என வினாவினார். அதற்கு மூதாட்டி, முன்னர் விவசாயம் செய்தனர். இப்போது என்னவென்று தெரியவில்லைஎன்றார்.

இதன்போது, உங்கள் காணிகளை விடுவிப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம். உங்கள் குறைகளை நான் குறித்து வைத்துக்கொள்கின்றேன். நிச்சயமாக அடுத்த கட்டக் காணி விடுவிப்பின்போது உங்கள் பிரதேசத்தையும் கவனத்தில் எடுத்துக் கொள்கின்றேன் என்று பதிலளித்தார். (த-8)

# 12 இந்திய மீனவர் நேற்று இரவு கைது

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணம் நெடுந்தீவுக்கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 12 பேர் நேற்றிரவு கைது செய்யப்பட்டனர். 2 படகுடன் அவர்கள் கைதுசெய்யப்பட்டுக் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என்று கடற்படைத் தகவல்கள் தெரிவித்தன.

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களே கைது செய்யப்பட்டனர். அவர்கள் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் இன்று ஒப்படைக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஏற்கனவே யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 18 இந்திய மீனவர்களும் வவுனியா சிறைச்சாலையில் 8 இந்திய மீனவர்களுமாக மொத்தம் 26 இந்திய மீனவர்கள் இலங்கைச் சிறையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-101)

# ஜெனிவாவில் ஒரு முகம் இங்கு இன்னொரு முகம்

## *அரசைச் சாடுகிறார் வாசுதேவ*

கொழும்பு, மார்ச் 26

கலப்பு நீதிமன்றத்தையும் வெளிநாட்டு நீதிபதிகளையும் ஏற்கப் போவதில்லை என்று அரசு ஒருபோதும் ஜெனிவாவில் கூறவில்லை. இங்கு மாத்திரமே இவ்வாறான கருத்துக்களை அரசு வெளியிடுகின்றது. கூட்டு அரசின் இரட்டை முகத்தைச் சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசு தேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு 2015ஆம் ஆண்டு அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியதே முதலில் தவறானது. கலப்பு நீதி மன்றத்தையும், பன்னாட்டு விசாரணையாளர்களையும் நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

கூட்டு அரசு இலங்கை மக்களிடம் ஒரு கருத்தைக் கூறுகிறது. ஜெனிவாவில் சென்று மற்றுமொரு கருத்தைக் கூறுகிறது. ஜெனிவாவில் ஒரு சந்தர்ப்பத்திலாவது கலப்பு நீதிமன்றத்தையும், பன்னாட்டு விசாரணையாளர்களையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை கூறவில்லை. இந்த அரசு மக்களை ஏமாற்றி வருகிறது. பன்னாட்டு உதவி இல்லாமல் இயங்க முடியாது என்பது உண்மை. அதனால் பன்னாட்டு உபதேசங்களையும், தொழில்நுட்பத்தையும் பெற்றுக் கொள்வதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம் - என்றார். (த-5)

# வடக்கு பிரதி அஞ்சல்மா அதிபராக கனகசுந்தரம்

வரணி,மார்ச் 26

வடக்கு மாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபராக க.கனகசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை பிரதி அஞ்சல்மா அதிபராகக் கடமை புரிந்த இ.இரத்தினசிங்கம் சேவையில் இருந்து இளைப்பாறியமையை அடுத்து க.கனகசுந்தரம் குறித்த வெற்றிடத்துக்கு தபால் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். (த-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனஞ்செயனின் கைபேசியை கோருகின்றார் இளம்பெண்

யாழ்ப்பாணம், மார்ச் 26
யாழ்ப்பாணத்தில் பல வாள் வெட்டுச்சம்பவத்துடன்தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கொழும்பில் கைது செய்யப்பட்டுக் கொண்டு வரப்பட்ட தனஞ்செயனின் கைத்தொலைபேசியைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு தெல்லிப்பழையைச் சேர்ந்த பெண் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரை நாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நீண்ட காலமாக தேடப்பட்டு வந்த தனா எனப்படும் தனஞ்செயன் உள்ளிட்ட குழுவினர் கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் தலைமறைவாக இருந்தவேளை பொலிசாரினால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் கொண்டு வரப்பட்டனர்.

இவ்வாறு கொண்டு வரப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறுதடுத்து வைக்கப்பட்டுள்ள தனஞ்செயனின் காதலி எனத் தன்னை அடையாளம் செய்த பெண் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரைத் தொடர்பு கொண்டுள்ளார். தனஞ்செயனின் பாவனையில் இருந்த கைத்தொலைபேசியைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு அவர் பொலிஸாரிடம் கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கையை ஏற்காத பொலிஸார், இது சட்டத்துக்கு உட்பட்ட விடயம். குறித்த அலைபேசி நீதிமன்றிலேயே பாரப்படுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளனர். (த-101)



## போராட ஆரம்பித்து ஒரு வருடம் பூர்த்தி ஆயினும் காணிகள் கைக்கு வரவில்லை

### கேப்பாபிலவு மக்கள் விசனம்

முல்லைத்தீவு, மார்ச். 26
கேப்பாபிலவில் உள்ள பூர்வீகக் காணிகளைச் சுவீகரித்து முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தை அமைத்துள்ள இராணுவத்தை வெளியேறுமாறு கோரி நாங்கள் உணவு தவிர்ப்பு போராட்டம் மேற்கொண்டு நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது. ஆயினும் எமது காணிகள் விடு விக்கப்படவில்லை. இப்போதும் நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என அந்த மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை சொந்தக் காணிகளில் மீள்குடியேற்று மாறு வலியுறுத்திக் கடந்த வருடம் மார்ச் மாதம் 22ஆம் திகதி வேலாயுதம் ஆறுமுகம்பிள்ளை என்பவர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். வடக்கு மாகாண முதலமைச்சரின் உறுதிமொழியை அடுத்து மார்ச் மாதம் 25ஆம் திகதி அவர் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் நியமித்த குழு கேப்பாபிலவுக் காணிகள் தொடர்பாக ஆய்வு செய்து, இராணுவ முகாம்களை தென்மேற்குப் பகுதியில் உள்ள அரச காணிகளுக்கு நகர்த்துவதன் மூலம் பொதுமக்களுக்குச் சொந்தமான காணியில் மக்களைக் மீள்குடியேற்றலாம் எனத் தெரிவித்திருந்தது.

கேப்பாபிலவுக் கிராம அலுவலர் பிரிவை முழுமையாக இராணுவம் சுவீகரித்த நிலையில் மக்களின் தொடர் போராட்டங்களின் பயனாக இந்த வருட ஆரம்பத்தில் 243 ஏக்கர் விடுபட்டது. அதனைத் தொடர்ந்து பிலக்குடியிருப்பு மக்களின் தொடர் போராட்டத்தின் பின் 42 ஏக்கர் விடு விக்கப்பட்டது. தற்போது கேப்பாபிலவு கிராம அலுவலர் பிரிவில் பிலக்குடியிருப்பு, சீனியாமோட்டை, சூரிபுரம், பிரம்படி போன்ற கிராமங்கள் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டுள்ளன.

கேப்பாபிலவில் பூர்வீகமாக வாழ்ந்துவந்த மக்கள் தமது 482 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி கடந்த 25 நாள்களாகத் தொடர் அமைதிவழிப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வருடம் உணவு தவிர்ப்புப் போராட்டதில் ஈடுபட்ட ஆ.வேலாயுதம்பிள்ளை தனது காணிக்குள் மீள்குடியேறமுடியாமல் இன்றும் தொடர் அமைதிவழிப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார். (த-7)



## [இரா]ணுவத் தலைமை அதிகாரி வடக்கு முதல்வருடன் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 26
இராணுவத் தலைமை அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்ற யாழ்ப்பாண இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இராணுவத்தின் இரண்டாவது நிலைப் பதவியான இராணுவத் தலைமை அதிகாரி பதவிக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அவர் நியமிக்கப்பட்டார். அவ்வாறு நியமிக்கப்பட்ட பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சரை நேற்றுமுன்தினம் தளபதி சந்தித்துக் கலந்துரையாடினார். (த-8)

## வாள்வெட்டு சந்தேகத்தில் இருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம் மார்ச் 26
வடமாராட்சி, அல்வாய்ப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் இருவரைப் பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அல்வாய் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு முதியவர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார். எனினும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படாததையடுத்து அப்பகுதி மக்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு முன்பாக உள்ள ஆலயம் ஒன்றில் கடந்த திங்கட்கிழமை இரவு தஞ்சம் புகுந்தனர்.

மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தித் தரப்படும் என்று பொலிஸார் வாக்குறுதி அளித்ததையடுத்து மக்கள் தமது வீடுகளுக்குச் சென்றிருந்தனர்.

இந்த நிலையில் பொலிஸாரின் நடவடிக்கையால் நேற்று முன்தினம் குறித்த வாள்வெட்டுச் சம்பவத்தில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் பருத்தித்துறை நீதிவான் நிதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒருவரை நேற்றுக் கைது செய்ததாகவும், அவரை மன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம். மார்ச்.26
மருதடிவறுத்தலைவிளான் வித்துவ சிரோன்மணி சி.கணேசையர் நினைவாலய காசி பாணலிங்க ஸ்தாபனமும் வித்துவ சிரோன்மணி சி.கணேசையரின் மேகதூத காரிகையுரையும் அவர் தமிழ் பணியாற்றிய தொகுப்பாக கணேசமணி என்ற நூல் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மருதடி வறுத்தலைவிளானில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்து கொண்டு நூல்பற்றிய சிறப்புரை ஆற்றவுள்ளார். வித்துவ சிரோன்மணியின் மாணக்கர் ச.விநாயக மூர்த்தியும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். (த-ரி)

## கிழக்கில் மது உற்பத்திச்சாலை மீது நீதிமன்றத் தடையுத்தரவு பெறப் பணிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 26
சர்ச்சைக்குரிய மட்டக்களப்பு கல்குடா மதுபான உற்பத்தித் தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகளை நிறுத்தும் வகையில், நீதிமன்றத் தடை உத்தரவைப் பெறுமாறு வாழைச்சேனைப் பிரதேச சபையின் செயலாளருக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக இதற்கு முன்னர் மாகாண சபை ஏகமனதாக ஒரு தீர்மானத்தையெடுத்து, அதனை வாழைச்சேனை பிரதேச சபையின் செயலாளருக்கு அனுப்பி வைத்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிழக்கு மாகாணத்தில் போதைப்பொருள் மற்றும் மதுப் பாவனையை நிறுத்துவதற்காகப் பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். இதனடிப்படையிலேயே போதைப் பொருளுக்கு எதிரான மாபெரும் பேரணியொன்றையும் அரச தலைவர் மைத்தரிபால சிறிசேனவின் தலைமையில் ஏறாவூரில் நடத்தியிருந்தோம். எமது மாகாணத்தில் போருக்குப் பின்னரான காலப் பகுதியில் போதைப் பொருளின் பாவனை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. கிழக்கில் மேலும் போதைப் பொருள் பாவனையை அதிகரிக்கின்ற நடவடிக்கைகளுக்கு இடமளிக்க முடியாது. கிழக்கிலிருந்தும், நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் போதைப் பொருள் முற்றாக ஒழிக்கப்படவேண்டும் என்பதில் கிழக்கு மாகாண சபை உறுதியாக இருக்கின்றது.

அத்துடன் இந்த மதுபானத் தொழிற்சாலை தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை தொடர்பில் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றேன். ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தும் கலாசாரம் மீண்டும் தலை தூக்குவதற்கு இடமளிக்க முடியாது. தாக்குதலுக்கும் அச்சுறுத்தலுக்கு முள்ளான ஊடகவியலாளர்களின் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்துமாறு மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன். இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் தரப்பில் நியாயமான விசாரணை இடம்பெற வேண்டுமெனவும் கோரி நிற்கின்றோம்.

ஊடகவியலாளர்கள், அரச அலுவலர்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் எமது நாட்டின் மீது பன்னாட்டு ரீதியில் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் இழிசெயல்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் - என்றார். (த-ஐ-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தல்

## நான்காவது சந்தேகநபரையும் உடன் கைது செய்ய உத்தரவு

கொழும்பு.மார்ச் 26
2008 ஆம் ஆண்டு கொழும்பில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டமை தொடர்பான வழக்கின், நான்காவது சந்தேகநபரான லெப்டினன்ட் கொமாண்டர் ஹெட்டியாராச்சியை உடனடியாகக் கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை கோட்டை நீதிவான் லங்கா ஜெயரத்ன முன்னிலையில் நேற்று இடம்பெற்ற போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரைக் கைது செய்வதற்கு ஏற்கனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை அவர் கைது செய்யப்படாமை ஏன் என நீதிவான் கேள்வி எழுப்பியுள்ளார். குறித்த சந்தேகநபரைக் கைது செய்வதற்கு, கடற்படைத் தளபதி இதுவரை அவரை கையளிக்கவில்லை என குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றுக்குத் தெரிவித்தனர்.

எனினும், யாருடைய தலையீடுமின்றி உடனடியாக அவரைக் கைது செய்யுமாறு நீதிவான் மீண்டும் உத்தரவு பிறப்பித்தார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளின் அடிப்படையில் வெளியாகியுள்ள புதிய தகவல்களின் பிரகாரம், இந்தக் கடத்தல் சம்பவத்தின் முதலாவது சந்தேகநபரான லெப்டினன்ட் கொமாண்டர் முணசிங்க ஆராச்சிகே தொன் நிலந்த சம்பத் முணசிங்கவை மீண்டும் கைது செய்யுமாறு மனுதாரர்கள் சார்பில் நேற்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள குறித்த சந்தேகநபரைக் கைது செய்வதற்கான விண்ணப்பத்தை எழுத்து மூலம் மன்றில் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று நீதிவான் அறிவித்தார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படையைச் சேர்ந்த இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

2008 இல் கொட்டாஞ்சேனை, வத்தளை, மட்டக்குளி மற்றும் தெஹிவளை ஆகிய பகுதிகளை அண்மித்துள்ள பாடசாலை மாணவர்கள் ஐவர் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளை அடுத்து, சம்பவத்துடன் தொடர்புடைய கடற்படை உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சறோஜினி பாலகிருஸ்ணன்



யாழ்ப்பாணம் , கலட்டி, 21/2 சீனியர் லேனை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினி பாலகிருஷ்ணன் 24.03.2017 வெள்ளிக்கிழமை இலண்டனில் காலமானார். அன்னார் நா.பாலகிருஷ்ணன் (ஓய்வு நிலை உப அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, இயக்குனர், BITSMANS கல்வி நிறுவனம் மானிப்பாய்) அவரின் அன்பு மனைவியுமாவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**21/2, சீனியர் லேன்,**
**கலட்டி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 222 8764**

### செல்வி மனோன்மணி அம்மா இரத்தினசாமிக்குருக்கள்



நல்லூர் மனோன்மணி அம்மன் கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி அம்மா இரத்தினசாமிக் குருக்கள் 24.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசாமிக் குருக்கள் - கமலாம்பிகை அம்மா தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்ற சிவகாமசௌந்தரி மற்றும் சண்முகநாதசர்மா, உருத்திரதாஸசர்மா, சாரதாம்பாள், சுசிலாதேவி ஆகியோரின் இளையசகோரியும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணிய குருக்கள் (வண்ணபுரம் சிவன்கோயில் அராலி), யோகானந்தேஸ்வரி அம்மா வீரமணிஐயர் மற்றும் பாலசுப்பிரமணியசர்மா ஆகியோ ரின் அன்பு மைத்துனியும் கிரிஜா - கிருஸ்ணா னந்தன், தேவானந்த சர்மா - யசோதை, ரஞ்சனி, காயத்திரி, அபிராமி - சோமாஸ்கந்தசர்மா , சந்தானலக்சுமி - குருபரசர்மா ஆகியோரின் அன்பு மாமியும் சிவகணேசக்குருக்கள், ஸ்ரீ கோபாலக்குருக்கள் ஆகியோரின் அன்புச் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10 மணியளவில் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மனோன்மணி அம்மன் கோயில்,**
**நல்லூர்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**தொடர்பு: 021 205 4060**

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை கனகலிங்கம்



உடும்பிராய் தெற்கு சிவகுலவீதியை பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கு நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கனகலிங்கம் நீர்வேலியில் 24.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருளையா - தையலம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தவராசலட்சுமியின் அன்புக் கணவரும் கலைச்செல்வி, விமலதாசன், உமா நந்தினி ஆகியோரின் தந்தையும் ஜெயானந்தன், றம்மியா, தயாரூபன் ஆகியோரின் மாமனாரும் ஜெயராஜ், தனஜா, லாவணியா, யஸ்வின், கஸ்வினா, மிதுஷிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நீர்வேலி சீயாக்காடு இந்துமயானத்துக்கு மு.ப 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**



அன்னைமடியில் - 25.12.1946
முருகன் திருவடியில் - 25.03.2017

### கந்தையா சிவசம்பு (குமாரசாமி)

சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவசம்பு 25.03.2017 சனிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, இராசதுரை, தங்கராசா மற்றும் இராமநாதன் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பத்தினிப்பிள்ளை (பத்மா) மற்றும் ஜெகதாதேவி ஆகியோரின் அன்புக் கணவரும் லலிதா (கனடா), லலிதகுமார்(பொறியியலாளர் - கொழும்பு), சுபத்திரா(கனடா), சங்கவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜனேந்திரன்(கனடா), காயத்திரி (ஆசிரியை - கொழும்பு), ஸ்ரீமயூரன்(கனடா) ஆகியோ ரின் அன்பு மாமனாரும் ஜனிஷா, ஜகீர்த்தன், ஜஸ்ஸிகன், கிருத்திக், டிவிஷா, பருதிக் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**[illegible] வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 227 0642/ 077 284 5596**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகமுத்து சுப்பிரமணியம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் ஞானவைரவர் வீதி உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகமுத்து சுப்பிரமணியம் நேற்று (25.03.2017) சனிக்கிழமை அதிகாலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா - குட்டிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான பறுவதம் அன்னலக்சுமி, அன்னம்மா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குணரத்தினம், இந்திரன்(கனடா), சிவமலர்தேவி ஆகியயோரின் அன்புத் தாயாரும் சரஸ்வதி, வள்ளிவடநாயகி, ஸ்ரீகுமார் ஆகி யோரின் மாமியாரும் அனோஜன், கௌசிகன், தர்மிகா, டயானி, கோபிகா, டில்மீரா, ரூபிகா(கனடா), கோகுலராம், புருஷோத்தமன், வைஷ்ணவி ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சிவக்கொழுந்து, செல்லமுத்து, செல்லையா, காசிப்பிள்ளை, தம்பித்துரை மற்றும் கனகம்மா(கனடா) ஆகியோரின் மைத்துனியும் லபின்யாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஸ்ரீரங்கம்**
**ஞானவைரவர் வீதி,**
**உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**



### திருமதி வள்ளிப்பிள்ளை கணபதிப்பிள்ளை

தனங்களப்பைப் பிறப்பிடமாகவும் கச்சாய்வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை கணபதிப்பிள்ளை நேற்று (25.03.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் சிவப்பிரகாசத்தின் பாசமிகு தாயாரும் கமலவேணியின்(கனடா) அன்பு மாமியாரும் கோபிநாத் - கஜனி (கனடா), பிரசாத் - துவாரகா(அமெரிக்கா), சந்திர காந் - ரோகினி (கனடா), ஜெகநாத் - துளக்சி(கனடா), கிருபநாத் - சாரதா (ஆஸ்திரேலியா), ரகுநாத் -சந்திரிகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிரிசான் கௌசான், சுயித், சுவேதா, சயித், கிரிசா, சாயின் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 9.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.68, கச்சாய் வீதி,**
**சாவகச்சேரி.**

தகவல்:
**சிவப்பிரகாசம் (மகன்)**
(ஓய்வு நிலை அலுவலர் - சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை)

**077 606 4320**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவில் இலங்கைக்கு விதிக்கப்பட்ட நிபந்தனை

## வரவேற்கிறார் யோகேஸ்வரன் எம்.பி.

மட்டக்களப்பு,மார்ச் 26

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டு நீதிபதிகள் அடங்கிய கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட வேண்டும் என்று, ஐ.நா. மனித உரிமைப் பேரவை ஆணையாளர் சயீட் அல் ஹூஸைன் மீண்டும் வலியுறுத்திருப்பது வரவேற்கத்தக்க விடயம்.

இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தப்பி யேகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பால்ச்சேனை தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வு, பாடசாலை அதிபர் பொ.இராமச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு, 34 ஆவது அமர்வில் இலங்கை அரசுக்கு மேலும் இரண்டு வருடங்கள் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனை நான் பாராட்டுகிறேன்.

2015ஆம் ஆண்டு பேரவை அமர்வில் இலங்கை ஏற்றுக்கொண்ட 30.1 தீர்மானத்தில் பரிந்துரை செய்யப்பட்ட அத்தனை விடயங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்று மனித உரிமை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இந்த அரசு, அதனை ஏற்றுக் கொள்வதாக இல்லை. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட அனைவரும் இராணுவத்தைப் பாதுகாப்பதாகக் கூறுகிறார்கள்.

இராணுவம் தவறு செய்யாமல், இவர்கள் ஏன் பாதுகாக்க வேண்டும். இவர்களின் கருத்துக்களின் அடிப்படையில், எதுவுமே நடக்கப்போவதில்லை என்பது எமக்குத் தெளிவாகத் தெரிகிறது.

1992ஆம் ஆண்டு மயிலந்தனையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக, புணானை முகாமைச் சேர்ந்த 18 இராணுவத்தினர் மீது 85 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு சாட்சியமளிக்கப்பட்ட நிலையில், 25.01.2002 இல் யூரிகள் சபை வழங்கிய குற்றமற்றவர்கள் என்ற தீர்ப்பின் மூலம் விடுதலை செய்யப்பட்டார்கள்.

திருகோணமலை குமாரபுரத்தில் 1996 ஆண்டு இடம்பெற்ற குழந்தைகள் , பெண்கள் உட்பட 26 தமிழர்கள் படுகொலை தொடர்பான வழங்கில் குற்றம் சாட்டப்பட்ட இராணுவத்தினர் இருபது ஆண்டுகளின் பின்னர் 27.07.2016 இல் குற்றமற்றவர்கள் என யூரிகள் சபையால் விடுதலை செய்யப்பட்டனர்.

அதே போன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் சுட்டுகொல்லப்பட்டது தொடர்பாக தகுந்த சாட்சியங்கள் இருந்த பேதிலும் குற்றம் சாட்டப்படவர்களை யூரிகள் சபையால், குற்றமற்வர்கள் என்று விடுதலை செய்யப்பட்டனர். இந்த நிலையில் உள்நாட்டு விசாரணை எமக்கு நீதியைப் பெற்றுத்தருமா? என்ற சந்தேகம் அனைவரின் மனதிலும் உள்ளது.

இதன் காரணமாக பன்னாட்டு நீதிபதிகள் அடங்கிய கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு அவர்கள் முன்னிலையில் போர்க்குற்ற விசாரணை நடைபெற வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைப் பேரவை ஆணையாளர் செய்ட் அல் ஹூஸைன் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்." - என்றார். (ஐ - 45)

**Accounts/விற்பனையாளர்கள் தேவை**

எமது டிஸ் அன்ரனா மற்றும் கேபிள் ரீவி உதிரிப்பாக(யாழ்ப்பாண கிளை) விற்பனை நிலையத்திற்கு பொறுப்புடன் விற்பனை மற்றும் Accounts செய்யக்கூடிய பெண் ஒருவரும் உதவியாளர் ஒருவரும் உடன் தேவை. நிரந்தரமாக வேலை செய்யக்கூடியவர்களுக்கு EPF/ETF உட்பட திறமைக்கேற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும்.

SATS-TECH ENGINEER'S Pvt Ltd.
298, K.K.S. ROAD, JAFFNA.
தொடர்பு
077 771 0785

**கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**

**150 - வீட்டுப்பணிப் பெண்கள்**

max adz

1100 Qrs / சம்பளம் : Rs.44000/-

நிபந்தனைகள் & சலுகைகள் :
- தங்குமிடம்,மருத்துவ வசதி,போக்குவரத்து வசதி,உணவு வழங்கப்படும்.
- 2 வருட ஒப்பந்தம்
- வேலை நேரம் ஒரு நாளைக்கு 12 மணிநேரம்
- கிழமைக்கு ஒரு நாள் லீவு வழங்கப்படும்
- 2 வருட முடிவின் பின் இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும்
- ஏனைய நிபந்தனைகளும்,விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

அனைத்து செலவுகளும் இலவசம் !!

1 QRS = Rs.40.00



பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வாருங்கள்

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY
றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 292B-2/1, ஹவ்லொக் றோட், கொழும்பு - 05.
Tel : 0727200005 | 0112552598|0112506900
E - Mail : rodneyagency@hotmail.com



**சிவன் ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**
**076 585 9977 , 077 835 7307**

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது, வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

**இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)
யாழ்ப்பாணம்.**
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

**சிறிகுமரன் ரெக்ஸ்**

SK

**மாபெரும் மலிவு விற்பனை**

புதுவருடத்தை முன்னிட்டு
இந்தியாவிலிருந்து நேரடியாக
இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய
அனைத்து ஆடைத்தினுசுகளும் மலிவு
விலையில்

காலம் : 27.03.2017 தொடக்கம்
14.04.2017 வரை

இடம் : 770,K.K.S வீதி,
தட்டாதெருச்சந்தி,
யாழ்ப்பாணம்.



Office Wear
சாறி மிகக்குறைந்த
விலையில்

**சிறிகுமரன் ரெக்ஸ்**
770, K.K.S. வீதி, தட்டாதெருச்சந்தி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 221 6845

**A/L தொழில்நுட்பபிரிவு**

**புதிய பிரிவு - 2019 A/L**
**Practical paper class - 2017, Dayclass**
**தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்**
**மதுசுதன் M.Sc Biosystem**
**E - Tec**
**நிறோஜன் (Engineer விரிவுரையாளர்)**
**Bio - Tec**
**சக்தி (விரிவுரையாளர்)**

**ஆரம்பம் - 29.03.2017**

**இடம் - யாழ். இந்துக்கல்லூரி அருகில்
உயர்கலைக்கல்லூரி, குளப்பிட்டி சந்தி.**

**தொடர்பு - 077 170 3549**

**மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்கம்**
**யாழ் மாவட்டம்**
**வருடாந்த பொதுக்கூட்டம்**

திகதி : 28.03.2017 செவ்வாய்க்கிழமை
நேரம் : காலை 9.30
இடம் : திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையக மண்டபம் (எரிபொருள் நிலையம் முன்பாக) 286 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

நிகழ்வுகள்

01. மங்கல விளக்கேற்றல்
02. இறந்த எமது அங்கத்தவர்கள் ஒவ்வொருவரையும் நினைவு கூரல்
03. தலைவர் வரவேற்புரை
04. செயலாளர் ஆண்டறிக்கை சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுதல்.
05. பொருளாளர் வரவு - செலவு அறிக்கை சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுதல்.
06. முன்மொழிவுகள் (Resolution)
07. மக்கள் வங்கி யாழ் பிராந்திய முகாமையாளர் உரை
08. மூத்த வங்கியாளர் சார்பில் சிறப்புரைகள்.
09. மூத்த வங்கியாளர் கௌரவிப்பு
10. வேறு விடயங்கள்
11. புதிய நிர்வாக சபை தெரிவு - திரு. L.S.R.மொல்லிகொட தலைமையில்
12. தாய் சங்க தலைவர் திரு.L.S.R.மொல்லிகொட அவர்களின் உரை
13. நன்றி தெரிவிப்பு

மதியபோசனம்

இக்கூட்டத்தில் சகல ஓய்வூதியர்களையும் தவறாது பங்குகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர்**
**பி.தருமநாயகம்**

**செயலாளர்**
**அ.இராசநாயகம்**



**வாருங்கள் எம்மோடு இணைந்து
உங்கள் எதிர்காலத்தை
ஒளிமயமாக்கிடுங்கள்**



புகழ்பெற்ற அபான்ஸ் குழுமத்தின் துணை நிறுவனமான அபான்ஸ் பினான்ஸ் பீஎல்சி இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட நிதி நிறுவனமாகும். எமது நிறுவனத்தின் பின்வரும் பதவிக்கு, தகைமைவாய்ந்த மற்றும் திறமையான வேற்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கிளை முகாமையாளர்**
**யாழ்ப்பாணம் / வவுனியா**

தேவை:
- விற்பனை / சந்தைப்படுத்தல் / வங்கி / நிதியியல் அல்லது முகாமைத்துவ பட்டம், அல்லது முழு அல்லது பகுதி CIM/SLIM தொழில்முறை தகுதியைப் பெற்றிருத்தல் அல்லது அதற்கு சமமான கல்வித் தகைமை.
- சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு தவணை முறையில் கடன் வசதிகளை வழங்குவது தொடர்பாக 10 வருட முன் அனுபவம்.
- மோட்டார் வாகன குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு தொடர்பாக சிறப்பான பதிவுகளுடன் 5 வருட முன் அனுபவம்.
- சிறந்த தலைமைத்துவ பண்புகளுடன் 20 பணியாளர்கள் கொண்ட குழுவை சிறந்த முறையில் வழிநடத்தும் ஆற்றல்.
- வழங்கப்பட்ட இலக்குகளை வெற்றிகரமாக எட்டும் திறனைக் கொண்டிருக்க வேண்டும்.
- சிறந்த மக்கள் தொடர்பாடல் மற்றும் பேச்சுத்திறன்.
- 35 முதல் 50 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இருக்க வேண்டும்.
- யாழ்ப்பாணத்தில் அல்லது வவுனியாவில் வசிப்பவராக இருக்கவேண்டும்.
- வேறொரு நிதி நிறுவனத்தில் இதற்கு சமமான ஒரு தகுதியில் பதவி வகித்திருத்தல் மேலதிக அனுகூலமாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு (ஆண் / பெண்) அவர்களின் கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் மிகச்சிறந்த ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

மேலுள்ள பதவிக்கு ஆர்வமுள்ள வேற்பாளர்கள் உங்கள் சகல விபரங்கள் மற்றும் தகைமைகளை உள்ளடக்கிய உங்கள் சுயவிபரக் கோவையை பின்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். நீங்கள் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் உங்கள் பதவியை குறிப்பிடவும், மின்னஞ்சல் மூலமாக அனுப்புவீர்களாயின் Subject என்னும் இடத்தில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும். அனைத்து விண்ணப்பங்களும் விளம்பரம் பிரசுரமாகி 10 நாட்களுக்குள் கிடைக்குமாறு அனுப்பவும்.

மனிதவள முகாமையாளர்
அபான்ஸ் பினான்ஸ் பீஎல்சி
இல. 456, ஆர் ஏ டி மெல் மாவத்தை கொழும்பு 03.
ஈ-மெயில்: career@abansfinance.lk

Abans FINANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு உண்டு

ஹொட்டலுக்கு உரிய தளபாடம் விற்பனைக்கு உண்டு தொடர்புகளுக்கு.

**077 306 6615, 077 741 2713**

## தேவை

சமையல் ஆள் ,உதவி ஆள் தேவை. தொடர்புகளுக்கு

**077 306 6615, 077 741 2713**

## பணிப்பெண் தேவை

கிளிநொச்சியில் வயோதிப மாதுவினை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்க பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர் மானிக் கப்படும். தொடர்புகளுக்கு

**077 469 6780**


## காணி விற்பனைக்கு

பிரதான வீதி கோண்டாவில் பழனி யாண்டவர் ஆலயத்திற்கு அருகில் 05 பரப்புகாணிஉடன்விற்பனைக்குஉண்டு. தொடர்பு களுக்கு

**077 606 9188**

## மரண அறிவித்தல்

# ஐயாத்துரை அருளானந்தசிவம்



பிறப்பு 19.07.1951 இறப்பு 23.03.2017

யாழ். நயினாதீவு, 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட ஐயாத்துரை அருளானந்தசிவம் 23.03.2017 வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை சிவக் கொழுந்து தம்பதியரின் அன்பு மரு மகனும் பவானியின் அன்புக் கணவரும் திலகவதி, மெய்யழகன், பரமானந்தம், சிவானந்தன்(பிரான்ஸ்), கோமதி, காலஞ் சென்ற நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அருளினி (லண்டன்), அமுதினி(பிரான்ஸ்) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் பாமதாஸ் (லண்டன்), குகனேஸ்(பிரான்ஸ்) ஆகியோரின்பாசமிகுமாமனாரும்விசாகப்பெருமாள்,சுவர்ணா,நிரஞ்சனாதேவி, மதிவதனி(பிரான்ஸ்) காலஞ்சென்ற சகாதேவன் மற்றும் திருவாசக நாதர்(ஓய்வுநிலை ஆசிரியர்), வைத்திலிங்கம்(ஜேர்மனி), இந்திராணி, சிவபாலன் (கனடா), சபாநாதன்(கனடா), குருச்சந்திரநாதன் (ஓய்வுநிலை பிரதம முகாமை உதவியாளர்,பிரதேசசபை, வேலணை), முத்துப்பிள்ளை(சுவிஸ்), மங்கையர்க் கரசி(சுவிஸ்), வாகீஸ்வரி(லண்டன்), இராஜகோபாலு(கனடா), கதிரவேற் பிள்ளை(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஹரிஸ்(பிரான்ஸ்) இன் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(27.03.2017) திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நயினாதீவு, சல்லிப்பரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நயினாதீவு - 08** **தகவல் - குடும்பத்தினர்.**

**021 320 6873**

# 12 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
05.03.1952

மறைவு
26.03.2005

# அமரர் கதிர்காமு சந்திரலிங்கம்

**பன்னிரண்டு ஆண்டுகள் நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
மாண்டுவிடவில்லை நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றீர்கள் - எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி
வாழ்வை அர்ப்பணித்த பாசத்தின் தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்.**

8/22, கற்குளம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்,

சந்திரலிங்கம் வர்த்தகநிலையம்,
இல.24, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்.
மயூரன்ஸ் நகைமாளிகை,
41, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
மயூரன்ஸ் நகை மாளிகை
95, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சந்திரலிங்கம் ராஜ்
41,முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# சனசமூக நிலையக் கட்டடம் சங்கத்தானையில் திறப்பு

சாவகச்சேரி, மார்ச் 26

சாவகச்சேரி சங்கத்தானை டாக்டர் வீரசிங் கம் வீதியில் 25 லட்சம் ரூபா செலவில் நிர்மா ணிக்கப்பட்ட மதுவன் சனசமூக நிலைய இரு மாடிக் கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கைத் தமிழரசுக் கட் சியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான மாவை. சோ. சேனாதிராசா கட்டடத்தைத் திறந்து வைத் தார்.

மக்கள் பிரதிநிதிகள், ஊர் மக்கள் போன்றோ ரின் நிதிப் பங்களிப்புடனும், 2016 ஆம் ஆண் டுக்கான கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்டத்தின் மூலமும் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப் பட்டது.

நிலைய வளாகத்தை நிலையத் தலைவர் வ.நாகலிங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். நிலையப் பெயர்ப் பலகையை வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் திரைநீக்கம் செய்ய நிலையக் கட்ட டத்தை தலைமை விருந்தினர் திறந்து வைத் தார். மாடிக் கட்டடத்தை ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன் திறந்து வைத்தார்.

அந்தப் பகுதி முன்பள்ளியில் நீண்டகாலம் ஆசிரியையாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி ஜெகதீஸ்வரன் நிலையச் சமூகத்தின ரால் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் நிலை யத் தலைவரும் கௌரவிக்கப்பட்டார். (த-9)

# நூல் வெளியீட்டு விழா இன்று

கைதடி,மார்ச் 26

கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தி னால் என்.கே.துரைசிங்கம் எழுதிய "ஆளு மைகள்" எனும் நூலின் வெளியீட்டு விழா வும் மதிப்பளிப்பும் கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவரும், பரந்தன் மக்கள் வங்கி முகாமையாளரு மாகிய க. சிறீதரன் தலைமையில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்குக் கைதடி வளர்மதி சனசமூக நிலைய அரங்கில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில முதன்மை விருந்தின ராக வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் உத விப்பணிப்பாளர். பா. முகுந்தனும், சிறப்பு விருந்தினராக பண்டா ரவளை கல்வி வலயத் தின் பிரதிக் கலவிப்ப ணிப்பாளர் சி.மதியழக னும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை கிளிநொச்சி மாவட்ட சமூகசேவை அலுவ லர் வே.தபேந்திரனும், மதிப்பீட்டுரையை [illegible] பல்கலைக்கழக சமூக வியல்துறை மூத்த விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணா வும் நிகழ்த்துவர். (த-288)

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

- தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?
- இள நரையா?
- முடிகொட்டுகிறதா?
- தலையிடியா?
- பேன், பொடுகு தொல்லையா?

பொன்னாங்காணி, வல்லாரை, இலாமிச்சைவேர், மருதாணி, கருசலாங்கண்ணி, கருவேப்பிலை சேர்த்துக் காய்ச்சிய ஆயுள் வேத எண்ணை 100 % இயற்கை மூலிகைகளால் ஆன இவ்வெண்ணையைப் பாவித்து 2 வாரங்களில் பலனை உணர்வீர்கள்

பதிவு இல: 16168
077 263 9037 **221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வசிக்கும் 33 வயதுடைய செவ்வாய் குற்றம் உள்ள யாழ் இந்து மதத்தைச் சேர்ந்த மணமகனுக்கு வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த மணமகளை தேடுகின்றோம். கனடாவில் வசிக்கும் 30,35,39 வயதுடைய மணமகன் களுக்கு தகுந்த அழகான மணமகள்களை தேடுகின்றோம். தொடர்புகளுக்கு

**Tp& Viber 001 416 666 1855 & 001 647 504 3336**

## CANADA , USA
## study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892

## ஈரவிழிகளுடன் ஓர் நிமிடம்

எமது பிராந்திய நிலையத்தில் எந்திரவியல்பீட
விரிவுரையாளராக கடமையாற்றிய
**திருமதி கோமதி பிரணவரூபன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

# பொ. வாமதேவன்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணப் பிராந்திய நிலையச் சமூகத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள

# ஏழ்மையான குடும்பங்கள் விரைவில் சமுர்த்திக்குள்

முல்லைத்தீ, மார்ச் 26

முல்லைத்தீவு மாவட்டத்தில் சமுர்த்தி பெற்றுக்கொள்ளத் தவறிய ஏழ்மையான குடும்பங்கள் விரைவில் சமுர்த்திக்குள் உள்வாங்கப்படுவார்கள் என முல்லைத்தீவு மாவட்ட திவிநெகும திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஏழ்மைநிலையில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப நாட்டில் முன்னெடுக்கப்பட்ட சமுர்த்தி உதவி முல்லைத்தீவு மாவட்டத்தில் பலருக்கு கிடைக்கவில்லை. புதுக்குடியிருப்பு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 23 கிராம அலுவலர் பிரிவுகளில் சமுர்த்தி வழங்கப்படவில்லை.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரைகாலமும் சமுர்த்தி திட்டம் வழங்கப்படாதுள்ள 23 கிராம அலுவலர் பிரிவுக்கும், சமுர்த்தியை பெற்றுக் கொள்வதற்கு தகுதியாக இருந்தும் தவறவிடப்பட்ட குடும்பங்களுக்கு சமுர்த்தி வழங்குவதற்காக விண்ணப்பங்கள் பூர்த்தியாக்கப்பட்டு உரிய இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. விரைவில் அவர்களுக்கான சமுர்த்திக் கொடுப்பனவுகள் கிடைக்க உள்ளது" என்று அவர் தெரிவித்தார். (ற-7)

# வலி. கிழக்கில் கடந்த ஆண்டு 30 புதிய கிணறுகள் அமைப்பு

அச்சுவேலி, மார்ச்26

வலி. கிழக்கு பிரதேச செயலக பிரிவில் கடந்த வருடம் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான செயலணி 30 கிணறுகளை அமைத்துள்ளது. குடி தண்ணீர் வசதியை மேம்படுத்துவதையும், வாழ்வாதாரத்தை மேல்நிலைப்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

வலி. கிழக்கு யாழ். மாவட்டத்தில் அதிகூடிய அளவு மக்கள் வாழும் பிரதேசமாகவும் பெருமளவில் விவசாய நடவடிக்கைளை மேற்கொள்ளும் பிரதேசமாகவும் உள்ளது. குடிதண்ணீர் மற்றும் விவசாய நடவடிக்கைகள் தரைக்கீழ் நீர்வளம் மூலமே நிறைவு செய்யப்படுகின்றன.

கிணறுகளைப் பொறுத்தவரை பெருமளவில் அவை ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்களின் பயன்பாட்டில் பொதுக்கிணறுகளாகவே உள்ளன. பொதுமக்களின் வசதியையும் வாழ்வாதார மேம்பாட்டையும் கருத்திற் கொண்டு 25 கிணறுகளையும் 5 ஆழ்துளைக் கிணறுகளையும் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான செயலணி அமைத்து பொதுமக்களின் பாவனைக்கு வழங்கியுள்ளது. (ற-11)

# மோ. சைக்கிள் தீயிடப்பட்ட சம்பவம் கிராம அபிவிருத்தி தலைவர் கைது!

வவுனியா, மார்ச் 26

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விளக்குவைத்தகுளம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அந்தப் பகுதி கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர்கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக மோட்டார் சைக்கிள் உரிமையாளர் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். நேற்றுமுன்தினம் விளக்குவைத்த குளம் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின்னர் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ற-21)



# ஒப்படைத்த உறவுகள் எங்கே? பதில் கூறவேண்டும் அரசு

## போராட்டத்தில் ஈடுபடும் உறவினர்கள் வற்புறுத்தல்

முல்லைத்தீவு, மார்ச் 26

"நம்பித்தான் இராணுவத்தினரிடம் ஒப்படைத்தோம். அப்பா வருவார் வருவார் என்று காத்திருக்கும் எமது குழந்தைகளுக்கு இந்த கூட்டரசு என்ன பதில் கூற போகின்றது."

இவ்வாறு முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத்தேடி போராட்டம் நடத்தி வரும் மக்கள் கண்ணீருடன் கேள்வி எழுப்பினர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுதலையையும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் நடத்தி வரும் தொடர் போராட்டம் 5 மாவட்டங்களிலும் நேற்றும் தொடர்ந்தது. வடக்கின் 4 மாவட்டங்களிலும், கிழக்கில் திருகோணமலை மாவட்டத்திலும் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுதலையையும் வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் உரிய தீர்வு கிடைக்கும் வரை கைவிடப்பட மாட்டாது என்று அவர்கள் உறுதியுடன் தெரிவித்தனர். வடக்கில், கிளிநொச்சி, வவுனியா, முல்லைதீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் போராட்டங்கள் தொடர்கின்றன. போராட்டங்களுக்கான ஆதரவும் வலுவடைகின்றது.

நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் 34 ஆவது நாளாகவும், வவுனியா மாவட்டத்தில் 30ஆவது நாளாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 18 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணத்தில் 11 ஆவது நாளாகவும், கிழக்கில் திருகோணமலையில் 21ஆவது நாளாகவும் போராட்டங்கள் தொடர்ந்தன.



அதேவேளை - காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைப்பாட்டை தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் அறிவதற்காக, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இதுவரை 178 விண்ணப்பபடிவ ங் களை மேலதிக மாவட்டச் செயலாளரிடம் கையளித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மேலதிக மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைத்தனர்.

"எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை இதுவரை யாரும் எம்மிடம் தெரிவிக்கவில்லை. வெளிப்படுத்தவும் இல்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களுடையநிலையைஅறிந்து கொள்வதற்காக நாம் தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக விண்ணப்பித்துள்ளோம். எங்கள் பிள்ளைகளைத் தேடிப்பிடித்து தரும்படி கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக நாம் அலையாத இடங்களில்லை. நிரந்தரமான ஒரு முடிவைப் பெற்றுக்கொள்வதற்காக கடந்த 8ஆம் திகதியில் இருந்து இன்று வரை (நேற்று) 18 நாள்களாக இந்த இடத்தில் இருந்து எங்கள் அமைதிவழியான போராட்டத்தை முன்னெடுக்கின்றோம்." என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையை வலியுறுத்தி, முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அவர்களிடம் இருந்து விண்ணப்பப்படிவங்களை பெற்றுகொண்ட மேலதிக மாவட்ட செயலாளர் செல்லையா பிரணவநாதன் விண்ணப்பப் படிவங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்தார்.

(ற21,7,35,26)



தனது மூன்று பிள்ளைகளையும் இழந்து - அவர்களில் இரு மகன்களை 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அடுத்தடுத்து இழந்து தனி மரமாய் தவிக்கும் தாய் ஒருவர் தனது வீட்டின் பூசை அறையில் அவர்களுடைய படங்களை வைத்து வணங்குகிறார். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தாய் ஒருவரே இவ்வாறு வணங்குகிறார் என சமூக வலைத் தளங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன. அவரிடம் இது தொடர்பில் அறிவதற்குத் தொடர்பு கொண்ட போது நேற்று வெளிமாவட்டம் ஒன்றுக்குச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-21)

# இடர்களைக் குறைப்பதற்கு இந்த ஆண்டு பல திட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ். மாவட்டத்தில் இடர்களைக் குறைக்கும் வகையில் இந்த ஆண்டு பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கவுள்ளன என்று யாழ். மாவட்ட செயலக இடர் முகாமைத்துவ இணை அலகின் திட்டமிடல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 421 மில்லியன் ரூபா செலவில் 181 திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தத் திட்டங்கள் நெடுந்தீவு, கோப்பாய், உடுவில், மருதங்கேணி, சண்டிலிப்பாய், வேலணை, நல்லூர் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கி முன்னெடுக்கப்படவுள்ளது. அரியாலையில் வெள்ளப் பாதுகாப்பு அரண் அமைத்தல், சோளனோடையில் உவர் நீர்த் தடுப்பணை அமைத்தல், மின்னல் தாக்கும் பகுதிகளில் இடிமின்னல் தாங்கி அமைத்தல், வெள்ள மூழ்கடிப்பு பகுதிகளில் மதகுகள், வாய்க்கால்கள் அமைத்தல் போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச உத்தியோகத்தர்களுக்கான

# வீட்டுக்கடனை செலுத்தாவிடில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 26

கிளிநொச்சி மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட கடனைக் கட்டத் தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தேசிய அதிகார சபையிடமிருந்து கடன் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் சிலர் அவற்றைத் திருப்பிச் செலுத்துவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன என்று கூறுகின்றனர்.

"தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் ஆரம்பித்தில் கடனை அறவிட பிரதேச செயலகத்தில் உள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தரை நியமித்தனர். பின்னர் முகவர் ஒருவர் மூலம் கடன் அறவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அந்த முகவர் எம்மிடம் சரியான முறையில் பணத்தை அறவிடுவதில்லை. நாம் பணத்தைச் செலுத்தச் செல்லும்போது அவர் இருப்பதில்லை. எம்மிடம் பணம் இல்லாதபோது பணத்தைச் செலுத்துமாறு கேட்கின்றார். அதனால் எமது கடன் தொகை நிலுவையாக உள்ளது. தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் எமக்குச் சாட்சிக் கையெழுத்திட்டவர்களுக்குக் கடிதம் அனுப்புகின்றனர்." என்று அந்த அரச உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

"ஆரம்பத்தில் கடன் கட்டுப் பணம் பிரதேச செயலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகஸ்தர் மூலம் அறவிடப்பட்டது. தலைமைக் காரியாலயத்தின் உத்தரவின் படி தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்கள் அதிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். முகவர் ஒருவர் நியமிக்கப்பட்டு பணம் அறவிடப்பட்டது. கட்டுப்பணம் செலுத்த தவறியவர்களுக்கு கடிதங்கள் அனுப்பபட்டுள்ளன. கட்டத் தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு திட்டங்களின் கீழ் அரச ஊழியர்கள் 479 பேருக்கு கடன்கள் வழங்கப்பட்டன. உபகார வங்கிக் கடன் 336 பேருக்கும் மீள் குடியேற்ற வங்கிக் கடன்கள் 143 பேருக்கும் வழங்கப்பட்டன. பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 34 பேருக்குக் கடன்கள் வழங்கப்பட்டன. அவர்களில் 27 பேர் கடன்களை மீளச் செலுத்தி வரும் நிலையில் 7 பேருக்கு ஒரு லட்சத்து 34 ஆயிரம் ரூபா நிலுவை உள்ளது." என்று கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் தெரிவித்தார்.

(ற - 21,6)

## பகைவரையும் அன்பு செய்பவரே இறைவனின் மக்கள்

அன்பினால் இயங்குவதே உலகம்,அன்புக்காக ஏங்குவதே உள்ளம் ஒவ்வொருவரும் தம்மை மற்றவர்கள் அன்பு செய்யவேண்டும் என்றே விரும்புவார்கள். அந்த அன்பு ஒருவருக்கு எவ்வளவு கிடைக்கின்றதோ அதனைப் பொறுத்தே அவரது மகிழ்ச்சியும் இருக்கும். ஒரு குடும்பத்திலே தாய் தன் பிள்ளைகள் எல்லோரையும் ஒரே விதமாகவே அன்பு செய்வாள். ஆனால் அந்த அன்பு பாகுபாடு உள்ளதாக மாறும்போது அந்த அன்பு கிடைக்காத பிள்ளை வம்பு செய்ய வெளிக்கிடுகின்றது. கிடைக்காத அன்பை வேறு எங்காவது பெறவேண்டும் என்று முனையும்போது அங்கேயும் கிடைக்காத போதே கோபம், வெறுப்பு, பகைமை, கொடூரமான செயற்பாடுகள் வெளிப்படுகின்றன. அன்பே உலகை ஆளும் அன்பில்லாமையே அழிவையும் உண்டாக்கும்.

இயேசு ஆண்டவர் அன்பின் மகத்துவத்தை உணர்ந்தே "உங்கள் பகைவரையும் அன்பு செய்யுங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள் (மத்5:44,45) என்று கூறியுள்ளார் பகைவரை வெறுப்பவர்களே இருக்கின்றார்கள். பகைவரை அன்பு செய்பவன் கோழை என்று பரிகசிப்பார்கள். முற்காலத்தில் கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல் என்று பழிக்குப் பழிவாங்கும் சமூகமே யூத பரம்பரையில் இருந்து வந்தது. ஆனால் இயேசு இதை மாற்றவே பகைவரை மன்னிக்க வேண்டும். அதனாலே தீமைகள் நிகழாது தடுக்கலாம் ஏன்பதை பாவிப் பெண்ணை மன்னிப்பதன் மூலமும் தனது காதைத் துண்டித்தவனை மன்னித்தவன் மூலமும், எல்லாவற்றுக்கும் மேலாக தம்மைச் சித்திரவதை செய்து சிலுவையில் அறைந்தவர்களையே "இவர்கள் அறியாது செய்கின்றார்கள் பிதாவே இவர்களை மன்னித்தருளும் என்று கூறியதன் மூலமும் மன்னித்து அன்பு செய்த மாபரனானார் இயேசுகிறிஸ்து.




பகைமை கொள்வதினாலே எமது மனத்திலே நிம்மதி ஏற்படுவதில்லை மகிழ்ச்சி நிலைப்பதில்லை. கோபம், பகைமை உணர்வுகள் தலதூக்கி உளத்தாக்கம் ஏற்பட்டு நோய்வாய்ப்பட்டு மற்றவரால் விரும்பப்படாதவர்களாக எமது செயல்கள் அமையும். பகைவரோடு ஒப்புரவாகும்போது இருவரிலும் மனமாற்றம் ஏற்படும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதிலும் அக்கறை செலுத்துவதிலும் அன்பாக வாழவும் முன்னையதிலும்பார்க்கக் கூடிய அன்பு ஏற்படும். மகிழ்ச்சி, உறவு, பகிர்தல் என்பன உருவாகும். இயேசு மன்னித்தவர்கள் எல்லாம் அவருக்காக வாழ்ந்தார்கள். மன்னிப்பைக் கொடுத்துப்பாருங்கள் அதன் மகத்துவம் விளங்கும். மன்னிக்காமையே சகல தீமைகளையும் உருவாக்ககாரணியாகின்றது.மன்னிக்காமை தொடரும்போது மானிட சமுதாயம் பல தீமைகளை எதிர்கொள்ளவேநேரிடும். இறைவார்த்தை சொல்லும் உண்மைகளை எம் வாழ்வில் கடைப்பிடிப்போம். இறைவனின் அருளைப் பெற்றுக் கொள்வோம்.

*அன்ரனி பீற்றர்,*
*ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்*

## க.பொ.த.சாதாரண பரீட்சை முடிவுகள் செவ்வாயன்று வெளிவரும்

கொழும்பு,மார்ச் 26

2016ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அன்றைய தினத்தில் பரீட்சார்த்திகள் இணையத்தின் மூலம் தங்களது பெறுபேறுகளை அறிந்து கொள்ளலாம் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் 5 ஆயிரத்து 669 பரீட்சை மத்திய நிலையங்களில் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையில், சுமார் 7 இலட்சம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இதேவேளை, 2017ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி முடிவடைய வுள்ளது.

இந்த வருடத்தின் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகி, செப்ரெம்பெர் 02ஆம் திகதி வரையும் இடம்பெறவுள்ளது. இந்தப் பரீட்சையின் முடிவுகள் டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த வருடத்துக்காள ஐந்தாந்தர புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்தப் பரீட்சை முடிவுகள் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி வெளியிடப்படும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ - 46)

## கூட்டமைப்பினருக்கு ஆளுமையிருந்தால் மது உற்பத்திச்சாலையை மூடட்டும்

### சவால் விடுக்கிறார் கருணா

மட்டக்களப்பு,மார்ச் 26



நாங்கள் ஆட்சியிலிருந்த போது புதிய மதுபானசாலைகள் அமைப்பதில்லை என்ற உறுதியான தீர்மானத்தை எடுத்து. அதனை நடைமுறைப்படுத்தினோம். ஆனால் இந்த ஆட்சியில் கும்புறுமூலையில் மதுபான உற்பத்தித் தொழிற்சாலையை அமைக்கத் திட்டமிட்டுள்ளனர். இதனைதமிழ்தேசியக்கூட்டமைப்பினர் தமது அரசியல் ஆளுமையைப் பயன்படுத்தி நிறுத்திக் காட்டட்டும்.

இவ்வாறு முன்னாள்மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரன் (கருணா அம்மான்) சவால் விடுத்துள்ளார்.

சர்ச்சைக்குரிய கல்குடா - கும்புறுமூலை மதுபான உற்பத்தித் தொழிற்சாலை விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மட்டக்களப்பைப் பிரதி நிதித்து வப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமக்கு ஆளுமை இருந்தால் கும்புறுமூலை மதுபான உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பதை நிறுத்திக் காட்ட வேண்டும்.

நாங்கள் ஆட்சியில் இருந்த போது, புதிதாக எந்தவிதமான மதுபானசாலைகளையும் அமைக்க முடியாது என்ற முடிவை மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றி, அதற்குச் செயல்வடிவம் கொடுத்திருந்தோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுங்கான் கேணி, கிரான்குளம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட இரண்டு பாதுபான சாலைகளை நாம் தடை செய்தோம். சுங்கான்கேணியில் புதிய மதுபான சாலைக்காகக் கட்டப்பட்டு அரைகுறையாகக் காட்சியளிக்கும் கட்டடத்தை இப்போதும் நீங்கள் காணலாம்.

ஆனால், கல்குடாவில் 19 ஏக்கர் காணியில் மதுபாபன தொழிற்சாலை அமைக்கப்படுவதைக் கூட்டமைப்பினரால் தடை செய்ய முடியவில்லை. சர்ச்சைக்குரிய அந்த மதுபான உற்பத்தித் தொழிற்சாலை பற்றி செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் குண்டர்களால் தாக்கப்பட்டனர். (ஐ - 46)

## ஊடகப்பயிற்சி மையத்துக்கு நிதியுதவி வழங்க சீனா தயார்

கொழும்பு,மார்ச் 26

இலங்கையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள புதிய ஊடகப் பயிற்சி மையத்துக்கு நிதியுதவியையும், நிபுணத்துவ ஆற்றலையும் வழங்குவதற்கு சீனா முன்வந்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக இலங்கையின் ஊடகத்துறை அமைச்சருக்கும், சீன அரச பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் நடத்தப்பட்டன எனத் தெரியவருகிறது. சீன வெளியீட்டு மற்றும் ஊக்குவிப்பு சமூகத்தின் தலைவர் ஷிசு சூ தலைமையிலான குழுவினருடன் இந்தப் பேச்சுக்கள் இலங்கை நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றுள்ளன. இதன் போது, இலங்கையில் புதிதாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள, ஊடகப் பயிற்சி மையத்துக்கான நிதியுதவியையும், நிபுணத்துவ ஆற்றலையும் வழங்குவதற்கு சீனா முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதிய அனுகூலம்தொடர்பில்விளக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச் 26

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்தவர்களாக உள்ளோர்களுக்கு உரிய அனுகூலங்கள்பற்றிய விவராங்கள் யாழ்.பிரதேச பிரிவுச் சங்கத்தால் ஓய்வூதியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஓய்வூதியர்கள் சகலருக்கும் அவர்களது மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவின் போது உறுப்புரிமைக் கட்டணம் ரூபா 50 அறவிடப்படுகிறது. ஓய்வூதியர்கள் இந்தச் சங்கத்தில் இருந்து விலகிக் கொள்ள விரும்பினால் விலகும் கடிதத்தை ஓய்வூதியர் சங்கத்துக்கு அனுப்பி வைக்கும்போது அவர்களிடம் அறவிடப்பட்ட பணம் திருப்பிச் செலுத்தப்படும்.

இவ்வாறு நம்பிக்கை நிதிய யாழ். மாவட்ட சங்கப் பிரதிநிதி பொ.கமலநாதன் தெரிவித்தார்.

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் யாழ்.பிரதேச பிரிவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் அங்கத்தவர்களாக ஓர் ஆண்டு அங்கத்துவத்தை முழுமை செய்தவர்களுக்கு இரண்டு நாள்களுக்கு மேல் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறுபவராயின் அவருக்கு நாள் ஒன்றுக்கு ரூபா 500 வீதம் ஆகக் கூடியது பத்து நாள்களுக்கு ரூபா 5 ஆயிரத்தை மானியமாக இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை பெறமுடியும்.

கண் சத்திர சிகிச்சை மூலம் கண் வில்லை பொருத்தியவர்களுக்கு ஒரு கண்ணுக்கு ரூபா 5 ஆயிரம் வீதம் இரு கண்களுக்கு ரூபா 10 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது.

அங்கத்தவரின் பிள்ளைகளுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்குமாயின் ஏதாவது ஒரு வருடத்துக்கு ரூபா 6 ஆயிரம் வீதம் இருவருக்கு ரூபா 12 ஆயிரம் பெற்றுக் கொள்ள முடியும்.

அங்கத்தவர் இறக்க நேரிடின் மரணப் பணிக்கொடை அங்கத்துவம் பெற்ற கால அடிப்படையில் ஒரு வருடம் முழுமையடைந்திருப்பின் ரூபா 3 ஆயிரத்தையும் இரண்டு வருடங்கள் முழுமை செய்திருப்பின் ரூபா 6 ஆயிரத்தையும் மூன்று வருடங்கள் முழுமை செய்திருப்பின் ரூபா 15 ஆயிரத்தையும் பின் உரித்தாளி பெறமுடியும்.


அங்கத்தவர் ஒருவர் இதயம், சிறுநீரகம், மூளைப் புற்றுநோய் இவற்றில் ஏதாவதொன்றுக்குச் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவராயின் அவருக்கு ரூபா 15 ஆயிரம் மானியமாக வழங்கப்படும்.

அங்கத்தவர் ஒருவர் ஒருவருடத்தை முழுமை செய்திருப்பின் ரூபா 10 ஆயிரத்தையும் மூன்று வருடத்தை முழுமை செய்தவர் ரூபா 20 ஆயிரத்தையும் ஐந்து வருடத்தை முழுமை செய்தவர் ரூபா 30 ஆயிரத்தையும் (பிணையாளர் ஒருவரின் ஒப்பந்தத்துடன்) 10மாத தவணையில் வட்டியுடன் செலுத்தக் கூடிய வகையில் மேற்கூறிய கடனைப் பெற்றுக் கொள்ள முடியும் என சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது - என்றார்.

(ற - 51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாசிலாமணியின் நூல் வெளியீடு கொக்குவிலில் இன்று



கலாபூசணம்மு. மாசிலாமணியின் சிரிக்க சிந்திக்க சில வரிகள் நூல் வெளியீட்டுவிழாஇன்றுஞாயிற்றுக் கிழமைமு.ப. 9.30மணிக்குயாழ்ப் பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக பேராசிரியர்க. தேவராஜாதலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வெளி யீட்டு உரையை இலங்கை வானொலி யாழ்ப்பாண அலைவரிசையின் கட்டுப்பாட்டாளர் முருகேசு ரவீந்திரன் ஆற்றவுள்ளார். முதற்பிரதியை பிரபல தொழிலதிபர் திருமதி கிருஸ்ணமூர்த்திவசந்தராணிபெற்றுக்கொள்வார். நயப்புரையை யாழ். பல்கலைக்கழகத்தின்தமிழ்த் துறையின் மூத்த விரிவுரையாளர் ஈ. குமரன்வழங்குவார். (ற-21)



### நிலம் மீட்கப் போராடும்

# முள்ளிக்குளம் மக்களுக்கு கடற்படை அச்சுறுத்தல்

### நேற்று 3ஆவது நாளாகவும் தொடர்ந்தது போராட்டம்

மன்னார், மார்ச் 26

மன்னார் முள்ளிக்குளத்தில் கடற்படையினர்வசமுள்ளகாணிகளைவிடுவிக்க வற்புறுத்தித் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடும் மக்களைக் கடற்படையினர் அச்சுறுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று போராட்டம் மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.



கடற்படையினர் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும், தம்மை மீள் குடியமர்த்த வேண்டும் என்று வற்புறுத்தி முள்ளிக்குளம் மக்கள் கடந்த வியாழக்கிழமை முதல் தொடர்போராட்டத்தில்ஈடுபடுகின்றனர். மக்களின் போராட்டத்துக்கு அருட் தந்தையர்கள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், தொண்டுஅமைப்புகளின் பிரதிநிதிகள், மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள், மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியத்தினர் நேரில் சென்று ஆதரவு தெரிவிக்கின்றனர்.

போராட்டம் நடத்தும் தம்மை அந்த இடத்தில்இருந்து அகற்றுவதற்குகடற்படையினர்பிரயத்தனம்மேற்கொள்கின்றனர்என்றுகிராமமக்கள்கூறுகின்றனர். இரவுநேரங்களில்ஒளிப்படம்எடுப்பது, வீதியில்வந்துமக்களைஒளிப்படம்எடுப்பது, கடற்படை முகாம் வாயிலில் அதிகளவான கடற்படையினர் ஒன்றுகூடி அச்சுறுத்தும்வகையில்செயற்படுவது, போராட்டதுக்குஆதரவுதெரிவித்துவருவோரை ஒளிப்படம் எடுப்பது, அவர்களின் விவரங்களைப் பதிவு செய்வது போன்றசெயற்பாடுகளைகடற்படையினர்மேற்கொண்டுள்ளனர்என்றுதெரிவிக்கப்படுகின்றது.

"எத்தகையஅச்சுறுத்தல்கள்வந்தாலும் எமதுபோராட்டத்தைக்கைவிடப்போவதில்லை. எங்கள்நிலம்எமக்குக்கிடைக்கும்வரைஎமதுபோராட்டம்தொடரும்." என்று கிராம மக்கள் தெரிவித்தனர். (ற-21,56)

## முள்ளிக்குளம் பிரச்சினைக்கு மைத்திரியுடன் பேசித் தீர்வு

### எதிர்க்கட்சித்தலைவர் உறுதியளித்தார் என சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், மார்ச் 26

மன்னார்முள்ளிக்குளம்மக்களின் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பில்உரையாடிதீர்வுபெற்றுத்தரப்படும்என்றுதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்தெரிவித்தார்.

முள்ளிக்குளம் கிராமத்தில் கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது நிலங்களை விடுவிக்கக் கோரி பொதுமக்கள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களுடன்நாடாளுமன்றஉறுப்பினர்இ. சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் மன்னார்மாவட்டகிளைக்குழுத் தலைவர் பரஞ்சோதி உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்றுகலந்துரையாடினர்.

"அவர்களின் பிரச்சினை தொடர்பாகதமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. எதிர்க்கட்சித்தலைவர்ஜனாதிபதிநாடுதிரும்பியதும்கேப்பாபுலவில்போராட்டம்நடத்தும் மக்களினதும் ஏனைய போராட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடி தீர்வு எட்டப்படும் என்று தெரிவித்தார்.

அவ்வாறுஅந்தவிடயங்கள் உரையாடும்போதுமன்னார் முள்ளிக்குளம்தொடர்பிலும் உரையாடி தீர்வு பெற்றுத் தரப்படும்என்றுஉறுதியளித்தார்" –என்று நாடாளுமன்ற உறுப்பினர்சாள்ஸ்நிர்மலநாதன் குறிப்பிட்டார். (ற101)

## சங்கானை வைத்தியசாலைக்கு குருதிப் பரிசோதகர் அவசியம்

### சங்கானை பட்டின அபிவிருத்தி சபையினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 26

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு இரத்தப் பரிசோதகர்ஒருவரைநியமிக்க வேண்டும் என்று சங்கானை பட்டின அபிவிருத்திச் சபையினர் கோரிக்கை விடுத்தனர்.

"சண்டிலிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு, இளவாலை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலிப் பகுதிகளைச்சேர்ந்தபலநோயாளர்கள் சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கே செல்கின்றனர். அவர்கள் குருதிப் பரிசோதனைசெய்யயாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலைக்குச்செல்லவேண்டியுள்ளது. யாழ்ப்பாணவைத்தியசாலைக்கு சென்றால், இடப்பற்றாக்குறை, நேரவிரயம், போக்குவரத்துசெலவினங்கள் மற்றும் தேவையற்ற நோய்த்தொற்று போன்றசிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவற்றை இலகுபடுத்துவதற்கு சங்கானை வைத்தியசாலைக்கு ஒரு குருதிப் பரிசோதகரைநியமிக்கவேண்டும்"–என்றுஅவர்கள்கோரியுள்ளனர்.

"நியமனத்தைதீர்மானிப்பது மத்திய அரசே. இப்பொழுது எம்மிடம் இது தொடர்பில் பயிற்சி நெறியை முடித்தவர்கள் இல்லை, எமது வைத்தியசாலைகள்பலவற்றில் குருதிப் பரிசோதகர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு தற்போதுஒருவரைநியமிப்பதுஎன்பதுமுடியாது"–என்று வடமாகாணசுகாதாரசேவைகள் பணிப்பாளர் க. நந்தகுமார் தெரிவித்தார். (ற-21,ரி)

## நூலகர்களிடம் கேட்டறிந்து நூல்களை அன்பளிப்பு செய்யக் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச். 26

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நூலகங்களுக்குபுத்தகங்களைஅன்பளிப்புச் செய்பவர்கள் நூலகர்களுடன் தொடர்பு கொண்டு தேவையான புத்தகங்களைவழங்குவதுசாலப்பொருத்தமாக இருக்கும் என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட நூலகங்களுக்குபுத்தகங்களைஅன்பளிப்பு செய்பவர்கள் பிரதேச சபைகளில் உள்ள நூலகர்களுடன் தொடர்பு கொண்டுஎந்தவகையானபுத்தகங்கள் தேவைஎனஅவர்களிடம்கேட்டுஅந்த புத்தகங்களை அன்பளிப்புச் செய்தால் நூலகம்வளம்பெறும். தற்போது நூலகங்களுக்கு வரும் வாசகர்கள் தமக்கு தேவையான புத்தகங்கள் நூலகத்தில் இல்லாதபோது அவற்றின் பெயர்கள் நூலகர்களிடம்தெரியப்படுத்தப்படுகின்றன. நூலகத்துக்கு புத்தகங்களை அன்பளிப்புச்செய்பவர்களின்அதிகமானவர்கள்நூலகத்தில்இருக்கும்புகத்தகங்களையே மீண்டும் மீண்டும் அன்பளிப்புச் செய்கின்றனர். தற்போது நூலகங்களைநோக்கி மாணவர்கள் அதிகமாக வருகின்றனர். அவர்களின் அறிவைவிருத்திசெய்வதற்குநூலகங்களில் கிடைக்காத புத்தகங்களை அன்பளிப்பு செய்வது பொருத்தமான இருக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ற-7)

## உடும்பு வைத்திருந்த நபர் கைது

முல்லைத்தீவு, மார்ச் 26

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அரிய வகை உடும்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில்நேற்றுமுன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார்என்றுமுள்ளியவளைப் பொலிஸார்தெரிவித்தனர். (ற-7)

### அசாதாரண சூழலால் தொழில் இழந்தோரை

# மீள சேவையில் இணைக்கும் கால எல்லையை நீடியுங்கள்

### வடக்கு சுகாதார அமைச்சர் கோரிக்கை

வவுனியா, மார்ச் 26

நாட்டில்ஏற்பட்டிருந்தஅசாதாரண சூழ்நிலை காரணமாக 1983ஆம் ஆண்டுஜூலைமாதத்துக்குப்பின்னர் தொழில்களை இழந்த அரச அலுவலர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பணியாளர்களை மீள சேவைக்கு இணைப்பதற்கான அரசசுற்றிக்கையின்காலஎல்லை நீடிக்கப்பட வேண்டும்.



இவ்வாறு வடக்கு [illegible] சுகாதார அமைச்சர் டாக்[illegible] சத்தியலிங்கம் மத்திய அரசைக் கோரியுள்ளார்.

[illegible] விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

இது தொடர்பாக கடந்த வடக்கு மாகாணசபைஅமர்வில்சுகாதார அமைச்சரால்விசேடபிரேரணையொன்று முன்வைக்கப்பட்டது. 16.02.2016ஆம்திகதிய04.2006 இலக்க அரச சுற்றிக்கையின் பிரகாரம்தொழில்களைஇழந்தஅரச உத்தியோகத்தர்கள் மேன்முறையீடுகளைஏற்றுக்கொள்வதற்கான கால எல்லை ஏற்கனவே முடிவடைந்துள்ளது. தற்போது வெளிநாடுகளிலிருந்து பலர் மீண்டும் சேவையில் இணைய நாட்டுக்கு மீள வருகின்றனர். இதனால் மேன்முறையீடுகளை ஏற்றுக் கொள்வதற்கான கால எல்லை மேலும் நீடிப்பதற்காக மத்திய அரசிடம் கோரிக்கை முன்வைக்கப்படல்வேண்டுமெனஇந்தசபையை கோருவதாகதீர்மானம்சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்மூலம்வடக்குகிழக்குமாகாணத்தில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால் வெளிநாடுகளுக்குச் சென்று மீளத்திரும்பிக் கொண்டிருக்கும் அரச உத்தியோகத்தர்களுக்குநன்மைகிடைக்கும் என்று நம்பப்படுகின்றது. என்றுள்ளது. (ற21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு காணாத வெப்பம் நீடிக்கும்

## உலக வானிலை ஆய்வு அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு,மார்ச் 26

உலகில் வரலாறு காணாத அளவில் இந்த வருடம் தீவிர தட்பவெப்ப நிலை நீடிக்கும் என்று உலக வானிலை ஆய்வு அமைப்பு எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடல் நீர்மட்டம் இதுவரையில்லாத அளவு அதிகரித்துள்ளது, கடல் பனிப்பாறை 40 இலட்சம் சதுர கி.மீ பரப்பளவுக்கு உருகிக்கரைந்து ள்ளது. மேலும், 2017 இல் வலுவான எல் நினோ விளைவு இல்லை என்றாலும், உலகில் ஏற்படும் மாற்றங்கள் வானிலை அமைப்பின் செயற்பாடுகள் புரிந்து கொள்வதற்கு சவாலாக உள்ளது. இது பற்றிய ஆய்வைக் கூட செய்ய முடியாத ஒரு நிலையில் உள்ளோம், விளைவுகளைக் கணிக்க முடியாத பிரதேசத்தில் இருக்கிறோம் என்றுள்ளது.

இதேவேளை அண்மையில் கால நிலை மாற்றத்தின் தாக்கம் இந்த வருடம் 50 சதவீதத்தால் அதிகரிக்குமென, ஆஸ்திரேலிய வானிலை ஆய்வு மையம் அதிர்ச்சி தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது. எல்நினோ எனப்படும் கால நிலை மாற்றத்தால், மழை காலத்தில் அளவுக்கு அதிகமான மழை பொழிவதுடன், கோடை காலத்தில் அதிகளவான வெப்பத் தாக்கம் இருக்குமெனவும், அதனால் அளவு கடந்த வறட்சி, மழை வெள்ளம் ஏற்படுவதற்குச் சாதகமாக அமையுமென ஆஸ்திரேலியாவின் வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 09 . 06 . 1944

இறப்பு 18 . 03 . 2015

**அமரர் செல்வி கமலாதேவி தம்பியையா**

"எங்கள் ஆருயிர்" செல்வமே
கமலா நீங்கள் எம்மை விட்டுப்
பிரிந்து இரண்டு ஆண்டுகள்
சென்றாலும் அன்று தொடக்கம்
இன்றுவரை நாம் ஆறாத
துயரத்துடனும் ஈர விழியுடனும் தான்
வாழ்கின்றோம்

109, அரசடி வீதி,
கந்தர்மடம்.

குடும்பத்தினர்

## 22 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 10. 09. 1903



மறைவு 29. 03. 1995

**அமரர் க. குமரேசு**

திதி - பங்குனி அபரபக்க சதுர்த்தசி

தோற்றம் 06. 06. 1908



மறைவு 05. 04. 1995

**திருமதி கு. தங்கம்மா**

திதி - பங்குனி பூர்வபக்கசஷ்டி

**ஆண்டுகள் எத்தனை ஆனாலும் ஆறவில்லை உங்கள் நினைவுகள்**
**இத்தனை ஆண்டுகள் கழிந்தும் ஓவியமாய் எம் நெஞ்சில் உங்கள் முகம்......**
**உங்கள் ஆத்மா இறைவன் திருவடிகளில் நிலைத்திருக்க பிரார்த்திக்கின்றோம்.**

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

**தும்பளை, பருத்தித்துறை.**

## நான்காம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

" நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம்
நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்
ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம் "

- ரோமர் 14 : 8

அன்னையின் அரவணைப்பில் 02 . 05 . 1934



ஆண்டவரின் அரவணைப்பில் 26 . 03 . 2013

**கிறிஸ்துதாஸ் தேவரத்தினம்**
**(CHRISTODAS THEVARATNAM)**

உறவோர் போற்றிட உத்தமனாக வாழ்ந்து
உத்தமியான மனையாள் தனை தவிக்கவிட்டு
உலகோர் போற்ற மகவுகளை வளர்த்தெடுத்து
உற்ற தனிமகனின் சிறப்பை இனிதே காணாது
ஓடோடிச் சென்று விட்டீர்களே அப்பா.....

கண்டிப்புடன் அதிகாரம் இல்லா அரவணைப்பும்
கர்த்தரின் அருள் கூர்ந்த கண்ணியமான பேச்சும்
கடிகார முள்ளுடன் கூடிய இடைவிடாத சேவையும்
கற்றோரும் மற்றோரும் போற்ற வாழ்ந்த தந்தையே
கண்களை மூடி நீங்கள் ஈரிரண்டு ஆண்டுகள் சென்றதே.....

அப்பா..... கர்த்தரின் அடியிலே அமைதியாக இருந்து
எம்மை வழிநடத்துவீர்களாக......

பாடசாலை வீதி, சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

நித்திய நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## தசாப்தம் ஒன்று கடந்து சென்றாலும் உங்கள் சகாப்தம் என்றும் தொடரும் !!!



திருமதி
**இரத்தினம் அமிர்தலிங்கம்**
(அமுதர் அம்மா)

பூலோக தரிசனம் 09.09.1932

சிவலோக தரிசனம் 16.03.2007

திதி: 26.03.2017

எங்கள் குலவிளக்கு அணைந்து இன்றுடன் பத்தாண்டுகள்
பத்திரமாய் எங்களைப் பாதுகாத்த எம் குலதெய்வம்
நாங்கள் நல்லாயிருக்க பாடுபட்ட எங்கள் உயிரே மீண்டும் வருமா
உங்களுடன் நாம் வாழ்ந்த அந்த பொற்காலம் காத்திருப்போம் பல்லாண்டு காலம்
உங்கள் மீள்வருகைக்காக நீங்கள் காட்டிய நல்வழியில் என்றென்றும் பயணிப்போம்
அமுதர் ஐயா குலம் விளங்கிடவே !!!

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் " திருவள்ளுவர்

ஓம் சாந்தி !!! ஓம் சாந்தி !!! ஓம் சாந்தி !!!

" மருதகோட்டம் "
வைத்தியசாலை ஒழுங்கை,
மானிப்பாய்.

விண்ணிலிருந்து தங்களது ஆசிகளிற்காக
என்றென்றும் காத்திருக்கும்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி முத்துரத்தினம் சிவப்பிரகாசம்**



மலர்வு 08.04.1936

உதிர்வு 06.04.2016

திதி: சதுர்தசி 26.03.2017

அன்பாலும் பணிவாலும் எல்லோரையும் அரவணைத்த
அன்புத் தெய்வமே ! அம்மா !!
ஆண்டுகள் ஒன்று ஆனாலும் அழியாது உங்கள் நினைவுகள்
காலங்கள் ஓடிக்கடந்தாலும் அம்மா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்துப் பூசிப்போம்
உங்கள் ஆத்மா இறைவன் திருவடிகளில் நிலைத்திருக்க
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

உங்கள் நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு





## தேவை



### நாய்க்குட்டி விற்பனை
45 நாள்கள் கொண்ட டாசன் நாய்க்குட்டிகளும் (ஆண்/பெண்). 2 மாதம் நிறைவடைந்த டோமன் (பெண்) நாய்க்குட்டியும் விற்பனைக்குண்டு. (தடுப்பூசி போடப்பட்டது)

077 434 1551

### வீடும் காணியும் விற்பனைக்கு
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கிலுள்ள (சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலடி) வீட்டுடன் கூடிய காணியும்.அதே இடத்தில் அத்திபாரத்துடன் கூடிய 10 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

077 968 8132, 077 953 2365

### காணி விற்பனைக்கு
A9 வீதி, மிருசுவிலில் 8.20, 4½ பரப்பு காணியும் உசனில் 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

076 655 7247

### வீடும் காணியும் விற்பனைக்கு
திருகோணமலை வரோதய நகரில் தி/தி/பாரதி வித்தியாலயத்திற்கு அருகில் மின்சாரவசதி, குழாய் நீர் வசதி என்பவற்றுடன் 20 பேர்ச் காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு.

**விலை 10இலட்சம்.**

077 432 4945/ 077 447 3438

### பூக்கன்றுகள் விற்பனை
நல்லின குரோட்டன்கள் மற்றும் 60 விதமான பூக்கன்றுகள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். பூச்சாடிகள், மீன் தொட்டிகள், பறவைக் கூடுகளையும் மலிவான விலையில் பெறலாம்.

**பூக்கன்று ஒவ்வொன்றும் 80/=**
**யாழ். அக்கூரியம்**
**917.K.K.S.றோட், யாழ்ப்பாணம்.**

075 991 0060, 077 707 0711

### காணி விற்பனைக்கு
கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் வரணி வாழைத்தோட்டம் சந்திக்கு கிட்ட சேச்சடியில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பிரித்தும் கொடுக்கப்படும்)

தொடர்பு: 077 899 9308

### வீடு விற்பனைக்கு
சுண்டுக்குளி, ஈச்சமோட்டை, கடற்கரை வீதியிலுள்ள ஒரு பரப்பும் 16 குளியும் உள்ள காணியும் அதனுள் அடங்கும் வீடும் விற்பனைக்குண்டு.

077 614 6434

### கட்டட இடிபாடுகள் விற்பனைக்குண்டு
யாழ் நகரில் உள்ள கட்டடத்தில் இடிக்கப்பட்ட இடிபாடுகள் உடன் விற்பனைக்குண்டு.

078 502 9616 (AJA/2765) (22.18)

### காணி விற்பனைக்கு
இறக்கம் பற்றை வல்வெட்டியில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் காணி விற்பனைக்கு உண்டு. (AJA/2731) (22.17)

077 809 7817

### காணி விற்பனைக்கு
சாவகச்சேரி, நுணாவில் ஆறுமுகம் ஒழுங்கையில் 18½ பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தரகர்கள் வேண்டாம்.

077 861 7740, 021 568 9000

### தேவை
கொழும்பிலுள்ள வீட்டிற்கு பணிப்பெண் உடனடியாகத் தேவை. தங்குமிட வசதியுடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

077 421 4414

### வீட்டுப்பணிப் பெண் தேவை
ஐந்து பேர் கொண்ட வைத்தியர் குடும்பத்திற்கு தங்கியிருந்து வேலை செய்ய வீட்டுப்பணிப் பெண் தேவை.

077 605 9696

### வீடு வாடகைக்கு தேவை
சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் வாடகைக்குத் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
Note: எப்பகுதியும் பரிசீலிக்கப்படும்.

071 524 3245 (AJA/2764) (22.17)

### மணமகள் தேவை
கார்த்திகை நட்சத்திரம் 82ஆம் ஆண்டு பிறந்த கனடாவில் நிரந்தர வதிவுரிமையுடைய யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆண்மகனிற்கு அழகிய, படித்த உயர்ந்த குடும்பப்பண்பாடான தகுந்த தகைமைகளையுடைய மணமகளைத் தேடுகின்றோம்.

077 471 7118/ 077 267 4733

### மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1990 இல் பிறந்த பூரட்டாதி 2 ஆம் பாதம் கும்பராசி, கொழும்பில் தொழில் புரியும் வங்கி உத்தியோகத்தர் மணமகனுக்கு மணமகள் தேவை.

077 228 2518

### மணமகள் தேவை
1978 சுவாதி செவ்வாய் இல்லை, பாவம் 8½, உயரம் 5' 7" B.Sc M.Sc UK P.R மணமகனுக்கு உயர்தராதரமுடைய மணமகள் தேவை.

தொடர்பு: 077 899 9308

### சாரதிதேவை
கொழும்பில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வாகன சாரதி (Driver) அலுவலக உதவியாளர் (Office Assistant) தேவை.

தொ.பே. 070 222 2080

### பணிப்பெண் தேவை
நல்லூரடியில் வயோதிபப்பெண் ஒருவரை இரவு நேரப் பராமரிப்பிற்கு பணிப்பெண் உடன்தேவை.

077 569 2006

### மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த விசாக நட்சத்திரமுடைய 12 இல் செவ்வாய் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

076 381 3269

### பணிப்பெண் தேவை
நல்லூர், பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள வீட்டிற்கு பணிப்பெண் தேவை.

021 222 3558

### வீட்டுப் பணிப்பெண் தேவை
கிளிநொச்சியில் வயதான அம்மா ஒருவரை பார்ப்பதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

078 443 2743

### மணமகன் தேவை
கனடாவை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட கணவனை இழந்த 38 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான பெண்ணுக்கு மணமகன் தேவை. வெளிநாட்டில் விரும்பத்தக்கது.

Whatsapp No: 009 477 738 2524

## ஏனையவை

### கட்டடப் பொருள்கள் தேவைகளுக்கு TVM Transport
- 3/4" சல்லி கற்கள்
- 1" சல்லி கற்கள்
- 1 1/2" சல்லி கற்கள்
- 6"X9" அத்திபாரக் கற்கள்
- 4"X4" அத்திபாரக் கற்கள்
- ABC
- கருங்கல் சிப்ஸ் வகைகள்
- கருங்கல் டஸ்ற் வகைகள்
- சிமெந்துக் கற்கள்

(AVA 0016)

T.P: 075739 9999, 0757300000

### LAND FOR SALE
வீட்டுடன் கூடிய 26½ பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு.
**கீரிமலை வீதி, உயனை இளவாலை.**

076 694 8177, 077 818 6897

### வீட்டுப் பணியாளர் தேவை
யாழ்ப்பாணம் நயினாதீவில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய வீட்டுப் பணியாளர் (ஆண்/பெண்) தேவை.
வயதெல்லை:- 55 தொடக்கம் 70
சம்பளம் நேரில் பேசித்தீர்க்கப்படும்.

077 169 7816 (AJA/2710) (22.17)

### மணமக்ள் தேவை
1983 ஆம் ஆண்டு பிறந்த 5'11' உடைய தனியார் வங்கியில் Executive Officer ஆக பணிபுரியும் தீயபழக்கவழக்கங்கள் எதுவுமற்ற அழகிய மகனுக்கு அரச ஓய்வூதியராகிய தாயார் நற்குணமுள்ள அழகிய மணமகளைத் தேடுகிறார். (அப்பா சிங்களம்-பௌத்தசமயம் அம்மா தமிழ்-இந்து)

மே/பா-உதயன்
விளம்பர இலக்கம்-5527.
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு
நல்லூரில் ஒரு அறை, சிறிய சமையலறை, குளியலறை, திறந்த விறாந்தையுடன் அனெக்ஸ் உண்டு

011 236 2611

### மணமகன் தேவை
யாழ் இந்து குருகுலம் 1984 உத்தரட்டாதி B.Sc மணமகளுக்கு U.K PR மணமகன் தேவை. யாழ் இந்து குருகுலம் 1987 அவிட்டம் A/L படித்த மணமகளுக்கு U.K PR மணமகன் தேவை.

077 440 3584

### வீடு வாடகைக்கு
பருத்தித்துறை பிரதான வீதியில் இருமாடி வீடு வாடகைக்கு உள்ளது. மொத்தம் 4 படுக்கை யறைகள். 2 குளியலறை. 3 மலசலகூடம்,சமையலறை, குழாய் நீர் வசதிகளுடன் (C/28787) (22,17)

011 267 4599, 021 226 4202

### வீடு வாடகைக்கு உண்டு
யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் புதுவீதியில் சகல வசதிகளுடன் புத்தம் புதிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 104 2125

### காணி விற்பனைக்கு
**Delft,** நெடுந்தீவு வட்டாரம், 10, பிள்ளையார் கோயிலடி அருகில் உள்ள 32 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.
மொத்தமாகவோ பகுதிபகுதியாகவோ கொள்வனவு செய்யமுடியும்.

T.P: 07[illegible]
077 669 9992, 077 310 8223

### பராமரிப்பாளர் உடன் தேவை
வவுனியா தோணிக்கல் பகுதியிலுள்ள 4ஏக்கர் பரப்பளவுடைய வீட்டுடன் பழமரங்கள் , தென்னை பயன்தரும் மரங்கள் நிறைந்த காணியினை பராமரிப்பதற்கு குடும்பத்துடன் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பராமரிப்பாளர் உடன் தேவை.

தொடர்பு: 075 302 1699

### பெயர்மாற்றம்
கள்ளப்பாடு வடக்கு முல்லைத்தீவு எனும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட **ரவிகரன் கோகுல்ராஜ்** ஆகிய எனது பெயரை இன்று முதல் **ரவிகரன் கோகுலன்** என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் இப்புதிய பெயரையே பயன்படுத்துவேன் என்று இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கும் மக்களுக்கும் தெரியப்படுத்துகின்றேன்.

**ரவிகரன் கோகுலன்**

### பெண் வேலையாள்கள் தேவை
வவுனியாவிலுள்ள பிரபல்யமான உணவகம் பெண்களினால் நடத்தப்பட்டு வருகின்றது. பெண்வேலையாள்கள் தேவைப்படுகின்றனர். சமையல் ஆள், சமையல் உதவியாளர், காசாளர், உணவு பரிமாறுகின்றவர்கள் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

**சுவர்க்கா உணவகம்**
**இல.33, ஆசைப்பிள்ளையார்குளம், வவுனியா.**
தொடர்பு: 075 302 1699

### SB Travels and Tours Pvt Ltd.
சகல நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்களையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். இந்தியாவுக்கான Ticket களை 25,800/= இற்கும் அத்துடன் இந்தியாவிற்கான வீசா விண்ணப்பப்படிவம் இலவசமாக பூர்த்தி செய்து தரப்படும் அத்தோடு மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான வீசாக்களும் மிகக்குறுகிய காலத்தில் செய்து தரப்படும். பிரயாணகாப்புறுதி, திகதி மாற்றமும் செய்து வழங்கப்படும்.

**SB Travels and Tours Pvt Ltd.**
021 222 9555, 021 222 8555,
076 691 1080, 81, 82, 83

### ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு
ஒரு வார ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.தொடர்புகளுக்கு.

077 245 3673

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687(லீதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்தில் போலி பிஸ்ரலைக் காட்டி மிரட்டிய சிப்பாய்

திருகோணமலையிலிருந்து அனுராதபுரம் நோக்கிச் சென்ற அரசுக்குச் சொந்தமான பேருந்தில் பயணித்த பயணிகள் இருவருக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தால், கோபம் கொண்ட பயணியொருவர் மற்றைய பயணியை பிஸ்ரல் துப்பாக்கியையும், கத்தியையும் காட்டி பயமுறுத்தினார் என்று மொறவெவ பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து பேருந்திலிருந்த பயணியை விசாரணை செய்தபோது, போலியான பிஸ்ரல் மற்றும் தெலிப்பி எனும் கத்தியும் கைப்பற்றப்பட்டதுடன், சந்தேகநபரான கடற்படைச்சிப்பாயைக் கைது செய்துள்ளதாக மொறவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலைக் கடற்படை முகாமில் எஸ்.பீ.எஸ். பிரிவில் கடமையாற்றிவரும் சிலாபம் கரவிடாகாரய பகுதியைச் சேர்ந்த கே.ஏ.என்.என்.கருணாரத்ன (36வயது) என்பவரே கைது செய்யப்பட்டார் எனத் தெரியவருகின்றது. குறித்த பேருந்தில் பயணித்த இருவரும் ஒரே கடற்படை முகாமில் வெவ்வேறு பிரிவுகளில் கடமையாற்றுபவர்கள் எனவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (ஐ)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சீனியர் ஒழுங்கையில் 7 பரப்பு காணி இரண்டு பக்கமும் வீதியுடன் 12 அறைகளுடன் கூடிய நாச்சார் வீடு, கிணறு விற்பனைக்கு உண்டு.

077 677 2459 (C/28539) (22,17)

## சைவவித்தியா விருத்திச் சங்கம்
## ஆண்டுப் பொதுக்கூட்டம்

சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 15.04.2017 அன்று நடைபெறும். யாப்பின் திருத்தப் பட்ட உறுப்புரை 05.09 இற்கமைய 31.01.2017 இற்கு முன்னர் உறுப்புரிமை பெற்றோரும் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்தோருமே இக்கூட்டத்திற்கு கலந்து கொள்ள உரித்துடையவராவார்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 05.04.2017 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி.**

**திரு.தி.செல்வமனோகரன்**
**செயலாளர்.**

## புதிய ஆங்கிலப் பாடநெறிகள் ஆரம்பமாகின்றன

**DIPLOMA IN ENGLISH (6 MONTHS )**



16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் சிறந்த பாடநெறி (பல்கலைக்கழகத்திற்கு தெரிவான / பல்கலைக்கழக / உயர் கல்வி மாணவர்கள் / வெளிநாடு செல்ல இருப்போர் / அலுவலர்கள்)

**ஆரம்பம் : 01.04.2017**
**காலை 7.30 மணி**
**(சனி/ஞாயிறு தினங்களில் காலை 7.30 - 10.00 பாடநெறி நடைபெறும்)**

**E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT**

இல. 372 D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
( வீரமாகாளிஅம்மன் கோவில் அருகில் )

**Tel : 0212217106 / 0770610271**
**0773400418 / 0774924166**

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
### (Skills Development Programme- 2017)

தொழில்சார் கற்கைகள் நிறுவனமானது திறன் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கற்கைநெறிக் கட்டணமின்றி குறுங்கால தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப , ஆங்கில கற்கை நெறிகளினை செயற்படுத்தி சான்றிதழ்களினை வழங்கி வருகின்ற அரச அங்கீகார முடைய நிறுவனம் ஆகும். நான்கு பிரிவு மாணவர்கள் நிறுவனத்தில் கற்கைகளினை பூர்த்தி செய்துள்ளனர். புதிய கல்வி ஆண்டில் (2017) புதிய கற்கை நெறிகளுக்காக நிறுவனத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

மேலும் நிறுவனத்தினால் கடந்த பலவருடங்களாக பல்வேறு சமூக ரீதியான செயற்பாடுகள் ஆற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவர் களுக்கான கல்வித்திட்டம், விசேட தேவையுடையோருக்கான உதவித்திட்டம் போன்றவை இதில் குறிப்பிடத்தக்கவை.

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்:**

- விண்ணப்பிக்கும் வயது எல்லை29 ற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.
  **அல்லது**
- பாடசாலை மாணவர்கள் பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பங்களினை சமர்ப்பித்தல் வேண்டும்.
  (தரம் 10 தொடக்கம் உயர்தரமாணவர்கள் விண்ணப்பிக்கமுடியும்)

**கற்கை நெறி காலம் :**

- 3 (மூன்று) மாதங்கள் -வார, வார இறுதிப் பிரிவுகள்.

**கற்கை நெறிகள்:**

| இலக்கம் | துறை | சான்றிதழ் | பாடத்திட்டம் |
|---|---|---|---|
| 01 | Information & Communication Technology | Diploma in Business Applications | • Ms Office Applications<br>• Internet Technology |
| 02 | English | Diploma in English<br>Diploma in Spoken English | • Basic English<br>• Spoken English<br>• Grammar |

**தெரிவு முறை:**

- கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சை

**நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:**

- புகைப் படம் (Pass port)
- தேசிய அடையாள அட்டைப் பிரதி
- பிறப்புச் சான்றிதழ் பிரதி

**விண்ணப்பிக்கும் முறை :**

விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவங்களை (பெயர், முகவரி, பிறந்ததிகதி , தொலைபேசி இலக்கம் , தகைமைகள் , உறவினர் அல்லாத இருசிபார்சுகள்) உள்ளடங்கலாக )பூரணப்படுத்தி **10/04/2017** ற்கு முன்பாக நிறுவனத்தில் கையளிக்குமாறு அல்லது தபாலில் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.வரையறுக்கப்பட்ட மாணவர்கள் கற்கை நெறிகளுக்குஉள்வாங்கப்படவுள்ளனர்.

**முகாமைத்துவ சபை,**
**தொழில்சார்கற்கைகள் நிறுவனம்,**
**182 சேர். பொன். இராமநாதன் வீதி,**
**திருநெல்வேலி,யாழ்பாணம்.**
**26.03.2017**

## யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து எண்ணிம ஆவணகம்
## JAFFNA PROTESTANT DIGITAL ARCHIVE

### எண்ணிம ஆவணகப் பயிற்சித் திட்டத்துக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து எண்ணிம ஆவணகத்தின் அரிதான ஆவணங்களின் காப்புத் தொடர்பான திட்டம் யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து சமூகத்தினரின் அரிதான ஆவணங்களினைக் கண்டடைந்து எண்ணிமப்படுத்துவதற்கான முன்முனைவாக அமைகிறது. இது ஆக்காடியாவின் நிதியுதவியுடன் பிரித்தானிய நூலகத்தின் முகாமையின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக மரபுரிமைப் பேணுகை, எண்ணிமப்படுத்தல் ஆகியவற்றில் ஆர்வமுள்ள பன்னிரண்டு மாணவர்களுக்கான பயிற்சித் திட்டமொன்றை இவ்ஆவணகமானது ஆரம்பிக்கவுள்ளது. இப்பயிற்சித் திட்டமானது வரலாறு, மரபுரிமைகளினைப் பேணுதல் மற்றும் எண்ணிமப்படுத்தல் ஆகியன பற்றிய ஒன்பது அமர்வுகளை உள்ளடக்கியதாக அமையும். இவ்வமர்வுகள் தமிழ்மொழியில், யாழ்ப்பாணத்தின் மிகச்சிறந்த வல்லுநர்களினால் நடாத்தப்படும். இப்பயிற்சித் திட்டத்தின் நிறைவில் பங்குபற்றிய மாணவர்களுக்கு யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து எண்ணிம ஆவணகத்திடமிருந்து சான்றிதழ் வழங்கப்படும். அத்துடன் எதிர்காலத்தில் இடம்பெறும் தொழில்வாய்ப்பின் போது இவர்கள் உள்ளீர்க்கப்படலாம்.

**வகுப்பு நேரங்கள்:** திகதி: 27. 04. 2017 – 20. 05. 2017

- செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் பி.ப 4.00 – மாலை 6.00 மணிவரை
- சனிக்கிழமைகளில் மு.ப 9.00 - பி.ப 4.00 மணிவரை

10. 05. 2017 - 14. 05. 2017 வரையான வெசாக் விடுமுறை நாள்களில் வகுப்புக்கள் நடைபெறமாட்டாது.

**வேண்டப்படும் கல்வி மற்றும் முன்னனுபவங்கள்:**

- க. பொ. த சாதாரணதரப்பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்
- ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மிகஅவசியமற்றதாயினும் ஆங்கில அறிவிருப்பின் நல்லது.
- நூலகவிஞ்ஞானம், மரபுரிமை முகாமைத்துவம், வரலாறு மற்றும் சமூகவியற் துறைகளில் ஆர்வமிருப்பின் நல்லது.

**வேண்டப்படும் தகுதிகள்:**

- நேரமுகாமைத்துவம் மற்றும் மற்றவர்களை மதிப்பதோடு நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
- கேட்டல் மற்றும் தெளிவாகத் தொடர்பாடத்தக்க தொடர்பாடற் திறமை இருத்தல் வேண்டும்.
- குழுச்சூழலோடு இணைந்து தொழிற்படத்தக்கவராகவும் சமத்துவமான பால்நிலைப் பங்குபற்றலினை ஊக்குவிக்கத்தக்கவராகவும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

ஆர்வமுள்ளவர்கள், எங்களது இணைய முகவரியான http:// jaffnapdl.org/ digitalarchives application ஊடாக விண்ணப்பிக்கலாம். தபால்மூலம் விண்ணப்பிப்பதற்கு http://jaffnapdl.org/ digitalarchivesdownload எனும் இணைய முகவரியில் விண்ணப்பப் படிவத்தினைத் தரவிறக்கம் செய்து "யாழ்ப்பாணப் புரட்டஸ்தாந்து எண்ணிம ஆவணகம் இல.9/4, பிளெச்சர் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், இலங்கை" என்ற முகவரிக்கு ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்னர் வந்தடையுமாறு அனுப்பிவைக்கலாம்.தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுடன் மாத்திரமே தொடர்பு கொள்வோம். மேலதிக தகவலுக்கு JaffnaEAP835@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியினூடாக தொடர்புகொள்ளவும்.

**விண்ணப்பமுடிவுத்திகதி 01. 04. 2017**

## மாபெரும் மலிவு விற்பனை..

நாவலர் வீதியில் அமைந்துள்ள....

## JAMUNA FURNITURE




**தம்ரோ, பியெஸ்ரா**
**ஏக விநியோகஸ்தராகிய**
**எங்களிடம்.....**

- நீங்கள் வாங்கும்ஒவ்வொரு SoFa செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான Glass Coffee Table இலவசம்.
- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை இலவசம்.
- Panasonic, Innovex Tv மற்றும் Preethi Mixi, Stand fan, Damro Washing Machine, Rice Cookers ஐ அதிகூடிய விலைக் கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.
- 25000/= இற்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்களை கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.
- Damro, Pyestra,Nilkamal, Phonix, Airpico ஆகியவற்றின் உற்பத்திப் பொருள்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**JAMUNA FURNITURE**
181, Navalar Road, Jaffna.
021 222 1092, 077 757 4776

விடுமுறை நாள்களிலும் (ஞாயிற்றுக்கிழமை)எமது நிலையம் திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

இலங்கையின் பிரபல்யமான காப்புறுதிக் கம்பனியின் விற்பனைப்பிரதிநிதிகளுக்கான பதவி வெற்றிடம்
தகைமை: க.பொ.த சா/தரத்தில் கணிதபாடம் உட்பட 6 பாடச் சித்திகளுடன் விண்ணப்பிக்கலாம். காப்புறுதித் துறையில் அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**மே/பா-உதயன்** (AJA2690) (22.17)
**விளம்பர இலக்கம்-5528.**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg)மொத்தமாகவும் (ரூபா.100), சில்லறையாகவும் (ரூபா. 110) பெற்றுக்கொள்ளலாம்

**சிவா நறுமணப் பூங்கா**
**இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**(சத்திரச் சந்திக்கு அருகில்)**

## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

**யா/ கொல்லங்கலட்டி சைவத்தமிழ் வித்தியாசாலையில்** பழையமாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் **02.04.2017** ஞாயிற்றுக் கிழமை முற்பகல் **10.00** மணிக்கு **பாடசாலை மண்டபத்தில்** நடைபெறவுள்ளது. எனவே இப் பாடசாலையின் பழைய மாணவர் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஏற்பாட்டுக்குழு**

## கட்டடம் வாடகைக்கு குத்தகைக்கு கோரல்

வடக்கு மாகாண
**சுதேச மருத்துவத்திணைக்களத்தின்**
அலுவலக செயற்பாடுகளிற்காக
பின்வரும் வசதிகள் மற்றும்
நிபந்தனைகளின்
அடிப்படையில் **கட்டடமும் காணியும்**
**வாடகைக்கு/ குத்தகைக்கு** வழங்க
விரும்புபவர்களிடமிருந்து கூறுவிலைகள்
கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்:**

1. அலுவலக பாவனைக்கு குறைந்தது 4000 சதுர அடிகளைக்கொண்ட கட்டட மும், வாகனத் தரிப்பிடத்துக்கு 1500 சதுர அடிகள் வரையான நிலப்பகுதியையும் கொண்டிருக்க வேண்டும்.
2. யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் / அண்மைய பகுதியில் அமைந்திருத்தல் வேண்டும். (பேரூந்துப் போக்குவரத்து மார்க்கங்களை அண்மித்த கட்டடங்கள் விரும்பப்படும்)
3. மின்சார வசதி (3phase) . நீர் வசதிகள் மற்றும் கழிப்பறை வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
4. குறைந்தது 2 வருடங்களிற்கு வாடகைக்கு வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
5. முற்பணம் வழங்கப்படமாட்டாது.
6. மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை வழங்கப்படும்.

மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டதான விண்ணப்பத்தில் வீட்டு உரிமையாளரின் முழுப் பெயர், தொடர்பு முகவரி, தொலைபேசி இலக்கம், எதிர்பார்க்கும் மாதாந்த வாடகைத் தொகை ஆகிய விவரங்களுடன் ஏனைய தகவல்களையும் உள்ளடக்கி தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "கட்டடம் வாடகைக்கு/ குத்தகைக்கு" என குறிப்பிடப்பட்டு 'மாகாண ஆணையாளர், மாகாண சுதேச மருத்துவத்திணைக்களம் - வடமாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு 11.04.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**Dr. திருமதி சி. துரைரட்ணம்**
**மாகாண ஆணையாளர்,**
**மாகாண சுதேச மருத்துவ திணைக்களம்,**
**வடமாகாணம்.**
**தொலைபேசி இல. 021 222 0821**

## கடைகள் வாடகைக்கு -கிளிநொச்சி

கிளிநொச்சி, கனகபுரம், 2ஆம் குறுக்கு வீதியில் 440 மற்றும் 640 சதுரஅடி பரப்பளவுள்ள கடைகள் வாடகைக்கு உண்டு. ஏனைய விவரங்கள் நேரில்

**078 443 2743** (AKN0080) (22.17)

## House For Rent

5 Bedrooms house, about 2000 Square feet with parking space, Prime Location - on Main street, Jaffna. Close to churches, Schools,Market and Public transport.

*Open plan, Verandah *Living area,Dining aera, Pantry
*Master bedroom With A/C

New Bathroom, New electrical 3 Phase wiring New water tank, Parking for 20 Motor bikes or a few cars.

Open house on sunday 26 th March
9.00 am - 3.00 Pm
211/1, Main Street, Jaffna.

*Preference to institutions.

Contact: E-mali: maemartyn@yahoo.com

## விற்பனைப்பிரதிநிதிகள் தேவை

1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது இந்திய தொழில் முயற்சியாளர்களால் நடத்தப் படும் அம்பனையில் உள்ள **எலிபண்ட் மெட்டல் அண்ட் அலுமினியம் வேக்ஸ் பிரைவேட் லிமிடெட்** பிரபல அலுமினியம் பாத்திரம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கு விற்பனைப் பிரதிநி-திகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு உடனடியாக தேவைப்படுகின்றனர். முன் அனுப வம் விரும்பத்தக்கது. Motor சைக்கிள் இருப்பது அத்தியாவசியமானது. விவரங்களை emawpl@gmail.com என்னும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும். பழைய அலுமினிய பாத்திரங்கள் மற்றும் கிளிப் சீட் நியாய விலைக்கு உடன் காசிற்கு கொள்வனவு செய்யப்படும்.

**முகவரி:** (AJA/2400) (22.17)
**அம்பனை, தெல்லிப்பழை.**
**மேலதிக தொடர்புகளுக்கு:**
**075 348 3557, 021 224 3338**

## 75 ஆவது பிறந்தநாள்

**26.03.2017**

**அருட்பணி A.P.தேவசகாயம்**
அடிகளார்
பங்குத்தந்தை புனித ஆசீர்வாதப்பர்
ஆலயம் நல்லூர்



"ஆயர் தம் மந்தையைக் காப்பது போல் ஆண்டவர் நம்மைக் காத்தருள்வார் (ஏரேமியா 31:10)"

**வாழ்துவோர்:**
**திரு. ஞானப்பிரகாசம் சாமிநாதர்**
**குடும்பத்தினர்**
**மத்தியவீதி, மாதகல்.**

## வில்பத்தில் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி வர்த்தமானியில்

*அரச தலைவர் கையொப்பம்*

கொழும்பு,மார்ச் 26

வில்பத்து தேசிய சரணாலயத்துக்கு வடக்கேயுள்ள வன பாதுகாப்புத் திணைக்களத்துக்குரிய அனைத்து வனப்பகுதிகளும் இணைக்கப்பட்டு, தனியான பாதுகாக்கப்பட்ட வனமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதற்க மைய வில்பத்து தேசிய சரணாலயத் துக்கு வடக்கே அமைந்துள்ள வனப் பாதுகாப்பு திணைக்களத்துக்குரிய மாவில்லு, வெப்பல், மறிச்சுக்கட்டி, விளாத்திக்குளம், பெரியமுறிப்பு ஆகிய பாதுகாக்கப்பட்ட வனங்கள் இணைக் கப்பட்டு, வன பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் '3அ' பிரிவின் கீழ் 'மாவில்லு பாதுகாக்கப்பட்ட வனம்' என பிரகட னப்படுத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலில் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன கையொப்பமிட்டுள்ளார்.

இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட காடு களின் எல்லைகளை மாற்ற வேண்டு மாயின், வன பாதுகாப்பு கட்டளைச் சட்டத்துக்கமைய விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் தயாரிக்கப் பட்ட உத்தரவு, அரச தலைவரால் அங்கீகரிக்கப்பட்டு, நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னரே மேற் கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய மேற்குறித்த வனத்துக் கான உச்ச சட்டபூர்வ பாதுகாப்பு மேலும் உறுதிப்படுத்தப்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வில்பத்து சரணாலயம் மற்றும் அத்து டன் இணைந்துள்ள வனப்பகுதியில் அத்துமீறிய காடழிப்பு இடம்பெறுவ தாக கடந்த காலங்களில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இருந்த போதிலும் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது 2012/2013 காலப்பகுதியில் விடுவிக்கப்பட்டுள்ள வனக் காணிக ளுக்கு மேலதிகமாக ஏனைய காடுகள் துப்புரவு செய்யப்படவில்லையெனத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் அரச தலைவர் தலை மையில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற கூட் டத்தில் இவ்வாறு விடுவிக்கப்பட்ட காணிகளுடன் இணைந்ததாக உள்ள காடுகளின் பாதுகாப்பை மேலும் உறு திப்படுத்துவதற்காக, பாதுகாக்கப்பட்ட வனங்களாக வர்த்தமானியில் பிரகட னப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிறைச்சாலைத் திணைக்களத்துக்கு குண்டு துளைக்காத பேருந்து தயார்

கொழும்பு,மார்ச் 26

சிறைவைக்கப்படும் குற்றவாளிகள் மற்றும் பாதாளக் குழு உறுப்பினர்க ளைக் கொண்டு செல்வதற்காகச் சிறைச்சாலை திணைக்களத்தால், குண்டுதுளைக்காத பேருந்து வடிவ மைக்கப்பட்டுள்ளது.

கேகாலை சிறைச்சாலையின் உதவிக் கண்காணிப்பாளரின் எண்ணக்கரு வுக்கு அமைய, சிறைச்சாலை பாவ னைக்காக இருந்தப் பேருந்தை நவீன மயப்படுத்தி, குண்டுதுளைக்காத வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பேருந்து ஒன்றை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதா யின் சுமார் 20 இலட்சம் வரை செல வாகும் எனவும், இந்தப் பேருந்தை நவீன மயப்படுத்த 7 இலட்சம் ரூபா மாத்திரமே செலவானதாகவும் சிறைச் சாலை அமைச்சின் செய்தித் தொடர்பா ளர் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சாவகச்சேரி நகர சபைக்கு ஒரு சபாஷ்!

சாவகச்சேரி நகரசபை பொலித்தீன்களுக்குப் பதிலாகப் பனையோலைப் பைகளையும் சாக்குகளையும் சீலைப் பைகளையும் ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளது என்கிற நல்ல செய்தி வந்துள்ளது. வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லது செய்யக்கூடிய இத்தகைய முயற்சிகள் எப்போதும் பாராட்டப்படவேண்டும், வரவேற்கப்படவேண்டும், ஊக்குவிக்கப்படவேண்டும்.

சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் வரைக்கும் நாம் அனைவருமே இதுபோன்ற பொருள்களைத்தான் பயன்படுத்தி வந்தோம். சந்தைக்குப் போவதாக இருந்தாலும் கடைகளுக்குப் போவதாக இருந்தாலும் கையில் ஒரு பையுடன்தான் புறப்பட்டோம். அது பனையோலைப் பையாகவோ, பிரம்புப் பையாகவோ , துணிப் பையாகவோ சாக்குப் பையாகவோ தான் இருந்தது. இவையெல்லாம் நிலத்தைச் சேரும்போது உக்கி சூழலுடன் இயைபடைந்து மக்கிப் போகக்கூடியவை. சூழலுக்குப் பாதிப்பில்லாதவை.

பின்னர்பிளாஸ்ரிக்கூடைகள்வந்தன. நீண்டகாலப்பயன்பாடு என்று எண்ணிக்கொண்டு மெல்ல மெல்ல அந்தக் கூடைகளுக்குமாறினோம். அதன்பயனாக விரைவாகவே 'ஷொப்பிங் பாக்' எனப்படும் பொலித்தீன் பைகள் பயன்பாட்டுக்கு வந்து சேர்ந்தன.

நாமும் பயன்படுத்திவிட்டு தூர வீசும் கலாசாரத்திற்குள் மெல்ல மெல்லச் சிக்கிக்கொண்டதால், வீட்டிலிருந்து சந்தைக்கோ , கடைக்கோ ஒரு பையைக் கையோடு எடுத்துச் செல்வதைக் கேவலமாக எண்ண ஆரம்பித்தோம். அதன் விளைவாக நாம் சேர்த்து வைத்திருப்பதெல்லாம் தொன் கணக்கான இந்த மக்கிப்போகாத பொலித்தீன் குப்பைகள்தான்.

உலகம் முழுவதும் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்கிறது. இலகுவில் பிரிகையடையாத இந்தக் கழிவால் நாளாந்தம் பிரச்சினைகள்பெருகுகின்றன. மழைக்காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்குக்கூட பொலித்தீன் கழிவுகள் காரணமாகின்றன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

வடக்குக் கிழக்குப் பகுதிகள், போருக்குப் பின்னரான கடந்த 7 வருட காலத்தில் மிக வேகமாக நுகர்வுக் கலாசாரத்துக்குள் புகுந்துகொண்டிருப்பதன் காரணத்தால் கழிவகற்றல் எல்லா இடங்களிலும் பிரச்சினையாகிக் கொண்டிருக்கிறது. மக்கும் கழிவுகள், மக்காத கழிவுகள், மின்னியல் கழிவுகள் என்பவற்றைத் தரம் பிரித்து வைக்கும்படி மாநகர சபைகளும், நகர சபைகளும், உள்ளூராட்சி சபைகளும் விடுக்கும் கோரிக்கைகளுக்கு நாம் ஒத்துழைப்பதும் இல்லை. நம் வீட்டுக் குப்பையை எங்காவது கொண்டு சென்று வீசிவிட்டால் சரி, என் வீடு குப்பையில்லாம் இருந்தால்போதும், வீதியும் நாடும் எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை என்கிற மனோநிலையுடன்தான் பலரும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

இத்தகைய மனோபாவத்திற்கு மத்தியில் பொலித்தீனை ஒழிக்க வேண்டுமானால் அதன் பாவனையை நிறுத்துவதே ஒரேவழி. பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த சட்டங்கள் மூலமான நடவடிக்கைகள் ஒருபுறத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் மறுபுறத்தில் பொலித்தீன் பாவனையைக் கைவிடுவதற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவது அவசியம். மக்கள் மத்தியிலும் வியாபாரிகள், வர்த்தகர்கள் மத்தியிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் அவசியம் மேற்கொள்ளப்படவேண்டும்.

அதேநேரத்தில் பொலித்தீனுக்கான மாற்று ஏற்பாடுகளை செய்வதும் அவை சந்தையில் தேவையான அளவுக்கு மலிவாகக் கிடைப்பதை உறுதிப்படுத்துவதும் தேவையானது.

அந்த வகையில் சாவகச்சேரி நகரசபையின் தற்போதைய முன்னெடுப்பு மிகவும் வரவேற்கத்தக்க ஒரு நடவடிக்கை. மக்களைப் பொலித்தீன் பாவனையில் இருந்து மீட்டெடுத்து அவர்களைச் சுற்றுச் சூழலுக்கு இயைவான பொருள்களின் பாவனையின் பக்கம் திரும்பும் இந்த முயற்சி ஏனைய நகர, மாநகர, உள்ளூராட்சி சபைகளுக்கும் முன்னுதாரமானதும்கூட.

வெறும் வாக்குறுதி, மேடைப் பேச்சு என்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் தென்மராட்சி நகர சபை இந்த நல்ல முயற்சியை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செயற்படுத்தவேண்டும். அதற்கான நடவடிக்கையையும் விடா முயற்சியையும் அது தீவிரப்படுத்த வேண்டும். ஏனையை உள்ளூராட்சி மன்றங்களுக்கு முன்னுதாரணமாக இந்த விடயத்தில் அது சாதித்துக் காட்டவேண்டும்.

# சிங்கள மக்களது இணக்கமின்றி ஆட்சித்தேர் நகரா

## இனங்கள் மத்தியில் நல்லிணக்கம் உருவாவது கடினமான விடயமே

வழிமூலம் - 'த எகனமிஸ்ட்'
மொழியாக்கம் - நித்தியபாரதி

உங்களுடைய ஆள்கள் எங்களுடையசொந்த வீடுகளை ஆக்கிரமித்துள்ளமையால் நாங்கள் தெரு நாய்களின் நிலைக்கு ஆளாகியுள்ளோம்' என ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்து கொண்டிருந்தவர்கள் தமது கைகளில் தாங்கியிருந்த பதாகைகளில் எழுதப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சேலை அணிந்த தமிழ்ப் பெண்கள் தமது பிள்ளைகளுடன் பங்கேற்றிருந்தனர்.



வடக்குகிழக்கில் உள்ள வான்படைக்குச் சொந்தமான முகாம் ஒன்றுக்கு அருகில் வீதியோரமாக தற்காலிக கூடாரங்களை அமைத்து கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக அதில் தங்கியிருந்தவாறு இந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

பெரும்பான்மை சிங்கள மக்களைக் கொண்ட இராணுவத்தினர் , எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் போர் முடிவுக்கு வந்ததையடுத்து தமது நிலங்களை ஆக்கிரமித்ததாகவும், ஆனால் அந்த நிலங்களைத் தம்மிடம் கைய[illegible] மறுத்து வருவதாகவும் அந்த மக்கள் கூறினர்.

### நில ஆக்கிரமிப்பு தமிழர்களது முக்கிய பிரச்சினை

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பதவிக்கு வந்த தற்போதைய அரசானது, நிலங்கள் தம்மிடம் கையளிக்கப்படும் என வாக்குறுதி வழங்கிய போதிலும், இன்னமும் அது நிறைவேற்றப்படவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அந்த மக்கள் தெரிவித்தனர்.

அவர்களது நிலங்கள் அவர்களிடம் கையளிக்கப்படும் என அரசு அண்மையில் அறிவித்தபோதிலும், அதனை ஆர்ப்பாட்டக்காரர்கள் நம்பத் தயாராக இல்லை. போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினை களில் இந்த நில விவகாரமும் முக்கியமான ஒன்றாகும்.

சிங்களப் பெரும்பான்மை மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் நல்லிணக்கம் ஏற்படாமைக்கு நில விவகாரம் முக்கிய காரணியாக உள்ளதாக தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்ட போது, நாட்டில் அமைதி ஏற்படும் என்கின்ற நம்பிக்கை ஏற்பட்டது. மைத்திரிபால சிறி சேனவை அரச தலைவராகத் தெரிவு செய்வதில் இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 15 சதவீதத்தைக் கொண்ட தமிழ் மக்கள் தமது முழு ஆதரவையும் வழங்கியிருந்தனர்.

இதேபோன்று நாட்டின் மக்கள் தொகையில் 10 சதவீதத்தைக் கொண்ட தமிழ்பேசும் முஸ்லிம் சமூகத்தினரும் சிறிசேனவுக்கு தமது பெரும்பான்மை ஆதரவை வழங்கியிருந்தனர்.

### மகிந்தவை பதவியைவிட்டு அகற்ற உதவிய தமிழ் மக்கள்

மகிந்த ராஜபக்சவின் அதிகாரத்துவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் எனத் தமிழ் மக்கள் விரும்பினர். போரின்போது புலிகள் அழிக்கப்பட்டதுடன், தமிழ்மக்கள் பெருமளவில் படுகொலை செய்யப்படுவதற்கும் இவர்களின் சொத்துக்கள் அழிக்கப்படுவதற்கும் காரணமாக இருந்த மகிந்த ராஜபக்சவை ஆட்சியிலிருந்து விரட்டுவதற்காக, சிறிசேன அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட போது தமிழ் மக்கள் மிகவும் மகிழ்வடைந்தனர்.

சிறிசேன ஆட்சிக்கு வரும்போது பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வருவதாக வாக்குறுதி அளித்தார். நாடாளுமன்றில் புதிய அரசமைப்பு சாசன சீர்திருத்தத்தை முன்வைப்பதையும், இவ்வாண்டு இறுதிக்குள் நாடு தழுவிய பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதையும் சிறிசேன தனது இலக்காகக் கொண்டுள்ளார்.

நாடாளுமன்றுக்கு அதிக அதிகாரத்தை வழங்கும் விதமாக நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழிப்பதுடன் , மாகாணங்களுக்கு காணி மற்றும் காவற்றுறை அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குவதாகவும் வாக்குறுதி வழங்கப்பட்டது. இதன்மூலம் தமிழ் மக்கள் வாழும் மாகாணங்களில் முழுமையான சுயாட்சி இல்லாதுவிடினும், தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய நிலைப்பாட்டை உருவாக்க முடியும்.

அத்துடன் கலப்பு நீதிப் பொறிமுறையை உருவாக்குவதுடன் போரின் போது காணாமற் போன மற்றும் கடத்தப்பட்ட பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கான காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை செய்வதற்கான அலுவலகம் ஒன்றை அமைப்பதாகவும் சிறிசேன அரசினால் வாக்குறுதி வழங்கப்பட்டது.

18 மாதங்களாக எவ்வித விசாரணையுமின்றி ஒருவரைச் சந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேகத்தின் பேரில் தடுத்து வைப்பதற்கு அனுமதி வழங்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இல்லாமல் ஆக்குவதாகவும், போரின்போது அழிக்கப்பட்ட அல்லது சுவீகரிக்கப்பட்ட உடைமைகளுக்கு நட்டஈட்டை வழங்குவதாகவும், உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு ஒன்றை அமைப்பதாகவும் வாக்குறுதி வழங்கப்பட்டது. போரின் போது இடம்பெற்ற பல்வேறு மீறல்களையும் விசாரணை செய்வதற்காக வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களைக் கொண்ட கலப்பு நீதிப் பொறிமுறை ஒன்றை அமைப்பது தற்போது சர்ச்சைக்குரிய விடயமாக மாறியுள்ளது.

**வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிய நல்லாட்சி அரசு**

நடந்து முடிந்த ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரிலும் இலங்கை தொடர்பான விவாதம் இடம்பெறுகிறது. இந்த நிலையில் இலங்கை அரசானது, பன்னாட்டுச் சமூகத்துக்குத்தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் எனவும், இதற்கு பன்னாட்டுச் சமூகம் மேலும் மேலும் அழுத்தங்களை இடவேண்டும் எனவும் தமிழ் மக்கள் விரும்புகின்றனர். ஆனால் பன்னாட்டு சமூகம் தன் மீது வசைபாடுவதை நிறுத்த வேண்டும் என இலங்கை விரும்புகிறது.

இரண்டு பிரதான கட்சிகளைக்கொண்டே சிறிசேனவின் கூட்டு அரசு உருவாக்கப்பட்டுள்ளது. போர்க் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக பன்னாட்டு விசாரணை ஒன்று இடம்பெறுவதற்கு சிங்கள மக்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். இவர்களது விருப்புக்கு மாறாக சிறிசேன செயற்பட்டால் தனது வாக்கு வங்கியை இழக்க வேண்டியேற்படும் என அவர் அஞ்சுகிறார்.

நாடாளுமன்றில் சிங்களப் பிரதிநிதிகளே பெரும்பான்மையாக உள்ளதால், அரசமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கும், கலப்பு நீதிப் பொறிமுறையை உருவாக்குவதற்குமான ஆதரவை சிறிசேனவால் பெறமுடியவில்லை. போர்க்குற்றச்சாட்டுத் தொடர்பில் அனுதாபம் காண்பித்தால், கலப்பு நீதிப்பொறிமுறை தோல்வியடையும்' என முன்னணி மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஜெகான் பெரேரா எச்சரித்துள்ளார்.

'ராஜபக்சவுக்கு ஆதரவான மனப்பாங்குடன் அரசின் எண்ணங்களுடன் முக்கிய பதவிகளில் உள்ளவர்கள் தற்போதும் செயற்படுவது, அரசமைப்புச் சீர்திருத்தத்திற்குத் தடையாக உள்ளது' என அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார். 'சிறிலங்காவில் தற்போதும் சித்திரவதைகள் தொடர்கின்றன' என ஐ.நா மனித உரிமைகள் சபையைச் சேர்ந்த முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

**தொடர்ந்தும் அதிருப்தியுடன் தமிழ் மக்கள்**

தமிழ் மக்கள் தொடர்ந்தும் அதிருப்தியுடனேயே வாழ்கின்றனர். வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள், தென்னிலங்கையர்களை விட பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களாக உள்ளனர். இவர்கள் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழும் தமது உறவுகளிலேயே அதிகம் தங்கி வாழ்கின்றனர்.

ஆஸ்திரேலியா, பிரிட்டன், கனடா, மலேசியா, மத்திய கிழக்கு போன்ற நாடுகளில் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். இவர்களில் அதிகமானோர் போர் காரணமாக நாட்டை விட்டுத் தப்பிச் சென்றவர்களாவர். இவர்களில் சிலர் தமது சொந்த இடங்களில் முதலீடு செய்வதற்காகத் தற்போது திரும்பி வந்துள்ளனர்.


யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்குச் செல்வதற்குக் கூட பன்னாட்டு வானூர்திசேவை வசதி ஏற்படுத்தப்படவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள பலாலி வானூர்தி நிலையம் விமானப்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இலங்கை அரசால் பல புதிய வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் சமூக மற்றும் விவசாய அபிவிருத்திக்காக சிறியளவிலான நிதியே செலவிடப்பட்டுள்ளது. போருக்கு முன்னர் பிரதான தொழில்களில் ஒன்றாகக் காணப்பட்ட மீன்பிடி தற்போது பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பிரதேசங்களில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அதிகம் காணப்படுகின்றன. இவர்கள் தமது வாழ்வைக் கொண்டு நடத்துவதில் பல்வேறு சுமைகளை எதிர்நோக்குகின்றனர். இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் போதைப் பொருள்களும் கடத்தப்படுகின்றன. தமிழ் மக்கள் தொழில்வாய்ப்பற்றவர்களாகவும் இது தொடர்பில் ஊக்குவிப்பு வழங்கப்படாதவர்களாகவும் உள்ளதைக் காணமுடிவதாக யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்த பன்னாட்டு வங்கியாளர் ஒருவர் தெரிவித்தார்.


யாழ்ப்பாண வர்த்தக சம்மேளனத்துக்கு கொழும்பு அரசால் உதவிகள் வழங்கப்படுவதில்லை. 'எம்மை அடிமைப்படுத்தவும் எம்மைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் அரசாங்கம் விரும்புகிறது. எமது இளையோரை தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு அனுப்ப எமக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்' என யாழப்பாண வர்த்தக சம்மேளனம் கோரிக்கை விடுத்தது.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பானது, இலங்கையின் எதிர்க்கட்சியாகச் செயற்படுகின்றபோதிலும் இன்னமும் முன்னேற்றங்கள் எட்டப்படவில்லை.

போரில் தோல்வியுற்ற தமிழ் மக்கள் மீண்டும் ஒன்று சேர்ந்து போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு சதித்திட்டம் தீட்டுவதாக ராஜபக்சவின் ஆதரவாளர்கள் சிலர் கூறி வருகின்றனர். இது சாத்தியமற்ற ஒன்றாகும். 2009ல் புலிகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டு விட்டனர்.

இந்த நிலையில் மேலும் மேலும் தமிழ் மக்கள் ஓரங்கட்டப்படுகின்றனர். இலங்கை மீது பன்னாட்டுச் சமூகம் அழுத்தம் கொடுக்கும் என்றே தமிழ் மக்கள் நம்புகின்றனர். "நாங்கள் நிலைமாறு கால நீதிப் பொறிமுறையை முன்னெடுக்கத் தவறினால், தென்னிலங்கை வாழ் சிங்கள சமூகம் ஒருபோதும் தமிழ் மக்களின் பிரச்சினையை முன்னெடுக்காது என தமிழ் இளைஞர்கள் கருதுகின்றனர். ஆகவே இதன்மூலம் அடுத்துவரும் தலைமுறையானது புதிய பயங்கரவாதப் பாதையை நோக்கித் தள்ளப்படுவதை எவராலும் தடுக்க முடியாது" என அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர எச்சரித்தார்.





# வாசகர் திருமுகம்

## தரம் தாழாதீர்கள்!

அன்பான உதயன் பத்திரிகை ஆசிரியருக்கு!

உங்களுக்குச் செய்திகள் கிடைக்காவிடில் பக்கத்தைக் குறையுங்கள். அதற்காகக் கருணா போன்றவர்களின் செவ்விகளை வெளியிடாதீர்கள். அவரது பேட்டியை ஏன்தான் வெளியிட்டீர்களோ! அதன் மூலம் உங்கள் பத்திரிகையையே தரம் தாழ்த்திவிட்டீர்கள்.

பல்லாயிரம் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட போரை நடத்திய மகிந்த ராஜபக்சவைத் தனது தலைவன் என்று கூறித் திரியும் கருணாவிற்கு வக்காளத்து வாங்கும் உதயன் ஆசிரியர் குழுவிற்கு எங்கே போய்விட்டது அறிவு?

எதிரியின் பேட்டியைப் போட்டால்கூடப் பறவாயில்லை....

*வீமன் காமத்தான்*

## வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கம் இயங்குகின்றதா?

1965ஆம் ஆம் ஆண்டு தொடக்கம் நானும் மனைவியும் மேற்படி சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து யாழ்ப்பாணம் இடப்பெயர்வு இடம்பெற்ற காலம் வரை ஒழுங்காகச் சந்தாப்பணம் கட்டி வந்தோம். தற்போது மனைவி காலமாகிவிட்டார். நான் ஓய்வு பெற்றுவிட்டேன். எமக்குரிய சகாய நிதியைப் பெறவில்லை.

எனவே , இந்தச் சங்கத்தில் பதவி வகித்தவர்கள் அல்லது இச்சங்கத்தைப் பற்றித் தெரிந்தவர்கள் எங்கிருந்தாலும் எமது சகாய நிதியைப் பெறுவதற்கு உதவுமாறும், உதயன் வாசகர் திருமுகம் மூலம் அறியத் தருமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அல்லது 0765360413 இலக்கத் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*ஓய்வுபெற்ற ஆசிரியர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக் காய்ச்சல் அபாயகரமானது அசட்டையாக இருக்காதீர்கள்

மருத்துவர் எஸ்.கேதீஸ்வரன்

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை நாடுமுழுவதும் 22,562 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இதில் சுமார் 1385 பேர் யாழ். மாவட்டத்தில் மட்டும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியாவில் 14 பேர் உயிரிழந்தமை அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

டெங்குக் காய்ச்சல் வருடம் முழுவதும் ஏற்பட்டாலும் நவம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையான மாரி காலத்தில் தான் வடபகுதியில் அதிகமாக ஏற்படுகின்றது. மாரி காலத்தில் அதிக நீர் தேங்கும் இடங்களால் ஏற்படும் நுளம்புப் பெருக்கம் இதற்குக் காரணமாகும்.

### டெங்குக் காய்ச்சல் எவ்வாறு பரவுகின்றது?

ஈடீஸ் (Aedes) எனப்படும் நுளம்பினால் தான் டெங்குக் காய்ச்சல் மனிதர்களில் பரவுகின்றது. டெங்குக் காய்ச்சல் ஒரு வைரஸ் கிருமியினால் ஏற்படுகின்றது. இந்த டெங்கு வைரஸில் 4 வகைகள் உள்ளன. டெங்கு நோயின் பரவலைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரே வழி ஈடீஸ் நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதாகும். இந்த நுளம்பின் இயல்புகளையும் வாழ்க்கைவட்டத்தையும் அறிந்து கொள்வதன் மூலம் இந்த நுளம்பிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

ஈடீஸ் பெண் நுளம்பு மனிதர்களைப் பெரும்பாலும் பகல்வேளையிலேயே கடிக்கின்றது. அதிலும் குறிப்பாகக் காலையில் சூரியன் உதித்து 2 மணித்தியாலங்கள் வரையும் மாலையில் சூரியன் மறைய 2 மணித்தியாலங்களுக்கு முன்பும் கூடுதலாகக் கடிக்கின்றன. எனவே, இந்த நேரங்களில் வெளியில் நடமாட்டத்தைக் குறைப்பதன் மூலமும் உரிய பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதன் மூலமும் நுளம்பின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

இந்த நுளம்பானது மனிதர்களின் குடியிருப்புகளுக்கு அண்மையாக குறிப்பாக நகர்ப்புறங்களில் அதிகமாகக் காணப்படுகின்றது.

பெண் ஈடீஸ் நுளம்பானது நிலையான சுத்தமான நீர் தேங்கியுள்ள கொள்கலன்களின் உட்புறச்சுவரில் ஒட்டிக் காணப்படுகின்றது. இந்த முட்டைகள் ஓரிரு நாட்களில் பொரித்து குடம்பிகளை வெளிவிடுகின்றன. இந்தக் குடம்பிகள் நீரில் அசைந்து திரிந்து சேதனப் பொருள்களை உணவாகக்கொள்கின்றன. 4 தொடக்கம் 5 நாள்களில் இவை கூட்டுப்புழுக்களாக மாறுகின்றன. கூட்டுப்புழுக்கள் உணவுண்பதில்லை. அசைவற்றவை. இவை நுளம்பாக மாற்றமடைய 1, 2 நாள்கள் தேவை. ஆகவே நுளம்பின் வாழ்க்கை வட்டம் பூர்த்தியாக 8 தொடக்கம் 10 நாள்கள் தேவையாக உள்ளது. எனவே ஒரு கிழமைக்கு ஒரு தடவையாவது நீர்தேங்குமிடங்களில் அல்லது நீர்க் கொள்கலன்களில் உள்ள நீரை மாற்றுவதன் மூலம் அல்லது வழிந்தோடச்செய்வதன் மூலம் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

### ஈடீஸ் நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் எவை?

உங்கள் வீட்டையும் சுற்றுப்புறத்தையும் வாரம் ஒருமுறையாவது சுற்றிப்பாருங்கள். நுளம்பு பெருகக்கூடிய தூய தண்ணீர் நிலையாகத் தேங்கியுள்ள இடங்களை நீங்களே கண்டுபிடிக்கக்கூடியதாக இருக்கும்.

பழைய ரயர்கள், யோகட் கப், மீன் அல்லது பிஸ்கட் ரின்கள், போத்தல்கள், பொலிதீன் பைகள், கோப்பைகள், பீங்கான்கள். பூச்சாடிகள், மூடப்படாத தொட்டிகள், பாவிக்கப்படாத கிணறுகள், கைவிடப்பட்ட மீன் தொட்டிகள், பறவைகள் குளிப்பதற்காக அமைக்கப்பட்ட தொட்டிகள், அலங்கார நீரூற்றுக்கள் சிரட்டைகள், மூங்கில்கள், சில அலங்காரத் தாரவங்கள், மரப்பொந்துகள், அடைபட்ட வாய்க்கால்கள், குளிர்சாதனப் பெட்டியின் அடியிலுள்ள நீர்தேங்கும் தட்டு, எறும்புகள் ஏறாமல் மேசைக்கால்களுக்கு அடியில் வைக்கப்படும் நீர் நிறைந்த பாத்திரங்கள், மழைநீர் கூரையிலிருந்து வடிந்தோடவைக்கப்படும் பீலிகள் அடைபட்டிருப்பின், பழைய வாளிகள், கொள்கலன்கள் போன்ற பற்பல பொருள்கள் நீர் தேங்கியிருக்கும் போது ஈடீஸ் நுளம்பு பெருகக் காரணமாகலாம்.

### டெங்குக் காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸ் கிருமி பற்றி சில தகவல்கள்

டெங்கு நோயை ஏற்படுத்தும் டெங்கு வைரஸ் ஆனது நான்கு வகைப்படும். இந்த வைரஸ் தொற்றும் போது இதற்கு எதிராக உடலில் பூரணமான எதிர்ப்புச்சக்தி உருவாவதில்லை. முதலாவது தரம் டெங்குக் காய்ச்சல் ஏற்படும்போது கடுமையான பாதிப்பு ஏற்படுவதில்லை. இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது தரம் ஏற்படும்போது கடுமையான தாக்கம் ஏற்படும். இந்தப் பாதிப்புக்கு உடலின் நிர்ப்பீடனத் தொகுதியின் அதீத செயற்பாடே காரணமாகும்.



ஈடீஸ் நுளம்பானது டெங்குநோய்வாய்ப்பட்ட ஒருவரைக் கடிக்கும் போது நுளம்பினுள் வைரஸ் கிருமிகள் குருதியுடன் செல்கின்றன. வைரஸ்கள் நுளம்பினுள் பெருகி ஒரு கிழமையின் பின் இன்னொருவரைக் கடிக்கும் போது அவருக்கு டெங்கு தொற்றிக் கொள்கின்றது.

டெங்கு வைரஸ் தொற்றிய நுளம்பு இடும் முட்டைகளில் இருந்து வெளியேறும் நுளம்புகளும் டெங்கு நோயைப் பரப்புகின்றன. அது மட்டுமல்லாது நுளம்பின் முட்டைகள் பல மாத காலத்துக்கு வறட்சியைத் தாங்கி உயிர் பிழைக்க க்கூடியன. அதாவது இந்த மழைகாலத்தில் இடப்படும் முட்டைகள் அடுத்த மழைகாலத்திலும் பொரிக்கக்கூடியவை. இந்தக் காரணங்களால் டெங்கு நோயின் பரவலைக் கட்டுப்படுத்துவது கடினமாகும்.

டெங்குக் காய்ச்சல் நோயாளிக்கு, கடுமையான காய்ச்சல், தலைவலி, கண்களுக்குப் பின் புறம் நோ, தசைநோ, மூட்டு நோ மற்றும் முதுகு நோ போன்றவை ஏற்படும். டெங்கு நோயாளிகள் எல்லோருக்கும் இறப்பு போன்ற பெரிய பாதிப்புக்கள் ஏற்படுவதில்லை. ஒரு சிலருக்கே இத்தகைய தாக்கம் ஏற்படும்.

### டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்தக் கூடிய வழிவகைகள் எவை?

ஈடீஸ் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதே பிரதானமானதாகும் இரண்டாவதாக நுளம்பு கடிக்காமல் பார்த்துக்கொள்வது அவசியமாகும். நுளம்பு பெருகக்கூடிய இடங்களைக் கட்டுப்படுத்துவதானது சமுதாயத்தில் உள்ள எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டியதொன்றாகும்.

நாம் செய்ய வேண்டிய வழிமுறைகளாவன:

01. வீட்டு வளவிலுள்ள பழைய ரின்கள், யோகட் கோப்பைகள், பொலிதீன் போன்றவற்றை புதைத்து விடுதல் அல்லது எரித்து விடுதல்
02. வாளிகள், கோப்பைகளைக் கவிழ்த்து வைத்தல்
03. அவற்றில் நீர் நிரம்பியிருந்தால் நீரைக் கவிழ்த்து ஊற்றுவது மட்டும் போதாது. அவற்றின் உட்புறச்சுவரில் ஒட்டியுள்ள முட்டைகளைத் துடைத்து அகற்றுதல்
04. வாய்க்கால், கூரைப்பீலி என்பவற்றை அடைத்து நீர்தேங்காது பார்த்துக்கொள்ளுதல்.
05. பூச்சாடிகளிலுள்ள நீரை 2 நாளைக்கு ஒரு தடவை மாற்றுதலும் அதன் உட்புறத்தை துடைத்தலும்.
6. குளிர்சாதனப் பெட்டியில் அடியிலுள்ள தட்டு, Ant traps என்பவற்றிலுள்ள நீரையும் இடைக்கிடை மாற்றுதல். நீரை மாற்ற முடியாவிட்டால் உப்பு அல்லது சோப் கரசலைச் சேர்த்து விட்டால் நுளம்பு பெருகாது.
07. எல்லோரும் தத்தமது வீடுகளையும் காணிகளையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குப்பைகளை பக்கத்திலுள்ள வெறுங்காணிக்குள் வீச வேண்டாம். நுளம்புகள் ஒரு மைல் தூரம் வரை பறக்கவல்லவை. எனவே நாம் மற்றவர்களின் காணியில் வீசிய குப்பைகளிலிருந்து பெருகிய நுளம்பு நம்மையே கடிக்கலாம்.
08. வீடுகள் மட்டுமன்றி நம் வேலைத்தளம், பிள்ளைகள் செல்லும் பாடசாலை, மேலதிக நேரவகுப்பு போன்றவற்றின் சூழல் பற்றியும் கவனம் செலுத்துங்கள்.

### நுளம்பு கடிக்காமல் பாதுகாப்பது எப்படி?

ஈடீஸ் நுளம்புகள் பகலில் கடிப்பதனால் இரவில் நுளம்பு வலையைப் பயன்படுத்துவதன் மூலம் பாதுகாக்கமுடியாது. காலையிலும் மாலையிலும் நுளம்புகள் அதிகமாக உள்ள இடங்களைத் தவிருங்கள். கைநீட்டு சேட்களையும் நீண்ட காற்சட்டைகளையும் அணிவதன் மூலம் நுளம்பு கடிப்பதைத் தடுக்கலாம் இறுக்கமான உடைகளை விட தளர்வான உடைகள் சிறந்தவை. வெளியே செல்லும்போது காலுறை, சப்பாத்து அணிவது மேலதிக பாதுகாப்பை அளிக்கும். நுளம்பை விரட்டும் கிறீம்களையும் எண்ணெய்களையும் உபயோகிக்கலாம்.

### டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகள் எவை?

மனிதர்களில் சில நூற்றுக்கணக்கான வைரஸ்கள் காய்ச்சலை ஏற்படுத்துகின்றன. இவற்றில் சிலருக்கே டெங்குக் காய்ச்சல், பன்றிக்காய்ச்சல் போன்ற ஆபத்தான காய்ச்சல்கள் ஏற்படுகின்றன.

டெங்குக் காய்ச்சல் நோயாளிக்கு, கடுமையான காய்ச்சல், தலைவலி, கண்களுக்குப் பின்புறம் நோ, தசைநோ, மூட்டுநோ மற்றும் முதுகு நோ போன்றவை ஏற்படும். டெங்கு நோயாளிகள் எல்லோருக்கும் இறப்பு போன்ற பெரிய பாதிப்புக்கள் ஏற்படுவதில்லை. ஒரு சிலருக்கே இத்தகைய தாக்கம் ஏற்படும்.

### பாரதூரமான டெங்குக் காய்ச்சலின் அபாய அறிகுறிகள்

தொடர்ச்சியான வாந்தி, மூக்கு, முரசு போன்றவற்றிலிருந்து இரத்தக் கசிவு, வயிற்று நோ, மூச்செடுக்க சிரமம், குருதி வாந்தி, வயிறு வீங்குதல், தலைச்சுற்று, சிறுநீர் குறைவாகப் போதல், அறிவு மயங்குதல் என்பன அபாய அறிகுறிகளாகும்.

### காய்ச்சல் ஏற்பட்ட ஒருவர் என்ன செய்யவேண்டும்

ஆரம்ப நிலைகளில் டெங்குக் காய்ச்சலை சாதாரண வைரஸ் காய்சல்களிலிருந்து வேறுபடுத்தி அறிவது கடினமாகும். காய்ச்சல் ஏற்படும் 3 ஆம் நாள் நீங்கள் மருத்துவரை அணுகி Full Blood Count எனப்படும் குருதிச் சோதனையை மேற்கொள்ள வேண்டும். இந்தச் சோதனையில் குருதிச்சிறு தட்டுக்களின் அளவு குறைவடைந்தால் அந்த மருத்துவரின் ஆலோசனையுடன் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறலாம். உங்களுக்கு மேற்குறிப்பிட்ட அபாய அறிகுறிகள் ஏதுமிருப்பின் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லுதல் வேண்டும்.

கர்ப்பிணித்தாய்மார்கள், நீண்டகால நோய் வாய்பட்டவர்கள் (இருதய, சிறுநீரக, நுரையீரல்) காய்ச்சல் ஏற்பட்ட முதல் நாளே வைத்தியரிடம் செல்லல் வேண்டும்.

காய்ச்சல் ஏற்பட்ட ஒருவருக்கு அதிக நீரிழப்பு ஏற்படும் என்பதால் அதிகளவு நீராகாரங்களை அருந்த வேண்டும். வளர்ந்த ஒருவர் (50 Kg) 2.5 லீற்றர் நீராகாரங்களை ஒரு நாளைக்கு எடுக்க வேண்டும். நீரை விட கஞ்சி, சூப், இளநீர், நெல்லுப்பொரித்தண்ணீர், ஜீவனி போன்றவற்றை அருந்துவது நன்று. சிவப்பு அல்லது மண்ணிற குளிர்பானங்களை அருந்த வேண்டாம். இவற்றை அருந்திய பின் வாந்தி எடுத்தால் இரத்த வாந்தி எடுத்தவரா என அறிய முடியாமல் போகலாம்.

வளர்ந்த ஒருவர் காய்ச்சலுக்கும் உடல் நோவுக்கும் பரசித்தமோல் வில்லைகளை 6 மணித்தியாலத்துக்கு ஒருதடவை எடுக்கலாம். இது தவிர Diclofenac Ibuprofen போன்ற மாத்திரைகளை எக்காரணத்தைக் கொண்டும் எடுக்காதீர்கள்.

முடிவாக டெங்கு நோயின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பது என்பது முழுச்சமுதாயமும் உணர்ந்து செயற்பட்டால் மட்டுமே முடியக்கூடிய செயலாகும். எனவே எமது குழந்தைகளையும் உறவுகளையும் பாதுகாப்போம் என உறுதி பூணுவோமாக.

கட்டுரையாளர், பொது மருத்துவ நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி

26.03.2017

சந்திரசேகர ஆசாத்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுல விரோத நடவடிக்கைகள் தொடர்பான விவகாரம் எடுக்கப்படும் போதெல்லாம் தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும் பெரும் வாதப்பிரதிவாதங்கள். பரஸ்பரக் குற்றச்சாட்டு கள் ஆர்ப்பாட்டங்கள் என்பன இடம்பெறுவதும் இடையிடையே சவால்கள் விடப்படுவதும் தவறாமல் அரங்கேறும் சடங்குகளாகவே காணப்படுகின்றன. மேற்படி பிரச்சினை தொடர்பாக அதில் சம்பந்தப்பட்ட தமிழ்மக்களும், அரச தரப்பும் மட்டுமன்றி வல்லரசு நாடுகள் உட்பட உலக நாடுகளும் தீவிர அக்கறை காட்டி வருகின்றன. நீதிக்காகவும் நியாயத்துக்காக வும் பன்னாடு குரல் கொடுப்பதாக வெளிப்படையில் தோன்றினாலும் அதன் பின்னால் பல்வேறு தரப்பினரின் நலன்கள் பொதிந்து கிடப்பது அப்படியொன்றும் இரகசியமல்ல .



# முதுகெலும்பு தேடும் அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குள் சுழியோடியே பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நியாயங்களைத் தேடவேண்டியுள்ளது. ஆனால் இலங்கை அரசோ சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் எல்லாம் வெகு தந்திரமாக பன்னாட்டில் நிலவும் முரண்பாடு களைப் பயன்படுத்தித் தன்னைத் தற்காத்துக் கொள்கிறது. ஓர் அரசு என்ற முறையிலும் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் காரணமாகவும் இத்தகைய நழுவல்களுக்கு இலங்கைக்கு வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.

இப்படியான ஒரு சூழலில் தான் இலங்கை தொடர்பாக 2015 ஆம் ஆண்டு ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக மீண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

ஏற்கனவே மேற்படி தீர்மானத்தை நிறைவேற்ற இலங்கைக்கு 18 மாத கால அவகாசம் வழங்கியும் அவை நிறைவேற்றப்பட வில்லையென்ற குற்றச்சாட்டு பல நாடுகளாலும் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இலங்கை அவற்றை நிறைவேற்ற மேலும் இரண்டு வருடங்கள் கால அவகாசம் கோரியுள்ளது. இந்த நிலையில் அரச தரப்பிலிருந்தும், ஜே.வி.பி. தரப்பிலிருந்தும் மகிந்த ராஜபக்ச தரப்பினிடமிருந்தும் வெவ்வேறு சூடான கருத்துக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

எவர் எப்படி எப்படியான கருத்துகளை முன்வைத்த போதிலும் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான நீதி விசாரணையில் பன்னாட்டு நீதியாளர்களின் அனுசரணை இருக்கக் கூடாது என்பதிலும் உள்ளகப் பொறிமுறையூடே விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்பதிலும் அனைவரும் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளனர். அவர்கள் தங்கள் கருத்துகளை வெவ்வேறு விதமாக வெவ்வேறு குரல்களில் வெளியிட்ட போதிலும் கூட எவருமே தமிழர்களுக்கு நீதி கிடைக்கக் கூடாது என்ற தங்கள் மூலநோக்கில் வலுவாகவே உள்ளனர். அதே வேளையில் தமிழர் தரப்பிலிருந்தும் கால அவகாசம் வழங்கப்படக் கூடாதெனவும், நிபந்தனைகளுடன் கால அட்டவணைக்கு உட்பட்டு வழங்கப்பட வேண்டுமெனவும் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குப் பாரப்படுத்தப்பட வேண்டுமெனவும் பல்வேறு கருத்துக்கள் முன் வைக்கப்படுகின்றன. எனினும் பன்னாட்டு அனுசரணையூடாகவே இலங்கையின் போர்க்குற்றங்கள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதில் எவரிடமும் மாற்றுக் கருத்து எழவில்லை. அதாவது உள்ளகப் பொறிமுறையிலான விசாரணை யைப் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தரப்பு முற்றாகவே நிராகரிக்கிறது.

அண்மைக் காலங்களில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன போர்க்குற்றங்கள் தொடர்பான நீதிவிசாரணையில் பன்னாட்டின் பங்களிப்பு எந்தக் காரணம் கொண்டும் அனுமதிக்கப்படாது எனவும் நாட்டைப் பாதுகாத்து இராணுவத்தினரைத் தண்டிக்க அனுமதிக்கப் போவதில்லையெனப் பல இடங்களிலும் அடித்துக்கூறி வருகிறார். அவரின் வார்த்தைகளில் படையினர் தண்டிக்கப்படமாட்டார்கள் என உறுதி கூறியதன் மூலம் விசாரணை கள் ஆரம்பிக்கப்பட முன்பே உள்ளக விசாரணைகளின் தீர்ப்பை அவர் வழங்கி விட்டார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவரின் உறுதிமொழியை அலட்சியம் செய்து விட முடியாது. எனினும் தீர்ப்பை முடிவு செய்து விட்டு நடத்தப்படும் உள்ளக விசாரணை எவ்வளவு போலியானது என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

அதே வேளையில்தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணையில் பன்னாட்டு தரப்பினரை அனுமதிக்க இலங்கையின் அரசியல் யாப்பில் இடமில்லை எனத் தெரிவித்தார். மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் எவ்வாறு பன்னாட்டு நிபுணர்கள் அனுமதிக்கப்பட்டனர் என்பதற்கு அவர் விளக்கம் கொடுக்கவில்லை. இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசமைப்பு நிறைவேற்றப்பட்டபோது நாடாளுமன்றில் தமிழர்கள் அதை நிராகரித்தனர் என்பது நினைவு கூரத்தக்கது.

இப்படியாக அரசதரப்பினர் பன்னாட்டு நீதிப் பொறிமுறையை எதிர்க்கும் நிலையில் தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் அரச தலைவரிடம் படையினர் குற்றச்செயல்களில் ஈடுபடவில்லையென்றால் நியாயமான விசாரணை நடத்த பயப்படத் தேவையில்லையெனவும் முதுகெலும்பிருந்தால் பன்னாட்டு விசாரணைக்கு முகம்கொடுக்கும்படியும் கேட்டுள்ளார். அது நியாயமான கேள்வி? ஒருவர் குற்றமற்ற வரானால் நடுநிலைமையான ஒரு விசாரணைக்கு ஏன் அஞ்ச வேண்டும். சுமந்திரன் அரச தலைவ ரின் முதுகெலும்பு பற்றிக் கேள்வி எழுப்பிய அதேவேளையில் முன்னாள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கும் அரச தலைவரின் முதுகெலும்பு சம்பந்தமாகச் சந்தேகம் எழுந்து விட்டது. அவரும் அரசதலைவருக்கு முதுகெலும்பு இருக்குமானால் ஐ.நா. மனி த உரிமைகள் பேரவையில் பன்னாட்டு நீதிபொறிமுறையை நிராகரிக்கும்படி கேட்டுள்ளார்.

இப்போது மக்கள் மத்தியில் எழும் கேள்வி அரசதலை வருக்கு முதுகெலும்பு இருப்பதானால் அவர் பன்னாட்டுப் பொறிமுறையை எதிர்க்க வேண்டுமா, ஏறக வேண்டுமா? என்பது தான் . ஆனால் கடந்த 22 ஆம் திகதி அன்று மனித உரிமைகள் ஆணையாளர் அல்ஹுசைன் தனது இலங்கை தொடர்பான அறிக்கையை மனித உரிமைகள் பேரவையில் முன்வைத்தார். அதற்குப் பதிலளித்து உரையாற்றிய அயலுறவு பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா மனித உரிமைகள் பேரவையில் 2015 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் ஒரு பகுதியை நிறைவேற்றியுள்ளதாகவும் இன்னும் பெரும் பகுதி நிறைவேற்றப்பட வுள்ளதாகவும் ஒப்புக் கொண்டு அவற்றை நிறைவேற்ற மேலும் இரு வருடங்கள் அவகாசம் கோரியிருந்தார்.. அந்த நிறைவேற்ற வேண்டிய அம்சங்களில் பன்னாட்டுச் சட்டவியலாளர்கள் நீதியாளர்கள் ஆகியோரின் பங்களிப்புடனான நீதிப் பொறிமுறையும் அடங்கும்.

**மக்கள் மத்தியில் எழும் கேள்வி அரச தலைருக்கு முதுகெலும்பு இருப்பதா னால் அவர் பன்னாட்டுப் பொறி முறையை எதிர்க்க வேண் டுமா, ஏறக வேண் டுமா? என்பது தான் . ஆனால் கடந்த 22 ஆம் திகதி அன்று மனித உரிமைகள் ஆணையா ளர் அல் ஹுசைன் தனது இலங்கை தொடர்பான அறிக் கையை மனித உரிமைகள் பேரவையில் முன் வைத்தார்.**



அரச தலைவராலும் தலைமை அமைச்சராலும் எதிர்க்கப்பட்ட பன்னாட்டு அனுசரணையாளர்களுடன் கூடிய நீதிப்பொறிமுறை பதில் அயலு றவு அமைச்சரால் இலங்கையின் சார்பில் மனித உரிமைகள் பேரவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவரால் கோரப்பட்ட இரு வரு டங்கள் கால அவகாசமும் வழங்கப்படும்.

அப்படியானால் சுமந்திரனின் கேள்விப்படி அரச தலை வருக்கு முதுகெலும்பு உள்ளதா என்பதும் ஜீ.எல் பீரிஸின் பார்வையில் அரச தலைவரின் முதுகெலும்பு போய்விட்டதா என்றும் கேட்கத் தோன்றும். நிச்சயமாக இல்லை என்பதே தமிழ் மக்களின் அனுபவமாகும் பிரதி அயலுறவு அமைச்சர் பன்னாட்டு நீதிப் பொறிமுறையை எதிர்க்காமல் விட்டதற்கான காரணம் நிச்சயமாக அப்பொறிமுறையை மனமார ஏற்றுக் கொண்டதாலல்ல. இரண்டு வருடங்கள் கால அவகாசத்தைப் பெறுவதற்காகவே என்பதில் சந்தேகமில்லை.

இந்த இரண்டு வருடங்களும் கூட இது வரை நிறைவேற்றப்படாத விட யங்களை நிறைவேற்றுவதற்காக யாராவது நினைத்தால் அவர்கள் இலவுகாத்த கிளியாக மட்டுமே இருக்க முடியும். இந்த இரண்டு வருடங்களும் காலத்தை இழுத்தடித்து தீர்மானத்தின் அம்சங்களை கால நீட்சியில் நீர்த்துப் போக வைக்கவும், இந்தக் காலப்பகுதியில் ஏற்படுத்தப்படும் சில மாற்றங்கள் மூலம் பன்னாடுகள் தீர்மானத்தை நிறைவேற்றும்படி அழுத்தம் கொடுக்கக் கூடிய சூழலை மழுங்கடித்தல் என்பனவாகும். இப்போதைய நிலையில் இப்படியும் நடக்குமா என கேட்கத் தோன்றினாலும் சிங்கள ராஜதந்திரத்தின் வரலாறு மீண்டும் மீண்டும் இதையே நிரூபித்துள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெறும் அதே நேரத்தில் நடைபெறும் வேறு இரு முக்கிய விடயங்களை அவதானிக்க வேண்டும். ஒன்று அண்மையில் இடம்பெற்ற சீனப் பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை பயணம் அடுத்தது இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ரஷ்ய நாட்டுக்கான பயணம், சீன பாதுகாப்பு அமைச்சரின் பயணத்தின்போது இலங்கை இராணுவத்துக்கு பயிற்சிகள் உட்படப் பலவிதமான உதவிகளையும் எவ்வித நிபந்தனைகளுமின்றி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிபந்தனையற்ற படைத்தரப்பு உதவியென்பது எப்படியிருக்குமென்பது சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. அதாவது சீன இராணுவத்துக்கும், இலங்கை இராணுவத்துக்குமிடையேயுள்ள உறவுஎன்பது இலங்கை இராணுவத்துக்குள் சீனாவின் செல்வாக்கை நிலைநிறுத் தும் என்பதில் சந்தேகமில்லை. இது மேற்குலக நாடுகளுக்கு விடப்படும் ஒரு மிரட்டலென்றே கருதவேண்டும். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் வலிமையை அதிகரிக்கும் இந்த நடவடிக்கையை மேற்கு நாடுகள் விரும்பப் போவதில்லை.

அது மட்டுமன்றி அம்பாந்தோட்டை துறைமுகத்தின் மூன்றாம் கட்டம் சீனாவிடம் முழுமையாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே முதலாம் கட்டமும் இரண்டாம் கட்டமும் எண்பது வீதம் சீனாவுக்கு 99 வருடக்குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு துறை முக நகரம் மீண்டும் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நான்கு தசாப்த காலமாக அரச தலைவர் எவரும் ரஷ்யாவுக்குச் சென்றிராத நிலையில தற்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ரஷ்யாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார். அங்கு அவருக்குக் கோலாகலமான வரவேற்பளிக்கப்பட்டதுடன் ரஷ்ய அதிபர் விளாடி மிர் புடின் அவரைச் சந்திக்கவுள்ளார் இதுவும் மேற்குலகம் விரும்பும் ஒரு நடவடிக்கையல்ல.

சீனபாதுகாப்பு அமைச்சரின் இலங்கைப் பயணம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிடம் ஒப்படைப்பதற்கான அமைச்சரவை முடிவு அரச தலைவரின் ரஷ்ய பயணம் போன்ற நடவடிக்கைகள் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம் பெறும் காலப் பகுதியிலேயே மேற்கொள்ளப்படுவதை தற்செயலான விடயமாகக் கருதிவிட முடியாது. அதிலும் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசின் மீது மேற்குலகம் சில அழுத்தங்களை மேற்கொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே இந்த நடவடிக்கைகள் இலங்கையால் மேற்கொள்ளப்படுகின்றன.

எனவே தான் 2015 ஆம் ஆண்டின் தீர்மானத்தை நிறைவேற்றக் கோரப்படும் இரண்டு வருட அவகாசம் நிச்சயமாக அதை நிறைவேற்றுவதற்காக இருக்க முடியாது மாறாக நிறைவேற்றாமல் விடவும், நீர்த்துப்போக வைக்கவும் சூழ் நிலைகளை உருவாக்கவே இந்த அவகாசம் இலங்கையால் பயன்படுத்தப்படும்.அதற்கு சீனா, ரஷ்யா பக்கம் சாயும் வழிமுறை ஒரு வலுவான ஆயுதமாகப் பாவிக்கப்படும்.

இன்று மேற்கு நாடுகளுக்கு இலங்கை மீதுள்ள பிடியில் போர்க்குற்றம், மனித உரிமை மீறல்கள் என்பன முக்கியமனவையாகும். அந்தப் பிடியைத் தளர வைப்பதில் சீனா, ரஷ்யா அக்கறை காட்டுவது ஆச்சரியப்படத்தக்கதல்ல .அரச தலைவரின் முதுகெலும்பைப் பற்றி பலர் பலவித அபிப்பிராயங்களைக் கூறிய போதிலும் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்காமல் செய்வதில் நிமிர்ந்து உறுதியாக நிற்கிறது என்பது மட்டும் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நூல் அறிமுகம்

தொகுப்பு: மல்லிகா

**சங்கடங்களை அகற்றி மனச்சாந்தியளிக்கும் துதிப்பாடல்களும் மந்திரங்களும்**
**ஆசிரியர் : அராலியூர் வி.செல்வரத்தினம் (ஜே.பி)**
**வெளியீடு : திருமதி செல்வரத்தினம் கௌரி**
**விலை : 350 ரூபா**



### ஆன்மிக வழிகாட்டி நூல்

ஒவ்வொருமனிதனும்ஈற்றில்ஆன்மிகத்தையேநாடுகின்றான். அந்தவாழ்க்கையைஅவன்வாழ்வதற்குவழிகாட்டி நிற்கிறது 'சங்கடங்களை அகற்றி மனச்சாந்தியளிக்கும் துதிப்பாடல்களும் மந்திரங்களும்' எனும் நூல்.

மனிதப்பிறவிஎடுத்ததன்நோக்கம், இறைவனைவணங்கி முத்தியின்பம்பெறுவதுதான்என்று ஆறுமுகநாவலர்கூறுகின்றார். அந்த இன்பத்தை இலகுவில் அடைவதற்குக் கைகொடுக்கிறதுஇந்நூல். இதிலுள்ளதுதிப்பாடல்களையும் மந்திரங்களையும் படிக்கும் போது, மனதில் அமைதி ஏற்படும். மனையில் மகிழ்ச்சி கிட்டும். அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய ஆன்மிக வழிகாட்டி நூல் இது.

அராலியூர்வி.செல்வரத்தினம்(ஜே.பி)சிறந்தஆன்மிகஎழுத்தாளரும், கணித விஞ்ஞான பாட நூல்களின் ஆசிரியரும் ஆவார். இதுவரை 15க்கும் மேற்பட்ட ஆன்மிக நூல்களை எழுதியுள்ளார். தற்போதும் எழுதிக்கொண்டிருக்கிறார். அவரது எழுத்துலகம் மலர்ந்து மணம்வீச வாழ்த்துக்கள்.

**நூல் : காப்பியதாசன் கட்டுரைகள்**
**ஆசிரியர் : பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன்**
**வெளியீடு : கலை இலக்கியக் களம், தெல்லிப்பழை.**
**விலை : 400 ரூபா**




### பண்பாட்டைப் பறைசாற்றும் நூல்

தமிழ்மக்களுடையபண்பாட்டைப்பறைசாற்றிநிற்கிறது காப்பியதாசன் கட்டுரைகள் எனும் நூல்.

"சமூக இசைவு இல்லாத வாழ்வு வாழ்வன்று" முதல், "தமிழர் திருநாள் மகத்துவம்" வரையான 23 கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்நூல், படிப்போர் நெஞ்சங்களில் புதிய சிந்தனைகளை ஊற்றெடுக்கச் செய்கிறது. பல தமிழ் நூல்களைப் படிப்பதால் ஏற்படும் பயனையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது. ஒவ்வொரு கட்டுரையும் ஆழமான கருத்துக்களையும், தமிழ்ப் பண்பாட்டுப் பெருமையையும் உணர்த்திநிற்கிறது. தமிழர்கள்அனைவரும்படித்துப் பயனுற வேண்டிய நூல் இது.

பண்டிதர்ம.ந.கடம்பேசுவரன், ஈழத்துஎழுத்துலகில் நன்கு அறியப்பட்ட ஒருவர். சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், ஊடகவியலாளர், ஆரியதிராவிடபாஷாவிருத்திச்சங்கப்பண்டிதர்தேர்வுக்குரியபண்டிதமாணவர்களுக்குக்கற்பிக்கும்ஆசான், யாழ். பல்கலைக்கழக முதுமாணிக் கற்கைநெறி மாணவர்களுக்கு, நவீன கல்வியைக் கற்பிக்கும் வருகை விரிவுரையாளர் எனப்பன்முகம்கொண்டவர். தமிழ்ப்பற்றும்புலமையும் மிக்க இவர், எண்ணற்ற நூல்களைத் தமிழ் உலகுக்குஅளித்துள்ளார். அவரதுஎழுத்துலகம்மலர, வாழ்த்துக்கள்.

அன்பார்ந்த எழுத்தாளர்களே! நூல் அறிமுகத்தில் உங்களின் நூல்களும் இடம்பெற வேண்டுமாயின், புத்தகத்தின் இரண்டு பிரதிகளை- ஆசிரியர், நூல் அறிமுகம்,
உதயன் பத்திரிகை, இல. 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.




# கற்றல் நன்றே...

அராலியூர் நிலா

காலத்துக்கும் நிலைக்கும் செல்வம் கல்வி. அத்தகைய செல்வத்தை வாரி வழங்கும் ஆசிரியர்களைப் பண்டைத் தமிழர்கள் போற்றினர். தெய்வத்துக்குநிகராகஏற்றினர். அந்தச்செல்வத்தின் மகிமையைக் கூறுகிறது இந்தப் புறநானூற்றுப் பாடல்.

கொடுக்கக்கொடுக்கக்குறைவுபடாமல்இருப்பதும், கள்வர்களால் களவாடப்படாமல் இருப்பதும் கல்விச் செல்வம் மட்டுமே. இதன் மகிமையைப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் விதந்து போற்றியுள்ளன. அத்தகைய ஒரு இலக்கியச் சித்திரத்தை இங்கு பார்ப்போம்.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற்று உள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடை யோனாறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் உருவனும் அவன்கட் படுமே

(புறநானூறு:183 ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்)

கற்றுக்கொடுக்கும்ஆசிரியருக்குத்துன்பத்தில்உதவியும், பொருள் கொடுத்தும், பின்நிற்கும் முறை தவறாது கற்பது நலம். ஏனெனில், ஒரேவித குணங்களைக் கொண்டு, ஒருதாய் வயிற்றில் பிறந்தவர்களாக இருந்தாலும், கல்வியில்சிறந்தவரையேதாயும்போற்றுவாள். ஒருகுடும்பத்தில் பிறந்த பலர் இருப்பினும், அவர்களுள் மூத்தவன் வருக என்று சொல்லாது, அறிவுடையவன் வருக என்று சொல்லியே அரசும் நடைபெறும். வேறுபடக் கண்ட நால் பிரிவினருள்ளும், கீழ்ப்பிரிவு சார்ந்தவன் ஒருவன் கற்று வல்லான் ஆவானேயானால், மேற்பிரிவு சார்ந்த ஒருவனும் அவனிடம்வந்துகல்விகற்பான். ஆதலால்கற்றல்நன்றே. கல்வி அழகே நிரந்தரம். அது காலம் முழுதும் வரந்தரும். ஆதலால், இந்த அரிய செல்வத்தைத் தகுந்த ஆசான்களிடம் கற்று, வாழ்க்கையில் இன்புறுவோமாக.





## சிரிப்பு

**ஜோன்ஸ் :** பெண் பார்த்து வந்த பின் அவன் ஏன் விழுந்து விழுந்து சிரிக்கிறான்.

**பீன்ஸ் :** துன்பம் வரும் வேளையில் சிரிங்க என்று யாரோ சொன்னாங்களாம்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாமே மணமுறிவு




எஸ்.மல்லிகா

சக்திக்கும் சிவாவுக்கும் ஊரறியச் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. பெற்றோரும் மற்றோரும் ஆசீர்வதிக்க, தன் அன்புத் துணைவியை வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்றான் சிவா. அழகான இல்லம். அமைதியின் இருப்பிடம். ஒன்றரை வருடங்கள் மகிழ்வாக வாழ்ந்த அவர்களுடைய வாழ்க்கையில் புகுந்து, விதி விளையாடத் தொடங்கியது. சிவாவின் பெற்றோர், சக்தியைப் பற்றித் தப்புத் தப்பாகச் சிவாவிடம் அண்டத் தொடங்கினர். காரணம், அவள் வசதியற்ற குடும்பத்தைச் சேர்ந்த பெண். சீதனம் இன்றி அவனை மணமுடித்த பெண். பெற்றோரின் சொல்லைக் கேட்டு, சிவாவும் மனைவி மீது வெறுப்பை உமிழ்ந்தான். அவளிடம் முகம் கொடுத்துப் பேச மறுத்தான்.

"ஏன் இப்படி நடந்துகொள்கிறீர்கள்?" என்று அவள் கேட்டதற்கு, "என்னுடன் நீ கதைக்க வேண்டாம். பிச்சைக்காரக் குடும்பம் நீங்கள். என் தலையிலை உன்னை உன் அப்பன் கட்டி வைத்துவிட்டான்" என்று வார்த்தையால் வைதான். சமயத்தில் அடிக்கவும் செய்தான். வீட்டில் பூட்டிவைத்தும் கொடுமைப்படுத்தினான். அது மட்டுமல்ல, தான் கொடுமைப்படுத்துவதாக அந்நாட்டு அரசிடம் சொன்னால், கொலை செய்திடுவேன் என்றும் மிரட்டினான்.

"என் சிவாவா இப்படி? இவருக்கு என்ன நடந்தது? கடன் சுமையால் மனம் குழம்பி விட்டாரா? வேலை அழுத்தத்தால் விரக்தியுற்று விட்டாரா? இவரை எப்படிச் சரி செய்வது? பழைய அன்பை எப்படித் திரும்பப் பெறுவது?" என்றெல்லாம் தனிமையில் இருந்த சக்தி சிந்தித்தாள். விதியை நொந்துகொண்டாள். ஓவெனக் கதறி அழுதாள். பைத்தியம் பிடித்தவள் போன்று தனக்குத் தானே சித்திரவதையும் செய்தாள்.

இவ்வாறு அவள் வாழ்க்கை மீது விருப்பும் இன்றி, வெறுப்பும் இன்றி இருந்த சமயத்தில் "நீ நாட்டுக்குப் போவதற்கான பயணச் சீட்டு வாங்கியந்திட்டன். உன் உடுப்புகளை எடுத்துக்கொண்டு வா. விமான நிலையத்தில் விட்டுவிடுகிறேன்" என்று அவள் முன் அந்தச் சீட்டை விட்டெறிந்தான். அவன் பேசிய வார்த்தைகள், சக்தியின் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போன்றிருந்தது. அவனை விட்டுப் பிரிய அவள் மறுத்தாள். ஆனால், வலுக்கட்டாயமாக அவன் நாட்டுக்கு அனுப்பிவைத்தான். கணவனிடமிருந்து தனக்கு சீவனோபாயப் படி பெற்றுத்தருமாறு கோரி அவள் நீதிமன்றை நாடினாள். வழக்கைப் பதிவு செய்தது நீதிமன்றம்.

அதேநேரம், எரிமலையானது அவனுடைய நினைவுகளைச் சுமக்கும் நெஞ்சம். என்றைக்காவது தன் கணவன் தன்னைத் தேடி வருவான் என்ற நம்பிக்கையை மாத்திரம் மனதில் கொண்டு, நாள்கள் விரைவில் தொலையாதா என்று ஏங்கிக்கொண்டிருக்கிறாள் சக்தி.


(தொடரும்)

"என் சிவாவா இப்படி? இவருக்கு என்ன நடந்தது? கடன் சுமையால் மனம் குழம்பி விட்டாரா? வேலை அழுத்தத்தால் விரக்தியுற்று விட்டாரா? இவரை எப்படிச் சரி செய்வது? பழைய அன்பை எப்படித் திரும்பப் பெறுவது? என்றெல்லாம் தனிமையில் இருந்த சக்தி சிந்தித்தாள். விதியை நொந்து கொண்டாள். ஓவெனக் கதறி அழுதாள்."



அவர் வியாபாரத்தில் கீழே இருந்து மேலே வந்தவர் எண்டு சொல்லுறீங்களே...! எப்படி?

முதலில் செருப்பு வியாபாரம் செய்தார். அப்புறம் பெல்ட் வியாபாரம் செய்தார். இப்போ தொப்பி வியாபாரம் செய்கிறார்....





**வேலு :** உங்க இளமைக்கும் ஆரோக்கியத்திற்கும் என்ன காரணம்?

**ஹோட்டல் ஓனர் :** நான் என் கடையில் சாப்பிடவே மாட்டேன் அதுதான்.





## உடையும் வானம்

முடிவற்றதாய்க் கருதும்
அந்தச் சாலையோரத்தில்
பாதைகள் தீர்ந்தவன்
நிலவற்ற வானத்தின் கீழிருக்கும்
விளக்கினடியில்
அமர்ந்திருக்கிறான்
நட்சத்திரங்களும்
வெண்மேகங்களுமற்ற

கருத்த வானம்
எப்போது வேண்டுமானாலும்
உடைந்துவந்து மூழ்கடிக்கலாம்

விழித்திரைகளில்
குவியும் இருளை
அழித்தழித்து விரட்டப்பார்க்கிறது
பலவீனமான அந்த விளக்கு
[illegible]

அவனுக்குமிடைய
விட்டிலொன்று கோடுகளால்
அவளின் நினைவுகளை
விடாமல் வரைந்து
கொண்டிருக்கிறது

இமை மூடும் கணப்பொழுதில்
தளும்பிய கருவானம்
உடைந்தோடி வந்து
அவனை நிரப்பிக்கொள்ள
உள்ளே தத்தளிக்கிறாள் அவள்!

- சயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளுக்கு 'அ' என்று பெயர்

■ வேலணையூர்தாஸ்



குழந்தைகளுக்கு பெயரிடுதல் என்பது ஒரு தவிர்க்க இயலாத நடைமுறை. வீட்டிலுள்ள பலரில் அவனையோ, அவளையோ வேறுபடுத்தி அழைப்பதற்கு பெயர் அவசியமாகிறது. ஆனால் பெயர் என்பது தனியே ஓர் அடையாளம் மட்டுமா? ஓர் இனத்தினுடைய பண்பாடு, மதம், மொழிச்சூழல் எனப் பல நிலைகளை பெயரொன்று சுட்டமுடியும் என்பதால் இன, மத,கலை, கலாசாரங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகிற இனமாக இருக்கிற தமிழர் தங்கள் பெயரிடுதல் நடைமுறையில் மிகக்கவனமுடையவர்களாக இருக்க வேண்டியது ஓர் காலக் கடமையாகிறது.

உதாரணமாக 'செந்தூரன்' என்ற பெயரை எடுத்துக்கொண்டால் இது ஓர் இந்துக்கடவுளின் பெயர். அத்துடன் ஆண்பால், அன்விகுதி எனவே இவர் தமிழர் என்பதோடு இந்துமதத்தைச் சேர்ந்தவர் என்ற முடிவுக்கு வரலாம். ஆனால் நிரோஷா என்ற பெயரை வைத்துக்கொண்டு அவரை பற்றிய எந்த முடிவுக்கும் நாம் வரமுடியாது. விகுதியை வைத்துக்கொண்டு இவர் ஒரு பெண் என்பதைத் தவிர.


எனவே நாம் பிள்ளைகளுக்கு பெயர் வைக்கும்போது சாதி மத அடையாளங்கள் இல்லாவிட்டாலும் தமிழர் என்ற அடையாளத்தையாவது பேண வேண்டும் அல்லவா

குழந்தை வயிற்றில் இருக்கும்போதே இதற்கான தேடல் தொடங்கி விடுகிறது. பெற்றோர் மட்டுமல்ல சித்தப்பா, பெரியப்பா, மாமன்மார், அவர்கட்கு தெரிந்த தமிழாசிரியர்கள், கவிஞர்கள் என்ற பல வழிகளில் தேடல் தொடங்குகிறது. போதாக்குறைக்கு கூகிளும் தேடுகிறது. ஆனால் அப்படித் தேடிவைக்கப்படுகிற பெயர்களில் பல பெயர்கள் தனித் தமிழ்ப் பெயராய் இருப்பதில்லை என்பது தான் கசப்பான உண்மை.

முன்பெல்லாம் தாங்கள் வழிபடுகின்ற தெய்வங்களின் பெயரை வைத்தார்கள். கந்தையா, வேலாயுதம், யேசுராசா போன்றவற்றை உதாரணமாகக் கொள்ளலாம் இடைக்காலத்தில் இந்துக்களது வடமொழி மந்திரங்கள் இறைவனை ஆயிரம் நாமம் சொல்லிப் பாடியபோது அந்த அர்ச்சனைப் பெயர்களைக் குழந்தைகளுக்குச் சூட்டினார்கள் அம்மனின் அர்ச்சனை மந்திரங்களால் குறிப்பாக பெண்பிள்ளைகளுக்கு அழகான பெயர்கள் கிடைத்தன. காயத்திரி, சாம்பவி, மாதங்கி, அபிராமி போன்றன. ஆனால் இதனால் பல பெயர்களில் வடமொழி கலக்க ஆரம்பித்தது. வைஸ்ணவி, வைஷாலி, கம்ஸா போன்ற பெயர்களைக் குறிப்பிடலாம்.

பல்வேறு காலங்களில் ஏன் இன்றுவரை தமிழ் சினிமாவின் ஆதிக்கமும் பெயரிடலை தீர்மானித்தது எனலாம். தாம் விரும்பும் நடிகர்களின் பெயரைத் தங்கள் பிள்ளைகட்கு சூட்டினார்கள். தமிழர் அல்லாத பிறமொழி நடிகர்களின் பெயர்கள் தமிழுக்குள் நுழையத்தொடங்கின. ரஜனிகாந், ஸ்ரீகாந், கிரிகாஸன் போன்ற பெயர்களைக் குறிப்பிடலாம். எமது மொழியில் இருநூற்றி நாற்பத்தேழு எழுத்துகள் இருந்தும் பலவட மொழி எழுத்துக்களைக் கடன் வாங்க வேண்டி ஏற்பட்டது.

கிறிஸ்தவ நண்பர்கள் தங்கள் மதப் பெரியார்கள் (புனிதர்கள்) பெயர்களை தமது குழந்தைகளுக்கு சூட்ட விரும்பினார்கள். அவர்கள் பிறமொழிக்காரர்கள் என்பதால் அப்பெயர்களும் தனித்தமிழ் எழுத்துக்களால் எழுத முடியாததாய் இருந்தது. இதன் தற்போதைய நிலை என்ன இது (சீரியல்) தொடர் நாடகக் காலம் பெரும்பாலான அலைவரிசைகளில் ஹிந்தி நாடகங்களே மொழி மாற்றம் செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன. அதில் வரும் கதாநாயகநாயகிகளுடைய ஹிந்திப் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்கு வைக்கிறார்கள்.



> பல்வேறு காரணங்களால் தனித்தமிழ்பெயர்கள் அருகி வருவதால் எமது மொழியடையாளம் பாதிக்கப்படுவதை மொழியியலாளர்கள் பலர் பல இடங்களில் சுட்டிக்காட்டியும் நடைமுறை இவ்வாறே தொடர்கிறது. ஏன் தமிழில் பெயர் வைப்பதில்லை என்றால் தமிழ்ப் பெயர்கள் மிகநீண்டதாக இருப்பதாக சிலர் குறைப்படுகிறார்கள்.

இப்படி பல்வேறு காரணங்களால் தனித்தமிழ்பெயர்கள் அருகி வருவதால் எமது மொழி அடையாளம் பாதிக்கப்படுவதை மொழியியலாளர்கள் பலர் பல இடங்களில் சுட்டிக்காட்டியும் நடைமுறை இவ்வாறே தொடர்கிறது. ஏன் தமிழில் பெயர் வைப்பதில்லை என்றால் தமிழ்ப் பெயர்கள் மிகநீண்டதாக இருப்பதாகச் சிலர் குறைப்படுகிறார்கள்.

அண்மையில் நண்பர் ஒருவர் தனது கடைசி மகளை அழைத்து வந்திருந்தார். உனக்கு என்ன பெயர் என்றேன். அவள் கனி என்றாள். பெயரே இனித்தது.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். இதை எழுதிக்கொண்டிருந்தபோது இன்னொரு நண்பர் தொலை பேசினார்' "எனக்கு ஒரு பேர்த்தி பிறந்திருக்கிறாள் அ இ ஆ எழுத்து வரிசையில் ஒரு பெயர் வேண்டும், மிகச்சிறிய பெயராய் இருக்க வேண்டும்" என்றார். நான் சொன்னேன் அ என்று வையுங்கள். அகரம் தமிழின் முதலெழுத்து மிகச்சிறிய பெயர் என்றேன். அந்தப் பெயரை அவர் வைத்தால் அவளுக்கு: 'அ' என்று பெயர். . . ■





துவைச்சு வைச்ச புடவையிலே கொஞ்சம் அழுக்கு இருக்கிறதை என் பொண்டாட்டி பார்த்துட்டா...!
அப்புறம்?
வெளுத்து வாங்கிட்டா!



அந்த வேலைக்காரி போடுற கண்டிசன் ரொம்ப ஓவரா இருக்கு!
என்ன கண்டிசன் போடுறா?
வீட்டுல வை ஃபை கனெக்ஷன் இருந்தாத்தான் வேலைக்கு வருவாளாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஓவசி...

மிருசுவில தமிழ்தாசன்

எப்படியோ சவுந்தரியின் வீட்டைத் தேடிப் பிடித்துவிட்டார்கள் இந்த மும்மூர்த்திகளும். 'வாருங்கோ தம்பியவை! வாருங்கோ!'
சவுந்தரியின் சிறியதகப்பன் ஆன தங்கவடிவேலாயுதம் இவர்களை அன்புடன் வரவேற்றார். வரவேற்றது மகிழ்ச்சிதான். கையில் கத்தியுடன் நின்று வரவேற் றதுதான்; ஒரு வித திகிலை உண்டாக்கியிருந்தது இவர்களுக்கு. அவர் ஏதோவேலையாக நின்றிருப்பார் போலும்!
'ஐயா! இவன் எங்கடை நண்பன் சிங்காரவேலன். நாங்கள் செல்லமாக ஓவசியெண்டு கூப்பிடுவம். பாவம் தாய்தேப்பனில்லை. அதுதான்... உங்கட மகளை...'
மெல்ல மெல்ல வாழைப்பழத்தில் ஊசியேற்றியதுபோலவந்தநோக்கத்தைவெளிப்படுத்திவிட்டான் நாதன்.
'அப்படியே தம்பியவை சங்கதி! சந்தோசம். அது சரி பொம்பிளையைப் பாத்திட்டியளே! பாக்காட்டில் வடிவாய்ப் பாருங்கோ! குரல் கொடுத்த மறு வினாடி வந்து நின்றாள் சவுந்தரி. அவளுக்கும் ஓவசியைப்பிடித்துவிட்டது. ஊர்உறவுகளென்று இரு தரப்பினருக்கும் யாருமேயில்லை. மிக எளிமையாகக் திருமணத்தை நடத்த வேண்டியது தான்.
'கடவுளே! இப்ப எண்டாலும் என்னைக் காப்பாத்திப்போட்டாய். உவள் பெட்டையை வைச்சு ஆதரிக்க இனியும் என்னாலை ஏலாது. உவளுக்குத் தீனி போட்டு வளக்கிறதெண்டால் ஆராலை ஏலும்! என்ரை அருமந்த காணியளிரண்டையும் வித்துத் திண்டது தானே! இனியும் உவளை வச்சிருந்தால் இருக்கிற வீடுவளவும் விக்கவேண்டி வந்திடும். கொண்டுபோங்கோடா! இனியெண்டாலும் கொஞ்சம் நிம்மதியாயிருப்பம்'
தங்கவடிவேல் இவ்வாறு மனதுக்குள் மகிழ்ச்சியடைந்தார். பெரிய சுமையொன்றை இறக்கி வைத்துவிட்டதிருப்தி அவருக்கு. அவளின் ஆடம்பரச் செலவே அவரை அப்படிப்பேசவைத்தது. ஐயர் வரவில்லை. அடுத்தவர்கள் வரவில்லை. விருந்துவைக்கவில்லை. இருவருமே இணைந்து கொண்டார்கள். அது தான் கல்யாணம் அவர்களைப்பொறுத்தவரையில். தாலியும் கட்டாது இருவரும் மணமக்களாகிவிட்டனர். ஓவசிக்கும் சவுந்தரிக்கும் அன்று முதலிரவென்ற சம்பிரதாயமும் காத்திருந்தது. அதுவும் ஒரு சம்பிரதாயம் தானே!
'டேய் தீபன்! எனக்கு இந்த முதலிரவு எண்டவார்த்தையே பிடிக்கயில்லை மச்சான்!'
ஓவசி சற்று சலிப்புடன் கூறினான்.
'எட! இதென்ன இடியேறு விழுந்த கதையடா கதைக்கிறாய் விசரா! இந்தக்காலத்திலை இப்பிடியுமொரு விசர் மனிசர் ஆரேன் இருப்பங்களே!"
நாதன் ஆச்சரியப்பட்டான். தீபனும் தான். " எட நான் அதைச் சொல்லயில்லை மச்சான்! முதலிரவு வரைக்கும் எதுக்காக மினைக்கட வேணும். அதைப்பகலிலையேவைச்சிடலாமெண்டுதான் சொல்லவாறன்!"
"எடக்கோதாரி! நீ அப்பிடிவாறியே! அது உன்னைப் பொறுத்தது. நாங்கள் போயிற்றுவாறம்."
சிரித்தபடிநண்பர்களிருவரும்புறப்பட்டுவிட்டனர். ஓவசி சவுந்தரி தம்பதிகளின் தாம்பத்திய வாழ்வு எப்படியோ ஓடிக் கொண்டிருந்தது. வாடகைவீடு வேளாவேளைக்குச் சாப்பாடு. நிமம்தியாகவே இருந்தது ஓவசிக்கு மனத்தில் ஒருவித புத்துணர்ச்சி இழையோடியது. மற்றவர்களைப்போல் ஒரு குடிமகனாக ஒரு சராசரி மனிதனாக வாழும் வாழ்க்கை முழு சந்தோசத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது என்பது உண்மையே!
ஓவசி இப்போது ஒருகுடும்பத்தலைவன் என்னும் பொறுப்புணர்வுடன் கூலி வேலை செய்து சம்பாதிக்கத் தொடங்கினான். ஆனால் இப்போது சவுந்தரி பீடிசுற்றப்போவதில்லை. ஓவசியையே சுற்றிச்சுற்றிவந்து கொண்டிருந்தாள்.

கடவுளே! இப்ப எண்டாலும் என்னைக் காப்பாத்திப்போட்டாய். உவள் பெட்டையை வைச்சு ஆதரிக்க இனியும் என்னாலைஏலாது. உவளுக்குத்தீனி போட்டு வளக்கிறதெண்டால் ஆராலை ஏலும்! என்ரை அருமந்த காணியளிரண்டையும் வித்துத் திண்டது தானே!

விதம்விதமாகஉடுக்கவேண்டும்,நகைநட்டுக்கள் வாங்க வேண்டும். வித்தியாசமான உணவுகள் உண்ண வேண்டும், வசதியான பெண்களைப் போல்கணவனுடன் கோயில்குளம் பீச், சினிமா என்று சுற்றித்திரிய வேண்டும். இவ்வாறு ஆசைகளை அகலக்கால்கள் பரப்பிவளர்த்துக்கொண்டாள். ஓவசியின்சம்பாத்தியம்அன்றாடத்தேவைகளுக்கே போதாமலிருக்கும் போது இவளின் ஆடம்பரங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான், இது எங்கே போய் முடியுமோஎன்றுகவலைப்படவும்தவறவில்லை. ஏற்கனவே பட்ட கடன்கள் கிணற்றில் பேட்டகற்களாக அப்படியே இருந்தன. இப்போதுஏராளமான பணம் செலவழித்துக் கடைகளில் சாப்பிடுவதில்லை. அதற்குப் பதிலாக சவுந்தரி போடும்; ஆட்டங்கள் கொஞ்சமல்ல. ஆடம்பரவாழ்வும் ஊதாரித்தனமும்ஓவசியைநிலைகுலையவைத்தன. (தொடரும்)



அந்த சர்வர் ஏன்
முறைச்சிக்கிட்டே போறான்!

டிப்ஸ் ஏதாவது தாங்க எண்டு
கேட்டதுக்கு சப்பாத்தி
மாவை நல்லா ஊற வைச்சு
பிசையுங்கோ எண்டு.
சொன்னேன்...



# தூண்டில்

என் தூண்டிலுக்கு
மீன்கள்
தேவையில்லை
கடல்கள்தான்
சிக்கவேண்டும்...

உங்கள் தேசத்தில்
போர்
முடிந்துவிட்டதா...?

சிறுபான்மையே
உங்கள்
கல்லறைகளில்
பூக்கள் சிரிக்கும்...!

எங்கள் தேசத்திலும்
போர்
முடிந்துவிட்டது...!

என்ன புதினம்
எங்கள் பூக்களின்
நடுவில்
கல்லறைகள்
சிரிக்கின்றன
உரிமைகளை
தின்று
செரிக்கின்றன...

தாலியக்கட்டிட்டு
தடுப்புக்குப்போனவன்
பாலியாத்துச்
சண்டையில
நிண்டதெண்டு
பிடிச்சாங்கள்...

போலியோ தடுப்பூசியும்
பிள்ளைக்குப்
போட்டாச்சு
வேலியப் பார்த்து
கண்ணும் காய்ச்சுப்
போச்சு...

கட்டின புருசன்
இன்னும் வரயில்ல
பெட்டி நிறைய
வட்டித்துண்டும்
வழக்குத் துண்டும்...

நி. பிரதீப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஒன் த அதர் சைட்'
## போர் தந்த அவலம்




எமது நாட்டில் நிகழ்ந்த போரால் தமிழர்கள் தம் உறவுகளை இழந்துள்ளார்கள், பிரிந்துள்ளார்கள். பிரிந்த உறவுகளைக் கண்டடைந்துவிட மாட்டோமா என இன்றுவரை தேடிக்கொண்டும் போராடிக்கொண்டும் இருக்கின்றார்கள். இதற்குமாறாகப்பிரிந்துவிட்ட உறவொன்றின்நினைவைக்கூடச் தொலைத்துவிட விரும்புகின்றார் வெஸ்னா என்னும் பெண். இதுவே குரோஷியா நாட்டுத் திரைப்படமான 'ஸ் வன் ஸ்ரென்' சித்திரிக்கும் கதை. கதையில் வெஸ்னாவுக்கு ஒரு மகனும் மகளும் இருக்கிறார்கள். மகள் திருமண வயதில் இருக்கின்றார்.

மகனுக்குத்திருமணமாகிஒருகுழந்தைஇருக்கின்றது. வீடுகளுக்குச் சென்று நோயாளிகளைப் பராமரிப்பது வெஸ்னாவுடைய பணி. நிம்மதியாகச்சென்றுகொண்டிருக்கும்அவரதுவாழ்வைக்குலைத்துப்போடுகிறது தொலைபேசி அழைப்பு ஒன்று. முதலில் அந்தத் தொலைபேசி அழைப்பை ஏற்க மறுக்கும் அவர் தொடர்ந்து அழைத்த நபருடன் உரையாடத் தொடங்குகிறார். இதனால், அவர் சில நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது. அப்படி அந்தத் தொலைபேசியில் பேசிய நபர் வேறு யாருமல்ல. அவளுடைய கணவன் ஸார்க்கோதான்.

### புரட்டிப்போடும் திருப்பம்

ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்னர் அவளிடமிருந்து விலகிச் சென்றவர் எதிர்பாராத ஒரு தருணத்தில் தொடர்புகொள்கின்றார். இருபதாண்டுகளாக அவர் எங்கிருந்தார், ஏன் மனைவியைவிட்டுப் பிரிந்தார் போன்ற கேள்விகளுக்கான பதில்களை மாறுபட்ட திரைக்கதையாக்கி, 'ஒன் த அதர் சைட்' என்னும் படத்தை உருவாக்கியுள்ளார் குரோஷிய இயக்குநர் ஸ்ரிங்கோ ஆக்ரெஸ்டா. இந்தப் படத்தை நம் நினைவில் நிலைக்கச் செய்வது இதன் திரைக்கதையே.

### இதமான வலி

இந்தப் படத்தில் கணவன் மனைவியின் பிரிவுக்குக் காரணம் 1991 95 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற குரோஷிய சுதந்திரப் போராட்டம்தான். அந்தக் காலகட்டத்தில் மத்திய குரோஷியாவின் சிசாக் என்னும் நகரில் வெஸ்னா தன் கணவன் ஸார்க்கோவுடனும் குழந்தைகளுடனும் வசித்துவந்தார். ஜே.ஏ. என அழைக்கப்பட்ட, செர்பியர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் யூகோஸ்லோவிய மக்கள் ராணுவத்தில் அதிகாரியாக இருக்கின்றார் ஸார்க்கோ. போர் காரணமாகவே வெஸ்னா தன் குழந்தைகளுடன் ஸாக்ரெப்புக்கு இடம் பெயர்ந்திருக்கிறார். ஸார்க்கோ போர்க் குற்றங்களுக்காகச் சுமார் 20 ஆண்டுகளைச் சிறையில் கழிக்கின்றார். சிறையிலிருந்து வெளியே வந்த பின்னர்தான் தன் மனைவியை அழைத்துப் பேசுகின்றார்.

நீண்ட நாள்களாகப் பிரிந்திருந்த உறவுகளை மீண்டும் சந்திக்கும் போதும், தொலைபேசி வழியே உரையாடும் போதும், அந்த நாள்களின் ஞாபகங்களையும் மனிதர்களையும் நினைவின் ஆழத்திலிருந்து உருவிப் பேசுவது என்பது இதம் தருவது என்றபோதும் வலி மிக்கது. இந்த வலியை உணர்த்தும் விதமான ஒளிப்பதிவு, பின்னணியிசை, காட்சிப்பொருள்கள் ஆகியவற்றைக்கொண்டு படத்தை இயக்குநர் நகர்த்துகிறார். அதனால்தான் மிக நிதானமாக நகரும் இந்தப் படத்தை நாம் பொறுமையுடன் பார்க்க முடிகிறது. இந்தப் போர் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் இத்தனை பேரின் வாழ்வில் இவ்வளவு சிக்கல் ஏற்பட்டிருக்குமா என்ற ஆதாரக் கேள்வியைப் படம் எழுப்புகிறது.

படத்தின் பின்னணி போராக இருந்தபோதும், போர் நடந்து முடிந்த 20 ஆண்டுகளுக்குப் பின்னரான வாழ்வே காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்த வாழ்வின் வழியேதான் போரின் பாதிப்பை இயக்குநர் உணர்த்துகின்றார். ஆகவே இந்தப் பாதிப்பானது மிகவும் நுட்பமாக, தொனியில் வெளிப்பட்டிருக்கி றது.

கணவனுடன் மீண்டும் சேர வேண்டுமா என்பதாலேயே அவள் அவரைத் தொடர்புகொள்ள மறுக்கிறார். தொலைபேசி வழியே வற்புறுத்தி அழைத்தபோதும், பெல்கிரேடு நகரில் இருக்கும் அவரைச் சந்திக்கப் பிரியப்படுவதில்லை. வெஸ்னாவின் மகனும் தன் தந்தையைப் பார்க்கவே விரும்பவில்லை. மகளுக்கோ அவளுடைய அரசு வேலைக்கு இடைஞ்சலாக அமைந்துவிடுகிறது தன் தந்தையின் ராணுவப் பணி. இதனால் குடும்பத்தினர் அனைவரும் ஸார்க்கோவுடன் இணைய விரும்பவேயில்லை. ஆனால், ஸார்க்கோவுக்கோ தன் குடும்பத்தினரைப் பார்க்கவும் அவர்களுடன் சேர்ந்துவாழவும் ஆசை. அதனால்தான் தனது உரையாடல் வழியே அதைச் சாதித்துக்கொள்ள முயல்கிறார்.

### அழைத்தது நீதானா?

நடுத்தர வயது தரும் தனிமை காரணமாகப் பின்னிரவில் தொடரும் உரையாடல் வெஸ்னாவை ஏதோவொரு வகையில் தேற்றுகிறது. கடந்துபோன காலத்தின் துயர நினைவுகளைத் தொடர்ந்து போர்த்திக்கொண்டிருப்பதால் என்ன பயன் என்ற நினைப்பிலேயே அந்த உரையாடலை அனுமதிக்கிறார்; தொடர்கிறார்.

பழைய காலத்தைப் பற்றி வெஸ்னாவும் அவருடைய கணவரும் உரையாடும் பின்னிரவுக்காட்சிகள் அழகாகக் கோக்கப்பட்டுள்ளன. திடீரென்று ஒரு நாள் அழைப்பு வருவது நின்றுவிடுகிறது. பரிதவித்துவிடுகிறார் வெஸ்னா. மீண்டும் ஸார்க்கோவிடம் பேசிவிட அவர் மேற்கொண்ட முயற்சி வெற்றிபெற்றுவிடுகிறது.

வெஸ்னாவுடன் பேசிய ஸார்க்கோ இத்தனை வருடங்களுக்குப் பின்னர் தொடர்புகொண்டு பேசியதற்கு முதலில் நன்றி தெரிவிக்கிறார். அந்தச் சொற்களால் அதிர்ந்துவிடுகிறார் வெஸ்னா. அப்படியானால் இத்தனை நாள்களாகத் தன்னுடன் பேசியது யார் என்று அதிர்ந்துவிடுகிறார். காருக்குள் இருந்தபடியே, தன்னந்தனியே அழுகிறார்.

உடனடியாக கைபேசியை எடுத்து அந்த நபரை அழைத்துக் குமுறுகிறார். அவரது வீட்டுக்கு எதிரே தனியே வசிக்கும் நடுத்தர வயது கொண்ட நபர்தான் வெஸ்னாவுடன் உரையாடியவர் என்பதைத் தெரிவித்து, படம் நம்மிடமிருந்து விடைபெறுகின்றது. போரின் கடுந்துயரத்தில் ஒன்று தனிமை.

போரின் நேரடித்தாக்கம் உயிரைக்கொல்வது என்றால், போரின் மறைமுகத் தாக்கம் உணர்வைக் கொல்வது என்பதைப் படம் சொல்கிறது.






"கச்சேரிக்குத்தான் கூட்டம் வந்துடுச்சே...பாடகர் ஏன் பாடாமல் உட்கார்ந்து இருக்கிறார்?"
"மௌனராகம் பாடுகிறாராம்!"



பொங்கலுக்கும் இட்லிக்கும் என்ன வித்தியாசம்?
பொங்கலுக்கு லீவு விடுவாங்க; இட்லிக்கு லீவு விடமாட்டாங்க!

## மீனாகும் கருவாடு

கருணையின்றிப் பொழியும் வெயிலை
வேம்பின் கிளையொன்று தழுவும்
மதிற்சுவர் மேலிருக்கும் பூனை
தம் முன்னங்காலால் புறந்தள்ளுகிறது

இன்று தயிர்ச் சோற்றில்
புளிப்பு கூடுதலாய் இருந்ததை
நினைத்துக் கொள்கிறது
விழி திறத்தலையும் இமை மூடலையும்
செல்லமாய்ப் போராடிக் கையாள்கிறது

கொழுத்த கருவாடொன்று நினைவில் மோத
மீசையில் உரசும் வண்ணம் நா சுழற்றுகிறது

மதிற்சுவரோரம் அமர்ந்திருப்பவனை
ஒரு மியாவ் அனுப்பி
அச்சுறுத்தவோ சிநேகிக்கவோ முயல்கிறது
மேலெழும்பும் பீடிப் புகையிலிருக்கும்
கஞ்சா மணம் கிறக்கமூட்டுகிறது
அருகாமைச் செடிக்கு ஒருவர்
தண்ணீர் வார்த்துப் போகிறார்

மலரும் செடியின் மூச்சுக்காற்று
பூனையின் சுவாசத்தில் சேர்கையில்
நினைவில் கிடந்த கருவாடு
மீனாய்த் துள்ளிக்குதித்து
வேரடி நீரில் பிரியம் பகிர்கிறது.

டிலான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொ டியும் மடும்

தேவிபரமலிங்கம்

‘ஹாய்... சூய்... சனிப்பிடிச்ச இந்தக் காகங்களால ஒண்டுஞ் செய்யேலாமக் கிடக்கு’ என்றபடி சன நெருக்கடி கூடிய குருநகர் பிராந்தியத்தில் கட்டங்கட்டமாக ஊடறுத்துக்கிடக்கின்ற வீதி ஒன்றில் வழமை போல் தனது அப்பக்கடை வியாபாரத்தைத் தொடங்கி இருந்தாள் பூரணம்.

‘புள்ளை... உனக்கெத்தினைக்கு அப்பம் வேணும்...?’

‘இருவத்தைஞ்சு ரூவாக்கு...’

என்கிறாள் அந்தச் சிறுமி.

‘சரி... இஞ்சை தா அந்தப் பெட்டியை...’

ஐந்து அப்பங்களை பெட்டிக்குள் அடுக்கி வைத்துப் பிள்ளையிடம் கொடுக்கிறாள். அப்பப் பெட்டியுடன் ஐந்தாறு அடிகள் வைத்து நடந்த பிள்ளையையே இமைவெட்டாது பார்த்துக் கொண்டிருந்த பூரணம்,

‘ச்சூய்... ஹாய்...’

என்று குரல் வைப்பதற்குள் காகமொன்று அந்த ஐந்து அப்பங்களில் ஒன்றைத் தூக்கிக் கொண்டே பறந்தது. இதைக் கொஞ்சமும் எதிர்ப்பார்க்காத அந்தச் சிறுமி மலைத்துப்போய் நின்றாள்.

‘ஆ... அம்... மா... அம்மா...’

அழ ஆரம்பித்து விட்டாள் அந்தச் சிறுமி.

‘இஞ்சை வா புள்ளை... நீயழாதை... ஏன் அழுகிறாய்... அப்பத்தைக் காகம் கொண்டு போனாப் போகுது.. நான் அப்பந்தாறன் வா...’

சிறுமியும் சிணுங்கியபடியே வந்து அப்பப் பெட்டியை நீட்டத் தன்னுடைய வியாபாரச் சுளகில் இருந்த அப்பங்களில் ஒன்றை எடுத்து பெட்டிக்குள் வைத்து சிறுமியிடம் கொடுக்கிறாள் பூரணம்.

சிறுமி நடந்துசென்று பூரணத்தின் பார்வையில் இருந்து மறைகின்றாள். பூரணத்தின் நினைவில் வீட்டில் சுகவீனமாகக் கிடக்கும் மரியசீலி தோன்றுகிறாள். மரியசீலி பூரணத்தின் கடைசிப் பெட்டை.

அவள் பிறக்கும்போது அவளருகில் தகப்பன் இருக்கவில்லை. தகப்பனை விழுங்கி விட்டாள் என்று ஊருக்குள் எல்லாரும் கதைத்துக் கொண்டனர். ‘மருதமடு ஆச்சி... நீதான் பிள்ளைக்குக் காவலணை. கைவிட்டிடாதை’...

வியாபாரம் இன்டைக்கு அவ்வளவாக இல்லை. அப்பங்கள் அப்படியே சுளகில் பரவிக் கிடக்கின்றன. பூரணத்தைப் பற்றி இன்று அந்த இடத்தில் அவதூறான வதந்திகள் பரவிக் கொண்டு இருக்கின்றன.

ஆனால் அதுகளை எல்லாம் காதில் வாங்கி அர்த்தங்கள் பிரித்துப் பார்க்க பூரணத்தால் முடிவதில்லை.

“இந்தாணை ஆச்சி... இரண்டப்பந்தா...”

பணப் பெட்டியில் காசுவிளச் சுளகில் இருந்த அப்பங்களில் இரண்டு காலியாகின்றன. அவளின் கைகள் துரிதமாகின்றன. மேல் சட்டியைத் தூக்கி மறுபக்கத்தில் புதிதாக ஊத்திய அப்பச் சட்டிக்குமேல் வைத்து விட்டு ஏற்கனவே வெந்து கொண்டிருந்த அப்பத்தைத் தட்டகப்பையால் லாவண்யமாகச் சுரண்டி எடுத்து சுளகின் மீது வைக்கிறாள்.

விடியப்புறம் ஒரு மணிக்கெல்லாம் எழும்பித் தேங்காய் துருவி பிழிந்து மாவைக் கரைத்துப் பதமாக்கிக் கொண்டு அப்பக்கடை வைப்பதற்கான அடுக்கெல்லாம் பார்த்து மூன்று மணிக்குள் அப்பங்கள் சுட்டு முடிந்தாலே பூரணம் மனிசியின் அப்பங்கள் மனமாக விலைபோகும்.

காரணம் அவ்விடம் கடற்கரைப் பகுதி. மீனவ மக்கள் விடியப்பறம் மூன்று மணிக்கெல்லாம் தொழிலுக்கு ஆயத்தமாகி விடுவர். அவர்கள் சாப்பிடுவதற்கு வசதியாக நேரத்தோடேயே அப்பங்களை ஆக்கி முடித்தாலே அந்தப் பிரதேசத்தில் அப்பக் கடைவைத்து உய்ய முடியும். இன்று கொஞ்சநேரம் சுணங்கியதால் அப்பங்கள் விலை போகாமல் அப்படியே கிடந்தன.

பகல் பத்து மணிக்கெல்லாம் அப்பக்கடை வியாபாரத்தை முடித்துக் கொண்டு எழும்பினால். சின்னக்கடைக்குப் போய் வந்து உலைமூட்டி அரிசி போட்டு; வடித்தெடுத்து கறியைப் புளியை வைத்து முடித்தாற்தான் பிள்ளை குட்டிகளுக்குக் குடுத்துப் பசியை ஆத்தமுடியும். தனியொருத்தியான பூரணத்தின் கைகள் ஆடினாற்தான் அவளோடுள்ள ஐந்து சீவன்களின் உயிர்களும் நிலைக்கும்.

“இந்தாணை... முப்பரூவாக்கும் அப்பம் தா... என்ன இண்டைக்கு அப்பமெல்லாம் விலைப்படாமல் அப்படியே கிடக்கு...?”

“கொஞ்சம் சுணங்கிட்டேண்டி தொழிலாளிகளெல்லாம் போயிட்டாங்க.. அது தான்...”

மீண்டும் பூரணத்துக்கு தனிமை வந்து சூழ்கிறது. அவளின் மனதில் நினைவுகள் மிதக்கின்றன. பூரணத்துக்கு அந்த இரண்டு ஆண்களைத் தவிர அடுத்துக் கொஞ்சம் பெரியவளாக இருப்பது ஒரு பெண்தான்.

அதுவும் இண்டைக்கோ நாளைக்கோ வெண்டு இருக்கிறது. அப்படியேதும் ஆகி விட்டால் அவளுக்கு இப்ப இருக்கிற பாரங்களோடை மிகப்பெரிய பாரம் வந்து சூழ்ந்து கொள்ளும். வீட்டில் அந்தப் பிள்ளைக்குக் காவல்காப்பதா? வியாபாரத்தைப் பாப்பதா?

பூரணம் பார்வைக்கு அதிக வயதுக்காரியாகக் காட்சி அளித்தாலும் உண்மையில் சொற்ப வயதுக் காரிதான். ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் புருஷன் இந்த மண்ணுலகை விட்டுப்பிரியத் தனித்துக் கொண்டாள்.

அந்தளவுக்கு அழகாக இருந்த பூரணத்தை இன்று கண்டால் வயதுக்காரியாகத் தோன்றினாலும் அழகில் குறைந்தவளா என்னும் கேள்வி தொக்கியே நிற்கும்.

கணவன் உயிரோடு இருக்கும் காலங்களில் பூரணத்தை யாருக்கும் அந்த ஊரில் தெரியாது. அவ்வளவு அடக்கமாக வாழ்க்கை நடத்தினவள்தான் இந்தப் பூரணம்.

இன்றோ அவளைப் பற்றிப் பலர் பலவாறாகக் கதைக்கிறார்கள். ஆயினும் அதில் எந்தளவும் உண்மை இல்லை. அப்படிப்பட்டவள் இந்தளவுக்குக் கஷ்டங்கள் படவேண்டிய தேவை என்னவந்து விட்டது.

“இந்தாணை இந்தப் பதினைஞ்சு ரூவாக்கும் அப்பந்தா பூரணமாச்சி...”

“இந்தா மோனை புடியடி...”

நேரம் வெகுவாகச் சென்று விட்டது. வேறு சில நாள்களில் பூரணத்தால் மூச்சு விடக்கூட முடியாமல் சுற்றி வளைத்துக் கொண்டு அவள் சுடும் அப்பங்களை வாங்குவதற்குப் போட்டி போடுவார்கள்.

இன்றோ சுளகில் சுட்டெடுத்து வைத்த அப்பங்கள் அந்தந்தப் படியே கிடக்கின்றன. பானைக்குள் புளிக்க வைத்துப் பதமாகக் கரைத்த மாக் கூழும் அரைவாசிக்குக் கிடந்தது.

தேங்காய் பிழிந்து சீனி போட்டுக் கரைத்து வைச்ச அப்பப்பால் ஒருபுறம் மிஞ்சிக்கிடக்கிறது. நேரம் நகர நகர பூரணத்தின் எண்ணமெல்லாம் வீட்டில் சுகமில்லாமல் பாயில் சோர்ந்து ஒட்டிக் கிடக்கும் மரியசீலி மீது தான் விழுகிறது.

இன்று பூரணம் அப்பக் கடைவைக்கச் சுணங்கியதற்கு அவளது உடலசதி ஒரு காரணம் என்றாலும் மரியசீலியின் சுகவீனமே முக்கிய காரணமாகும். இரவிரவாக அவளது மேனி தகித்த தகிப்பு நெருப்புத் தணலைப் போன்றே இருந்தது. நித்திரையும் இல்லாமல் பிள்ளைக்குச் செய்ய வேண்டிய அனுமானங்களைப் பார்ப்பதிலேயே முதல்நாள் இரவு பூரணத்துக்கழிந்தது.

பூரணத்தின் கரங்கள் துரிதமாகின்றன. அகப்பையை எடுத்து மாப்பானையைத் துளாவியவள் அளவுப் பிரமாணத்தில் அகப்பையில் எடுத்த மாப்பாணியை அப்பச் சட்டியுள் சிலாவி விடுகிறது ஒருகை. பின்னர் மாப்பானைக்குள் அகப்பையைப் போட்டு விட்டு தேங்காய் பாலில் கொஞ்சத்தைக் கிள்ளி மாப்பாணி மேல் விடுகிறது மறுகை!

இப்பொழுது இருகைகளும் சேர்ந்து அருகில் கிடந்த குச்சிகளால் நெருப்புச் சட்டியைத் தூக்கி அப்பச்சட்டி மீது வைத்த பின்பு அடுத்த சட்டியுள் வெந்து போயிருந்த அப்பத்தைத் தட்பைபடிகயால் சுரண்டி எடுத்துச் சுளகுமீது வைக்கிறாள்.

“பூரணம் அப்பம் கிடக்கே...” தூரவரும் பொழுதே கேட்டுக்கொண்டுவருகிறாள் பூரணத்தின் வயதை ஒட்டிய ஒருத்தி

ம்... உனக்கெத்தினை அப்பம் வேணும்..”

“எனக்கொரு ஆறு அப்பத்தைத் தாவன்...’

கொடுத்துவிட்டு மாப்பானையைத் திறந்து வெளிச்சப் பக்கமாகத் திரும்பி எவ்வளவு மாப்பாணி அதற்குள் கிடக்கிறதென நோட்டமிட்டவள்... “ம்.சரி இவ்வளேத்தையும் சட்டியப்பமாக ஊத்திச் சுட்டுப் புள்ளையளுக்கு மத்தியானச் சாப்பாட்டுக்குக் குடுக்கலாம்...”

மனதின் தீர்மானத்தை தனக்குள்ளே மெதுவாகச் சொல்லிக் கொண்ட பானையுள் கிடந்த மாப்பாணி முழுவதையும் வடித்து எடுத்து தேங்காய்ப் பாலையும் ஒன்றாகக் கலந்துஅப்பச் சட்டிக்குள் ஊற்றி நெருப்புத் தணலையும் கிளறி ஊதிவிட்டு நிமிர்கிறாள்.

“எணை அம்மா... தங்கச்சி மரியசீலி ஆடாமல் அசையாமல் கிடக்கிறா.”

பூரணத்தின் நடுவில் பொடியன் ஜெயக்குமார் வந்து சொல்லப் பூமியே நின்று விட்டது.

“என்னடா சொல்லுறே... மரியசீலி ஆடாமல் அசையாமல் கிடக்கிறாளோ?’

“என்ரை ராசாத்தி......”

கத்திக் கொண்டே எழுந்து ஓடுகிறாள் பூரணம். மரக்கட்டையாகக் கிடந்த மரியசீலியின் நாடியைப்பிடித்துப் பார்க்கிறாள். எவ்விதத் துடிப்பையும் உணராத பூரணம் இரண்டு கைகளிலும் பிள்ளையைத் தூக்கி மடியில் வளத்திக் கொண்டே அழ ஆரம்பித்து விட்டாள்.



> “கணவன் உயிரோடு இருக்கும் காலங்களில் பூரணத்தை யாருக்கும் அந்த ஊரில் தெரியாது. அவ்வளவு அடக்கமாக வாழ்க்கை நடத்தினவள்தான் இந்தப் பூரணம். இன்றோ அவளைப் பற்றிப் பலர் பலவாறாகக் கதைக்கிறார்கள்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுற்றித்தான் பார்ப்போமே!

த.கிருபாகரன்

குடும்பங்களில் வெடிப்புக்களும், உடைவுகளும், அதிர்வுகளும் மிகையாக ஆட்கொள்ளப்பட்ட சூழல் காணப்படுகின்றது. அவசரமான உலகத்தில் ஆர்ப்பரிப்புக்களும் அட்டகாசங்களும் ஆங்காங்கே புரையோடிப் போயுள்ள நிலையில் "மனித அவலங்கள் நிரந்தர வைப்பில் வைக்கப்படுகின்றன. இதன் விளைவாக மகிழ்ச்சி என்பது எட்டாத கனியாகப் போய்விட்டதோ என்ற எண்ணப்பாடு ஏங்க வைக்கின்றது. தினமும் நாங்கள் ஏதோ ஒன்றுக்காக ஏங்குபவர்களாக இருப்பது வேதனைகளை வலுப்படுத்துகிறது.

இன்று திருமண வீடு, இறப்பு வீடு, பூப்புனித நீராட்டு விழா, புதுமனைப்புகுவிழா, பிறந்த நாள் வீடு, 31ஆவது நினைவுநாள் வீடு என அனைத்து நிகழ்வுகளும் முடிவில் சோகமாகவே முடிகின்றன. இதற்கு எழுச்சி பெறாமல், பகிரப்படாமல் அமுக்கத்தில்இருக்கும் குரூரமான உணர்வுகளே காரணமாகிக் கிடக்கின்றன.

குறைந்தது யாரோ ஒருவர் வில்லனாக அல்லது வில்லியாக இருந்து இந்த நிலையை ஏற்படுத்தி விடுகின்றார்கள். "உர் என்று முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு பிரச்சினைகளை உமிழ்ந்து தள்ளி விடுகிறார்கள். ஏதோ ஒன்றை தூக்கிப்பிடித்துக் கொண்டு சன்னதம் ஆடுகிறார்கள்.

மகிழ்வுக்காகச் செய்யப்படும் நிகழ்வுகளை ஏன் மகிழ்வாக வைத்திருக்க முடியவில்லை என்பதைச் சிந்திக்க வேண்டும். எங்களில் பலருக்கு மகிழ்வாக இருப்பதற்கே விருப்பம். அப்படியானால் இதை எப்படி நிலை நிறுத்துவது? அதற்குச் சில தயார்ப்படுத்தல்களை நாம் செய்யவேண்டும்.

எல்லைகளைப் போட்டு, அயலவர்கள் கூட எட்டிப்பார்க்க முடியாத அளவுக்கு காவலரண்கள் அமைத்து தப்பித்தவறிகூட யாரும் வந்துவிடக்கூடாது என்பதற்காகக் கடிநாய்களைச் செல்லப் பிராணிகளாக வளர்த்து ஒரு குடும்ப கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு 'ஹலோ' என்றோ காலை வணக்கம் என்றோ சொல்ல முடியாத அளவுக்கு வார்த்தைகளுக்கு வறுமையான நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதலில் மனிதர்கள் இந்த மாயையான நிலைக்குள்ளிருந்து உயிர்த்தெழுதல் வேண்டும். இதற்காகச் சுற்றுலாக்களை ஏற்படுத்துவது சிறந்த தீர்வாகக் கண்டறியப்பட்டுள்ளது. குடும்பங்கள் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுக் குடும்ப சுற்றுலாக்கள் பலவிதமான தேடல்களுக்கு மன நிலை மேம்பாட்டுக்கும் களம் அமைத்துக் கொடுத்துள்ளன. சுற்றுலாக்களின் போது மெய்மறந்து மகிழ்வான சூழல் ஏற்படுகின்றது. கைதடி அரச முதியோர் இல்லத்தின் மூத்தோர்கள் வாரத்தில் இரு தடவைகள் வெளி முதியோர்களுடன் இணைந்து சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதன் மூலம் மகிழ்வூட்டல் மற்றும் அனுபவங்களைப் பகிர்வதற்குரிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புது இடங்கள், ரசனைக்குரிய இடங்களைப் பார்க்கும் போது பழைய நினைவுகள் மீட்டப்படுகின்றன. நடத்தையிலும் மனப்பான்மையிலும் மாற்றங்கள் நிகழ்ந்து, சமூக உண்மைகளை ஏற்று வாழக்கூடிய மனப்பக்குவம் உணர்வாக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியில் இருந்து வந்து செல்லும் மக்கள்கூட நாளாந்த வாழ்வியலில் இவற்றை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள. நாளாந்தம் வீடுகளில்கூட வெளியில் சென்று வருபவர் ஏகாந்தமாக இருக்க வீட்டில் இருப்பவர்தான் அன்றைய பிரச்சினையின் நடுநாயகமாக இருப்பது கண்கூடாகத் தெரிகின்றது.

பாடசாலைகளில் சிறுவர்கள் ஆசிரியர்களுடன் இணைந்து மேற்கொள்ளும் சுற்றுலாக்களில் கூட அனைத்துப் பிள்ளைகளும் பங்குபற்றுவதில்லை. இதற்கு பெற்றோரின் அனுமதி கிடைக்காமையும் காரணமாகின்றது. "கற்றுணர்தல் என்பது மூளையில் நிலைத்திருக்கக்கூடியது. இதற்கான வாய்ப்பாக பாடசாலைச் சுற்றுலாக்கள் அமைகின்றன.

கட்டுப்பாட்டுடனான சுற்றுலா என்பதும் அவசியம்தான் . ஒரு தலைமை வழிகாட்டுவதற்கு அமையும் போதுதான் சிறப்பு குடியமர்ந்துகொள்ளும். இளைஞர்களின் சுற்றுலாக்களில் அதீதமான மகிழ்வூட்டல் போக்குகளை நோக்கிய நகர்வுகள் காணப்படுவதுதான் பொருத்தப்பாடு அற்றதாகக் காணப்படுகின்றது.

சுற்றுலாக்கள் எங்களது துயரங்களை துரத்துவதற்கும் வெறுமைக்குள் மகிழ்வை குடியிருத்தி விடுவதற்கும் ஏற்பாடு செய்வதாக அமையவேண்டும். இந்த நிலைக்கு ஒருவர் தலைமையேற்கவேண்டும். சுற்றுலாக்களின் காட்சிகள் அவரவர் மனங்களைப் பேச வைக்கின்றன. சிறப்பான சிந்தனை ஓட்டத்துக்கு வடிகால்களாக அமைகின்றது. மனங்களை வென்றெடுக்கக்கூடிய பல விடயங்களை கண்டுணரக்கூடியதாக சுற்றுலாக்கள் அமைந்து விடுகின்றன.

மூத்தோர்கள் ஆத்மீக சுற்றுலாக்களில் மெய்மறந்து விடுகின்றார்கள் "மகிழ்வில் இனி நான் செத்தாலும் பரவாயில்லை என்று மகிழ்வின் உச்ச கட்டத்தில் அவர்கள் கூறுவார்கள். அப்பொழுது உண்மையில் சுற்றுலாவின் தாற்பரியம் உணரப்படும். விலங்குகளில் சிரிக்கத் தெரிந்த பிராணி மனிதன் மட்டும்தான். சுற்றுலாவில் நிறைய மகிழ்வைப் பெற்று மனிதன் வாய் நிறைய சிரிக்கின்றான் என்ற உண்மை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது.

நிரந்தர வீடமைத்து, நேரமில்லை என்று எப்போது நாகரிகமாக கூறத் தொடங்கப்பட்டதோ அன்று முதல் மகிழ்வுக்கு குடும்பங்களில் ஆப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆப்பு நிலை நீங்கி மூப்பு நிலை அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதும் காலத்தின் தேவையாக உள்ளது.

மூத்தோர், சிறுவர்கள், இளைஞர்கள் அனைவருமே சமூகத்தின் காத்திரமான பங்குதாரர்கள். இவர்கள் "குடும்பம் என்ற கட்டமைப்புக்குள் வட்டமிடிக்கும்போதுதான் கனதியான சுமைகள் குடியேறுகின்றன. பார்ப்பது, ரசிப்பது, சிரிப்பது, மகிழ்வது இவை சுற்றுலாக்களின் வெளிப்பாடுகளாக இருக்கின்றன. இவற்றின் தரிசிப்புக்கள்தான் உண்மையான மகிழ்வூட்டலுக்குத் திடசங்கற்பமானவை.

குடும்பக் கட்டமைப்பிலிருந்து தற்காலிக வெளியேறுகை, உள்வருகை, செயற்பாட்டுக்காக "சுற்றுலா என்ற கருவி உருவாக்கப்பட்டுள்ளது. மனிதனுக்கு ஓய்வு தேவை, ஓய்வு வேறு சூழலில் ஏற்படுத்தப்படும்போது முழுமையான நிம்மதி கிடைக்கின்றது.

ஒருவர் ஆடலாம், பாடலாம், கதைக்கலாம். ஆனால் சிரிக்கின்றாரா என்பதே முக்கியமானது. அழும்போது இயங்கும் நரம்புகளை விடச் சிரிக்கும்போது பல நரம்புகள் வேலை செய்கின்றன. இதுகூட உடலியல் ரீதியில் ஆரோக்கிமானதே.

காட்டுப் பகுதி, மலைப் பகுதி, கடற்கரைப் பகுதி, பாலைவனப் பகுதி இவற்றை நோக்கிய நாடல்களில் சுற்றுலாக்களின் தேடல்கள் காணப்படுகின்றன.

அண்மையில் சினிமாப் பாடல்களைத் துவிச்சக்கர வண்டியில் ஒலிக்க விட்டபடி ஊர் சுற்றியாக வலம் வரும் ஓர் அன்பரைச் சந்தித்தேன். "அலங்கரித்த துவிச்சக்கர வண்டியில் சுற்றுவதுதான் பிரதானமல்ல, இறை பணிக்காக பயணிக்கின்றேன். இரவு வேளைகளில் பொது இடங்களிலும் தெரிந்தவர்களுடனும் தங்குகின்றேன்" அவரது வார்த்தைகள் கனதியாகிக் கொள்கின்றன. முகத்தில் மிகப்பெரிய ஒளி தெரிகின்றது.

இவ்வாறாக சுற்றுலாக்கள் ஏழ்மையிலும்நேர்மையைத் தந்து கோபத்திலும் பொறுமையை வென்று தோல்லியிலும் விடாமுற்சியைத் தந்து, வறுமையிலும் உதவி செய்யும் மனதை ஏற்படுத்தி, துன்பத்திலும் துணிவு தந்து, செல்வத்திலும் எளிமையாக வாழும் நிலையுடன் பதவியிலும் பணிவைக் காத்திடும் கைங்கரியத்தை ஏற்படுத்தும். குடும்பங்களில் மகிழ்ச்சியைத் தேடிக்கொண்டிருக்கும் நாங்கள் இயற்கையை நேசித்தால், இறுக்கமாகக் கட்டப்பட்டிருக்கும் எங்களது ஈகோக்கள் இல்லாமல் போகலாம். இதன் மூலம் யதார்த்தங்களை உள்வாங்கும் கொள்கைகளும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படலாம் என்ற நம்பிக்கையில் இனியேனும் ஏன் முன்னேறிப்பாய்ச்சலில் ஈடுபடக்கூடாது.

(கட்டுரையாளர்,
கைதடி அரச முதியோர்
இல்ல அத்தியட்சகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(எங்கும் பெண், எதிலும் பெண் என்று சொல்லுமளவுக்குப் பெண்கள் பதிக்காத தடங்களும் இல்லை, இடங்களும் இல்லை. ஆனால், அரசியலில் ஈடுபடுவதற்கு அவர்கள் பின்னிற்கின்றனர். இதற்கு என்ன காரணம்?)

## பெண்ணும் காரணம்

பெண்கள் விடுதலை பெற்றுவிட்டதாக வெளியுலகில் பேசிக்கொண்டாலும், உண்மையில் அவள் இன்னமும் விடுதலை பெறவில்லை. இந்த விடுதலையை அவளை அடக்க நினைக்கும் ஆணிடமிருந்து, விமர்சிக்கத் துடிக்கும் சமுதாயத்திடமிருந்து அவள் பெற்றாக வேண்டும். அதற்குப் பெரும் தடையாக இருப்பது, பெண்களும்தான்.

இந்தப் பெண் என்ற வரையறைக்குள் தாய், சகோதரி, தோழி, மைத்துனி, பாட்டி, மாமி எனப் பலதரப்பட்டோர் உள்ளடங்குகின்றனர். "படிப்பு, வேலை இந்த இரண்டும் இருந்தால் போதும். அரசியலுக்கு எல்லாம் ஏன் போகவேண்டும்? இதனால் தேவையற்ற பிரச்சினைகள்தான் வரும்" என்று இவர்கள் முதல் தடையை விதிக்கின்றனர்.

இந்தத் தடையை அவள் இலகுவில் உடைத்து முன்னேறினாலும், "குடும்பத்தை ஒழுங்காகப் பார்த்துக்கொள்ளத் தெரியாதவள். ஆண்கள் செய்யும் வேலையிலெல்லாம் மூக்கை நுழைக்கிறாள். இவள் அரசியலுக்குள் சென்று எதனைக் கிழிக்கப் போகிறாள்?" என்று இரண்டாவது தடையை விதிக்கின்றனர் சமூகத்திலுள்ள பெண்கள். பெண்ணின் பிரச்சினைகளைப் பெண்ணால் தான் பேச முடியும், அதற்கு நாடாளுமன்றத்தில் பெண்களும் பிரதிநிதித்துவம் வகிக்க வேண்டும் என்று இவர்கள் உணரும் காலம் எப்போது வரும்?



# பெண்ணியம்

பெண்ணியம் அல்லது பெண்ணிலை வாதம் என்பது ஒரே நிலைப்பாடு கொண்டதல்ல. அதனுள் பல கருத்தியல்கள் கோணங்கள் உண்டு. அவற்றுள், சில வருமாறு.

**01.மிதவாதப் பெண்ணியம்**

இது பெண்ணின் சிறப்புக்களைக் கூறுவதிலேயே அதிக கவனம் செலுத்துகிறது. கடவுளுக்கு முன், ஆண் பெண் எல்லோரும் சமம் என்று சொல்லும் அதேநேரம், அதற்காகப் போராடுவதைத் தவிர்க்கிறது. வழக்காடு மன்றங்கள், சட்டமன்றங்கள் முதலியவற்றுக்குப் போவதில் இது ஆர்வம் கொள்கிறது.

**02.போராட்ட குணம் மிக்க பெண்ணியம்**

பெண் உரிமைகளைப் போராடித்தான் பெறமுடியும் பெறவேண்டும் என்று இது வற்புறுத்துகிறது. பெண்களுக்குச் சொத்துரிமை போன்றவற்றுக்காக இது போராடிப் பெற்றும் தந்துள்ளது.

**03.தீவிரவாதப் பெண்ணியம்**


நவீன பெண்ணியம் என்று சொல்லப்படும் இது, 'அரசியல் அமைப்புச் சட்டங்களிலும் அரசு ஆணைகளிலும் வழங்கப்பட்டுள்ள ஆண் பெண் சமத்துவம் நடைமுறையில் அவைக்குதவாதது' என்று குற்றஞ்சாட்டுகிறது. குடும்பம், பாலியல் உறவு முதலியவை பெண்ணை அடிமைப் படுத்துகின்றவை; எனவே இவற்றிலிருந்து பெண் விடுதலையாகி, வெளியே வரவேண்டும் என்று இது எடுத்துரைக்கிறது.

**04.புரட்சிகரப் பெண்ணியம்**

பாலியல் உரிமை (sexual right), கட்டற்ற அல்லது கட்டுப்பாடற்ற பாலியல் உறவு (free sex), பெண் ஓரினச் சேர்க்கை (lesbianism), குழந்தை பெறுவதை மறுத்தல் முதலியவற்றை இது வலியுறுத்துகிறது.

**05. சமதர்மப் பெண்ணியம்**

குடும்பத்துக்குள்ளும் அதற்கு வெளியேயும் பெண், பொருளாதார அடிப்படையில் சுயநிலையும் பெறவேண்டும். அப்போதுதான் பெண் விடுதலை சாத்தியமாகும் என்று இது சொல்கிறது. ஒட்டுமொத்தமான சமூக சமதர்ம அமைப்பிலேயே பெண்ணும் நிரந்தரமாக சமத்துவநிலை பெறுகிறாள் என்று இது கூறுகிறது.





## விடியல் உனக்காக....


இரவுகள் மட்டும்
உன் இடமல்ல...
விடியல்களும் உனக்கான
படிக்கற்கள்தான்...
காமுகன் உன் கற்பை
களவாடினாலும்
பெண்மை இழக்காத
கன்னி நீ...
புதுமைகள் செய்யலாம்
காலடி வை
புதுமைப்பெண்ணாய் நீ...
கண்ணில் ஈரம் வேண்டாம்
நெஞ்சில் வீரம் கொண்டிடு...
பணிந்தது போதும் துணிந்தெழு...
உதயம் தரும் பெண்மையாய்
நீயும் விழித்தெழு...
அடிபணிந்த காலங்கள்
சாம்பலாகட்டும்..
இனிவரும் காலங்கள் உனை
சரித்திரம் போற்றட்டும்...
இருள் வாசம் வேண்டாம்
வாழ்வில்...
புது ஒளி வீசட்டும் உனக்குள்..
முடிந்தவை மண்ணில்
புதையட்டும்
உனக்கான விடியல்கள்
விண்ணில் பிறக்கட்டும்...
குனிந்தது போதும் நிமிர்ந்தெழு நீயும்
இனிவரும் விடியல்கள் உனக்காக...
புதிய பாதைகள் திறக்கட்டும்
உன் காலடி பதிந்த இடமெங்கும்
பூட்டுகள் உடைந்து
புதுவசந்தம் தோன்றட்டும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முழங்கையிலுள்ள கருமை மறைய

பெரும்பாலானோருக்கு முழங்கால்களில், முழங்கைகளில் கருமை படர்ந்திருக்கும். ஒலிவ் எண்ணெயும் பன்னீரும் கலந்த கலவையைத் தடவி வந்தால், நாளடைவில் அந்தக் கரிய நிறம் மறைந்து அழகான தோலைப் பெறமுடியும்.



## வாழைத் தண்டு கால்களுக்கு...

பெண்களின் அழகில் கால்களுக்கும் முக்கிய பங்குண்டு. இந்தக் கால்கள் வாழைத் தண்டு போன்றிருந்தால், பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். பாதத்தின் இறுகிய தன்மையைப் போக்கவும் வழவழப்பான தன்மையைப் பெறவும் பாதாம் எண்ணெயைப் பாதங்களில் தடவிவர, விரைவில் வாழைத்தண்டுக் கால் அழகைப் பெறுவீர்கள். பாதமும் நல்ல மென்மையான தோற்றத்தைப் பெறும்.



## நரை முடியை கருப்பாக மாற்ற உதவும் கோப்பி

கோப்பிக் கொட்டை முற்றிலும் பாதுகாப்பான ஒன்று. இது மிகவும் ஆச்சரியக்கத்தக்க விளைவுகளை ஏற்படுத்துவதுடன், தலைமுடியின் வளர்ச்சியையும் தூண்டும். இதனைப் பயன்படுத்தித் தலைமுடிக்குச் சாயமும் அடிக்கலாம்.

செய்முறை: கோப்பிக் கொட்டையைப் பொடியாக்கி, அதனைச் சுடுநீரில் கலந்து குளிர்விக்கவும். பின் 2 கிண்ணம் இயற்கையான கண்டிஷனர் சேர்த்துக் கலக்க வேண்டும். இந்தக் கலவையை முடியில் தேய்த்து ஒரு மணிநேரம் ஊறவைக்க வேண்டும். இவ்வாறு செய்தால், முடியின் வளர்ச்சி அதிகமாகும். முடிக்கு இயற்கையான அழகையும் கொடுக்கும். அது மட்டுமன்றி, முடிக்கு இயற்கையாகக் கருமை நிறத்தைக் கொடுக்கும். கோப்பியை வைத்துத் தலைமுடியை அலசுவதால், முடி வலிமையாகும்.

வழக்கமான ஷாம்புவை உபயோகப்படுத்தி முடியை அலசிய பின், அப்பிள் சிடர் வினிகர் நீர் கலந்த கலவையால் முடியை அலசி, மிதமான வெந்நீர் கொண்டு அலச வேண்டும். இதைத் தொடர்ந்து செய்து வந்தால், சிறந்த பயனை அடைய முடியும்.





## நிலா முகம் வேண்டுமா?

ஒரு கரட்டை எடுத்து, அதை நன்றாகக் கூழ்போல் அரைத்து, முகத்தில் பூசிக்கொள்ளுங்கள். அது நன்கு ஊறிய பின் முகத்தைக் கழுவுங்கள். உங்கள் முகம் புதுப்பொலிவுடன், வழவழப்புத் தன்மையைப் பெற்றிருக்கும். நிலவுபோலப் பிரகாசிக்கும்.

அதேபோன்று ரோஸ் வோட்டர் ஒரு தேக்கரண்டி, கிளிசரின் ஒரு தேக்கரண்டி, எலுமிச்சம் பழச்சாறு ஒரு தேக்கரண்டி, தேங்காய் எண்ணெய் அல்லது பாதாம் எண்ணெய் ஒரு தேக்கரண்டி எடுத்து எல்லா வற்றை யும் நன்றாகக் கலக்கி முகத்தில் பூசி மசாஜ் செய்து வந்தால், முகம் பளபளப்பாக இருக்கும்.



## அழகை அள்ளித்தரும் அன்னாசி

ஓர் அன்னாசிப்பழத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கி, நான்கு தேக்கரண்டி ஓமத்தை பொடி செய்து அதில் போட்டு நன்றாகக் கிளறி ஒரு கிண்ணம் தண்ணீர் ஊற்றிக் கொதிக்க விடவும். இரவில் அதை அப்படியே வைத்திருந்து மறுநாள் காலையில் அதைப் பிழிந்து சாறு எடுத்து வெறும் வயிற்றில் சாப்பிடவும். இந்த முறைப்படி பத்து நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், உங்கள் தொப்பை கரைய ஆரம்பிக்கும். அன்னாசி பித்தக் கோளாறுகளை விரைந்து குணமாக்குகிறது. அன்னாசியில் கொழுப்புக் குறைவு, நார்ச்சத்து அதிகம். அன்னாசியில் புரதம் தாராளமாக இருப்பதால், சமிபாட்டுப் பிரச்சினை, உடலில் வீக்கம் போன்றவை எதிர்ப்படாது



## தங்கம் போல் அங்கம் மின்ன...

தங்கம் போல தங்கள் அங்கம் தகதக என மாற வேண்டும் என்று விரும்பாத பெண்களே கிடையாது. அதற்கு இதோ வழி...

சிறிதளவு பால், ஒரு தேக்கரண்டி காலிஃபிளவர் சாறு, ஒரு தேக்கரண்டி முள்ளங்கிச் சாறு சேர்த்து முகம் முழுவதும் பூசி 10 நிமிடம் கழித்து நன்றாகக் கழுவவும். இப்படித் தொடர்ந்து செய்து வந்தால், முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் மறைந்து முகம் பளபளப்பாக மாறும். இதனை உடலிலும் பூசலாம். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால், தங்கம் போல அங்கம் மின்னும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காந்தம்

01. காந்த விசைக்கோடுகள் வடமுனையில் தொடங்கி தென் முனையில் முடிவடைகின்றன.
02. காந்த விசைக்கோடுகள் ஒன்றையொன்று வெட்டிக் கொள்வதில்லை.
03. காந்த விசைக்கோடுகள் மற்றப் பகுதியைக் காட்டிலும் முனைகளின் அருகில் அதிக செறிவுடன் இருக்கும்.
04. காந்தத்தைச் சுற்றி அமைந்திருப்பது காந்தப் புலம்.
05. இரும்பு ஒரு மென்காந்தப் பொருள்.
06. காந்தக் கேடயமாகப் பயன்படும் பொருள் தேனிரும்பு.
07. காந்த ஒதுக்கத்தை அளக்கப் பயன்படும் கருவி கியூ காந்தமானி.
08. காந்தக் கேடயத்துக்குப் புவிக் காந்தப் புலம் கிடையாது.




ந.தனுசியா



**ந.யோகப்பிரியா,**
**தரம் - 06 ஏ**
**யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.**



**கா.கயல்விழி,**
**தரம் - 02**
**அராலி வள்ளியம்மை ஞா.வி**

# சிரி..சிரி...



ஆசிரியர் : கோழி ஏன் முட்டை போடுது?
மாணவன் : ஏனென்றால், அதுக்கு 1, 2, 3 போடத் தெரியாது!
ஆசிரியர் : முட்டாளுக்கும் அடி முட்டாளுக்கும் என்ன வித்தியாசம்?
மாணவன் : நாங்கள் எல்லாம் முட்டாள்கள்சேர். எங்களை அடிப்பதனால், நீங்கள் அடிமுட்டாள் சேர். சரியா?
ஆசிரியர் : ஙொங்



சிந்தனைக்கு
நல்லஎண்ணங்கள், நம்மையும் நம்மை அண்டிய சூழலையும் அழகாக்கும்...
யாரோ

# மூளைக்குவேலை!

01. பதினொன்றோடு இரண்டைச் சேர்த்தால் ஒன்றாகும். எப்படி?
02. எவ்வளவு முன்னேறுகிறீர்களோ, அவ்வளவு விட்டுச் செல்வீர்கள். அதுஎன்ன?
03. தலையிலிருந்து கால் வரை உபயோகப்படுவேன். அதனால் மெலிகிறேன். நான்யார்?
04. இருபத்தைந்தை எத்தனை முறை ஐந்தால் கழிக்க முடியும்?
05. இது உங்களை அழவைக்கும், சிரிக்க வைக்கும், இளமையாக உணரவைக்கும். நொடியில் தோன்றினாலும் வாழ்நாள் முழுவதும் தொடரும். அதுஎன்ன?
06. என்னால் உங்களுக்கு வியர்க்கும். நீங்கள் பலவீனமாவீர்கள். நான் உங்கள் இதயத்துடிப்பை அதிகரிப்பேன். நான்யார்?
07. அதற்கு கைகள் உண்டு. ஆனால், எதனையும் பிடிக்க முடியாது. பற்கள் உண்டு. ஆனால், கடிக்க முடியாது. கண்கள் உண்டு. ஆனால், பார்வை கிடையாது. அதுஎன்ன?
08. என்னால் ஓட முடியும். ஆனால், நடக்கமுடியாது. எப்போதாவது பாடுவேன். ஆனால், பேசமுடியாது. கைகள்உண்டு. ஆனால், விரல்கள் கிடையாது. தலையில்லை. ஆனால், முகம் உண்டு. நான்யார்?
09. இங்கு பாதைகள் உண்டு. ஆனால், வாகனங்கள் செல்ல முடியாது. காடுகள் உண்டு. ஆனால், மரங்கள் இருக்காது. அதுஎன்ன?
10. எனக்கு நாக்கில்லை. ஆனால், நான்பேசுவேன். உலகிலுள்ள அத்தனை விடயங்களைப் பற்றியும் எனக்குத் தெரியும். எனக்குக் கை, கால் இல்லை. ஆனால், மேலாடை உண்டு. நான்யார்?

## விடைகள்

01. 11 மணிநேரம் + இரண்டு மணிநேரம் = ஒருமணி
02. கால்தடங்கள்
03. சவர்க்காரம்
04. ஒருமுறைதான். (அதற்குப்பின் அதுஇருபதாகிவிடுமே?)
05. நினைவுகள்
06. பயம்
07. பொம்மை
08. கடிகாரம்
09. வரைபடம்
10. புத்தகம்

# சேமிப்பு



சிந்தும் அனைத்துமே எங்கோ ஓரிடத்தில் சேமிக்கப்படுகின்றன. மழைத் துளியைப் பாருங்கள், கடலில் சேமிக்கப்படுகிறது. பூவிலுள்ள தேனைப் பாருங்கள். தேனியிடம் சேமிக்கப்படுகிறது. வார்த்தைகளைப் பாருங்கள். படைப்பில் சேமிக்கப்படுகிறது. இப்படி ஒவ்வொன்றுமே சேமிக்கப்படுகின்றன. மாணவர்களாகிய நாமும் முயற்சியை விதைத்து நேரத்தை, காலத்தை, அனுபவத்தை, திறமையைச் சேமித்தால், பணத்தைச் சேமிக்கலாம். கல்வியைச் சேமிக்கலாம். இந்த இரு சேமிப்பும், நம்மைப் பாரில் நிலைநிறுத்தும்.

**டி.அதிசயா**

## இல்லவே இல்லாத நாடுகள்

01. திரையரங்குகள் இல்லாத நாடு பூட்டான்
02. தினசரி பத்திரிகைகள் இல்லாத நாடு காம்பியா
03. காகங்கள் இல்லாத நாடு நியூசிலாந்து
04. புகைவண்டி இல்லாத நாடு ஆப்கானிஸ்தான்.
05. பாம்புகள் இல்லாத நாடு அயர்லாந்து
06. தலைநகரமஇல்லாதநாடு நவ்ரு
07. தாய்மொழி இல்லாத நாடு சுவிற்சர்லாந்து
08. பொதுக்கழிப்பறைகள் இல்லாத நாடு பெரு
09. வாடகைக்கார்கள் இல்லாத நாடு பெர்முடா
10. தனக்கெனஒருநாடேஇல்லாத இனம் தமிழினம்

ந.கவிப்பிரியா

# அழகுராணி

ஒரு காட்டில் எலி, முயல், குரங்கு, வெட்டுக்கிளி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகி வந்தன. ஆனால், அவற்றுக்குள் அழகு குறித்து அடிக்கடி விவாதம்நடந்து கொண்டிருக்கும். அவை ஒவ்வொன்றும் தம் பெருமையைப் பேசும். ஆனால், முயல் மட்டும் மௌனமாக இருக்கும்.

குரங்கு அவற்றிடம், "மனிதர்கள் கூட எங்கள் இனத்திலிருந்துதான் தோன்றியதாகச் சொல்வார்கள்" என்று கூறியது. அதைக்கேட்ட எலி, "நாங்கள் மனிதர்களின் வீட்டுக்குள்ளே புத்திசாலித்தனமாக ஒளிந்து வாழ்கிறோம். எங்களிடம் அழகும் அறிவும் இருக்கிறது. எனவே, நான்தான் அழகு தேவதை" என்றது. அதன் பிறகு வெட்டுக்கிளி, "நான் சிறிய உருவமாக இருந்தாலும் கிளியின் நிறத்தில் அதைப் போன்றே அழகாக இருக்கிறேன்" என்று கூறியது.

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த முயல், "நான் இந்த அழகுப் போட்டிக்கே வரவில்லை என்று கூறி அவ்விடத்தை விட்டுச் சென்றது. அச்சமயம் வெட்டுக்கிளியோ, "எனக்கொரு யோசனை தோன்றுகிறது. நமக்குள்ளே ஓர் அழகிப் போட்டி நடத்தினால் என்ன?" என்று கேட்டது. அவர்களுக்கு நடுவராகக் காகம் இருந்தது. காகம் அவற்றிடம், "முயலையும் அழைத்துக்கொண்டு நாளை என் இருப்பிடம் வாருங்கள். ஆனால், நான் தேர்ந்தெடுப்பவரை அழகு ராணியாக அனைவரும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றுகூறியது.



மறுநாள் அவை காகத்திடம் சென்றுகொண்டிருந்தன. அப்பொழுது குருவி ஒன்று, கால்களில் காயம் பட்டதால் வலியால் துடித்துக்கொண்டிருந்தது. அதைப் பார்த்த குரங்கு, எலி, வெட்டுக்கிளி ஆகியன குருவிக்கு உதவவில்லை. அந்த இடத்தை விட்டு அழகிப் போட்டிக்குச் சென்றுவிட்டன. ஆனால், குறித்த நேரத்துக்கு முயல் மட்டும் அங்கு செல்லவில்லை.

அப்பொழுது காகம் அவற்றிடம், "அழகுக்கும் அறிவுக்கும் மதிப்பெண் போட்டுவிட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து அதற்குத்தான் அதிக மதிப்பெண்கள் ஒதுக்கி இருக்கிறேன்" என்றுகூறியதும் குருவிக்கு உதவி செய்யாதமூன்றும் ஒன்றையொன்று பார்த்துக்கொண்டன. அப்பொழுது அங்கு முயல் ஓடிவந்தது.

இறுதியாக காகம் அழகுராணியை அறிவித்தது. முயல்தான் அழகுராணி! உதவும் நல்ல மனம் உள்ளவர்கள்தான் உண்மையில் அழகானவர்கள்! குருவியைக் காப்பாற்றியதால், முயலே அழகுராணி என்று கூறியது.

**நீதி பிறருக்கு உதவுவதே உண்மையான அழகு!**

## பச்சைக் கிளி!

பச்சைக் கிளியே
வா வா வா
பாலும் சோறும்
உண்ண வா
கொச்சி மஞ்சள்
பூச வா
கொஞ்சி
விளையாட வா
பையப் பைய
பறந்து வா
பாடிப் பாடி
களித்து வா
கையில் வந்து
இருக்க வா
கனி அருந்த
ஓடி வா

ஜெ.சுயானி



# தன்னம்பிக்கை!

பணக்கார இளைஞனின் விலை உயர்ந்த கார் ஒன்று நின்றுகொண்டிருந்தது. ஏழைச் சிறுவன் ஒருவன், எட்டிநின்று அந்தக் காரையே ஆசையுடன் பார்த்துக்கொண்டிருந்தான். "இது என் அண்ணன் எனக்குப் பரிசளித்தது" என்று சிரித்துக்கொண்டே அந்தஇளைஞன் சொன்னார். சிறுவன் முகத்தில் வியப்பு. "உனக்கு அப்படி ஓர் அண்ணன் இருந்திருக்கலாம் என்று ஆசைப்படுகிறாயா?" என்று அந்த இளைஞர் கேட்டார். உடனே அந்தச் சிறுவன், "இல்லை! அப்படியோர் அண்ணனாக வளர வேண்டுமென்று விரும்புகிறேன்" என்றான்.



**ந.யசிதரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

**26.03.2017 முதல் 01.04.2017 வரை**

*உங்களுக்கு எப்படி?*



## மேடம்

சுக்கிரன், கேது, சந்திரனால் நன்மை ஏற்படும். திட்டங்களை செயற்படுத்த நேரம் சுவடி வரும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுசுலம் ஏற்படும். புத்திரர்கள் குழப்பமான சிந்தனையால், படிப்பில்பின் தங்கலாம். உடல்நிலை சுமாராக இருக்கும். ஆடம்பரச் செலவைத் தவிர்க்கவும். கணவன், மனைவி குடும்ப நலனில் அக்கறை கொள்வர். தொழில், வியாபாரத்தில்வளர்ச்சிபெறகடுமையாகஉழைக்கவேண்டி வரும். பெண்கள் கணவருக்கு உறுதுணையாக பணிபுரிவர். மாணவர்கள் சுமாராகப் படிப்பர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து அதிக மதிப்பெண் பெறுவர்.




## இடபம்

பெரும்பான்மைக்கிரகங்கள் அனுசுல பலன் தருவர். செயல்களில் மனிதாபிமானமும் நேர்த்தியும் உருவாகும். குடும்பத்தில் ஒற்றுமை வளரும். உடன்பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். பூர்வ சொத்தில் வளர்ச்சியும் பணவரவும் சுடும். புத்திரர்களின் கல்வி, வேலையால் பெருமை ஏற்படும். அயலவர்கள் அன்புடன் நடந்து கொள்வர். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சிப் பாதையில் நடைபோட லாம். பாக்கிப்பணம் வசூலாகும். பணி யாளர்களுக்கு அதிர்ஷ்டவசமாக சலுகை கிடைக்கும்.



## மிதுனம்

பெரும்பான்மைக்கிரகங்களால் நன்மை உண்டாகும். உங்கள் பேச்சு செயலில் வசீகரம் ஏற்படும். நண்பர்களின் வாழ்த்துகிடைக்கும். உடன்பிறந்தவர்கள் சொந்த பணிகள் நிறைவேற உதவி கேட்பர். குடும்பச் செலவில் தாராளம் இருக்கும். புத்திரர்கள் பெற்றோர் சொல் மதித்து செயற்படுவர். உடல்நிலை சீராக இருக்கும். மனைவியுடன் விருந்து, விழாவில் கலந்துகொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி விற்பனை செழித்து, சேமிப்பு சுடும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் ஆன்மிக சுற்றுலா செல்வர். மாணவர்கள் நண்பர்களின் உதவியால் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.





## கடகம்

சுக்கிரன் சந்திரன் நற்பலன் தருவர். எதிர்பார்த்த நல்ல செய்தி வரத் தாமதமாகலாம். உடன்பிறந்தவர்களின் கருத்தை விமர்சிக்க வேண்டாம். மனம் அமைதியாக இருக்க, தியானம் செய்யுங்கள். வாகனம் இயக்கும் போது கவனம்தேவை. புத்திரர்கள்பிடிவாதமாகநடந்துகொள்வர். பணப்பற்றாக்குறையை தவிர்க்க, சிக்கனத்தைக் கடைப்பிடியுங்கள். கணவன், மனைவி ஒற்றுமைநன்றாக இருக்கும். பணியாளர்கள் பணிகளை விரைந்து முடித்து, நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். பெண்கள்வீட்டுச்செலவுக்குசற்றுசிரமப் படலாம். மாணவர்களுக்கு படிப்பில்கவனம்வேண்டும்.



## சிங்கம்

புதன், குரு, சுக்கிரனால் நற்பலன் நடக்கும். பணிகளை திட்டமிட்டு தொடங்கி, விரைந்து முடிப்பீர்கள். வாகனப் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரர்கள்உங்கள்வழிகாட்டுதலைஏற்று,பெருமை சேர்ப்பர்; ஏற்றுக் கொள்வர். உறவினர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி சுடும். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவியின் சொல்லை மதிப்பதால் குடும்ப வளர்ச்சி பெருகும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சி சுடும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை மதித்துச் செயற்பட்டு, பாராட்டுப் பெறுவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும்பயில்வர்.



## கன்னி

கேது, சனீஸ்வரர், சந்திரனால் நன்மை கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். உறவினர்களின் உதவி கிடைக்கும். வாகனப் பயன்பாடு அதிகரிக்கும். நற்பெயரும் புகழும் தேடி வரும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். உடல்நிலை நன்றாக இருக்கும். வழக்கு, விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். மனைவி கருத்து இணக்கமுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அளவுடன் இருக்கும். பணியாளர்கள் வேலைப்பளுவால் சிரமப்படுவர். பெண்கள் வீட்டுச் செலவுக்கு சற்று திண்டாடலாம். மாணவர்கள் சிறப்பாகப் படித்து, பெற்றோரிடம் பரிசு பெறுவர்.

## துலாம்

ராகு, சூரியன், புதன் அனுசுல பலன் தருவர். மனதில் தைரியம் வளரும். நண்பர்களுக்கு உதவுவீர்கள். வெகுநாள் திட்டமிட்ட பணி, சிறப்பான முயற்சியால் நிறைவேறும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். அலைச்சல் குறையும். புத்திரர்கள் உங்கள் சொல் கேட்க மறுப்பதால், மனக்கஷ்டம் ஏற்படலாம். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவதால், குடும்பம் முன்னேற்றம் அடையும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரித்து, பணவரவு சுடும். பணியாளர்கள் புதிய தொழில் நுட்பங்களைக் கற்று, வருமானத்தைப் பெருக்க முயற்சிப்பர். பெண்கள், நகை இரவல்கொடுக்க,வாங்கக்சுடாது. மாணவர்கள் முயற்சியுடன் படித்தால், முன்னேற்றம் உண்டு.



## விருச்சிகம்

செவ்வாய், குரு, சுக்கிரன் அதிர்ஷ்ட பலன் தருவர். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். பேச்சில் சாந்தம் ஏற்படும். உறவினர்களால், உதவி உண்டு. பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் அறிவார்ந்த செயலால், பெருமை தேடித் தருவர். வராது என நினைத்து, கடனாகக் கொடுத்த பணம், திரும்ப கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு இருந்தாலும் திறமையாக சமாளிப்பீர்கள். பணியாளர்களுக்கு நிர்வாகத்துடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். பெண்கள் குடும்ப உறுப்பினர்களின் அன்பைப் பெறுவர். மாணவர்கள் படிப்பில் சாதனை படைப்பர்.



## தனுசு

கேது, சுக்கிரன், புதனால் நற்பலன் கிடைக்கும். சிலர் உங்கள் மனதில் சலனம் ஏற்படுத்த முயற்சி செய்வர். கொடுக்கல் வாங்கலில் நிதானம் வேண்டும். வாகன பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரர்கள் உயர்ந்த எண்ணத்துடன் நடந்து கொள்வர். உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். வேண்டாதவர்களிடம் இருந்து விலகி இருக்கவும். மனைவியின் பாசத்தில் மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகரிக்கும் முயற்சி வேண்டாம். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், நண்பர்களிடம் இருந்து விலகி இருப்பது நல்லது.



## மகரம்

சூரியன், குரு, சுக்கிரன், சனீஸ்வரரால் அளப்பரிய நன்மை கிடைக்கும். மனதின் உற்சாகம் செயலில் பரிமளிக்கும். நண்பர், உறவினர்களின் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும். பொது இடங்களில் நடக்கும் விவகாரங்களில் தலையிட வேண்டாம். பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்களின் ஆர்வம் மிகுந்த செயல் நிறைவேற உதவுவீர்கள். நோய் தொந்தரவு குறையும். மனைவி வழி உறவினர்கள், அன்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி படிப்படியாக உருவாகும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்புடன் கலையிலும், ஆர்வம் கொள்வர்.



## கும்பம்

செவ்வாய், சுக்கிரன், சந்திரனால் நன்மை ஏற்படும். பணிகளை ஆர்வத்துடன் நிறைவேற்றுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க அனுசுலம் உண்டு. புத்திரர்களின் எதிர் கால நலனுக்கு, தேவையானதைச் செய்வீர்கள். பூர்வ சொத்தைப் பராமரிக்க சுடுதல் பணம் செலவாகும். பகைவர்கள் உங்கள் நுட்பமான செயலை வியந்து நோக்குவர். கணவன், மனைவி ஒற்றுமை ஓங்கும். சுற்றுலா சென்று வருவீர்கள். பணியாளர்கள் சிறப்பாக பணி புரிந்து நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர். மாணவர்களுக்கு படிப்பில் சிறந்த தேர்ச்சி கிடைக்கும். மாணவர்கள், படிப்பில் விடா முயற்சியுடன் ஈடுபடுவர்.



## மீனம்

சுக்கிரன், ராகு, குரு நன்மை தருவர். செயல்களில் நிதானம் இருக்கும். குடும்ப செலவு அதிகரிக்கும். வீடு, வாகனத்தில் அறிமுகமில் லாதவர்களுக்கு இடம் தர வேண்டாம். புத்திரர்களால் சில பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். கொடுக்கல் வாங்கலில் பாதுகாப்பு பின்பற்றவும். [illegible] உங்களிடம் பாசமாக இருப்பார். அரசாங்க [illegible] கிடைப்பதில் தாமதம் ஏற்படும். கடன் பெறுவதில் நிதானம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர் கள் பணியிடத்தில் தேவையற்ற வி[illegible] வேண்டாம். பெண்கள் பிறருக்காக [illegible] பொறுப்பு ஏற்கக்சுடாது. மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொன்னாலும் வெட்கமடா..!

ஸுடோஸ்வாமி



இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தனது 925ஆவது கூட்டத்தில் ஒப்புதல் அளித்ததன்படி வெளியிட்டுள்ள Sri Lanka Qualification Framework எனப்படும் இலங்கைதகைமைகள்கட்டமைப்புஆவணம், வெவ்வேறு கல்வித்தரங்களை உடையவர்களை பட்டியற்படுத்தியிருக்கிறது. குறித்த ஆவணம், கல்வி தரங்களை புலமை மற்றும் கற்றல் உள்ளடக்கம் என்பவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தி ஏறுவரிசைபடி முறையினையும் வெளியிட்டிருக்கிறது. இதில் குறிப்பிட்ட அளவீட்டின்பிரகாரம், கல்விக்கட்டமைப்பு 12படிநிலைகளாகவகுக்கப்பட்டிருக்கிறது. இதன்முதலாம்படிநிலையானதுக.பொ.த சாதாரண நிலையையும் உச்சபடி நிலையான 12ஆம் படிநிலை, முனைவர் பட்ட நிலையையும் குறிக்கிறது.

அண்மையில் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியர் வெளியிட்டிருந்த அவதானிப்புஒன்றுசர்ச்சைக்குரியவகையில்கவனத்தினைஈர்த்திருக்கிறது. பேராசிரியர் எம். ஏ. ஓ. சொய்ஸாவெளியிட்டிருக்கும்அறிவிப்பின்படி, இலங்கைப் பாராளுமன்றத்தில் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் 225 உறுப்பினர்களில் 94 பேர் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி எய்தவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதனை விட மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில்25பேர்மட்டுமேபட்டதாரிகள்எனவும் தெரியவந்திருக்கிறது. பத்திரிகை தகவல் ஒன்றின் படி 2014 ஆண்டளவிலும் க.பொ.த சாதாரணதரம் சித்தியடையாத 94 பாராளுமன்றஉறுப்பினர்கள்இலங்கைப் பாராளுமன்றத்தில்மக்களைபிரதிநிதித்துவப்படுத்திய அதேவேளை 142 பாராளுமன்ற உறுப்பினர்கள் க.பொ.த உயர் தரத்தில் சித்தி அடைந்திருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எழுத்தறிவு தொடர்பாகவும் ஏனைய பல மதிப்பீட்டுச் சுட்டிகளிலும் கௌரவ நாமத்தைக்கொண்டிருக்கும்நம்தாய்த்திருநாட்டின் உயரிய சபையை அலங்கரிக்கும் உறுப்பினர்களே நாட்டுக்கான சட்டத்தினை இயற்றுகிறார்கள் அல்லது சட்டமூலத்திற்கு ஒப்புதல் வழங்குகிறார்கள். இன்னும்பலகாரியங்கள் நாடாளுமன்ற ஒப்புதல் பெற்றே நடைமுறையாகும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றத்திற்கு பதில் சொல்லும்வகையில் செயற்பாடுகளை மாற்றி யமைப்பது கௌரவத்திற்குரிய ஜனநாயகமுறைமை என்றும் கருதப்படுகிறது. இந்தப் பின்னணியிலேயேகுறித்த பேராசிரியர் வெளியிட்டிருக்கும் தகவல் வியப்புடன்நோக்கப்பட்டிருக்கிறது.

வாக்காளர், இலங்கை அரசமைப்பின்படிகுடிமகன்ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகுவதற்கு விசேட தகுதிகள் எதனையும்கொண்டிருக்க தேவையில்லாத சுதந்திரம் காணப்படுகிறது. அரசிசமைப்பின் 90ம் பிரிவு, சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களை தவிர்த்து வாக்குரிமைஅந்தஸ்துஉடையஎவரும் நாடாளுமன்ற உறுப்பினராகும் தகுதியுடையவர்கள்என்கிறது.

வாக்காளர் இலங்கை அரசியலமைப்பின்படி குடிமகன் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகுவதற்கு விசேட தகுதிகள் எதனையும் கொண்டிருக்க தேவையில்லாத சுதந்திரம் காணப்படுகிறது. அரசியலமைப்பின் 90ம் பிரிவு, சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களை தவிர்த்து வாக்குரிமை அந்தஸ்து உடைய எவரும் நாடாளுமன்ற உறுப்பினராகும் தகுதியுடையவர்கள் என்கிறது.

நடைமுறையிலுள்ள நமது நாடாளுமன்றத்தில் படித்தவர்கள், பொருளாதார மேதைகள் இல்லாமல் இல்லை. ராஜிதசேனாரத்ன, விஜயதாச ராஜபக்ச, ஜீ. எல். பீரிஸ் போன்ற கல்விமான்கள் இருக்கிறார்கள். ஆனால், ஒட்டுமொத்தமாகபார்க்கும்போதுமக்கள்பிரதிநிதிகளாக தேர்வாகுபவர்களும் தேசியப்பட்டியல் மூலம் நுழைபவர்களும் என குறிப்பிட்ட வீதமானோர் போதுமான கல்வித் தகைமையின்றி வெறும் வாய்ச்சொல் வீரர்களாககாணப்படுவதும்,அமளிதுமளிகளை நிகழ்த்துவதும்,அமர்வுகளைதவிர்ப்பதும் ஊடகங்களினூடுஅவதானிக்கப்பட்டுவருகின்றது.

சில காலங்களுக்கு முன்னர் முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவர் கொழும்ப மாநகர சபைக்கான மேயராக பதவி வகித்தமையும்பொலநறுவையைசேர்ந்தமுன்னாள் கிராமசேவகர்ஒருவர்தற்போதையஜனாதிபதியாக பதவி வகிப்பதனையும் ஜனநாயகத்தின் வெளிப்பாடுகளாக பெருமிதம் அடைந்தாலும் மக்கட் பிரதிநிதி ஒருவர் போதுமான கல்வியறிவு உடையவராக விளங்குவது அவசியமானது.

ஜனநாயகம்தந்திருக்கும்சுதந்திரத்தினையும்அரசமைப்புதந்திருக்கும்சந்தர்ப்பத்தினையும்செவ்வனேபயன்படுத்திநாடாளுமன்ற உறுப்பினராகிவிடத் துடிக்கும் பல பிரமுகர்களை தேர்தல் பரப்புரைக் காலத்தில் சந்திக்கமுடியும். தமது கல்வித்தகைமை பற்றிய விவரங்களை முன்னிலைப்படுத்தாது மக்களை சுண்டியிழுக்கும் விவகாரங்களை தமது தேர்தல் விஞ்ஞாபனங்களாக்கி நாடாளுமன்றத்திற்கானபயணத்தினை நிச்சயித்துக்கொள்ள அவர்கள் முண்டியடிக்கும் விதம்மறக்கமுடியாதது.

**கொடுப்பனவுகளும் சலுகைகளும்**

கல்விப் பின்னணிகளை யெல்லாம் தள்ளிவைத்துவிட்டு இந்த நா.உ. கள்அனுபவிக்கும்சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்கள் கவர்ச்சிகரமானவை. அண்மையில் அவர்களுக்கான கொடுப்பனவுகளில்அதிகரிப்பைமேற்கொள்ள வேண்டுமென ஆலோசிக்கப்பட்ட போது அது சர்ச்சையுடன் நோக்கப்பட்டது.

இலவசக்கல்வி நடைமுறையிலுள்ள நம் நாட்டில், அலுவலக சிற்றூழியருக்குஆட்சேர்ப்பதற்கான கல்வித்தகுதியை கூட கொண்டிராதவர்களை கொள்கை தயாரிப்பாளர்களாக கொண்டிருப்பது வெட்கக்கேடான விடயம். இலங்கை தகைமைகள்கட்டமைப்பு(ளுடுஞகு) ஆவணபிரிவுகளுக்குள்ளேயே கருத்தில் கொள்ள முடியாத சுய கல்வித் தகுதியுடையவர்கள், மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் பொறுப்பை, நாட்டின் வரிப்பணத்தினை கையாளும் பொறுப்பை, நாட்டின் எதிர்காலத்தை திட்டமிட்டு தீர்மானம் எடுக்கும் பொறுப்பை கையாள்வது நகைப்பிற்குரியது. இது நாடாளுமன்றபிரதிநிதிகளுக்குதேர்வாகுவதற்கான நபர்களின் கல்வித்தகைமையை கருத்தில் கொள்ள வேண்டிய, அது தொடர்பான விதிமுறை ஒன்றினை பிரயோகிப்பதற்கான தேவை இருப்பதனை பலமட்டங்களிலும்உணர்த்தியிருக்கிறது.

பிராந்தியநாடுகளுக்குள்உயர்மட்டஎழுத்தறிவு வீதத்தை கொண்டிருக்கும் நமது நாட்டில்,அரசமைப்புதிருத்தம்தொடர்பான யோசனை தற்போது கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் உயர் சபைக்கான பிரதிநிதிகளுக்கு போட்டியிடுவோர் தொடர்பில் சில நடைமுறைகளை நடமுறைக்குக்கொண்டு வருவது நன்மை பயக்கும். குறிப்பாக வயது, கல்வியறிவு, சமூகசேவை ஈடுபாடு, குற்ற ச்செயல்களுடன் தொடர்புபடாமை மற்றும் நீதிவிவகாரம் போன்ற அடிப்படைகளில் கட்டுப்பாடுகளை விதித்துக்கொள்வது நாடாளுமன்றிற்கு கனவான்கள் வருவதை உறுதி செய்யும். இல்லையேல்,நாடாளுமன்றஅமர்வுகளின் போது கலரியிலிருந்து பாடசாலை மாணவர்களை அவசரமாக வெளியேற்றுவது மற்றும்சில நாடாளுமன்ற விவாத நேரடி ஒளிபரப்புகளை கண்மூடி காதைப் பொத்தி அவதானிக்க வேண்டியநெருக்கடிதொடரவேசெய்யும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிக்கும் அந்நியத் தாவரங்கள்



கலாநிதி (திருமதி) ராஜி ஞானேஸ்வரன்

இன்று எமது நாட்டுக்குள் பரவி விட்ட அந்நிய தாவரங்களின் பரம்பலானது மிக நீண்ட வரலாற்றைக்கொண்டதாயிருக்கின்றது. இதற்கான காரணம் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இருந்து இன்றுவரை ஆட்சியாளர்களாலும் சாதாரண குடிமக்களாலும் தாவர இனங்களுக்கு அவற்றின் சுதேச எல்லைகளைத் தாண்டுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டு வருவதேயாகும். இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பயிர்கள், நிழல் தரும் மரங்கள் பல அழகுத்தாவரங்கள், வாசனைத்திரவியங்கள், மேட்டு நில மரக்கறிவகைகள் என்பன ஒரு தேவை நோக்குடன் எமது நாட்டுக்குள் புகுத்தப்பட்டவை. இது தவிர காலனித்துவ நாடுகளில் எல்லாம் ஆட்சியாளர்களினால் உருவாக்கப்பட்ட 'தவரவியல் பூங்காக்கள்' எல்லா நாடுகளினதும் உள்நாட்டு இனங்கள் வளர்க்கப்பட்டன . இவ்வாறு வளர்க்கப்பட்ட பல அந்நிய இனங்கள் காலப்போக்கில் பூங்காக்களின் எல்லையைத் தாண்டி, அந்த நாட்டின் இயற்கைச் சூழலுக்குள் ஊடுருவி, நிலைகொண்டு பிரச்சினைகளை உருவாக்கத் தொடங்கின. இதனால்தான், ஆக்கிரமிக்கும் அந்நிய தாவரங்களும் அவற்றின் முகாமைத்துவமும் என்ற புதிய கோணமொன்றைச் சூழலியலாளர்கள் ஆராய்ந்து எடுத்துரைக்கத் தொடங்கினர்.

இன்று, இந்தப்பிரச்சினை, பாடசாலைகளில் பாடவிதானங்களுள் உள்வாங்க வேண்டிய தேவைக்கு உக்கிரமடைந்திருக்கும் நிலையில், இதன் விழிப்புணர்வைச் சமூகத்துக்குக் கொண்டு செல்வது முக்கியமானது.

எப்போது அந்நியத் தாவர இனங்கள் ஒரு பிரச்சினையாக கருதப்படுகின்றன? அவை எமது சுற்றாடலுக்குஎந்தவிதத்திலாவது எதிர்மறைவிளைவுகளை ஏற்படுத்தும் போது அதாவது இங்குள்ள சுதேச இனங்களுக்குப் போட்டியாகி, அவற்றின் இருப்பைக் கேள்விக்குறியாக்கி, சுற்றாடலின் தன்மையை மாற்றியமைப்பதால் இங்கு காணப்படும் தாவர விலங்கினங்களின் அழிவுக்குக் காரணமாகிவிடுகின்றன.

எல்லாவகையான அந்நியத்தாவரங்களும் ஆக்கிரமிக்கூடியவை என்று சொல்வதற்கில்லை. ஆக்கிரமிக்கும் வகைள் சில, பல சிறப்பியல்புகளை காண்பிக்கின்றன . அவையாவன – வேகமான வளர்ச்சி, துரிதமாக இனம்பெருகும் தன்மை , அதியுயர் பரவல்தன்மை, எவ்வகையான சூழலிலும் இசைந்து வளரக்கூடிய தன்மை, மனிதனுடன் அல்லது உள்ளூர் விலங்குகளுடனான சாதகமான (நேர்மறையான) தொடர்புகள் என்பன குறித்த இனங்கள் நம் நாட்டு சூழத்தொகுதிகளை ஆக்கிரமித்து காலப்போக்கில் அங்கு நிலைத்து நிற்க வழிவகுக்கின்றன.

### யாழில் காணப்படும் அந்நிய தாவரங்கள்

பாதீனியம் – யாவரும் அறிந்த களை – இதன் தீய விளைவுகள் பற்றித் தெருவோரத்தில் விழித்துக்கொண்டிருக்கும் எச்சரிக்கைப்பதாகைகள் நிறையவே சொல்லுகின்றன. இருந்தும் கற்றவர்கள் அதிகம் வாழும் எமது பிரதேசத்தில் இருந்து ஏன் இன்னும் இந்தக் களையை அகற்றமுடியவில்லை? இது டெங்குநுளம்பு போல ஒரு கிழமைக்குள் தனது கைவரிசையை வெளிக்காட்டாதது தான் பிரதான காரணம். விளைநிலங்களின் வரம்புகளில், வீடுகள், அலுவலகங்களின் மதிலோரங்களில், இவை சர்வ சாதாரணமாகக் காணப்படுகின்றன. இவற்றில் பூக்கள் உருவாக முதலே அடியோடு பிடுங்கியழிக்க வேண்டும். இல்லையேல் ஆயிரக்கணக்கான புதிய செடிகளை விதைத்து விடும். காற்றில் பறந்து வரும் மகரந்த மணிகள் சுவாசம் தொடர்பான ஒவ்வாமையை ஏற்படுத்தும். அதேவேளை, காய்ந்த இலைகள் தோலில் தடிப்பு, கடி சொறி போன்ற அறிகுறிகளுடன் தோலில் எக்ஸிமா போன்ற ஒவ்வாமை நோயை ஏற்படுத்துகின்றன. இதன் தீவிரம் அவரவர் உடல் நிலையப் பொறுத்து கூடிக்குறையும்.

மேலும் பாதீனியத்தின் பூக்களில் அமுதத்தை உணவாக்கும் நுளம்புகள் நீண்ட காலம் வாழ்வதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது . இங்கேயும் டெங்குநுளம்பின் பெருக்கத்துக்குப் பாதீனியம் ஒரு 'சத்துணவாக' காணப்படுகின்றதா எனும் ஐயமும் எழுந்துள்ளது.

### சீமைக்கருவேலை

சீமைக்கருவேலை – வெலிக்காத்தன் காட்டு அகத்தி எனப் பல பெயர் கொண்டு அழைக்கப்படும் இந்தத் தாவரம் 1880ஆம் ஆண்டளவில் தாவரவியல் பூங்காவினூடாக அறிமுகப் படுத்தப்பட்டிருந்தது. இதன் பூர்விகம் தென் அமெரிக்க நாடுகளாகும்.

பின்னர் 1950களில் உவர்நிலங்களை மேம்படுத்தவென அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இவை வலிந்து நடப்பட்டன. அதன் பின்னர் அந்தப் பிரதேசம் முழுவதும் பரவி புந்தல தேசிய பூங்கா மற்றும் ராம்சார் ஈரநிலங்களையும் விட்டுவைக்கவில்லை. இது இவ்வாறு இருக்க வடபகுதியிலும் நிலத்தடி நீரைப் பாதுகாக்கவும் உவர் நிலத்தை மேம்படுத்தவும் என (இதே காரணங்களைக்கூறியே தென்னிந்திய மாநிலங்களில் இந்த மர விதைகள் 1950 களில் தூவப்பட்டன) எமது கடல் நீரேரிகளின் ஓரங்களிலும், தொண்டமானாறு , நாவற்குழி, கல்லுண்டாய் மற்றும் தீவகங்களில் நாட்டப்பட்டன.

### கோப்பாய் - கைதடிப் பாலத்திற்கு அருகில்

ஓர் அழகான ?? காடு போல காற்றுத் தடுப்பாக விரிந்து பரந்து காணப்படும் இந்த மரங்களின் உண்மைக் குணம்/ தன்மை எம்மில் பலருக்குத் தெரியவே தெரியாது. வேகமான வளர்ச்சியைக் காட்டும் இம் மரமானது பரந்துபட்ட வேர்த்தொகுதியைக் கொண்ட 50 அடி ஆழம்வரையும் சென்று நிலத்தடி நீரை உறிஞ்சும் தன்மை கொண்டது. இதனால் அக்கம் பக்கம் வேறு எந்த மரங்களையும் வளர விடாது. மழை குறைந்த இடங்களில் நீர்நிலைகள் மேலும் வறண்டுபோய்விடுகின்றது. மேலும் இவற்றின் உருவ அமைப்பு – பரந்த விதானம் – மழை நீர் நேரடியாக நிலத்தில் விழுவதை தடுக்கக் கூடியது மட்டுமல்லாது வேரின் அமைப்பு விழுந்த நீர் நிலத்தடியைச் சென்று அடைவதை வெகுவாக தாமதப்படுத்துவதால் தேங்கிய நீர் விரைந்து ஆவியாகி விடுகின்றது. பெரும்பாலும் இவை கடல் நீரேரியை அண்மித்து பரவி இருப்பதால் , கடல் நீர் வருகை தடுக்கப்பட்டிருத்தலும், விரைந்த ஆவியாகுதல் மூலம், உப்பு செறிவு இன்னும் அதிகமாகுமே தவிர குறையாது. இது சம்பந்தமான ஆய்வுகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவில்லையாயினும், வேறு இடங்களில் நடைபெற்ற ஆய்வுகளின் முடிவுகள் இவற்றின் ஆபத்துக்களைப் பட்டியலிடுவதை கூறுவதை அலட்சியப்படுத்தமுடியாது. சனத்தொகை முன்னரை விட குறைந்திருக்கும் இவ்வேளையில் எது அல்லது எவை எமது வறட்சிக்கான காரணங்கள் என முதலில் அடையாளம் காணவேண்டும். வடமாகாணத்தின் குடிநீர்த்தேவையை பூர்த்திசெய்ய முன்னெடுக்கும் திட்டங்களில், இங்குள்ள நீரை அபகரிக்கும் இது போன்ற சூழல் காரணிகளை தெளிவாக அறிந்துகொண்டு திட்டத்தை வரையவேண்டும். மேலும் அவற்றின் வேர்கள் சுரக்கும் ஓர் இரசாயன பதார்த்தம் எமது உள்ளூர் மரக்கள்/செடிகளின் வளர்ச்சியைத் தடுக்கின்றது. புந்தல தேசிய பூங்காவில் காணப்பட்ட ஒரே ஒரு ஆட்சியான பெரு மரம் – பாலை Manilkara hexandra Fam: Sapotaceae பெருமளவு அழிவடைந்து போனதற்கு பிரதான காரணமாக இக்கருவேலமரங்களின் பரம்பல் இருப்பது வடபகுதிக்கு ஓர் அபாய எச்சரிக்கை. அபிவிருத்திதிட்டங்களில் – சுற்றாடல் அவ்தானிப்பு/அறிவு முதன்மைப்படுத்தப் படல் மிக அவசியம் .









*(இன்னும் வரும்)*

கட்டுரையாளர்:
முதுநிலை விரிவுரையாளர்,
யாழ் பல்கலைக்கழகம். விலங்கியல் துறை,

> எல்லா வகையான அந்நியத் தாவரங்களும் ஆக்கிரமிக்கக் கூடியவை என்று சொல்வதற்கில்லை. ஆக்கிரமிக்கும் வகைள் சில, பல சிறப்பியல்புகளை காண்பிக்கின்றன . அவையாவன – வேகமான வளர்ச்சி, துரிதமாக இனம் பெருகும் தன்மை , அதியுயர் பரவல் தன்மை , எவ்வகையான சூழலிலும் இசைந்து வளரக்கூடிய தன்மை, மனிதனுடன் அல்லது உள்ளூர் விலங்குகளுடனான சாதகமான (நேர்மறையான) தொடர்புகள் என்பன குறித்த இனங்கள் எம் நாட்டு சூழத்தொகுதிகளை ஆக்கிரமித்து காலப்போக்கில் அங்கு நிலைத்து நிற்க வழிவகுக்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வழி தவறிப்போன ஓர் இளைஞர் தலைமுறை

## (ஒரு விமர்சன கண்ணோட்டம்)

யோகா இராமமூர்த்தி




வழிதவறிப்போன ஓர் இளைஞர் தலைமுறை' பல் முகக்கோணங்களிலானபார்வைகொண்டதொரு அரிய பதிப்பாகும். யாழ்ப்பாணம்சென். ஜோன்ஸ்கல்லூரியில் இடம்பெற்ற ஆனந்தராஜன் நினைவுநாள் பேருரையில் போராசிரியர். தயா சோமசுந்தரத்தால் ஆங்கிலத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களைத் தாங்கியதொரு தமிழாக்கமாக இந்த நூல் பதிப்புருப் பெற்றுள்ளது.

இந்த நூலின் பேசுபொருளாக இளைஞர்களை எடுத்துக் கொண்டுள்ள நூலாசிரியர்கள் பேராசிரியர் தயாசோமசுந்தரம், நா. நவராஜ் ஆகியோர் போருக்குப் பின்னரான இளைஞர்களின் குறிப்பாகவடக்கில்வாழும் இளைஞர் தலைமுறையின் தற்போக்கை தடுமாற்றங்களுடனான வாழ்வியல் போராட்டங்களையும், கடந்த காலங்களில் ஏற்பட்ட இழப்புக்கள், உள அதிர்ச்சிகள், மன வடுக்கங்களின் தாக்கங்களும், போர் முடிவுற்றதன் பின்னரான காலப்பகுதியில் சடுதியாக உள்நுழைந்த உலகமயமாதலின் விளைபயன்களையும் பேசுகின்றனர்.

ஓர் இளைஞர் தலைமுறையின் தடம்புரலல்கள் பற்றியும், அதன்தார்ப்பரியங்கள்பற்றியும்ஆராயவிளையும்இந்நூலில் இளைஞர்கள் மீது குறை கூறி தம் பொறுப்புக்களையும், வகிபாகத்தினையும் கண்டுகொள்ளாது போகின்ற மூத்த தலைமுறையின் வழமையான பாணியிலிருந்து விலகி விடயதானங்களின் அடிப்படைகளையும், அதன் பின்னணிகளையும் சமரசமானபுரிந்துகொள்ளல்களினூடாகவிளக்கமுறப்படுவதுடன், மூத்த தலைமுறையின், வகிபாகத்தினையும் சுட்டிக்காட்டுகின்றமையானது நூலாசிரியர்களின் பரந்துபட்ட நோக்கினை வெளிப்படுத்துகின்றது.

போருக்குப் பின்னரான சுதந்திர வர்த்தக நடவடிக்கைகள், வணிகமயமான அரசியல் நீரோட்டம் நுண் கடன் நிறுவனங்களின் தாராளமயமான போக்கு, வாகனங்களின் தாராள இறக்குமதி, போதை வஸ்துக்களின் அதிகரித்த உள்வரவு, இறக்குமதியாகும் சினிமா என நவதாராள வாதத்தின் கைகள் எல்லாபக்கமும் மக்களின் கழுத்தை நெரிக்கும் சூழலில் இவற்றின் விளைபயன்களாக மாறிவருகின்ற குடும்ப வன்முறைகள், தற்கொலைகள், பாலியல் பலாத்காரங்கள், சிறுவர் துர்நடத்கதைள், அடிதடிக் கும்பல்கள், குழுக்களுக்கிடையிலான மோதல்கள் என இவர்கள் பார்வை விரிகின்றது.

நூலாசியர்களின் உளவியல்ரீதியானபார்வை இன்னும்சற்று ஆழமாக ஊடுருவி இளைஞர்களின் நடத்தை ரீதியான பிரச்சினைக்கான குறிப்பாக கடந்த காலத்தின் சுவடுகளின் தாக்கத்தை மறந்து தற்காலத்தைப் பற்றிய விவாதத்திற்கோ, எதிர்காலத்தின் ஊகங்களோ சாத்திய மற்றது எனும் அடிப்படையில் கடந்தகால நெருக்கடிகள் குறித்தும் சுட்டிக்காட்டும் இவர்கள் கார்ல் ஜீங் கூறும் கூட்டு நனவிலி பற்றி குறிப்பி டத் தவறவில்லை.

போர்க்காலத்தில் அடங்கிப்போயிருந்த சாதியம், பெண் ஒடுக்குமுறை, மத முரண்பாடுகள் என்பன மீண்டும் துளிர்விட ஆரம்பித்து பிறிதொரு வகையான ஒடுக்கு முறையினை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதனையும் பொருத்தமான நேரத்தில் இந்நூல் பேசுகிறது.

பல்வேறு உளவியல் சிக்கல்களுக்கு மத்தியில் வாழும் இளைஞர் தலைமுறையினை வழிநடத்துவதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய செயற்றிட்டங்கள் குறித்த முன்வைப்புக்கள் நூலை முழுமை செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் காலத்தின் அவசியம் கருதியதொரு கனதியான பதிப்பென்ற வகையில் இதன் குறைபாடுகள் குறித்துக்காட்டப் படவேண்டியது அவசியமாகின்றது.

நூலினை அறிமுகம் செய்யும் தலைப்பு கூறும் 'வழிதவறிப்போன ஓர் இளைஞர் தலைமுறை' என்பதன் பொருள் விரிவாக்கம் காலவேறுபாடுகள் குறித்த குழப்பநிலையையேற்படுத்துகின்ற அதேவேளை இளைஞர்கள் மீது இந்நூலாசிரியர்கள் கொண்டுள்ள புரிதல் தொடர்பான மயக்கத்தினை ஏற்படுத்தி விடுவதாகவும் அமைந்துள்ளது. இன்றைய இளம் தலைமுறையினர் வழிதவறிச்செல்கின்றனரா அல்லது வாழ்வியல் போராட்டங்களாலும், சிக்கல்களாலும் அவதியுறுகின்றனரா அல்லது இத்தகைய போராட்டங்களுக்கு மத்தியிலும் சாதிக்கத்துடிக்கின்றனரா என்பது நீண்ட விவாதத்திற்குரிய விடயமாகின்ற நிலையில் வழி தவறிப் போயினர் என்னும் முடிவினை முன்வைப்பதானால் அது தொடர்பிலான வலுவான சான்றாதாரங்களை முன்வைப்பதும் அவசியமாகின்றது. இந்த நீண்ட வினாக்களின் அடிப்படையானது.

'எங்களுடைய காலத்தில் நாங்கள் இதுகளைப் போல இல்லை' என்கின்ற சாதாரண குறை கூறல்களைக் கொண்டதொரு பதிப்பாக இருக்குமோ எனும் குழப்பத்தை வாசகர் மத்தியில் ஏற்படுத்தி விடுவதாக அமைகின்றது. ஓர் உரையிலிருந்து பதிப்புரு பெற்ற நூல் என்ற அடிப்படையில் விடயங்களை ஆழமான புரிதலுக்குள் கொண்டுவரமுடியாது போயுள்ளமையும் தெரிகிறது. குறிப்பாக இன்றைய இளம் தலைமுறையினரை பல்வேறு நெருக்குதல்களுக்கு இட்டுச்செல்வதின் அடிப்படை மூலாதாரப் பிரச்சினையாகவிளங்கும் நவதாராளவாதத்தின் பல்முக ஆக்கிரமிப்பு ஆகும். நூலில் இது சிறு அளவில் தொட்டுக் காட்டப்பட்டதோடு நின்று விடுகின்றமை நூலின் சுட்டிக் காட்டப்படத்தக்கதொரு குறைபாடாகும். இளைஞர்களை நெருக்கடி நிலைகளுக்கு இட்டுச்செல்லும் காரணிகளும் ஊடகங்களின் பங்களிப்பினையும் நினைவுபடுத்த வேண்டிய தேவை எழுகிறது. இவ்வகையான சில குறைபாடுகள் இனங்காணப்பட்டாலும் உள்வாங்கப்பட்டுள்ள விடயங்களின் தேவையும், அவசியமும் கனதியானவை என்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவ முடியாது. எனவே இந்நூலை அதிகமாக வாசிக்க வேண்டிய தேவை உள்ளதோடு அதன் உள்ளார்ந்த அம்சங்களை ஆழமாக ஆராயவும், நீண்ட விவாதங்களுக்கூடாக தெளிவைப் பெறவேண்டியதும் அவசியமாகும்.

*கட்டுரையாளர்:*
*உளவியல் துறை,*
*யாழ். பல்கலைக் கழகம்.*





## தோல்வியின் உருவாக்கம்

தோல்வி பூண்டவனின்
வரலாறென
பின்னட்டைக் குறிப்பு
சொல்லும்
அந்தப் புத்தகத்தை
இதுகாலும் வாசிக்கத்
துணிந்ததில்லை
பரிசெனக் கையில்
திணிக்கப்பட்டதை
தவிர்க்கவியலாமல்
பிரிக்கையில்
வழிந்தோடி
விரலெங்கும் பிசுபிசுப்பாய்
நிலைத்திருப்பது
துரோகம் உலர்த்த முடியா
கண்ணீரும்
வஞ்சகம் பருகிய
உதிரத்தின் மிச்சமும் தவிர்த்து
வேறென்னவாக
இருந்துவிடப் போகிறது!

நிக்ஷனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தென்கிழக்குத் திசையிலே...!

அனார்கலி

### அல்லாமா உவைஸ்

தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியர் அல்லாமா ம.மு. உவைஸ் நினைவுக்கருத்தரங்கம் ஒன்றை இன்று 26 ஆம் திகதி முழுநாள் நிகழ்வாக நடத்தவிருக்கின்றது.

"உவைஸ் வழியில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பணிகள்" எனும் தலைப்பில், கல்கிஸையிலுள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழக கல்விசார் செயற்திட்ட மையத்தில் கருத்தரங்கம் நடைபெறும்.

தென் கிழக்குப்பல்கலைக்கழக மொழித்துறைத்தலைவர் பேராசிரியர் றமீஸ் அப்துல்லா தலைமையில் நடைபெறும் அங்குரார்ப்பண அரங்கில், தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம் தொடக்க உரை நிகழ்த்துவார். "தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம் அடையாளம்" எனும் நூல் வெளியீடும் இந்தக் கருத்தரங்க நிகழ்வில் இடம்பெறும்.

### இதழியல் டிப்ளோமா

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா கற்கை நெறி ஒன்று விரைவில் ஆர[illegible]கப்படவிருக்கின்றது.

பிரதேச ஊடகவியலாளர்களால் மிக நீண்ட காலமாக விடுக்கப்பட்டு வந்த கோரிக்கையின் பயனாக, [illegible]மொழி மூலமான இந்தக் கற்கைநெறிக்கு 2017/2018 ஆம் ஆண்டுக்கான புதிய பயிலுநர்களை அனுமதி[illegible]கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கை நெறி ஒருவருடகால வரையறையைக் கொண்ட[illegible] வார இறுதி நாள்களில் வகுப்புகள் நடைபெறுமென பல்கலைக்கழக பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர் அறிவி[illegible]ளார். இதேவேளை இந்தக் கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு ஆவன செய்துள்ள பல்கலைக்க உபவேந்தர் பேரா[illegible]சிரியர் எம்.எம்.எம்.நாஜிமுக்கு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் பெருநன்றி தெரிவித்துள்ளது.

### கால அவகாசம்

"முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் இன்னும் இருமாதகாலத்துள் கட்சியின் அதி உயர் பீடத்தையும், பேராளர் மாநாட்டையும் கூட்டி அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு முன்புபோல் அதிகாரம் கொண்ட செயலாளர் பதவியை வழங்க வேண்டும்" இப்படி கால அவகாசத்துடன் கூடிய அறிவுறுத்தல் விடுத்திருக்கிறார் முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி "நான் எப்பொழுதும் முஸ்லிம் காங்கிரஸ் காரன்தான், கட்சியிலிருந்து என்னை எவரும் வெளியேற்ற முடியாது" என்று கூறிக் கொண்டே இப்படி எச்சரித்தால் தலைமை என்ன அசைந்து விடவாபோகிறது? எனவும் பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

### ஆரம்பகர்த்தா

மிக நீண்டகாலமாக கிழக்கின் முஸ்லிம் அரசியல்வானில் அடிக்கடி தோன்றி மறையும் முக்கிய விடயம் தான் அம்பாறையின் கரையோர மாவட்டக் கோரிக்கையாகும்.

இந்தக் கரையோர மாவட்டக் கோரிக்கையின் ஆரம்பகர்த்தா, அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் முன்னாள் தலைவர் மர்ஹூம் பரிஸ்டர் ஏ.எல்.எம்.ஹாசீம் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருதில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் சார்ந்த பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸின் மூத்த பிரதித் தலைவர் ஏ.எல்.அப்துல் மஜீத் இந்தத் தகவலைவெளியிட்டார்.

"ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் அமைச்சர் கபீர் ஹாசிமின் தந்தையான பரிஸ்டர் ஹாசிம் அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் செயலாளராகவும், தலைவராகவுமிருந்து பெரும் சேவையாற்றினார்.

குறிப்பாக ஜே.ஆர்.ஆட்சியின் போது கிழக்குமாகாண முஸ்லிம்களின் குறிப்பாக அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கிய காணிமற்றும் பல்வேறு பிரச்சினைகளில் அவர் அக்கறை கொண்டுசெயற்பட்டதுடன், எம்மக்களுக்காகக் குரல் கொடுத்தும் வந்தார்.

அவர் இந்தச் சந்தர்ப்பத்தில் தான் அம்பாறையில் கரையோர மாவட்டம் ஒன்று உருவாக வேண்டியதன் அவசியம் உணர்ந்து முதலில் அதற்காகக் குரல் கொடுத்தார்" என நன்றிப் பெருக்குடன் கூறினார் அப்துல் மஜீத்

இப்பொழுது முஸ்லிம் காங்கிரஸின் கைகளுக்கு கரையோர மாவட்டம் துருப்புச் சீட்டாகக் கைமாறியிருக்கிறதல்லவா?

### பிரசுரம், துண்டுப்பிரசுரம்

வெள்ளிக்கிழமையென்றால் அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் துண்டுப் பிரசுரங்க ளுக்குக் குறைவில்லாத நாளாக மாறியிருக்கின்றது. ஜும் ஆதொழுகையின் பின்னர் பள்ளிவாசல்களின் வெளியே இத்தகைய துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸையும், அதன் தலைமையையும் விமர்சிப்பதாகவே இந்தத்துண்டுப் பிரசுரங்கள் அமைந்துள்ளன.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களின் பேச்சு வழக்கிலுள்ள சொற்பிரயோகங்களுடன் கூட கடந்த வாரம் ஒரு துண்டுப்பிரசுரம் வெளிவந்துள்ளது.

"எண்டதலைவன் அப்படியெல்லாம் பாரதூரமான பொழசெய்யிற ஆள் இல்ல. ஆனாலும் தலைவரே! ஒரே பொய்யபத்து தடவ சொன்னா உண்மையா போயிரும் எண்டு எங்கிட ஊர்ல சொல்வாங்க அது மாதிரி பேப்பர எடுத்தாலும், டீவியப் போட்டாலும், ரேடியோவ தொறந்தாலும் ஒங்களப் பத்தித்தான் குத்தம் சொல்றானுகள் அது போதாதெண்டு இப்ப நம்முடகட்சிக்காரர்களே கூட்டம் போட்டுஸ்பீக்கர் வச்சி உங்களத்தான் குத்தம் சொல்றாங்க.

நான் எண்டா தலைவரே, இதல்லாம் நம்பல ஆனாலும் அவனுகள் கேக்குறாப்போல ஏன் நீங்க இன்னமும் இதுகள நான் செய்யல எண்டு மறுத்து சொல்லல எண்டு எனக்கும் கவலையாவும் யோசினையாவுமாகிடக்கு" இப்படி அந்தப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

"போராளிகளே புறப்படுங்கள்" என்ற மர்ஹூம் அஷ்ரபின் கம்பீரக்குரல் காதுகளில் ரீங்காரிக்கின்றது

### பொதுக்கூட்டம்

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி நடைபெறவிருக்கின்றது.

சம்மேளனத்தலைவர் கலாபூஷணம் மீரா. எஸ்.இஸடீன் தலைமையில், பொத்துவிலில் இந்தப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் கூட்டத்தில் இடம்பெறும்.

### உள்வாங்குக

வட கிழக்கில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளை மத்திய அரசின் கீழுள்ள பொது நிருவாக அமைச்சு மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் உள்வாங்கி பயிலுநர் பட்டதாரிகளாக நியமிப்பதுடன், மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்க நல்லாட்சி அரசு முன்வர வேண்டுமென அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தலைவர் எஸ்.லோகநாதன் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு குறைந்தது ஒரு வருட காலத்துள் ஏற்படும் வெற்றிடங்களுக்கும், புதிய பதவிகளை உருவாக்கியும் இவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்க வேண்டுமென்றும் லோகநாதன், அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகி

### நிர்வாகக்கட்டடம்

கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலை பழம் பெருமை மிக்கதொரு கல்விக்கூடமாகும். இங்கு சகல வசதிகளுடனும் கூடிய நிர்வாகக் கட்டடமொன்றில் ஆய்வுகூடம்இல்லாதபெரும்குறைநீண்டகாலமாக இருந்து வருகின்றது.

மர்ஹூம்களான முன்னாள் அமைச்சர்கள் எம்.எம். முஸ்தபா, எம்.எச்.எம்.அஷ்ரப், மற்றும் முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் உட்பட பல தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள், கல்விமான்கள் கல்வி கற்றபெருமைக்குரிய பாடசாலை இது.

இந்த வருட இறுதிக்குள் இப்பாடசாலைக்கு சகல வசதிகளுடன் கூடிய நிர்வாகக் கட்டடமொன்றை பெற்றுத்தர தாம் ஆவன செய்வதாகக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் உறுதியளித்துள்ளார்.

### உலமாக்கள் சந்திப்பு

உட்கட்சிப்பூசல்கள், பிளவுகளில் சிக்கித்தவிக்கும் முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்களை அழைத்து, முஸ்லிம் காங்கிரஸ் சார்ந்த உலமாக்கள் [illegible]ந்த புதன் கிழமை மாலை சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.

அம்பாறை மாவட்ட ஜம் இய்யத்[illegible] உலமா சபைத் தலைவர் மௌலவி எஸ்.எச்.[illegible]பாவா தலைமையில் முஸ்லிம் காங்கிரஸின் [illegible]லைமையகமான தாருஸ்ஸலாமில் இந்தச் சந்தி[illegible]ம்பெற்றுள்ளது.

கட்சி சந்தித்து வரும் இன்றைய [illegible]ட்டான நிலமைகளில் கட்சி விசுவாசம், தல[illegible]ின் கரங்களைப் பலப்படுத்தல், பாதுகாத்தல் [illegible]லும், ஆத்மீகரீதியான செய[illegible]கள் தொடர்பிலும் உலமா[illegible]க்கள் பிரதிநிதிகளுக்கு அ[illegible]ரகளாற்றியதுடன், திறந்த க[illegible]ரயாடலும் அங்கு இடம்பெ[illegible]து.

"மர்ஹூ[illegible]ரபின் நம்பிக்கை வென்ற ந[illegible]கள்" எனும் நோக்குடனே[illegible]லமாக்கள் இந்தச் சந்திப்பை[illegible]தியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அசோகமித்திரன்



சாந்தன்

தற்காலத் தமிழ் இலக்கியத்தின் தனிப்பெரும் ஆளுமை கொண்டவர்களில் ஒருவராக விளங்கிவர் அசோகமித்திரன். கடந்த வியாழனன்று (23.03.17) இரவு தமது எண்பத்தைந்தாவது வயதில் சென்னையில் காலமானார். நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள் என்ற அசோகமித்திரனின் எழுத்துக்கள் யாவுமே தமிழிலக்கியத்தை உலகத் தரத்தில் அடையாளங் காண உதவியவை.

தாம் எழுதியவற்றிலெல்லாம் ஒரு தனித்துவ முத்திரையைப்பதித்தவர். அவருடையபடைப்புக்களின் பொருள், தொனி, மொழி, யாவும் எளிமையாக அமைந்தவையேயெனினும் வாசகர்களின் தீவிர அக்கறையையும் பயிற்சியையும் நாடி நின்றவை. சாதாரண மக்களையும் அவர்தம் வாழ்வையும் பிரச்சினை களையும் வைத்தே அவர் எழுதினார்.

ஆங்கிலத்திலும் சிறப்பாக எழுதக்கூடியவராயிருந்தபோதும், அவ்வப்போது அம்மொழியில் எழுதினாலும் அவரது முதன்மை வெளிப்பாட்டுச்சாதனமாகத் தமிழே விளங்கிற்று. ஜ. தியாகராஜன் என்ற இயற்பெயர் கொண்ட அசோகமித்திரன், அறுபதாண்டு காலம் எழுத்துலகில் ஆர்வங் குன்றாது இயங்கியவர்.


தண்ணீர், கரைந்த நிழல்கள், 18ஆவது அட்சக்கோடு, ஒற்றன், யுத்தங்களுக்கிடையில், போன்ற பல நாவல்களும், இன்னும் சில நாள்கள், வாழ்விலே ஒரு முறை, காலமும் ஐந்து குழந்தைகளும், முறைப்பெண், போன்ற பல சிறுகதைத் தொகுதிகளும் அவர் படைப்புக்களில் அடங்கும்.

'அப்பாவின் சிநேகிதர்' என்ற அவரது சிறுகதை தொகுப்புக்காக 1996 இல் இந்திய சாகித்ய அகாடமி விருதை வென்றார். அது தவிர, தமிழ் நாடு அரசு பரிசுகளையும் மூன்று தடவைகள் பெற்றவர். அவருடைய பல படைப்புக்கள் இந்தியாவிலும் உலக நாடுகளிலும் பல்வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்டுப் பெரும் வரவேற்பைப் பெற்றவை.

1977இல் யாழ். பல்கலைக்கழகம் (அப்போது யாழ். வளாகம்) நடத்திய தமிழ் நாவல் நூற்றாண்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வதற்காக அசோகமித்திரன் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவ்வேளையில் கொழும்பிலும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருந்தார். ஈழத்தமிழர்கள் மீதும், அவர்களின் எழுத்துக்கள் மீதும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். தமிழிலக்கிய வரலாற்றில் தவிர்க்க முடியாத இடமொன்று அசோகமித்திரனுக்குண்டு.

> கதை எழுதுபவர்கள் அவர்கள் திரிக்கும் நூலினால்தான் உலகம் அதலபாதாளத்தில் விழவில்லை என்று பிரக்ஞை பூர்வமாக எண்ணாவிட்டாலும் ஆழ்மனதில் அப்படித்தான் நினைக்கிறார்கள்.

# பற்றற்ற பக்தியுடன் கடவுளைப் பிரார்த்தித்தால் கடவுளைக் காணலாம்



மதுரகவி காரை எம். பி. அருளானந்தன்

"கடவுள் ஏன் எமக்கு முன்னே தரிசனம் தரமறுக்கிறார்? அவர் ஏன் எம்முடன் நேரடியாகப் பேசமாட்டேன் என்கிறார்? இந்தக் கேள்விகள் பலர் மனதில் பல தடவைகள் ஏற்படுவதுண்டு.

கடவுள் நினைத்தால் அவரால் முடியாதது எதுவுமில்லை. அவரால் நம்முன் தோன்ற முடியும். எம்முடன் பேச முடியும். ஆனால் அப்படி அவர் செய்தால் அவரை நாம் எளிதில் விட்டு விடுவோமா? சாதாரணமாக ஒரு மந்திரி எமக்கு மிக அருகில் வந்து பேசினாலே நாம் அவரை விட்டு விடுவதில்லை. எமது பிரச்சினைகளைச் சொல்கிறோம். எம்முடைய பல தேவைகளையும் ஆசைகளையும் பூர்த்தி செய்யுமாறு தொந்தரவுசெய்கிறோம். அப்படியிருக்க எல்லாம்வல்ல கடவுள் எமக்கு மிக அருகில் தோன்றினால் அவரைச் சும்மா விட்டு விடுவோமா?

கடவுள் ஞானிகளுக்கும் முற்றும் துறந்த முனிவர்களுக்கும் நேரில் தோன்றியிருக்கிறார். இன்னமும் பேசிக் கொண்டிருக்கிறார். அதற்குக் காரணம் அவர்களுடைய தவம். தியானம் அவர்களது ஆன்மிக சாதனைகள்.

எம்மில் பலரும் தவம் இயற்றுகிறோம். தியானம், யோகம் போன்ற பயிற்சிகளைச் செய்கிறோம். ஆனால் அத்தகையோருக்குக் கூட கடவுள் எளிதில் தென்படுவதில்லை.

ஞானிகள் தவத்தால் பெறும் பயனை எம்மால் எளிதில் பெறமுடியவில்லை. காரணம் ஞானிகளும் மகான்களும் எந்தவித ஆசையும் விருப்பமும் இன்றி கடவுளை நோக்கித் தவம் புரிகின்றனர். ஆசைகளிலிருந்தும் உலகப் பந்தங்களிலிருந்தும் விடுபட வேண்டும் என்றுதான் அவர்கள் தவம் செய்கின்றனர்.

ஆனால் எம்மில் பலர் கடவுள் என்முன் தோன்றினால் பணம் கேட்க வேண்டும், வசதி பெருக வரம் கேட்கவேண்டும், உயர்ந்தபதவி பெற அநுக்கிரகம் பெறவேண்டும் என்றெல்லாம் ஆசைகளை வைத்துக் கொண்டுதான் கடவுளைத் தேடுகிறோம்.

ஞானிகள் தவம் புரியும்போது வெப்பமும், குளிர்ச்சியும் அவர்களைப் பாதிப்பதில்லை. அசௌகாரியங்களால் அவர்கள் மனம் தளர்வதில்லை. ஆனால் சாதாரண மனிதர்களோ ஒரு சிறு அசௌகர்யத்தைக்கூட பெரிதாக்கி அதைப் பிரச்சினையாகவே எண்ணிவிடுகிறார்கள். அதைச் சமாளிக்க முன்கூட்டியே ஏற்பாடும் செய்துவிடுகிறார்கள். உதாரணமாக 'கரண்ட்' கட்டாகிவிட்டால் என்னால் சமாளிக்க முடியும், ஏனென்றால் என்னிடம் ஜெனரேட்டர் இருக்கிறது என்கிறார்கள். இதுதான் சாதாரணமானவர்கள் அசௌகரியங்களை ஏற்றுக்கொள்ளும் தந்திரம். இப்படி எந்த அசௌகரியத்தையும் ஏற்றுக்கொள்ளும் தைரியம் இல்லாமல் ஆசைகள் மட்டும் முழுமையாக வேண்டும் என்று விரும்புவோர் செய்கின்ற தவம் உண்மையான தவமாகுமா?

கடவுளை வழிபடுவது எமது ஆசாபாசங்களைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமாக இருக்கக்கூடாது. பற்றற்ற பக்தியுடன் கடவுளைப் பிரார்த்தித்தால் கடவுளைக் கண்டிப்பாகக் காணலாம். அவரோடு நிச்சயம் பேசலாம்.


மனம் மொழி மெய்யினால் இறைவனை மெய்யன்போடு பூசித்தால் அதற்குரிய பயன் நிச்சயம் கிடைக்கும். இறைவனிடத்தில் எமது வேண்டுதல்களை நிறைவேற்று எனப் முழுமையான சரணாகதியடைந்து எம் வாழ்வியலை நெறிப்படுத்தி வாழ முற்படுவோமேயானால் இறைவனின் முழுமையான அங்கீகாரம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யார் கணக்கு வெல்லும்?



கே.கே.மகேஷ்

இன்னொரு இடைத்தேர்தலுக்குத் தயாராகிவிட்டதுஜெயலலிதாவின் ஆர்.கே. நகர் தொகுதி. அதிமுகவில் ஏற்பட்டுள்ள பிளவு, இதை மற்றுமோர் தேர்தலாக அல்லாமல், தமிழக அரசியலின்எதிர்காலத்தைத்தீர்மானிக்கும்காரணிகளில் ஒன்றாக மாற்றியிருக்கிறது.

ஜெயலலிதாவின் தொகுதியில் போட்டியிட்டு வெல்வதன் மூலம், 'நாங்களே உண்மையான அதிமுக'என்றுபறைசாற்றிக்கொள்ளும்வாய்ப்பாகவே அதிமுகவுக்கு உரிமை கோரும் மூன்று அணிகளும் கருதுகின்றன.

அதிமுகவைப்பொறுத்தஅளவில்,ஆர்.கே.நகர் அவர்களுடைய கோட்டை. பூங்கா நகர் தொகுதியிலிருந்து பிரிக்கப்பட்டு, 1977இல் இத்தொகுதி உருவான முதல்தேர்தலிலேயே அங்கு அதிமுக வென்றது.

1980, 1984 தேர்தல்களில்சென்னையைத்தன் கோட்டையாக வைத்திருந்த திமுகவால், இந்த ஆர்.கே. நகர் ஓட்டையை மட்டும் சரிசெய்யவே முடியவில்லை. அதிமுக பிளவுபட்ட 1989, ஜெயலலிதா ஆட்சியின் 'இருண்டகால'முடிவில்நடந்த 1996 தேர்தல்களில் மட்டுமே இங்கே அதிமுக தோற்றிருக்கிறது.

ஏற்கெனவே, ஜெயலலிதாஒருலட்சம்வாக்குகள் வித்தியாசத்தில் வென்ற தொகுதி இது. ஆகையால், ஒரு லட்சம் வாக்குகள் குறைந்தாலும் வென்றுவிடலாம் என்று நம்புகிறது தினகரன் அணி. இதுவே பன்னீர்செல்வம் அணி, தீபா அணியின் கணக்கும்!

## தினகரன் கணக்கு

தமிழகம் முழுக்க எதிர்ப்பு அலை வீசுகிறபோது, 'குற்றவாளியின் பினாமி ஆட்சிநடக்கிறது'என்றுஎதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுகிறபோது, துணிச்சலாக வேட்பாளராக இறங்கியிருக்கிறார்அதிமுகவின் துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன். எடுத்த எடுப்பிலேயேபலரும்அவர்தோற்றுவிடுவார்என்றுசமூகவலைதளங்களில் எழுதியவண்ணம் இருக்கின்றனர். ஆனால், அது அவரைக்குறைத்துமதிப்பிடுவதாகும். ஸ்டாலினின் வேட்பாளர் தேர்வும் கூட இதையே ஆமோதிக்கிறது.

அதிமுகவில் முன்பு செல்வாக்காக இருந்தபோது, ஜெயலலிதாவை இயக்கிய மூளைகளில் ஒருவராக இருந்தவர் தினகரன். கட்சியின் 'கருவூலம்' ஆகவும் ஒரு காலத்தில் இருந்தவர். இடையில், கட்சியின் வெளிப்படையான பொருளாளராகவும் இருந்திருக்கிறார். 'ஜெயா தொலைக்காட்சியின் தொடக்கம் முதல் சசிகலா குடும்பம் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட நாடகம் வரை (1999 2011) அதன் நிர்வாக இயக்குநராக இருந்தவர் தினகரனின் மனைவி அனுராதா என்பதை இங்கே நினைவுபடுத்திக் கொள்ளலாம். கட்சியில் திறன் மிக்கவர்களை அடையாளம் கண்டு பயன்படுத்திக் கொள்ளும்திறன்தினகரனிடம் உண்டு. அப்படி அவரால் கண்டெடுக்கப்பட்டவர்களில் ஒருவர்தான் பன்னீர்செல்வம். தென் மாவட்டத்துக்காரன் என்ற முறையில் தினகரனின் 'முந்தைய தேர்தல்சாதனைகள்'சிலவற்றை இங்கேசொல்லலாம் என்று நினைக்கிறேன். 1999 மக்களவைத் தேர்தல் வேட்பாளராக வந்தார் 'வள்ளல்' தினகரன். தமிழகத்தில்ஒருவட்டாரத்தில்உள்ள அத்தனை சிறுதெய்வக் கோயில்களுக்கும் கும்பாபிஷேகம்நடந்ததுஎன்றால், அது இவர்பெரியகுளத்தில் இருந்த காலத்தில்தான்.

எந்தசாதிக்காரர்களின்கோயிலாகஇருந்தாலும், திருப்பணிக் குழுத் தலைவரானார் தினகரன். 'தாலிக்குத்தங்கம்' திட்டம்வரும்முன்பே, அழைப்பிதழுக்குஒருபவுன்தங்கம்வழங்கும்திட்டத்தைச் செயல்படுத்தியவர் தினகரன். யார் வீட்டுத் திருமணம் என்றாலும், இவரது பெயரும் படமும் போட்டே அழைப்பிதழ்கள் அச்சாகின. குறைந்தது ரூ.5,000 மொய்யும் உறுதி.

ஒரு சாதாரண மக்களவைத் தேர்தலையே அப்படிஅணுகியவர்'நாளையஅதிமுகயார்பக்கம்?' என்பதற்கான கருத்துக்கேட்பு வாக்கெடுப்பு போன்றுநடக்கும்இந்தத்தேர்தலைஎப்படிஅணுகுவார் என்பதை விவரிக்க வேண்டியதில்லை.

தேர்தல்வெற்றிகடினம்என்றாலும், ஒருவேளை வென்றால், கட்சியைத் தங்கள் கைக்குள் வைத்திருக்க இத்தேர்தல் முடிவை ஒரு சந்தர்ப்பமாக மாற்றிக்கொள்ள முடியும் என்பதே தினகரனின் கணக்கு. எனவேதான், அவர் துணிந்து இறங்கியிருக்கிறார்.



## பன்னீர்செல்வம் கணக்கு

கட்சியும் சின்னமும் தங்களுக்கே என்று முழக்கமிடும் பன்னீர்செல்வம், தேர்தல் தொடர்பில் ஓரளவுக்குநம்பிக்கையுடன் இருக்கிறார்என்றால், அதற்கு ஒரு வலுவான காரணம் உண்டு. அது, மதுசூதனன். அவர் பல்லாண்டுகளாக வசிப்பது இத்தொகுதியில்தான்.

கட்சியில் சேரும் முன்பே அனைத்துலக எம்ஜிஆர் மன்றச் செயலாளராக இருந்தவர். பிறகு, ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட அதிமுக செயலாளர், கொள்கைபரப்புச் செயலாளர், அவைத்தலைவர்என்றுவளர்ந்தவர். இடையில், இதே ஆர்.கே. நகர் தொகுதியில்வெற்றிபெற்று அமைச்சராகவும் இருந்திருக்கிறார். ஆக, பன்னீர்செல்வம் அணியைப் பொறுத்த அளவில் மதுசூதனன் ஒரு வலுவான ஆயுதம்.

மேலும், எதைச் சொன்னால் அதிமுகவினரின் வாக்குகளைத் தினகரனுக்கு எதிராகத் திருப்ப முடியும் என்றும் அவர்கள் நன்கு அறிந்துவைத்திருக்கிறார்கள். செய்தியாளர் சந்திப்பின்போது, "எங்கள் வேட்பாளர் தொகுதியில்தான் இருக்கிறார். அவர் ஒன்றும் சிங்கப்பூரிலிருந்து வந்தவரல்ல என்று மாஃபா பாண்டியராஜன் சொன்னதுபன்னீர்செல்வம்அணியின்தேர்தல் வியூகத்தைப் பறைசாற்றுவது. "ஃபெரா வழக்கு இருப்பதால், டி.டி.வி.தினகரனின் மனுவைத் தள்ளுபடிசெய்ய வேண்டும் என்று வேட்புமனு தாக்கலுக்கு முன்பே குரல் கொடுத்திருக்கிறார் பன்னீர்செல்வம். சசிகலா முதல்வர் பதவிக்குவர முயற்சிக்கிறார் என்று தகவல்கள் வெளியானதும், தமிழகம் முழுவதும் குறிப்பாக, பெண்கள் மத்தியில் எழுந்த ஆத்திர அலையை நாடறியும். இப்போது, சசிகலாவின் குடும்ப உறுப்பினரான தினகரன், ஆர்.கே.நகரில்போட்டியிடுவதுமுதல்வர் பதவியைக் குறிவைத்துத்தான் என்பது பச்சைக் குழந்தையும் பேசும் அரசியல்.

அப்படியிருக்க. என்னதான் தொகுதிவாக்காளர்களைக் குளிப்பாட்டினாலும், பெண் வாக்காளர்கள் தினகரனை ஆதரிப்பார்களா என்பது அவருக்கு உள்ள மிகப் பெரிய சவால். அதைத்தான், ஓ.பி. அணி மலையாக எண்ணியிருக்கிறது.

## தீபா கணக்கு

தீபாவைப் பொறுத்த அளவில் இது அவருக்கு அவரேநடத்திக்கொள்கிறசோதனை. அரசியல் அவருக்குச் சரிப்பட்டு வருமா என்பதை இந்தத் தேர்தல் முடிவு அவருக்குத் தெரிவித்துவிடும். ஒருவேளை அவர் வென்றால், 'ஜெயலலிதாவின் வாரிசு' என்ற அவருடைய முழக்கம் பெரியஅளவில்உருவெடுக்கும். தோற்றால், அநேகமாக அவருடைய அரசியல் கனவு முடிவுக்கு வந்துவிடக்கூடும்.

## ஸ்டாலின் கணக்கு

திமுகவின் வேட்பாளர் தேர்வு விமர்சனத்துக்கு உள்ளாகி இருக்கிறது. "தினகரனுக்கு இணையான பணபலமும், அதிகார பலமும் கொண்ட டி.ஆர்.பாலு மாதிரியான ஆள்களைக்களமிறக்காமல், சாதாரண பகுதிச் செயலாளரைக் களமிறக்கியிருக்கிறார்என்கிறார்கள் விமர்சிப்பவர்கள். ஆனால், ஸ்டாலின் நுட்பமாகவே காய் நகர்த்தியிருக்கிறார்என்றுதோன்றுகிறது. ஏனென்றால், 'யார் உண்மையான அதிமுக?' எனும் கோதாவில் இந்தத் தேர்தல் அதிமுகவின் இரு அணிகளுக்கு இடையிலான தேர்தலாக மாறிவிடும் வாய்ப்புகள் அதிகம். குறிப்பாக, ஆளும் தரப்பு தினகரனை ஜெயிக்கவைக்கஎன்னமுயற்சியிலும் இறங்கும்.

திமுகவின் செயல் தலைவராக ஸ்டாலின் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், கட்சி எதிர்கொள்ளும் முதல் தேர்தல் இது. வலுவான ஒரு வேட்பாளரைக் களமிறக்கி அவர் தோற்றுவிட்டால், "அதிமுக இவ்வளவு பலவீனமாக இருக்கும் சூழலிலும் திமுகவை மக்கள் ஏற்கத் தயாராக இல்லை என்பது பேச்சாகிவிடும். ஆகையால், தேர்தலுக்குப் பெரியமுக்கியத்துவம்தராதது போன்றபாவனையில் தேர்தலை அணுகுவது; வென்றால், "அதிமுகவின் துணைப்பொதுச்செயலாளரைவீழ்த்த எங்களது பகுதிச் செயலாளரே போதும் என்று சொல்வது, தோற்றால், "பண பலம் அரசு பலத்தைக் கொண்டு ஒரு சாதாரண வேட்பாளரை அநீதியாகவென்றார்கள்என்றுசொல்வதுஎனும் உத்தியைக் கையில் எடுத்திருக்கிறாரோ ஸ்டாலின் என்று தோன்றுகிறது.

இன்னொருபேச்சும்திமுகவுக்குள் அடிபடுகிறது. பொதுவாக, திமுகநேர்காணலில்கேட்கப்படுகிற முதல் கேள்வியே "நீ எத்தனை கோடி செலவழிக்க முடியும்? என்பதாகச் சொல்வார்கள். இம்முறை அந்த நடைமுறையை மாற்றி, பாரம்பரியமான திமுக குடும்பத்திலிருந்து சாதாரணமான ஒருவரை வேட்பாளராக அறிவித்திருப்பதன் மூலம், கட்சியினருக்குப் புதிய நம்பிக்கையைக் கொடுக்கிறார் ஸ்டாலின். மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர்கள் சொல்கிற ஆள்களுக்குத்தான் வாய்ப்பு என்ற நடைமுறையை மாற்றி, சாதாரண ஆள்களையும் பதவிகள் தேடிவரும் என்ற ஜெயலலிதா பாணி அரசியலுக்குக் கட்சி மாறுவதைச்சுட்டிக்காட்டும்சமிக்ஞை இது என்கிறார்கள். இதையெல்லாம் தாண்டி 'இரட்டை இலை' என்னாகும், யாருக்குப்போகும்என்பதை அ.தி.மு.க. அணிகளைவிட கவனமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறது 'உதயசூரியன்'!

## மக்கள் கணக்கு

ஆக, ஆளுக்கு ஓர்எதிர்காலக்கனவைக்கொண்டிருக்கும் நான்கு தரப்புகள் எதிர்கொள்ளும் தேர்தல் இது. இந்தத் தேர்தல் வெற்றி தோல்வியைத் தாண்டி மக்கள் நலக் கூட்டணி, தேசிய முன்னேற்ற திராவிடக் கழகம், பாரதிய ஜனதாக் கட்சி என்பவற்றுக்கும் சில திட்டங்கள், கணக்குகள் இருக்கின்றன. மக்களிடமும் ஒரு கணக்கு இருக்கிறது.

இந்தத்தேர்தல்முடிவுக்குப்பின்னராவதுதமிழக அரசியலில் நிலைத்தன்மை வரவேண்டும்; மக்கள்பிரச்சினைகளைஅடிப்படையாகக்கொண்டு ஆட்சி நடக்கவேண்டும்; அதற்கு ஆளும் கட்சிக்குள் இருக்கும் குழப்பங்கள் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதே தமிழகத்திலுள்ள ஏனைய எல்லாத் தொகுதி மக்களின் கணக்கும். முடிவு, ஆர்.கே. நகர் தொகுதி மக்கள் கைகளில் இருக்கிறது!

*நன்றி: தி இந்து தமிழ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோகத்தின் மிகச் சிறந்த வடிகால் அழுகை

■ ஆஷா



அழுகை சோகத்தை கண்ணீராகக் கரைத்து வெளியேற்றவல்லது. தற்போது கண்ணீர் விட்டு அழுவதுகூட மிகவும் ஆரோக்கியமானதுதான் என உறுதிப்படுத்தியுள்ளனர் விஞ்ஞானிகள்.

கண்ணிலுள்ள விழிசுழல்வுக்கான ஈரப்பசைதரும் சுரப்பி இயல்பான அளவுக்குமேல் அதிகமாகச் சுரப்பதால் கண்ணீர் ஏற்படுகின்றது. கண் அந்த மேலதிகச் சுரப்பி நீரை வடிக்க இயலாததால் மிகுதியான நீர் கண்ணீர்ப் பெருக்கமாக வெளியேறுகிறது. கண்கள் உணர்வுகளின் கண்ணாடி எனலாம். பெரும்பாலும் துன்பம், கவலை, பயம், ஏமாற்றம், துயரம் போன்ற உணர்ச்சிகளால் ஏற்படும் அழுத்தம் போன்றவற்றால் கண்ணீர் அதிகமான நீரைச் சுரக்கிறது.

சோகங்களின் மிகச் சிறந்த வடிகாலாக இருப்பது அழுகை. ஆயிரம் ஆறுதல் வார்த்தைகளை விட அரைமணி நேரமாவது அழுது தீர்ப்பதன் மூலம் சோகத்தை வெளியேற்ற முடியும். அழுகை சோகத்தை கண்ணீராகக் கரைத்து வெளியேற்ற வல்லது. தற்போது கண்ணீர் விட்டு அழுவதுகூட மிகவும் ஆரோக்கியமானதுதான் என உறுதிப்படுத்தியுள்ளனர் விஞ்ஞானிகள்.

மனிதர்களைப் போல் விலங்குகளும் கண்ணீர் விட்டு அழுது சோகத்தை வெளியேற்றுகின்றன. அழுவதற்கு வெட்கப்படத் தேவையில்லை.

கண்ணீர் வெளியேற்றம் நம் உடலுக்குச் சோக நீக்கத்துடன் பல்வேறு இணை நன்மைகளையும் செய்கின்றது. கண்ணீர் உடலின் கழிவுகளை நீக்க உடல் கையாளுகின்ற ஓர் உபாயம் என விஞ்ஞானம் கூறுகின்றது. முகத்தை அலம்பி விடுகின்றது. மன இறுக்கத்தைக் குறைக்கின்றது. நுரையீரலைத் திறந்து விடுகிறது.

மனதிலுள்ள அழுத்தம் கண்ணீர் மூலம் வெளியேறி விடுகிறது. கண்களிலுள்ள அழுக்குகள் நீங்கி விடுகிறது. மனதால் பாதிக்கப்படும் உளத்தாக்கத்திலிருந்து உள்ளம் ஆறுதல் அடைகிறது. கண்களுக்கு பயிற்சி அளிக்கிறது. மனம் லேசானதாக காணப்படும். மன அழுத்தத்தால்ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறலாம். கண்ணீர் விடுதல் ஒருகழிவுநீக்கச்செயற்பாடுஎன வில்லியம் ப்ரே என்ற அமெரிக்க விஞ்ஞானி கூறியுள்ளார்.

அழுகையை பலவீனமாகக் கருதக்கூடாது. அது அன்பின் வெளிப்பாடாகவும் உள்ளது. நாம் ஒருவர் மீது அளவுக்கதிகமான அன்பு கொண்டிருந்து அவருக்கு இழப்பு ஏற்படுமாயின் எம்மால் அதனைத் தாங்கமுடியாமல் அந்த அன்பின் வெளிப்பாடாக கண்ணீரை வெளியேற்றுகின்றோம். வள்ளுவர் கூறியது போன்று அன்புக்கு அடைக்கும் தாழ் இல்லை. அன்புடையாரின் கண்ணீரே அவர் அன்பினை வெளிப்படுத்திவிடும். இன்றைய அவசர உலகில் மனநலம் என்பது மிகவும் முக்கியமானதாகும் . பலர் சிரிப்பைத் தொலைத்தது மட்டுமல்லாமல் அழுகையையும் தொலைத்தவர்களாக இருக்கிறார்கள். இவை பெரும் பாதிப்பை எமக்கு வழங்கக் கூடியவை. இதுவரை மனம்விட்டு அழுததே இல்லையென்றால் நீங்கள் இன்னும் சுய உழைப்பில் சிந்தனையில் வாழ்க்கையைத் தொடங்கவில்லையென்றே பொருள். சோகத்தில் வார்த்தைகள் மொழியின்றி உறங்கினாலும் உணர்வுகள் உணர்வின்றிக் கிடந்தாலும் வலிகண்ட இதயம் கதறி அழத்தான் செய்யும் அழத்தான் வேண்டும். அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் தனது மகனை பாடசாலை சேர்த்த பின் மகனது ஆசிரியருக்கு எழுதி அனுப்பிய கடிதத்தில் "எனது அன்பு மகன் மிகவும் நல்லவன். நீங்கள் அவனுக்குக் கற்றுக்கொடுக்கும் விடயங்களில் துயரமான வேளைகளில் கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் கற்றுக்கொடுங்கள்" எனவும் எழுதியுள்ளார்.

நாம் வாழ்வில் அதிகம் அழுதுவிட்டோம் இனிவரும் சோகமும் ஏற்கனவே வந்தவைகளைப் போன்றுதான் இருக்கும். எத்தனை நாளைக்குத்தான் ஒரேமாதிரி அழமுடியும். ■



# கல்லைக் கரைக்கும் கண்ணீர்


கல்யாணமாலை கருகி
மண்ணில் உதிருமுன்னே
உறுமிவந்து நின்றது
உறுதிப்படுத்தமுடியா ஊர்தியொன்று
கட்டிக் காவிச் சென்றது
காக்கிபோட்ட காவலர்களென்ற உண்மை
காரிருளில் தெரிந்தது
காலங்கள் கடந்தாச்சு

காலவரையறையும் தாண்டியாச்சு
கருவளர்ந்து கதைகேட்கின்றது
அல்பத்தில் அம்மாவருகில்
நிற்பது யாரென்று
அவர் உன் தந்தையென்று
நாவறண்டு நானுரைத்தால்
ஏனின்னும் வரவில்லை
தூக்கியென்னை முத்தமிட
முண்டியடித்தது முளையின் கேள்வி
பெற்றமனமதில் விழுந்தபேரிடி
முட்டி வெடித்தது
பெருமூச்சோடு கண்ணீர்
தேடியலைந்தே தேய்ந்த பாதங்கள்
அன்று வலித்தது
மனுவெழுதி மரத்த விரல்கள்
அன்று மன்னிப்புக் கேட்டது
மணமாலையிட்டதன்றி மறுபாவம்
நானறியேன்
உண்மையுரைத்ததன்றி

உளவேதும்
பார்த்ததில்லை உன் தந்தை
உருப்படியாய் உனைவளர்க்க
நான்பட்ட பாடதை யாரறிவார்
உன் வாயுதிர்க்கும்
வார்த்தைக்காய் வாஞ்சையாய்க்
காத்திருந்தேன்
கேள்வியாய் அது வெடிக்கையிலே
வேள்வியில் ஆடாய் நின்றிருந்தேன்
பொட்டு வைக்கலாமா
பூங்கூந்தலாக்கலாமா
நிறப்புடைவை கட்டலாமா
நிஜமெதுவும் புரியாமல்
நிழலாடுதென் வாழ்க்கை
விதியை விழித்தென்
விதிமுடிந்து போய்விடுமோ
விடியுமினியென்று விடிகாலை
விழிக்கையிலே
விடையேதுமில்லாமல்
இருள்கிறது
என்வீட்டு முற்றம்மட்டும்
கரைந்துபோன கனவுகள்
கண்ணீரின்வழி
தலையணையில் கறைகளாக
உறைகிறது
நினைவுகள் கனக்கும் நேரம்
உயிருருகி உடல் உறையும்
ஒரு நாள்
அதன் பின்னேதும் சேதிவந்தால்
சுவரில் தொங்கவிருக்கும்
என்படத்தில்
அதை எழுதிவை
எனக்காய் நீபோடும் வாடாமாலை
அதை மறைக்காமல் பார்க்கட்டும்

கந்தர்மடம் அ. அஜந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிம்புவுடன் இணைய ஆசைப்படுகிறார் ஐஸ்

சிம்புவை வைத்து படம் இயக்க ஆசைப்படுகிறாராம் ஐஸ்வர்யா தனுஷ்.
'3' படத்துக்குப் பிறகு ஐஸ்வர்யா இயக்கிய 'வை ராஜா வை' சுமாராகத்தான் போனது. இப்போது மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் சாம்பியன் மாரியப்பனின் கதையை எடுத்து வரும் ஐஸ்வர்யா, அடுத்து ஒரு நாயகனை வைத்துப் படம் இயக்க ஆசைப்படுகிறாராம். அந்த நாயகன் சிம்பு. சிம்புவிடம் கதை சொல்லவும் தயாராகி விட்டாராம். இன்னும் இந்தக் கூட்டணிக்கு தனுஷ் சம்மதம் சொல்லவில்லையாம்.



மனதில் நின்ற காதலியே மனைவியாக வரும்போது சோகம்கூட சுகமாகும்... வாழ்க்கை இன்ப வரமாகும்....



ஏய் இந்தாப்பா... அதெல்லாம் அந்தக்காலம் இப்ப பூராம் ஹெலிக்காப்டர் கேட்டுக்கிட்டு அலையுதுக...

'உலகத்திலேயே தரமான துணி' துவைக்கற சோப் உபயோகிப்பது பேய்கள்தான்



ட்ரஸ்ஸுல வெள்ளை வெளேர்னு பளிச்சினு இருக்குது எப்போதும்...

Viji Raja @vijiraja4

சுள்ளென்று எரிந்து விழுதல், தேவை இல்லாமல் கத்துதல், அதீத கோபம், இதெல்லாம்தான் பிடித்தவர்களிடம் ஆண்கள் தன் அன்பை வெளிப்படுத்தும் லட்சணங்கள்

கலியுகம்னு சொல்வாங்களே! அது இது தானா...?



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வர்.

**இடபம்:** நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கடகம்:** கவனக்குறைவால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வ ர். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயல்படுவர்.

**சிங்கம்:** நேர்மை மிக்கவராகச் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** உற்சாக மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** சுயநல நோக்குடன் சிலர் உதவ முன்வருவர். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு, உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** நண்பரால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர். பெண்களுக்கு உடல்நலனில் அக்கறை தேவை.

**தனுசு:** புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.

**மகரம்:** குடும்ப சிரமத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பெண்களுக்கு உறவினரால் உதவி உண்டு.

**கும்பம்:** திட்டமிட்ட பணி ஒன்று எளிதாக நிறைவேறும். மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். உறவினர் வருகையால் குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**மீனம்:** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பர வகையில் செலவு செய்வர். பிள்ளைகளால் உதவி உண்டு.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | 7 | | 8 | | |
| | 7 | 1 | | | 6 | | 2 | |
| | | | | 5 | | 7 | | |
| | 4 | | | | | | 7 | 3 |
| | 8 | | 2 | 4 | 7 | | 5 | |
| 6 | 5 | 7 | | | | | 8 | |
| | | 6 | | 2 | | | | |
| | 9 | | 7 | | | 3 | 1 | |
| | | 5 | | 3 | 9 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | 6 | 7 | 5 | 4 | 8 | 9 |
| 7 | 9 | 4 | 1 | 8 | 2 | 3 | 6 | 5 |
| 5 | 8 | 6 | 3 | 9 | 4 | 1 | 2 | 7 |
| 1 | 3 | 2 | 7 | 6 | 9 | 5 | 4 | 8 |
| 6 | 7 | 5 | 8 | 4 | 1 | 9 | 3 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 5 | 3 | 6 | 7 | 1 |
| 3 | 6 | 1 | 9 | 2 | 8 | 7 | 5 | 4 |
| 4 | 2 | 7 | 5 | 1 | 6 | 8 | 9 | 3 |
| 9 | 5 | 8 | 4 | 3 | 7 | 2 | 1 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டுத ..வை கள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டும் ... ஜொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனம் ... கிரமாகப் பிரபலமாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மோனிகாவினுடையது எதிர்பாரா வெற்றியே

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் கடந்த வருடம் மத்திய பகுதியில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார் மோனிகா. அதுவரை காலமும் இவ்வாறான ஒரு வீராங்கனை ரென்னிஸ் உலகில் உள்ளார் என்பதே பலருக்கும் தெரியாது. ஆனால் ரியோ ஒலிம்பிக் தொடரில் சாதித்த பின்னர் ஒரு முன்னணி வீராங்கனை ரென்னிஸ் உலகுக்கு கிடைத்தாயிற்று என்று பலரும் கருதினர். ஆனால் தற்போது அவரின் ஒலிம்பிக் வெற்றி எதிர்பாராமல் நடந்த ஒன்றே என்று விமர்சிக்கப்படுகிறது. ரியோ ஒலிம்பிக் தொடர் முடிவடைந்து கிட்டத்தட்ட ஒரு வருடம் நிறைவடைந்துவிட்டது. இன்றுவரை மோனிகா பிறிதொரு முக்கிய தொடரில் சொல்லிக்கொள்ளும் படியான வெற்றியைப் பெறவில்லை. திருப்தியான ஆட்டத்தைக்கூட வெளிப்படுத்தவில்லை என்று சொன்னாலும் அதில் மிகையாக ஒன்றுமில்லை. இவ்வளவு ஏன் தற்போது நடைபெற்றுவரும் மியாமி ரென்னிஸ் தொடரிலும் முதல் சுற்றுடனேயே வெளியேற்றப்பட்டுள்ளார். இவ்வளவு தொடர் தடுமாற்றங்களையும் ஒருசேரப் பார்த்தால் மோனிகாவின் ஒலிம்பிக் வெற்றி எதிர்பாராமல் கிடைத்ததே.

"ஆஸ்திரேலிய அணியை வீழ்த்த துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு என்ற மூன்று துறைகளையும் தாண்டி நான்காவது துறையாக வார்த்தை மோதலை கோக்லி பயன்படுத்தினார்."



# கோக்லி எனும் வில்லன்

■ பிரகாஷ்

வார்த்தை மோதல்களில் உலகில் பிரபலமான ஓர் கிரிக்கெட் அணி எது என்று கேட்டால் பலரின் விடையாக ஆஸ்திரேலியா என்பது அமையும். அந்த ஆஸ்திரேலிய அணியையே வார்த்தை மோதல்களில் வறுத்தெடுத்துள்ளார் இந்திய அணியின் தலைவரான கோக்லி.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் அதிக அளவில் வார்த்தை மோதல்கள் இடம்பெறவில்லை. இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி இந்தியாவுக்கு இருந்தது. இந்த ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் வார்த்தை மோதல்கள் அதிகளவில் வெடித்தன. ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தத் துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு என்ற மூன்று துறைகளையும் தாண்டி நான்காவது துறையாக வார்த்தை மோதலை கோக்லி பயன்படுத்தினார். அணித்தலைவரே மோதலுக்கு பச்சைக்கொடி காட்டினால் ஏனைய வீரர்களின் நிலையைக் கேட்கவும் வேண்டுமா. மூன்றாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வீரர்களும் வார்த்தை மோதல்களில் ஈடுபட்டனர். எனினும் இந்திய அணிக்கு ஒருபடி கீழாகவே இது இருந்தது. ஓர் அணியின் தலைவர், வழிகாட்ட வேண்டிய பொறுப்பில் உள்ளவர், கனவான் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டியவர் வார்த்தை மோதலில் ஈடுபடலாமா என்று விமர்சனங்கள் வந்து குவிந்தன. ஆஸ்திரேலிய ஊடகங்கள் கோக்லியை தாறுமாறாக விமர்சித்தன. டெய்லி ரெலிகிறாப் என்ற ஆங்கில ஊடகம் கோக்லியை விளையாட்டுலகின் ட்ரம்ப் என்று வர்ணித்தது. இந்த விமர்சனங்கள் ஒருதலைப்பட்சமானவையே. ஆஸ்திரேலிய வீரர்கள் செய்யாததையா கோக்லி செய்துவிட்டார். ஆஸ்திரேலிய அணியின் கடந்த கால டெஸ்ட் ஆட்டங்கள் வார்த்தை மோதல்களைச் சுற்றியே கட்டமைக்கப்பட்டவை. அந்த வகையில் கோக்லி ஒன்றும் புதிதாக செய்துவிடவில்லை. இப்போது கோக்லியை விமர்சிக்கும் ஊடகங்கள் ஏன் அந்தக் காலங்களில் ஆஸ்திரேலிய வீரர்களை விமர்சிக்கவில்லை. இவ்வாறான ஒரு கேள்வியை ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் கிளார்க்கும் வெளிப்படுத்தியுள்ளார். ஆஸ்திரேலிய அணியையே வார்த்தை மோதல்களில் தலைதெறிக்க ஓட வைத்ததும் கோக்லியின் ஓர் ஆளுமையே.

# இன்னும் ஏராளமாக சாதிக்க வேண்டும் மெஸ்ஸி..

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் சிலியை ஆர்ஜென்ரீனா வென்றாலும் வென்றதுதான் தாமதம் மெஸ்ஸியின் கடந்த காலத் தோல்விகளை இந்த ஓர் ஆட்டத்தில் சரிசெய்துவிட ஆரம்பித்துவிட்டனர் மெஸ்ஸியின் பக்தர்கள்.

2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் ஆட்டங்கள் தற்போது பரவலாக நடைபெற்று வருகின்றன. தென்னமெரிக்க நாடுகளுக்கு இடையிலான ஆட்டங்கள் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றன. சிலியை எதிர்த்து ஆர்ஜென்ரீனா வென்றது.

கடந்த வருடம் அதற்கு முன்னைய வருடங்களில் நடைபெற்ற கோப்பா அமெரிக்காத் தொடரில் (தென்னமெரிக்க நாடுகளுக்கு இடையிலான பழமைவாய்ந்த தொடர்) ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தி சிலி சம்பியனானது. கடந்த வருடம் இறுதியாட்டத்தில் அடைந்த தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் கால்பந்து உலகைவிட்டுச் செல்ல முடிவெடுத்தார் மெஸ்ஸி. பின்னர் அவரது ரசிகர்களின் வேண்டுகோளுக்கு அமைய முடிவை மீளப்பெற்று தற்போது களத்தில் உள்ளார். தென்னமெரிக்க நாடுகளுக்கு இடையிலான தொடரில் ஆர்ஜென்ரீனாவின் வைரியாக சிலி உருவெடுத்துள்ளது. இதனால் கடந்த வியாழக்கிழமை கிடைத்த வெற்றியை கடந்தகாலத் தோல்விக்கெல்லாம் கொடுத்த பதிலடியாக மெஸ்ஸியினதும் ஆர்ஜென்ரீனாவினதும் ரசிகர்கள் கருதுகின்றனர். இரு இறுதியாட்டங்களில் கிடைத்த தோல்விகளுக்கு மிகவும் சாதாரணமான ஓர் ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் மூலம் எவ்வாறு பதிலடியாகக் கருதமுடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு கிளியே...!

செ.தமிழ்நம்பி

விடுதலையின் நாழிகைகளை விழித்து,

கிளியே...!
நீயும் எந்தன் உறவே...
சிந்தனைப் பச்சையங்களுள் சிறகசைக்கும் விடுதலைக் கனவே...
என்னவளின் கள்ளமில்லா உள்ளம் தனில் எந்தன் ஞாபகப் பாடம் உரைக்கும் குருவே...
அழிவிலா அன்புப் பசுமையின் வண்ணம் பதியும் உறைவிலா எழுது கருவியெனும் மொழிவே....
வானசைந்து எனக்கிசையும் குருவியெனும் பரிவே....
என்றும் நீ எனக்குத் துணிவே....!




தாயகத்து வானுறையும் அற்புதமே...
எந்தன் சொற்பதமே...
தென்னங் கீற்றிடை தென்றலோடு கீச்சிடும் மூச்சான கூட்டமே...
ஏன் இந்தக் கோலமே...?
தனித்திருந்து கருத்துரைக்கும் ஜாலமேன்...?
பூவரசுகளும்...
மலை வேம்புகளும்...
எங்கள் நிழலே...
மூதாதையர் பற்றியிருந்த காவல் தருக்களே...
ஆழ வேர் பரப்பி தாய் மண்ணைப் பாசமாய் குழைந்து குழந்தைத் தனமாய் அழைந்திருந்திட செழித்திருந்தது எங்கள் தெருக்களே...!

என்ன சொல்ல...!
நல்லிணக்கம் என்று அகோரம் சூடிய பேடுகளின் அசத்தியமான சூவல் கோடுகள் நஞ்சாய்ப் புகுந்து கட்டடக் காடுகளை அள்ளித் தெளிக்கிறது அழிவுறுதியின் புடைத்துப் போன பருக்களாய்...
வலயங்கள் வகுத்துக் காலூன்றிய அதிகாரச் செருக்குகள் எமைப் பற்றிக் கிழிக்கிறது குருதி சொட்டும் கருக்குகளாய்...
காலாதி காலமாய் ஓலமாகிப் போன பாதாளமாய் குடைகிறது பொறுமைக் குணம் நின்று காத்திருப்பாய் சதிராடும் பெருத்த வெறுமை...
அவனுக்கோ சத்துணவும் அதனோடு பிசைந்த மெத்தனக் கேளிக்கை...
எத்துணை வேதனை...??

கோரிக்கை...!
வீரம் மண்டியிட்டுப் போகாத தாய் மண் குஞ்சுகளாய் தேசக் கடல் தாண்டியும் நீள்கிறது பெருத்த கோரிக்கை...
சுற்றி நின்று விழி பிதுக்கும் ஐந்துகளுக்கு இது வேடிக்கை...!

மீண்டும் என்ன சொல்லி அமைதியைப் பற்றிடக் கிளியே...??
எந்தன் மனம் பற்றி காதல் பேசும் அன்பின் பொழிவே...



அழகிய சிவப்பின் சொண்டு குழியும் புன்னகையும்...
மென்னிறப் பச்சை மெழுகிய உடலும்...
சிலிர்க்கும் உயர் கொடையாக உன்னோடு உறையும் சிறகும்...
உனக்குப் படைப்பிலக்கணம்...
கீச்சிடும் குரல் என அத்தனையும் உனக்கான தலைக்கனம்...
பெருமிதமாய் என்னவளையும் உன்னோடு உவமை புனைகிறேன்...
அவள் நுதல் பற்றி திலகமிட்டு எண்ணச் சிறகினை விரிக்கிறேன்...
இது எந்தன் தலைக் கனம்...
சித்தனாய் இருளின் பாதை நகரும் விடியலின் அருள் வேண்டும் பக்தன் இவனின் மனம்...!

சின்னஞ் சிறு கிளியே...!
உனைப் பணிகிறேன் கண்ணம்மா...
விரைந்திடு...
நல்லவை உரைத்திடு...
காலச் சக்கரங்களை விரைந்து அசைத்திடு...
எந்தன் குரல் முறித்து முற்றும் தரிப்புகளை சுழிக்கிறேன்...
கனவுத் தூக்கத்தின் உள்ளாய் அயர்கிறேன்...
தா(மதம்) இன்றி விடுதலையின் நாழிகைகளை விழித்து அதன் திசையுள் எனையும் பற்றி அழைத்திடு...!!

## சொற்சிலம்பம் போட்டி இல: 464

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | 5 | | ■ |
| 6 | | | ■ | 7 | | ■ | 8 |
| 9 | | ■ | 10 | | | | |
| ■ | ■ | 11 | | | | ■ | |
| 12 | 13 | | | | ■ | 14 | ■ |
| ■ | 15 | | ■ | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | ■ | 19 | |
| 20 | | ■ | 21 | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:..........................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..........................................
கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. ஒரு கதையில் வருமோர் பாத்திரம்
6. ஊட்டம்
7. மனமொன்றிப் பார்த்து அனுபவி
9. சாப்பிடு
10. நளன் இவனோடு சூதாடி அனைத்தையும் இழந்தான் என்பது வரலாறு
11. தேசத்தின்...
12. பருகச் செய்து விடு
15. தாண்டு
16. பொறுப்பு
17. உள்ளம்
19. கனவு
20. தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி
21. தோழன்

### மேலிருந்து கீழ்

1. கண் தெரியாதவன்
2. ஊழியம் செய்பவன்
3. மட்பாண்டத்தில் ஒரு வகை
4. சேர்த்து வை
5. ரசிப்பவன்
8. திருமணமாகாத இளம் பெண்
10. போத்தல்
11. விருப்பம்
13. ஆகாயம்
14. பாடல் பாட வல்லவன்
17. மயக்கம் தரவல்ல பானம்
18. மனித உடலின் ஓர் உறுப்பு

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்ட சாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 462 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) பாரசீகம் (4) ஆதி (6) வர (7) முரடு (8) கிரகம் (10)வாதி (11) கசி (12) கரடு (13) களைந்து விடும் (15) பரமன் (16) யாகம் (18)கனல்

**மேலிருந்து கீழ்**
(1) பாக்கி (2) சீவகசிந்தாமணி (3) கரம் (4) ஆரவாரம் (5) திடுதிடு (9) ரகளை (12)கடுமையான (13) கணபதி (14) ஓம் (17)கல்

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.464
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (05.04.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 462 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
செ.யோகபாலன்,
இல 40, புதுவீதி முதலாம் ஒழுங்கை, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
வ.இரத்தினசிங்கம்,
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

**3 ஆம் பரிசு**
க.தில்லையம்பலம்,
வேரற்கேணி கந்தசாமி கோயிலடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

**4 ஆம் பரிசு**
ஸ்.சாள்ஸ் விஷயரெட்டினம்
இல. 9/1 தண்ணீர்த்தாங்கி வீதி, 4ஆம் குறுக்குத் தெரு, குருநகர், யாழ்ப்பாணம்

**5 ஆம் பரிசு**
திருமதி ச.லிங்கமூர்த்தி,
அ.பி.பாடசாலை வீதி, வல்வெட்டித்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

வி.செல்வநாயகம்,
சிவன் கோயில் வீதி, புத்தூர் மேற்கு, புத்தூர்

செல்வன் அகிலேஷ் சசிகாந்தன்
கொடிகாமம் வீதி, நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.

சிவ.பத்மயோகன்
இல 22/18 விதானை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி இல.464 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 09.04.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 462 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தவின் படுக்கை அறையில் சட்டை இல்லாத இளைஞன்

போர் உச்சத்தில் இருந்த காலம் அது. அப்போதைய அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஒரு நாள் இலங்கையில் உள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு அலரி மாளிகையில் இராப்போசனம் வழங்கினார்.

நட்பு ரீதியான அந்த நிகழ்வில், மகிந்த அந்த ஊடகவியலாளர்களிடம் பல விடயங்களை மனம் விட்டுப் பேசினார்.

அவர் அரச தலைவரான பிறகு அவரது தனிப்பட்ட வாழ்க்கை எவ்வாறு இருக்கின்றது என அங்கு கூறினார். அதற்கு உதாரணமாக ஒரு சுவாரசியமான சம்பவத்தையும் விளக்கினார்.

ஒரு நாள் அலுவலக வேலைகள் அதிகமாக இருந்ததால், இரவு விழித்திருந்து அவ்வேலைகளை முடித்துவிட்டு அதிகாலை நான்கு மணியளவில் உறங்குவதற்காக அலரி மாளிகையில் உள்ள அவரது அறைக்குச் சென்றாராம்.

அப்போது அரைக்காற்சட்டை அணிந்து மேற்சட்டை இன்றிய ஓர் இளைஞன் அவரது அறையில் நன்றாக உறங்கிவிட்டு அங்கிருந்து வெளியே சென்றிருக்கின்றான்.


மகிந்தவுக்கோ பேரதிர்ச்சி. அவரைச் சுற்றிப் பலமான பாதுகாப்பு உள்ளபோது, இப்படி யாரால் அவரது அறைக்குள் வந்து தூங்க முடியும்?

ஓடிச் சென்று தூக்கத்தில் இருந்த அவரது மனைவி சிராந்தியை எழுப்பி அச்சம்பவத்தை விளக்கினார் மகிந்த.

சம்பவத்தைப் பெரிதுபடுத்தாத சிராந்தி "அவன் உங்கள் பிள்ளைகளின் கூட்டாளியாக இருப்பான். போய்த் தூங்குங்கள்" எனக் கூறிவிட்டாராம்.

இப்படித்தான் தனது தனிப்பட்ட வாழ்க்கை இருக்கின்றது என மகிந்த கூறினார். கடைசியில் அந்த இளைஞன் ரோஷித ராஜபக்சவின் நண்பன் என்பதைப் பின்னர் கண்டுபிடித்துவிட்டார்களாம்.

## கைதிகள் பற்றிய சிறப்பு உரை



மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒன்றன்பின் ஒன்றாகச் சிறைச்சாலை சென்று வருவதை நாம் அறிவோம். அவ்வாறு சென்று திரும்புபவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு புது அனுபவத்துடன்தான் திரும்புகின்றனராம்.

அந்த வகையில், முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவும் 12 நாள்கள் உள்ளே இருந்துவிட்டுத்தான் வந்தார். அவர் அங்கே வெறுமனே சும்மா வெட்டியாகப் பொழுதைப் போக்கவில்லையாம். அந்த 12 நாள்களும் கைதிகள் பற்றிய விரிவான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தாராம்.

அவர்கள் படும் துன்பங்களை அக்கு வேறாக அலசி ஆராய்ந்தாராம். இரண்டு வேளை உணவை வீட்டில் இருந்தும் ஒரு வேளை உணவைச் சிறைச்சாலையில் இருந்தும் மகிந்தானந்த பெற்றுக்கொண்டார். சிறைச்சாலை உணவு எப்படி இருக்கின்றது; அது கைதிகளின் ஆரோக்கியத்துக்குப் பொருத்தமானதுதானா என்று ஆராய்ச்சி செய்வதற்காகவே அந்த ஒரு வேளை உணவைச் சிறையில் பெற்றுக்கொண்டாராம்.

சிறையில் இருந்து வெளியில் வந்த அவர் சிறைக் கைதிகள் பற்றி, அவர்களின் வாழ்க்கை பற்றி, அவர்கள் படும் துன்பம் பற்றி சிறப்பு உரை ஒன்றை நாடாளுமன்றில் நிகழ்த்தவுள்ளாராம்.

சிறைக்குச் சென்றால்தான் ஞானம் பிறக்கும் போல.

## விமலின் வீட்டில் தங்குவதற்கு சிறப்பு ஒப்பந்தம்



நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் வீட்டில் தங்கி இருந்த அவரது மகனின் நண்பன் திடீரென உயிரிழந்ததை நாம் அறிவோம். இந்த இறப்புத் தொடர்பில் ஊடகங்கள் பல்வேறு வகையான செய்திகளைப் பரப்பி வந்ததால் விமல் ரொம்பவும் 'அப்செட்'டாகிப் போனார்.

இறந்த அந்த இளைஞனையும் விமலின் மனைவியையும் இணைத்துக்கூடச் செய்திகள் வெளியாகி இருந்தன.

இருந்தபோதிலும், இன்னும் மூன்று, நான்கு இளைஞர்கள் அவரது வீட்டில் தொடர்ந்தும் தங்கத்தான் செய்கின்றனர்.

தொடர்ந்தும் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அந்த வீட்டில் தங்கி இருக்கும் இளைஞர்களின் பெற்றோர்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுமாறு விமல் அவரது மகனுக்கு உத்தரவிட்டுள்ளாராம்.

மகன் வெளியில் சென்று சிறு பிரச்சினைகளில் மாட்டினால்கூட ஊடகங்கள் அவற்றைப் பெரிதுபடுத்திவிடும் என்று அஞ்சி மகனை வெளியில் செல்ல விடாமல் தடுப்பதற்கான ஓர் ஏற்பாடாகத்தான் அவரது நண்பர்களை அவரது வீட்டில் தங்குவதற்கு அனுமதித்துள்ளாராம் விமல்.



## களைப்பைப் போக்க ஒரு 'தம்'

ஓரிரு வருடங்களுக்கு முன் கொழும்பில் இடம்பெற்ற புகைத்தலுக்கு எதிரான ஒரு கருத்தரங்கு அது. எந்த அடிப்படையில் என்று தெரியவில்லை. ஏற்பாட்டாளர்கள் ஓர் அரசியல்வாதியை அதற்குத் தலைமை அதிதியாக அழைத்திருந்தனர்.

பரவாயில்லை. ஆசாமி புகைத்தலுக்கு எதிராக நல்லாத்தான் பேசினார். அவரது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த புகைப் பிடிப்பாளர்களுக்கு உடனே அதை விட வேண்டும்போல் இருந்திருக்கும். அவ்வளவு தூரம் நிறையத் தகவலும் சிந்திக்கத்தக்க அறிவுரைகளும் அந்த நீண்ட உரையில் அடங்கி இருந்தன.

நிகழ்வும் இனிதே நிறைவுற்றது. சுமார் ஒரு மணி நேரம் பேசிய களைப்பைப் போக்குவதற்காக வெளியே வந்து "தம் ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டு" வாகனத்தில் ஏறிப் பறந்து சென்றார் மனுசன். எப்பூடி..........! நாங்களெல்லாம் யாரு!

## தேங்காயுடன் மேடை ஏறிய பிரேமதாச



தேர்தல் காலங்களில் வகுக்கும் சரியான வியூகம்தான் மிதப்பு வாக்குகளை சுருட்டிக்கொள்வதற்கு வழிவகுக்கும். கவர்ச்சியான பேச்சு, உறுதியான வாக்குறுதி போன்றவை வெற்றியைக் கொண்டு வந்துவிடும்.

அவ்வாறான கவர்ச்சியான பேச்சாளர்களுள் ஒருவர்தான் மறைந்த முன்னாள் அரச தலைவர் ஆர்.பிரேமதாச. நல்ல பேச்சாற்றல் மிக்கவர். சூழலுக்கு ஏற்ப மேடையைப் பயன்படுத்தக்கூடியவர். மக்களின் மனோநிலைக்கு ஏற்ப வியூகம் வகுக்கக்கூடியவர்.

அவரது இந்த நுட்பமே அவரை அரச தலைவர் ஆசனம் வரைக்கும் கொண்டு வந்தது என்கின்றனர் அரசியல் அவதானிகள்.

அவர் மேடையை வித்தியாசமாகக் கையாண்ட நிகழ்வுகளில் ஒன்று இது. 1977ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மேடை ஒன்றில் ஏறினார். கையில் இரண்டு தேங்காய்கள். ஒன்றை மக்களிடம் காட்டி ஒன்று எவ்வளவு எனக் கேட்டார். 35 சதம் என மக்கள் கூறினர். [அன்றைய காலம் தேங்காய் ஒன்றின் விலை அது]

அடுத்த தேங்காய்யைக் காட்டி இது எவ்வளவு எனக் கேட்டார். அதுவும் 35 சதம்தான் எனக் கூறினார். பிறகு இரண்டையும் ஒன்று சேர்த்து இரண்டும் எவ்வளவு எனக் கேட்டார். 70 சதம் என மக்கள் கூறினர்.

இந்த இரண்டும் 35 சதத்துக்கு வேண்டாமா என மக்களிடம் அடுத்த கேள்வியைக் கேட்டார். இது மக்களை மயக்கி வாக்கைக் கொள்ளையடிக்கும் ஒருவகையான கவர்ச்சிப் பரப்புரை. அந்தத் தேர்தலில் எல்லா மேடைகளிலும் இந்தக் கவர்ச்சி நாடகத்தை அரங்கேற்றினாராம் பிரேமதாச.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இணுவில் இந்துக் கல்லூரியில் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோல்விழா அண்மையில் இடம்பெற்றது. (ஐ)





இணுவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. (ஐ)





சர்வோதயமும், தேசோதயமும் இணைந்து நடத்திய மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் நூறாவது பிறந்த தினமும், கலைஞர்களுக்கு "கலைமாமணி" விருது வழங்கும் நிகழ்வும் யாழ்ப்பாணம் தேசோதய தலைவர் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் யாழ்ப்பாணம் சர்வோதய மண்டபத்தில் இடம் பெற்றது. (ஐ167)



பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய 'பருத்தித்துறை சிவன்கோயில்' புதிய வசந்த மண்டப நிர்மாணத்துக்கான அடிக்கல் நடும் விழாவின் போது, ஆலய முகாமையாளர் எஸ்.நாகராஜா தலைமையில் அடிக்கல் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. (ஐ)






நாவாந்துறை சென் மேரிஸ் இளைஞர் கழகத்தால் தவக்கால சிந்தனையில் குருதித்தான முகாம் தூய பரலோக அன்னை ஆலய முன்றிலில் அண்மையில் இடம்பெற்றது. (ஐ)



வடமாகாண கல்வியமைச்சின் 6.5 மில்லியன் ரூப நிதியொதுக்கீட்டில் பண்டத்தரிப்பு, வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்திறப்பு விழா பாடசாலையின் அதிபர் பிரதாபன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைத்தார். வடமாகாணசபை உறுப்பினர் இ.ஆர்னோல்ட் மற்றும் வலிகாமக்கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலணைப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி இடம் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களுக்கான பிரிவு உபசார வைபவம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ஐ-167)








சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வகுப்பறைத் தொகுதி, கட்புலசாதன அறை திறப்பு விழாவும், ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கண்காட்சியும் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்றது. இதில் விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.செல்வின் இறேனியஸ், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா ஆகியோரும் முன்னாள் அதிபர்களும், ஆசிரியர்களும், பாடசாலைச் சமூகத்தினரும் கலந்து சிறப்பித்தனர். (ஐ)







யாழ். நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் இடம்பெற்ற நீரிழிவு மற்றும் பாலியல் நோய்கள் தொடர்பான செயலமர்வில் நீரிழிவு நோய் பற்றிய விரிவுரையை மருத்துவர் இ.சுரேந்திரகுமார், பாலியல் நோய் தொடர்பான விரிவுரையை மருத்துவர் த.குருபரன் ஆகியோர் நிகழ்த்தினர். (ஐ)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அண்மையில் கல்வியமைச்சின் தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதம ஆணையாளர் கே.எம்.எச். பண்டார வருகை தந்தார். அவரை வரவேற்று யாழ்.கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் நினைவுக் கேடயம் வழங்கினார். உப பீடாதிபதிகள், கலாநிதி பா.தனபாலன், திருமதி ஜே.சிவபாதம், திருமதி எஸ்.அன்ரனி தவச்செல்வம் மற்றும் கல்வியியலாளர்களுடன், கலை நிகழ்வுகளில் பங்கு கொண்ட முகிழ்நிலை ஆசிரியர்களும் காணப்படுகின்றனர். (ஐ-29)







வரணி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மெய்வன்மைப் போட்டியின் போது, அதிதிகளாகக் கலந்து கொண்ட தென்மராட்சி வயல பிரதிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) அ.மனோரஞ்சிதன் மற்றும் உலக உணவு செயற்றிட்ட உத்தியோகத்தர் த.ஜெகதீஸ்வரன் ஆகியோர் அதிபர் ந.வசந்த ரூபனால் அழைத்து வரப்படுவதையும் நிகழ்வின் பிரதம விருந்தினர் மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் உரை நிகழ்த்துவதையும் பாடசாலை மாணவரின் அணி நடையையும் காணலாம். (ஐ-122)



தென்.புலோலி புற்றளை மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டியில் முதன்மைவிருந்தினரான கொழும்பு சட்டத்தரணி என்.விஸ்ணுகாந்தனின் பாரியார் திருமதி எஸ்.விஸ்ணுகாந்தன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில் வழங்கினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பன்றிக் காய்ச்சலை குணமாக்கும் கசாயம்**

நமது நாட்டில் ஒவ்வொரு பருவக் காலத்திலும் ஒவ்வொரு நோய் மக்களை வாட்டும். சில ஆண்டுகளுக்கு முன்பு டெங்குக் காய்ச்சல் வந்தது. பின்பு சிக்குன் குன்யா வந்தது. பலரும்மூட்டுவலியால்அவதிப்பட்டார்கள். பின்புஎலிகாய்ச்சல்வந்தது. இதுபோன்றகாய்ச்சல்கள்தீவிரமாகத்தொற்றக் கூடிய நோய்கள்.

இன்ஃப்ளுயன்சாஃபுளுஎன்பதுஆதிகாலம்தொட்டேமனிதனுக்கு வருகிற ஒரு வகை சளிக்காய்ச்சல்.

முதலில்பன்றிகளைத்தாக்கிய இந்தக்காய்ச்சல், அவற்றின் மூலமாக மனிதர்களுக்கும் தொற்றியது. அதனால் இதைப் பன்றிக்காய்ச்சல்என்று அழைத்தார்கள். ஆனால், இன்ஃப்ளுயன்சா ஃபுளு என்பதுதான் சரி. ஒரு மனிதனிடமிருந்து இன்னொருமனிதனுக்கு இந்தநோய் இப்போது பரவுகிறது. பலஆண்டுகளுக்குமுன்புவாழ்ந்த இந்திய மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படும் சுஷ்ருதர் எழுதிய சுஷ்ருத சம்ஹிதையில் தொற்று நோய்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

எப்படித் தொற்றும்?

உடலுறவின் மூலமோ, மூச்சுக்காற்றின் மூலமோ, சேர்ந்து உண்பதன்மூலமோ, நோய்தாக்குண்டவரின் ஆடைகளை உடுத்துவதன் மூலமோ, அவர்களுடைய அணிகலன், பவுடர், பேஸ்ட் போன்ற அன்றாட பயன்பாட்டு பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலமோ தோல் நோய்கள், காய்ச்சல் நோய்கள், மறைமுக நோய்கள், ஆள்வாட்டி நோய்கள் ஒரு மனிதனிடம் இருந்து இன்னொரு மனிதனுக்குத் தொற்றுகிறது.

இந்தக்காய்ச்சலில்பலர்குணமடைந்தாலும், ஒருசிலர்உயிரிழக்கநேரிடுவதால்மக்கள்அஞ்சுகிறார்கள். சிகிச்சையின்றி ஏழு நாள்களில் காய்ச்சல் நோயில் இருந்து ஒருவர் விடுபட வேண்டும். இதில்ஒருசிலருக்குச்சிக்கல்கள்ஏற்படுகின்றன. அப்போது வைரசுக்கு எதிராக மருந்துகள் கொடுக்கப்பட்டு, சிக்கல்கள் மட்டுப்படுத்தப்படுகின்றன, நோயின் தீவிரம் குறைகிறது. பி1என்1 என்பது மனிதனிடம் இருந்து இன்னொரு மனிதனுக்குப் பரவக் கூடியது. 2009ம் ஆண்டில் மெக்ஸிகோ நாட்டில் இந்த நோய் பரவ ஆரம்பித்தது. மூக்கின் வழியாக ஒரு பொருளைச் சுவாசிக்கும்போது அது உள்ளே செல்கிறது. பி1என்1தாக்கப்பட்டவர்களிடம் சென்று வந்தால் நமக்கும் தொற்று ஏற்படலாம்.

அறிகுறிகள்:

இந்த நோயின்போது காய்ச்சல், இருமல், தொண்டைவலி, தொண்டைகரகரப்பு, உடல்வலி, தலைவலி, குளிர், சோர்வு, வயிற்றுப்போக்கு, வாந்திபோன்றவைவரலாம். இந்தநோய் தொற்று உள்ளவர்களிடம் தொடர்பு ஏற்பட்ட பின், ஒன்றில் இருந்து 3 நாள்களுக்குள் இது வரலாம். வந்தால், ஏழு நாள் வரை காய்ச்சல் இருக்கும்.

இந்த வைரஸ் கிருமி கபத்தின் ஸ்தானமாகிய மூக்கு, தொண்டை, நுரையீரலைச்சார்ந்து இருக்கிறது. இதயநோய்கள், மூச்சுமுட்டுவது, காக்காய் வலிப்பு, மூச்சு விடுவதில் சிரமம் உள்ளவர்களுக்கு இது வரலாம். நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இதுவந்தால், நோயைத்தாங்கும்சக்திமிகவும் குறைவாக இருக்கும்.

இந்தக்காய்ச்சலால் உடலில் ஏற்படும் பாதிப்புகளைத்தணிப்பதற்காக மருந்துகொடுக்கிறார்கள். சிலநேரம் இந்தக்காய்ச்சலை உருவாக்கும்கிருமிகளுக்குஎதிரானமருந்துகளுக்கு எதிர்ப்பு சக்தி வந்து விடலாம். அதனால், கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள், 5 வயதுக்குக் கீழே உள்ள குழந்தைகள், 60வயதுக்கு மேலே உள்ள பெரியவர்கள், கர்ப்பிணிகள், கர்ப்பத்தை இழந்தவர்கள், நீண்டகாலம் அஸ்பிரின் மருந்து பயன்படுத்துபவர்கள், ஆஸ்துமா, இதய நோய், நீரிழிவு நோய், சிறுநீரக நோய், நுரையீரல் நோய் இருப்பவர்கள், நோய்எதிர்ப்புத்தன்மைகுறைந்தவர்கள் அதிக ஆபத்துள்ள குழுவின் கீழ் வருகிறார்கள்.

ஆயுள் வேத அணுகுமுறை:

பொதுவாகக் காய்ச்சல், இருமல், சளி, உடல் வலி என்று வரும்போது அதை ஆமரம், கபரம் என்று கூறி ஆயுள் வேத மருத்துவர்கள் மருந்துகளைக் கொடுக்கின்றனர். சிலநேரம் கர்ப்பிணிப் பெண்களுக்கும், இதய நோய் உள்ளவர்களுக்கும் உடனடி சிகிச்சை செய்ய வேண்டிவரும்.

இந்த நோய் தாக்கப்பட்டவர்கள் சுக்கு, பற்பாடகம், கோரைக் கிழங்கு ஆகியவற்றைத் தண்ணீரில் காய்ச்சிக் குடிக்க வேண்டும். ஆயுள் வேதத்தில் ஷடங்கம் என்று ஒரு மருந்து உண்டு.

கோரைக் கிழங்கு, சந்தனம், சுக்கு, இருவேலி, பற்பாடகப் புல், வெட்டி வேர் ஆகியவற்றைக் காய்ச்சித் தண்ணீர் குடிப்பதற்குப்பதிலாக, அடிக்கடி அப்படியே குடிக்கலாம். இரவு வேளைகளில் நன்றாக உறங்கலாம், பகல் உறக்கத்தைத் தவிர்க்க வேண்டும்.

நவீன மருத்துவத்தில் பாரசிட்டமோல் மாத்திரையைக் கொடுப்பார்கள். ஆயுர்வேதத்தில் சுதர்சன மாத்திரைக்கு இணையில்லை. சுதர்சனம் ஒரு கிராம் மாத்திரையில் மூன்று வேளை பெரியவர்களுக்கும், ஒரு மாத்திரை மூன்று வேளை சிறியவர்களுக்கும் கொடுக்கலாம். அல்லது 10 கிராம் சுதர்சன பொடியை வெந்நீரில் கலந்து, இரண்டு வேளை கொடுக்கலாம். கபத்துக்கு வெந்நீர் அல்லது தேன் அனுமானமாகக் கொடுக்க வேண்டும்.

(தொடரும்)

**முளைகட்டிய வெந்தய சுண்டல்**





நீரிழிவு நோயாளிகள் வாரம் இருமுறை முளைகட்டிய வெந்தய சுண்டலை சாப்பிட்டு வந்தால் சீனியின் அளவு கட்டுக்குள் இருக்கும்.

**தேவையான பொருள்கள்:**

முளைகட்டிய வெந்தயம் ஒரு கப்
காய்ந்த மிளகாய் 2
கடுகு, உளுத்தம்பருப்பு தலா கால் கோப்பை
கறிவேப்பிலை சிறிதளவு
பொடித்த வெல்லம் 2 மேசைக்கரண்டி
தேங்காய்த் துருவல் 2 மேசைக்கரண்டி
எண்ணெய், உப்பு தேவையான அளவு.

**செய்முறை:**

முளைகட்டிய வெந்தயத்தை 15 நிமிடம் ஆவியில் வேக வைக்கவும்.

வாணலியில் எண்ணெயை சூடாக்கி, கடுகு, உளுத்தம்பருப்பு, காய்ந்த மிளகாய், கறிவேப்பிலை போட்டுதாளித்த பின் வேக வைத்த முளைகட்டிய வெந்தயம், உப்பு சேர்த்துக் கிளறவும்.

அடுத்து அதில் தேங்காய் துருவல், பொடித்த வெல்லம் தூவி இறக்கவும்.

நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற சுண்டல் இது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





கலாநிதிப்பட்டம் பெற்ற சு.குணேஸ்வரனைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் கலாநிதி சு.குணேஸ்வரன் விருந்தினர்கள் சகிதம் அழைத்து வரப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் காணலாம். (ஐ)



கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் புதிய மாணவத்தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் மு.ரவீந்திரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ஐ)



முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலைகளுக்குப் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் பயிற்சிக் கலாசாலை பயிற்சி முடித்த ஆசிரியர்களுக்கான ஆசிரியர் சேவை சத்திய பிரமாண நிகழ்வு வலயகல்விப் பணிப்பாளர் திருமதி உமாநிதி புவனேஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ஐ433)









சுன்னாகம், கந்தரோடை அறிஞர் ஐயன்னா முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் மெய்ப்பாட்டு நிகழ்வு முன்பள்ளியின் தலைவர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டதுடன், அயற்பாடசாலை அதிபர்கள் சிறப்பு விருந்தினர்களாகக்கலந்து கொண்டனர். நிகழ்வில் சிறுவர்களின் மெய்வல்மை நிகழ்ச்சிகள், இடைவேளை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றதுடன், வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)



வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தனது மாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் தாராபுரம், எருக்கலம்பிட்டி, சாந்திபுரம், பெரிய தம்பனை, தம்புபாடு, பெரிய பண்டிவிரிச்சான், கரிசல் போன்ற கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அண்மையில் சைக்கிள்களை அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கினார். (ஐ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பப்பை புற்றுநோயை குணப்படுத்தும் வெங்காயம்



வெங்காயம் பல நோய்களைக் குணப்படுத்தும் அரும் மருந்தாக திகழ்கிறது.

மனித உயிர்களிடத்திலே ஏற்படுகின்ற கர்ப்பப்பை புற்றுநோயை குணப்படுத்தக்கூடியதான விசேட தன்மையை வெங்காயம் கொண்டுள்ளதாக ஜப்பானில் உள்ள குமாமோடோ பல்கலைக்கழகத்தை சேர்ந்த நிபுணர் குழு ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளதாக தெரியவருகிறது.

இதன்படி வெங்காயத்தில் காணப்படும் ஒளியோகனின்ஏ (ஒ.என்.ஏ.) என்ற மூலப்பொருள் கர்ப்பப்பை புற்றுநோயைக் குணப்படுத்துவதற்கான வினைத்திறனைக் கொண்டுள்ளதாகவும் வெங்காயத்தில் உள்ள மேற்படி 'ஒளியோகனின்ஏ' (ஒ.என்.ஏ.) மூலப் பொருளை புற்றுநோய் மாத்திரைகளில் சேர்த்துக்கொள்ள முடிவு செய்துள்ளதாகவும் ஆய்வு நிபுணர்களால் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்...

படுகின்றது என்பது தொடர்பில் மக்கள் மிகவும் அவதானமாக இருக்கின்றார்கள். அதேநேரத்தில் பொறுப்புக்கூறல் மற்றும் நீதி விடயங்களைக் கையாள்வதில் ஏற்படும் தாமதம் குறித்து அவர்கள் கவலையடைந்துள்ளார்கள்.

நல்லிணக்கத்தை நோக்கி அர்ப்பணிப்பான செயற்பாடுகள் போதியளவில் இடம்பெறவில்லை என்ற பெரும்பாலான தமிழ் மக்களின் கருத்தை நான் இங்கு பிரதிபலிக்கி ன்றேன். பௌதிக, பொருளாதாரத் தேவைகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளை நிறைவேற்ற வேண்டியது அடிப்படை அம்சம் என்கின்றபோதும் எமக்கு இடையில் வளர்ந்து வரும் பிளவு குறித்து கவனம் செலுத்துவதும் அவசியம் - என்றார்.

மேலும், கொழும்பு அரசு, மாகாண அரசுடன் சேர்ந்து செயற்படாதது குறித்தும், தன்னுடைய கடுமையான விமர்சனத்தையும் முன்வைத்தார்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நல்லிணக்க மற்றும் அமைதி முயற்சிகளில் பங்காளியாக உள்வாங்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். சமாதானத்தைக் கட்டியெழுப்பும் அடிப்படைப் பணிகள் தொடர்பில் தமக்கு விமர்சனம் இருப்பதாகவும் குறிப்பிட்டார். பல்வேறு விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படாமலேயே அமைதியைக் கட்டியெழுப்பும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டினார்.

அவற்றில் முக்கியமானவற்றை அவர் பட்டியலிட்டார். அதில், இந்த நடவடிக்கைகளில் 'எங்களையும் உள்வாங்குங்கள்' என்ற எங்களின் கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகியது. இப்போது கூட அந்த விடயம் தாமதமாகவில்லை. எம்மை உள்வாங்கிக் கொள்ளலாம். இந்த நடவடிக்கையினுடைய முக்கியமான பங்காளிகள் இல்லாமல் எப்படி உங்களால் இவற்றை நடைமுறைப்படுத்த முடிகின்றது.

நல்லிணக்கத்துக்கான அடிப்படைக் கட்டமைப்பு, போர்க் குற்றம் தொடர்பில் பொறுப்புக்கூறல் பற்றி எதுவும் கூறவில்லை. எங்களுடைய சட்டங்களில், போர்க்குற்றத்துக்கான நீதி குறித்த எந்த விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இராணுவக் குறைப்பு மற்றும் உயர்பாதுகாப்பு வலயங்கள் விடுவிப்பு, படைத்துறை மறுசீரமைப்பு என்பனவும், அமைதியை உருவாக்குவதற்கான அடிப்படைக் கட்டமைப்புக்குள் கொண்டு வரப்படவேண்டும்.

புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பும் அதற்குள் உள்ளடக்கப்பட வேண்டும். நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி இலக்குகள் எதிர்கால வளர்ச்சிக்கான அடிக்கற்களாக இருக்க வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட மக்களின் விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்றும் முதலமைச்சர் இந்த நிகழ்வில் சாடினார். (சு-58)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர் புதுமைமாதா சொரூபம் கோவா நகரில் இருந்து யாழ். மறைமாவட்டத்துக்குக் கொண்டு வரப்படுமா?

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

இன்று யாழ். கத்தோலிக்க உலகில் பரபரப்பாகப் பேசப்படும் விடயம் குருநகர் புதுமைமாதா சொரூபம் கோவா நகரில் இருந்து யாழ். மறைமாவட்டத்திற்கு கொண்டு வரப்படுமா என்பதாகும்.

யாழ். ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அண்மையில் கோவா நகருக்குச் சென்ற போது கோவா ஆயர் இல்லத்தில் இருக்கும் யாழ். குருநகர் புதுமைமாதா சொரூபத்தை அன்புடன் தரிசித்து முத்திசெய்து பாசத்துடன் அரவணைத்து எடுத்துக்கொண்ட படமும் செய்தியும் ஊடகங்களில் வெளிவந்ததைத் தொடர்ந்து இந்தப் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

400 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணம் போர்த்துக்கீசரின் ஆட்சியில் இருந்த காலம். யாழ்ப்பாணப் பட்டணத்தில் வெற்றிமய மாதா ஆலயத்தின் பங்குத் தந்தையாக இருந்தவர் பிரான்சிஸ்க்கன் சபையைச் சேர்ந்த பிரான்சிஸ்கோ டு சான்ரோ அன்ரோனியோ எனும் துறவி. இவர் கேரளாவிலுள்ள கொச்சின் நகரத்திலிருந்து ஒரு மரத்தைக் கொண்டு வந்து யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்த அன்னக்குட்டி என அழைக்கப்படுகின்ற ஓர் உள்ளூர் சிற்பியிடம் தூயமரியன்னையின் திருவுருவத்தை செதுக்குமாறு வேண்டினார். சிற்பி அன்னக்குட்டி அன்னையின் திருவுருவத்தைச் செய்யும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போதே புதுமைகள் இடம்பெறத் தொடங்கி விட்டன. இந்த புதுமைகள் காட்டுத்தீ போல் நாடெங்கும் பரவ ஏராளமான மக்களும் மரியன்னையின் பக்தர்களும் சிற்பி அன்னக்குட்டி வீட்டுக்குப் படையெடுத்தனர்.

அன்னக்குட்டி மரியன்னையின் திருவுருவத்தை தனது வீட்டிலிருந்து எடுத்துச் செல்லுமாறு ஆலய அதிகாரிகளிடம் பணிவாகக் கேட்டார். ஆலய அதிகாரிகளும் அன்னக்குட்டியின் வேண்டுகோளை ஏற்று அதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு அன்னையின் திருவுருவத்தை ஆலயத்துக்குக் கொண்டுவரத் திட்டங்களைத் தீட்டினர். 1614ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதி, சிற்பி அன்னக்குட்டியின் வீட்டிலிருந்து ஆடம்பரமாக மிகவும் சிறப்பான முறையில் திருவுருவம் கோட்டை வெற்றிமய மாதாவின் ஆலயத்துக்கு பவனியாகக் கொண்டு செல்லப்பட்டது. பவனி ஆரம்பமாக இருக்கும் வேளை சங்கிலி அரசன் தனது படைவீரர்களை பவனி செல்லும் பாதையில் நிறுத்தி பவனி செல்லாதவாறு இடையூறு செய்ய இருக்கிறான் என்று தகவல் கிடைத்தது.

### அரசனின் முடிவு மாற்றம்

அரசனுடன் பேச பிரதிநிதிகள் சிலர் அனுப்பப்பட்டனர். பிரதிநிதிகளின் விளக்கத்தை விரிவாகக் கேட்ட சங்கிலி அரசன் தான் எடுத்த முடிவை மாற்றிக்கொண்டு அந்த பவனி சிறப்பாகச் செல்ல அனுமதித்ததுடன் தனது மாளிகை முன்பாகச் செல்லவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு தனது பங்களிப்பையும் வழங்க முன்வந்தார்.

மரியன்னையின் திருவுருவம் அரசனின் மாளிகை முன் சென்ற பொழுது அரசனும் அரசியும் பிள்ளைகளும் தமது முற்றத்தில் நின்று மிகவும் ஆச்சரியமாகவும் ஆர்வமாகவும் இரசித்தனர். மேலும் பல நூற்றுக்கணக்கான கத்தோலிக்கரல்லாத மக்களும் இந்தப் பவனியில் கலந்து கொண்டனர்.

இந்தப் பவனி முடிவுறும் வேளை மரியன்னையின் பவனி சிறப்பாகச் சென்றதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் பின்வருமாறு தெரிவித்தார். "இந்தப் போர்த்துக்கீசரைப் பார்த்து ஆச்சரியப்படுகின்றேன். வழமையாக இவர்கள் மிகவும் பலசாலிகளாகவும் புத்திசாலிகளாகவும் இருப்பதாக எண்ணினேன். ஆனால் இப்பொழுது ஒரு மரக்கட்டையைத் தங்களின் தோளின் மேல் வைத்து அன்னக்குட்டியின் வீட்டிலிருந்து ஆலயத்துக்கு கொண்டு செல்லுகின்றார்களே!" என்று ஏளனம் செய்துள்ளார். அவர் இந்த வார்த்தைகளைச் சொல்லி முடிக்கும் முன்னரே அவர் முகத்தில் ஒரு



கல் வந்து மோதியது. உடனே தரையில் விழுத்தப்பட்ட அவர் அனைவர் முன்னிலை யிலும் உயிரிழந்தார்.

### புதுமை மாதா

அன்னையின் இத்திருவுருவம் வழியாக பல புதுமைகள் நிகழ்ந்ததால் புதுமை மாதா எனப் பிரபல்யமாக அழைக்கப்பட்டார். வெற்றிமய மாதா ஆலயத்துக்குப் பவனியாகக் கொண்டு வரப்பட்ட அன்னை சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட ஒரு மேடையில் வைக்கப்பட்டார்.

அற்புதங்கள் பல நிகழ்ந்த இத்திருவுவத்தைச் சுற்றி மக்கள் வணங்கி நின்றார்கள். அன்னையின் பாதத்தைக் கொஞ்சி அவரின் ஆசியையும் ஆதரவையும் பாதுகாப்பையும் வேண்டி நின்றார்கள்.

முதல் தடவையாக ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்ட புதுமைகள் பல புரிந்த, புரிந்து கொண்டிருக்கின்ற அன்னையின் திருவுருவம் வழமையான வழிபாடுகளின் பின்னர் துறவிகளால் புதிதாக அமைக்கப்பட்ட ஒரு திருப்பீடத்தில் எழுந்தருளச் செய்யப்பட்டார். எல்லோரும் அவரை வழிபடத் தொடங்கினார்கள்.

நாள்கள் செல்லச் செல்ல வெற்றிமய மாதாவின் ஆலயத்தில் வைக்கப்பட்ட புதுமை மாதாவினால் எண்ணற்ற புதுமைகள் நிகழத் தொடங்கிவிட்டன.

இதனால் அன்னையை வழிபடவும் தங்கள் விண்ணப்பங்களை அன்னையிடம் தெரிவிக்கவும் மக்களின் வருகை அதிகரித்துக் கொண்டு சென்றது.

யாழ். குடாநாட்டில் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவருமே இந்தப் புதுமை அன்னையைத் தமது பாதுகாவலியாக ஏற்றுக்கொண்டு அன்னைக்கு கான ஆலயத்தை எழுப்பத் தீர்மானித்தனர்.

### வந்தது தடை

புதுமை மாதாவுக்கு ஒரு பேராலயத்தை நிர்மாணிக்கும் பொறுப்பை ஆற்றல் கொண்டவரும் பெரும் செல்வாக்கும் மதிநுட்பமும் படைத்தவருமான பேற்றோ டி பிற்றான்கோர் எனும் குருவானவரிடம் ஒப்படைத்தார்கள். அவரும் உடனடியாக ஆலயத்தைக் கட்டும் பணியை ஆரம்பிக்கத் தயாரானார்.

ஆலயத்துக்கு அத்திபாரத்தைப் போட்டு கட்டடத்தை ஆரம்பிக்க இருக்கும்வேளை, ஓர் ஏமாற்றமான செய்தி கோவாவிலிருந்து வந்தது. அவருடைய சபையைச் சேர்ந்த திருமடத் தலைவரிடமிருந்து ஒரு முக்கியமான பொறுப்பு வாய்ந்த பணிக்காக அவர் திரும்பவும் கோவாவுக்கே அழைக்கப்பட்டார். பேற்றோ அடிகளார் மிகவும் கவலையடைந்தவராக, கண்களில் கண்ணீர் மல்க புதுமை மாதாவிடம் "ஓ அன்னையே, நான் எவ்வளவு விரும்பினாலும், உமக்கு ஓர் ஆலயம் கட்டுவதற்கு தகுதியற்றவனும் ஒரு பாவியென்றும் நான் அறிவேன். எவ்வளவு சிறிய பணியாக இருப்பினும் அதை நீர் ஏற்றுக்கொள்ளமாட்டீர் என எனக்குத் தெரிந்தாலும் உமக்கு ஒரு மிகச்சிறந்த பணியை ஆற்ற ஆவலாயிருக்கின்றேன் அன்னையே. ஆகவே உமக்குச் சித்தமானால் நான் மீண்டும் திரும்பி வந்து உமக்கு நான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தயை புரிவீராக. எனது வாழ்வை உமக்கு காணிக்கையாக்கி என் வாழ்நாளில் உமக்கு ஓர் ஆலயத்தைக் கட்டிச் சேவை புரிய அருள் தாரும்" என வேண்டினார்.

### பேற்றோ டி பிற்றான்கோர் அடிகளார் யாழ்ப்பாணம் செல்ல அனுமதி

பேற்றோ அடிகளார் கோவாவுக்கு வந்த போது அவருடைய திருமடத் தலைவர் அவரின் ஆவலைத் தெரிந்து கொண்டு அதன் சிறப்பையும் புரிந்தவராக பேற்றோ அடிகளாரை யாழ்ப்பாணம் செல்ல அனுமதித்தார்.

பேற்றோ அடிகளார் யாழ்ப்பாணம் திரும்பி வந்து ஒன்றரை ஆண்டுகளில் புதுமை மாதாவுக்கான ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. 1622ஆம் ஆண்டு செப்ரெம்பர் 8ஆம் நாள் ஆலய கட்டடவேலைகள் முழுமை பெற்று புதுமை மாதாவின் திருவுருவத்தை புதிய ஆலயத்துக்குக் கொண்டு வருவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன.

போர்த்துக்கீசர்கள் வெற்றிமய மாதாவின் பெருநாளை திருத் தூதர்கள் சீமோன் யூதா ததேயு திருவிழாவின் போதே கொண்டாடுவது வழக்கமாகவிருந்தது. ஆகவே அந்த நாளிலே புதுமை மாதாவின் திருவுருவத்தைப் புதிதாகக் கட்டப்பட்ட ஆலயத்துக்குப் பவனியாகக் கொண்டுசென்றனர்.

### பேற்றோ டி பிற்றான்கோர் அடிகளார் புதுமை மாதா ஆலயத்தில் அடக்கம்

பேற்றோ அடிகள் மேலும் பல ஆண்டுகள் யாழ்ப்பாணத் திருச்சபையில் பணி புரிந்து தனது 70ஆம் வயதில் நிலைவாழ்வு பெற்றார். அவரின் திருவுடல் அவரால் கட்டியெழுப்பப்பட்ட புதுமை மாதா ஆலயத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

இதே காலத்தில் வாழ்ந்த ஒரு படைத்தளபதியாக இருந்த பிலிப்பே டி ஒலிவிய்ரா என்பவரும் இவ்வாலயத்தைக் கட்டியெழுப்புவதற்குத் துணையாக இருந்தவர். அதனால் இவரும் 1627ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி உயிரிழந்தபோது இதே ஆலயத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார்.



### 1661ஆம் ஆண்டு புதுமை மாதா கோவா சென்றார்

இவ்வாலயம் யாழ்ப்பாணத்தில் எங்கே கட்டப்பட்டது என்ற வினா எழுப்பும் பலருக்கு இவ்வாலயம் யாழ்ப்பாணக் கோட்டையினுள்ளே தான் கட்டப்பட்டது என்பது புதிய தகவலாகும்.

1658ஆம் ஆண்டு யூன் மாதம் 24ஆம் திகதிவரை புதுமை மாதாவிற்கான வழிபாடுகளும் வணக்கங்களும் இடம்பெற்றன. போர்த்துக்கீசரிடமிருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அவர்களின் கொடியேற்றப்பட்டதோடு அது நிறுத்தப்பட்டது.

1661ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி இப் புதுமை மாதாவின் திருவருவம் கோவாவில் உள்ள தூய பிரான்சிஸ் அசிசியாரின் கன்னியர் மடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இன்று கோவாவில் தூய பேதுரு ஆலயத்தில் வைத்து புதுமை மாதாவை கோவா மக்கள் சிறப்பாக வழிபட்டு ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் வரும் முதல் ஞாயிற்றுக்கிழமையில் புதுமை மாதாவின் பெருவிழாவைக் கொண்டாடி வருகின்றார்கள்.

17ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் உருவான புதுமை மாதா என்றழைக்கப்படும் அற்புத அன்னையின் திருவுருவம் இன்று இந்தியாவின் கோவா மாநிலத்தில் உள்ள பநெலிம் என்ற நகரில் தூய பேதுரு ஆலயத்தில் வைத்து வணங்கப்பட்டு வருகிறது.

> **“ பேற்றோ அடிகளார் கோவாவுக்கு வந்தபோது அவருடைய திருமடத் தலைவர் அவரின் ஆவலைத் தெரிந்து கொண்டு அதன் சிறப்பையும் புரிந்தவராக பேற்றோ அடிகளாரை யாழ்ப்பாணம் செல்ல அனுமதித்தார்.**
> **பேற்றோ அடிகளார் யாழ்ப்பாணம் திரும்பி வந்து ஒன்றரை ஆண்டுகளில் புதுமை மாதாவுக்கான ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. 1622ஆம் ஆண்டு செப். ரெம்பர் 8ஆம் நாள் ஆலய கட்டடவேலைகள் முழுமை பெற்று புதுமை மாதாவின் திருவுருவத்தை புதிய ஆலயத்துக்குக் கொண்டு வருவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன.**

### புதுமைமாதா சொரூபம் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்படுமா?

குருநகர் புதுமைமாதா சொரூபம் கோவாவில் இருப்பது பலரும் அறியாத ஓர் உண்மை. யாழ். ஆயர் குருநகர் புதுமை மாதாசொரூபத்தை அன்போடு அணைத்து வைத்திருக்கும் படமும் செய்தியும் வெளியானவுடன் அனைவருக்கும் தெளிவான செய்தியானது.

இணையத்தில் இச்செய்தியைப் படித்த கனடாவில் இருக்கும் அன்ரன் பிலிப் சின்னராசா அவர்கள் ஒரு பெரிய விளக்கக் கட்டுரையை அனுப்பியுள்ளார். அதனை வைத்தே இவ்விளக்க கட்டுரை அமைக்கப்பட்டது. அன்ரன் பிலிப் சின்னராசாவை விட இணையத்தில் இச்செய்தியைப் படித்த கனடாவில் இருக்கும் சுறேன் றாஜன் என்பவரும் பல தகவல்களை ஆதாரத்துடன் அனுப்பியுள்ளார். அவற்றை எல்லாம் அடுத்த வாரம் நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப்...

செய்து அதனை அரசியலாக்கித் தன்னைப் போகவிடாமல் செய்யவேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி வீடு கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த் யாழ்ப்பாணம் வருகை தருவதாக இருந்தது. இதற்கு அரசியல் ரீதியாக எதிர்ப்புக்கள் கிளம்பின. இந்த நிலையில் நேற்று மதியம் ரஜினிகாந்த் இது தொடர்பில் நீண்ட அறிக்கை வெளியிட்டார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:

நான் இரண்டு விடயங்களுக்காக இந்த விழாவில் கலந்து கொள்ள சம்மதித்தேன். அந்த வீடுகளைத் திறந்து வைப்பது, காலம் காலமாய் வாழ்ந்த தங்களின் பூமிக்காக இனத்துக்காக உரிமைக்காக சுய கௌரவத்துக்காக லட்சக்கணக்கில் குருதி சிந்தி, மடிந்து தங்களைத் தாங்களே சுய சமாதியாக்கிக் கொண்டு பூமிக்குள் புதைந்து கிடக்கும் அந்த வீர மண்ணை வணங்கி, மாவீரர்கள் வாழ்ந்த, நடமாடிய இடங்களைப் பார்த்து அவர்கள் சுவாசித்த காற்றையும் சுவாசிக்க வேண்டுமென்ற ஆசை வெகு நாள்களாய் என்னுள் இருந்தது. அதை நிறைவேற்றிக் கொண்டு பல லட்சக்கணக்கில் கூட இருக்கும் என்னை வாழவைக்கும் தமிழ் மக்களைப் பார்க்க வேண்டும். மனம் திறந்து பேச வேண்டும் என்று ஆவலாய் இருந்தேன்.

அது மட்டுமன்றி இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனாவைச் சந்திக்க நேரம் கேட்டு, சந்தித்து ஒரு சாண் வயிறுக்காக உயிரைப் பணயம் வைத்து, வேறு எந்த தொழிலுமே தெரியாததால் கடலில் போய் மீன்பிடிக்கும் என்னுடைய மீனவச் சகோதரர்களுடைய உயிரைப் பறித்து, அவர்களின் வாழ்வாதாரமான படகுகளை சிறைப்பிடித்து வைக்கும் சம்பவங்களை அன்றாடப் பத்திரிகைகளில் படிக்கும்போது நெஞ்சம் துடிக்கிறது. அதைப் பற்றி என் அளவில் அவருடன் இதற்கு ஒரு சுமூகமான தீர்வுகாண வேண்டும் என்று ஒரு வேண்டுகோளை வைக்கஎண்ணி இருந்தேன்.

இந்தத் தருணத்தில் திருமாவளவன், ஊடகங்களின் மூலமாகவும், வைகோ தொலைபேசி மூலமாகவும், வேல்முருகன் நண்பர் மூலமாகவும் பல அரசியல் காரணங்களை முன்வைத்து இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்ளக்கூடாது என்று அன்புடன் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் சொன்ன காரணங்களை முழுமனதுடன் என்னால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை என்றாலும், அவர்களுடைய அன்பு வேண்டுகோளை ஏற்று நான் இவ்விழாவில் கலந்துகொள்வதை தவிர்க்கிறேன்.

இந்தச் சமயத்தில் நான் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நான் அரசியல்வாதி அல்ல. நான் ஒரு கலைஞன். திருமாவளவன் சொன்னதைப் போல மக்களை மகிழ்விப்பது தான் என்னுடைய கடமை. இனிவரும் காலங்களில் இலங்கை சென்று அங்கே வாழும் தமிழ் மக்களைச் சந்தித்து, அவர்களை மகிழ வைத்து, அந்தப் புனிதப் போர் நிகழ்ந்த பூமியை காணும் பாக்கியம் கிடைத்தால், தயவு செய்து அதை அரசியலாக்கி என்னைப் போகவிடாமல் செய்துவிடாதீர்கள் என்று அன்புடனும், உரிமையுடனும் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (த-5)

## கூட்டமைப்பின்....

பொய்யாக்கும் வகையில்தான் புதிய அரசமைப்பில் அதிகாரப் பகிர்வு கிடைக்கும். முழுமையான தீர்வைப்பெற தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் முஸ்லிம் தலைமைகள் ஒன்றிணையவேண்டும். இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் கூட்டு அரசின் பிரதி அமைச்சருமான எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மைத்திரி - ரணில் தலைமையிலான கூட்டு அரசின் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதீத நம்பிக்கை வைத்துள்ளது. கூட்டமைப்பின் கோரிக்கைகளான கூட்டாட்சி முறைமை, 13ஆவது திருத்தச் சட்டத்துக்கும் மேலான அதிகாரப் பகிர்வு, காணி, பொலிஸ் அதிகாரங்கள் ஆகியவற்றை தென்னிலங்கையில் உள்ளவர்கள் பகிரங்கமாக விவாதிக்கின்ற நிலையில் இல்லை. புதிய அரசமைப்பில் கூட்டமைப்பு எதிர்பார்த்த தீர்வுகள் கிடைக்கப் போவதில்லை. இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தை முஸ்லிம் தலைமைகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவுபடுத்தவேண்டும். தமிழ் முஸ்லிம் தலைமைகள் ஓரணியில் பயணிக்கவேண்டும். அப்போதுதான் தமிழ்பேசும் மக்களின் சிறுபான்மை இனத்தவரின் பலத்தை தென்னிலங்கைக்குக் காட்ட முடியும். இது தமிழ்பேசும் மக்களுக்குரிய அதிகாரங்களைப் பெறுவதற்கு உறுதுணையாகவும் இருக்கும் - என்றார். (த-5)

## பன்னாட்டு...

கொடுப்பதாக இப்போது முதலைக் கண்ணீர் வடிக்கின்றார்.

இவ்வாறு அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா தெரிவித்தார்.

களனிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

போர்க்குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டுக் கருத்துகள் வலுவடைய முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவே காரணம். போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட இரண்டு வாரங்களில் முன்னாள் ஐ.நா. பொதுச் செயலாளரை நாட்டுக்கு வரவழைத்து போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்யப்படும் என்று உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்தார்.

அந்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே பன்னாட்டு விசாரணை வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது. அந்தத் தருணத்தில் நாட்டையும், இராணுவத்தினரையும் காட்டிக் கொடுத்தது மகிந்த ராஜபக்சதான். தற்போது இராணுவத்தினர் தொடர்பில் முதலைக் கண்ணீர் வடித்து வருகிறார்.

எவராவது ஒரு இராணுவச் சிப்பாயைச் சிறையில் அடைத்தால் கண்ணீர் விடுகிறார். அவர் மறந்து விட்டார் அன்று இராணுவத் தளபதியைச் சிறையில் அடைத்தார். பிரிகேடியர்கள், கேணல்கள், ஓய்வுபெற்ற இராணுவத்தினர் என்று அனைவரையும் சிறையில் அடைத்திருந்தார். இராணுவத்தினருக்குச் செய்த கொடுமைகள் காரணமாகச் சிலர் மாரடைப்பு வந்தும் இறந்து போயிருந்தனர். தற்போது அவர் ஏதோ புனிதராகிவிட்டது போல் பேச முற்படுகிறார் - என்றார். (த-5)

## தீர்மானத்தை...

சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஆயுதமோதல்களின் பாரம்பரியத்திற்குத் தீர்வைக் காண்பதற்காக இன்னமும் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பல உள்ளன.

இலங்கை அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான தலைமைத்துவத்தை வழங்கவேண்டும். தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கான கால எல்லையுடனான தந்திரோபாயத்தை உருவாக்கவேண்டும். நல்லிணக்கச் செயலணியின் பரிந்துரைகளைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியதை வரவேற்கின்றேன். மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்துக்குவழங்கும் முக்கியத்துவம் குறித்த வலுவான சமிக்ஞைகளை இலங்கை வெளிப்படுத்தியுள்ளது - என்றார். (த-5)

## இரகசியக்...

கீழே கூலிப் படையை வைத்து இயக்கியதாகவும், அதன் மூலம் பத்திரிகையாளர்கள் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் சிங்கள ஊடகத்துக்கு வழங்கியுள்ள பதிலிலேயே கோத்தபாய ராஜபக்ச மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான கூலிப் படையை உருவாக்க முடியும். அது குறித்து இராணுவத் தளபதி அறிந்து வைத்திருப்பது அவசியம். அந்தப் படை சார்ந்த எழுத்து மூலமான ஆவணங்கள் இராணுவத் தலைமையகத்தில் பேணப்படவேண்டும். நான் பதவி வகித்த காலத்தில் இப்படியான கூலிப்படைகள் இருந்திருக்கவில்லை.

இதேவேளை, அரசியலில் பிரவேசிப்பதற்கு இதுவரை தீர்மானம் எடுக்கவில்லை. 2020 ஆம் ஆண்டில் நடத்த எதிர்பார்க்கப்படும் அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் எண்ணமும் எனக்கு இல்லை. தலைமை அமைச்சர் பதவியோ அல்லது அரச தலைவர் பதவியோ எனக்கு அவசியம் இல்லை - என்றார். (த-5)

## வெளிநாட்டு...

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில் கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்புக்கு அமையவே வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய நாடுகள் நீதிபதிகள் விசாரணைகளில் பங்கேற்பார்கள் என்ற பதத்தின் ஊடாக நிபுணத்துவ ஆலோசனை அல்லது கண்காணிப்பாளர்களாக இருக்க முடியும் என்பதனைப் புரிந்து கொள்ளவேண்டும். வெளிநாட்டு நீதிபதிகள் விசாரணை செய்ய மாட்டார்கள்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச காலத்திலும் வெளிநாட்டு நீதிபதிகள் இவ்வாறான பங்களிப்புக்களை வழங்கியுள்ளனர். கண்காணிப்பு மற்றும் நிபுணத்துவ ஆலோசனை என்ற அடிப்படையில் இந்திய முன்னாள் தலைமை நீதியரசர் பகவதி, மகிந்த ஆட்சிக் காலத்தில் பங்களிப்பை வழங்கியிருந்தார். தருஸ்மன் அறிக்கையை மற்றுமொரு உதாரணமாகக் குறிப்பிட முடியும். இந்தோனேசியாவின் சட்டமா அதிபர் ஒருவரே அந்த அறிக்கைக்குப் பங்களிப்பு வழங்கியிருந்தார்.

சில தரப்பினர் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு என்பதனை வெளிநாட்டு நீதிபதிகள் உள்நாட்டில் வழக்கு விசாரணை செய்வார்கள் என்ற அர்த்தத்தில் பரப்புரை செய்து வருகின்றனர். கலப்பு நீதிமன்றம் என்ற பதத்தைச் சிலதரப்பினர் குறுகிய அரசியல் லாபத்துக்காக பயன்படுத்தி வருகின்றனர். இது குறித்து மக்கள் தெளிவுடன் இருக்க வேண்டும் - என்றார். (த-5)

## பயங்கரவாதிகளால்...

கத்துக்குமான அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்றுப் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா கலந்து கொண்டிருந்தார். திட்டமிட்ட நேரத்திற்கு அவரது நிகழ்வுகள் ஆரம்பமாகவில்லை. தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பளைவீமன்காமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் முதலில் கலந்துகொண்டார். அங்கு மக்களையும் சந்தித்தார். அதன் பின்னர் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் முதன்மை நிகழ்வு நடைபெற்றது. தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதன் பின்னர் தெல்லிப்பழையில் மாம்பழக் கிராமத்துக்கான முதலாவது மாங்கன்றை நடும் விழாவிலும் கலந்து கொண்டார். இறுதியில் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற நிகழ்வுகளில் சந்திரிகா பங்குபற்றினார்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்றநிகழ்வில் உரையாற்றியவடக்கு மாகாண ஆளுநர் கூரே மேலும் தெரிவித்தாவது:

பத்து வருடம் வழிகாட்டியாக விளங்கிய சந்திரிகா இன்றும் தனது சேவையை தொடர்கின்றார். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தன்னால் முடிந்த சேவைகளை செய்ய வேண்டும் என்ற சிந்தனையே இதற்குக் காரணம். ஓய்வூதியம் எடுத்து நவீன வசதிகளுடன் வாழ வேண்டிய சந்திரிகா தற்பொழுது இங்கு வந்திருப்பது அவருடைய மனித நேயத்தை வெளிப்படுத்துகின்றது. வடக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளை அறிந்தநபராக காணப்படுகின்றார்.

போர்க் காலங்களில் மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனையே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு என்ன நிவாரணம் வழங்கவேண்டும் என்பதை ஆராய்ந்து அதனையே செய்யவேண்டும். கொழும்பு அரசும் வடக்கு அரசும் இந்த விடயத்தில் இணைந்து செய்யவேண்டும் - என்றார்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன், வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான அ.பரஞ்சோதி மற்றும் சுகிர்தன், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5,8)

## குற்றவாளிகள்...

மீது காலதாமதம் காட்டாது விரைவாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று.

வடக்கு முதலமைச்சரைக் கோரும் பிரேரணை அடுத்த அமர்வில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. வடக்கு மாகாணசபையின் ஆளும் கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி சமர்ப்பித்துள்ள பிரேரணை, எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள சபை அமர்வுக்கான நிகழ்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: யாழ்ப்பாணம் மாநகர சபையில் நடைபெற்ற ஊழல் மோசடிகள் சம்பந்தமாக விசாரிப்பதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி நியமிக்கப்பட்டார். அந்த விசாரணைகள் நடைபெற்று ஒரு வருடத்துக்கு மேலாகியும் இதுவரை அது தொடர்பான அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை. அத்துடன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக தொடர்புடையோர் மீது இதுவரையும் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த விசாரணை அறிக்கையை சபையில் பகிரங்கப்படுத்துவதோடு குற்றவாளியாகக் காணப்பட்டோர் மீது காலதாமதம் காட்டாது விரைவாக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முதலமைச்சரை இந்தச் சபை கோருகின்றது என்றுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் நடைபெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட அறிக்கையை 'உதயன் பத்திரிகை' ஏற்கனவே வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## 22 மாதங்கள்...

வழங்குமாறு, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டிருந்தது.

அந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ள தலைமைச் செயலாளர் அலுவலகத்தின் தகவல் அலுவலர் திருமதி கு.காஞ்சனா, வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் நடந்ததாகக் கூறப்பட்ட முறைகேடுகள் தொடர்பிலான புலன்விசாரணை தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. புலனாய்வு முடிவடைய முன் அது தொடர்பான தகவல்களை வெளியிடல் புலனாய்வின் நலன்களைப் பாதிக்கும் என்பதால் தற்போது இது தொடர்பான தகவல்களை எம்மால் வழங்க முடியாதுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி விசாரணைக் குழு 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் நியமிக்கப்பட்டது. ஓய்வுபெற்ற மூவரைக் கொண்டு இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## இராணுவத்துக்கு...

சம்மேளனச் செயலாளர் மு.சிவமோகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவட்ட விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்க வேண்டிய அரச திணைக்களங்களை இராணுவத்தினர் அபகரித்துள்ளனர். அவற்றை விடுவித்து விவசாயிகளின் முன்னேற்றத்துக்கு உதவ முன்வர வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்ட 4 முக்கிய அரச திணைக்களங்களின் அலுவலகங்கள் மற்றும் காணிகள் என அனைத்தையும் இராணுவத்தினர் அபகரித்து வைத்துள்ளனர். இவற்றை ஆக்கிரமித்துள்ள இராணுவம் போர் முடிந்து பல வருடங்கள் கடந்தபோதும் அவற்றை விடுவிப்பதற்கான எந்தவித நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. இதனால் மாவட்ட விவசாயிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

கிளிநொச்சி வட்டக்கச்சியில் உள்ள 415 ஏக்கர் விவசாயப் பண்ணை, இரணைமடுக் குளத்தின் அருகில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கண்காணிப்பாளர் அலுவலகம் , ஏ9 வீதியில் உள்ள விவசாயத் திணைக்களத்தின் சேவைக்காலப் பயிற்சி நிலையம், காக்கா கடைச் சந்திக்கருகில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அலுவலக கட்டடம் ஆகியவற்றினை விடுவிக்குமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு வட்டக்கச்சிப் பண்ணையின் முன்பாக ஆரம்பமாகும் இந்த ஆர்ப்பாட்டம் முற்பகல் 10 மணிக்கு அங்கிருந்து நகர்ந்து முற்பகல் 11 மணியளவில் மாவட்டச் செயலகத்தைச் சென்றடையும் . அங்கு அரச தலைவருக்கு வழங்குவதற்கான மனு மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்படும். அதன் பிரதி மாகாண முதலமைச்சருக்கும் அனுப்பி வைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆர்ப்பாட்டம் தொடர்பான தகவல் பொலிஸாருக்கும் வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது-என்றார். (த-4101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரணமின்றி...

செயற்படுவதற்கு நாம் தயாராக இல்லை" இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்தார்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்துக்குப் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தப் பிரதேசத்தில் உள்நாட்டுப் போரின் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக நான் அறிவேன். தற்போதைய அரசு இந்தப் பாதிப்பு தொடர்பில் மிகவும் கவலையடைந்துள்ளது. அவர்கள் கவலைப்படுவது மட்டும் போதாது. அதிலிருந்து மக்களை மீட்கவேண்டும்.

காணாமற்போன தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிய வேண்டும் என்பது தான் இந்தப் பிரதேசத்தின் முக்கிய விடயமாக உள்ளது.

போர்க் காலத்தில் இராணுவம் பொதுமக்களின் காணிகளைக் கைப்பற்றிக் கொண்டது. கைப்பற்றிய காணிகளை இராணுவம் மீளவும் மக்களிடம் ஒப்படைக்கவேண்டும். இவை எல்லாவற்றுடன் இந்தப் பிரதேசங்களின் கல்வி, சுகாதாரம் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் போன்றவற்றை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்ல வேண்டிய தேவை இருக்கின்றது.

காணாமற்போனவர்களின் விடயம் தொடர்பாக அவர்களின் உறவுகள் நாளாந்தம் எனது செயலணிக்கு வந்து அழுது புலம்பிச் செல்கின்றனர். இது தொடர்பாக நேர்மையாக நடவடிக்கை எடுப்பதாக அரசு, மக்களுக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் வாக்குறுதி கொடுத்துள்ளது. அதன் காரணமாகப் பாதுகாப்புத் தரப்புடனும் பொலிஸாருடனும் கலந்துரையாடி ஒரு செயற்றிட்டத்தைத் தயாரித்துள்ளோம்.

சட்டவரைவு நாடாளுமன்றுக்குக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தச் சட்டவரைவில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கையொப்பமிட்டு அதனை நடைமுறைப்படுத்தும் பணி மட்டுமே மிகுதியாகக் காணப்படுகின்றது. இந்த விடயம் இலகுவான விடயமாக அமைந்திருக்கவில்லை.

அதற்கு முக்கிய காரணம், வரலாற்றில் எங்கும் இல்லாதவாறு முன்னாள் அரச தலைவர் ஒருவர் நாட்டில் உள்ள இன, மத ஒற்றுமையைக் குலைக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றார். அவர் மக்கள் மத்தியில் இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டிவருகின்றார். முன்னாள் அரச தலைவருடன் இருந்த 40 பேர் தற்பொழுதும் நாடாளுமன்றில் அங்கம் வகித்து வருகின்றனர். அவ்வாறான சவால் இருந்தபோதிலும் நாம் காணாமற் போனவர்கள் தொடர்பான இந்தச் சட்டத்தை நிறைவேற்றினோம். இன்னும் சில அற்பமான விடயங்கள் மட்டுமே செய்ய வேண்டிய தேவைகள் உள்ளன.

இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக இலங்கையில் உள்ள எல்லா இராணுவத்தையும் தூக்குமேடைக்குக் கூட்டிச் செல்வதாக அர்த்தமில்லை.

காணமற்போனவர்கள் தொடர்பாக முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நட்ட ஈடுகளை வழங்குவதற்கான வேலைகளையும் செய்து வருகின்றோம்.

போர் முடிவடைந்த பின்னர் வடக்குகிழக்குப் பிரதேசத்தில் சுமார் 70 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படாமல் இருந்தன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவத்திடம் 5 ஆயிரத்து 300 ஏக்கர் காணியே தற்போது உள்ளது. அவற்றுள் 4 ஆயிரத்து 300 ஏக்கர் காணிகள் தனியாருக்குச் சொந்தமானவை. மிகுதி ஆயிரத்து 50 ஏக்கர் காணி அரச காணியாக இராணுவத்திடம் இருக்கின்றது. விடுவிக்கவேண்டிய 4 ஆயிரம் ஏக்கர் காணியில் சில காணிகளை இராணுவம் விடுவிக்க முடியாது என்று கூறி வருகின்றது. பலாலி, காங்கேசன்துறை போன்ற பிரதேசங்களில் இராணுவ முகாம்கள் காணப்படுவதே காரணம் ஆகும். ஆனாலும் சில பகுதிகள் மட்டும் விடுவிக்கப்படலாம் என்று நினைக்கின்றேன். காணி விடுவிப்பின்போது நாங்கள் மிகவும் முரண்பாடுகளுடனேயே விடுவித்து வருகின்றோம். இராணுவம் மீளக் கையளிக்காத காணி உரிமையாளர்களுக்கு நாம் மாற்றுக் காணிகளை வழங்குவது தொடர்பாக ஆலோசனை செய்து வருகின்றோம். முல்லைத்தீவு மாவட்டத்தில் 9 ஆயிரம் ஏக்கர் காணிகள் இராணுவம் வசம் உள்ளன. வவுனியாவில் 7 ஆயிரத்து 500 ஏக்கர் வரையிலான காணிகள் இராணுவம் வசம் உள்ளன. ஏனைய மாவட்டங்களில் 2 ஆயிரத்துக்கு குறைவான ஏக்கர் காணிகளே இராணுவத்திடம் இருக்கின்றன.

தமிழ் மக்களுக்கான தீர்வு இன்று வரை கிடைக்கவில்லை. இலங்கை அரசியலைப் பொறுத்த வரையில் இரண்டு பிரதான கட்சிகளே காணப்படுகின்றன. ஒரு கட்சி பிரச்சினைக்குத் தீர்வு காண முற்படும்போது மற்றைய கட்சி குழப்புகின்ற நிலைமை காணப்பட்டது. இதனால் தான் சில தமிழ் அரசியல் தலைவர்கள் தங்களுக்கென ஒரு தனிநாட்டைத் தருமாறு கோரி அதற்காகப் போராடி பெரும் அழிவை ஏற்படுத்தும் நிலைமையும் ஏற்பட்டது.

அதனை நான் ஒருபோதும் அனுமதிப்பதில்லை. ஆனால் அவர்களுக்கு அவ்வாறான நிலைமை ஒன்று இருந்தது. தற்போது அந்த நிலைமை மாறியுள்ளது. இரு பிரதான கட்சிகளும் இணைந்துள்ளன. அரசமைப்புத்தான் நாட்டின் உன்னதமான சட்டம். சகல மக்களுக்கும் சம உரிமைகளை வழங்க வேண்டும் என்பதை ஏற்கின்றோம். அதனை வழங்காவிட்டால் நாட்டை முன்னேற்ற முடியாது என்றார். (த-58)

**2017 ஆம் ஆண்டு புதுக்கணக்கை முன்னிட்டு விசேட கழிவு விற்பனை**

20% தொடக்கம் 50% வரையான விலைக்கழிவு

இந்தியாவின் பிரபல எழுத்தாளர்களின் கைவண்ணத்தில் உருவான அனைத்து படைப்புகளும் 2017 ஆம் ஆண்டு புதுக்கணக்கை முன்னிட்டு விசேட கழிவு விலையில் விற்பனையாகின்றது.

நாவல்கள், சரித்திரம், அரசியல், மனோதத்துவம் புத்துணர்ச்சியூட்டும் நூல்கள், ஆங்கில தமிழ் அகராதி தமிழ் தமிழ் அகராதி, கழகத்தமிழ் அகராதி, திருக்குறள் (சிறிய பெரிய வகைகள்) இன்னும் ஏராளமானவை.

All Ceylon Distributors No.212 & 214, K.K.S Road, Jaffna - 0212225542/0212227983

**சிறுநீரகம் தேவை**

41 வயதினையுடைய ஒருவருக்கு B+ அல்லது O இனத்தைச்சேர்ந்த சிறுநீரகம் தேவை.

**0779783528**

**வேலைக்கு ஆள்தேவை**

பிரபல புடைவை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் அனுபவம் உள்ளவர், அற்றவர்கள் இருபாலாரும் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு.

**077 465 2744/077 352 6957**

வேலை வாய்ப்பு – கிளிநொச்சி / வவுனியா

**ஓஸ்ரியா**

**Printing (Pvt)Ltd**

Manager - Killinochchi
Cashier/Counter Clerk – Killinochchi/Vavuniya
(சிங்களம் பேசத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது)
Graphic designers - Killinochchi/Vavuniya

ஓஸ்ரியா பிறின்டிங் (பிறைவேற்) லிமிட்டட் நிறுவனத்தில் கிளிநொச்சி மற்றும் வவுனியா கிளைகளில் மேற்படி வேலைகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளோர் மற்றும் முன் அனுபவம் உள்ளவர்கள் தங்கள் சுய விபரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

#50, 1st Cross Street, Vavuniya
TP :- 077 350 1045
E Mail : austriyap@gmail.com www.austriya.lk
https://www.facebook.com/Austriya

**VACANCIES**

பிரபல கல்லூரியின் யாழ் கிளைக்கு

1. ENGLISH TEACHER
2. COMPUTER TEACHER
3. RECEPTIONIST

E-mail மூலம் விண்ணப்பிக்கவும்

BRITISH COLLEGE OF EDUCATION
email.- bcejaffnabranch@gmail.com

**AUTO CAD**

Civil / MEP / HVAC / Plumbing 2D & 3D

Full time : 2 Weeks Part time : 2 Months

BRITISH COLLEGE 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna.
103, Mannar Rd, Vavuniya.
Pettah Rd, Mannar. Main Street, Mullaithivu.

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி அழகையா



நிருவத்தம்பை ஊரிக்காடு வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி அழகையா 24.03.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு பார்வதி தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அழகையாவின் பாசமிகு துணைவியும் காலஞ்சென்றவர்களான தெய்வானைக்கண்டு, இலட்சுமிப்பிள்ளை கதிரவேலு (ஓய்வு நிலை அதிபர்), தையல்நாயகி, ஆறுமுகம் (C.O) மற்றும் பூரணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் லோகநாதன் (கனடா), கலையழகன் (பிரான்ஸ்), மகேஸ்வரி (ஆசிரியை, யா சிதம்பராக்கல்லூரி), கௌரி, மதியழகன் (லண்டன்), பாஸ்கரன் (கனடா) ஆகி யோரின் அன்புத்தாயாரும் தனரஞ்சினி(கனடா), இளவரசி (பிரான்ஸ்), செல்வக்குமரன் (உதவிக்கல்விப்பணிப்பாளர், வடமராட்சி வலயம்), பாலசுந்தரம், சாந்தி(லண்டன்), சங்கீதா (கனடா) ஆகியோரின் மாமியாரும் கோபிகா (செலான்வங்கி ,நெல்லியடி), துவாரகன், தனஞ்சயன் (கனடா), லக் ஷிகன் (கனடா), கிரிதரன் (கனடா), பிரியங்கா (கனடா), சுபித்தா (பிரான்ஸ்), மேனன், தனுசாலினி, கிருஷிகா(லண்டன்), மதுஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலியதனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நிருவத்தம்பை, ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை

தகவல்
குடும்பத்தினர்.

077 2529794

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**தம்பு அப்பலிங்கம்**
(ஓய்வு பெற்ற கணித ஆசான்)



தோற்றம்
01.01.1927

மறைவு
29.03.2014

திதி: 26.03.2017

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டுகள் மூன்று ஆனால்
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் நினைவுகள்
எம் இதயங்களில்
என்றும் நிலைத்திருக்கும் அப்பா

" அன்பகம் "
ஏழாலை மேற்கு.

குடும்பத்தினர்.

## ஏழாம் ஆண்டின் நினைவுச்சுவடுகள்

தாயின் மடியில்
30.08.1982

இறைவன் அடியில்
13.04.2010



**திருமதி பிறேமலோஜினி பிரபாகரன்**

திதி: சதுர்தசி (26.03.2017)

ஏழு ஆண்டுகள் ஆனதம்மா பிறேமாவே
எமைப் பிரிந்து சென்றதேனம்மா
எப்போது தீர்ந்துவிடும் இத்துயரம்
எமக்கு மட்டும் ஏனிந்த கொடுமையம்மா
ஆண்டு ஏழு ஆனதம்மா - பிறேமாவே
ஆறாதம்மா எம் துயரம் பாரம்மா
அப்பாவையும் உன்னுடனே சேர்த்துவிட்டாய்
உங்கள் ஆன்மா அமைதி பெற
அனுதினமும் வேண்டுகிறோம்.

103/23, முருகமூர்த்தி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 4 ஆம் ஆண்டு நினைவுநாள்

தோற்றம்
20.11.1939

மறைவு
08.04.2013



**திருமதி தனேஸ்வரி சபாரத்தினம்**

திதி: 26.03.2017

ஆண்டுகள் நான்கு உருண்டோடிய போதிலும்
உம்மோடு வாழ்ந்தகாலம் நிழலாய் ஆடுகிறதம்மா - உங்கள்
சிரித்த வதனமும் இணையில்லா பாசமும்
அன்பான மனமும் விருந்தோம்பும் குணமும்
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
எமைவிட்டு நீங்காது என்றும்.

வங்கியடி,
இணுவில் கிழக்கு, (குரும்பசிட்டி)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணவில்லை



வெட்டுக்கட்டை பிள்ளையார் கோயிலடி, சங்குவேலி வடக்கு, மானிப்பாயை சேர்ந்த ஆனந்தராசா நிசாந்தன் (செல்லா) என்பவரை கடந்த 24.03.2017 வெள்ளிக் கிழமை மு.ப 11.00 மணியிலிருந்து சைக்கிளில் சென்றவரை காண வில்லை இவர் கடைசியாக கறுப்பு அரைக்காற்சட்டையும் றோஸ்கலர் சேட்டும் அணிந்திருந்தார். வாய்பேசமாட்டாதவர், விவேகம் குறைந்தவர். இவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 319 9934, 077 424 6039**

## மரண அறிவித்தல்

### Lion வேலுப்பிள்ளை சிவசம்பு

**(MJF, Lions club of Colombo circle district 306B2,
இளைப்பாறிய ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை)**



தோற்றம் 13.10.1938 மறைவு 22.03.2017

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் Frazer Avenue, தெஹிவளை, கொழும்பை வசிப் பிடமாகவும் கொண்ட வேலுப் பிள்ளை சிவசம்பு 22.03.2017 அன்று லண்டனில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதியின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற வர்களான நீர்வேலியைச் சேர்ந்த பப்பாபொன்னம்பலம் நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் நித்தியலக் ஷ்மியின்(இளைப்பாறிய ஆசிரியர் Harrow international School) அன்புக் கணவரும் யாமினி (பொறியியலாளர், USA), சஞ்சீவ்(பஞ்சாப்நஷனல்வங்கி, UK), Dr. பிரதீவ்(USA) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. குலசிங்கம், Dr. சங்கீதா, Dr. மீரா ஆகியோரின் அன்பு மாமனும் நீரஜா, வருண், ஹரேஷ், நேரியன், ஓவியா, கிருஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற நவமணி, காலஞ்சென்ற சற்குணம் மற்றும் சிவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டன் ஹென்டன் மயானத்தில்எதிர்வரும் (02.04.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10.00மணிக்கு இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - சஞ்சீவ் மகன்

## நான்காவது ஆண்டு நினைந்துருகல் அஞ்சலி

**மனிதநேயம் மண்ணில் மரணிப்பதில்லை**

| மண் மகிழ | கண் நெகிழ |
|---|---|
| 05 | 09 |
| . | . |
| 06 | 04 |
| . | . |
| 1955 | 2013 |



### Lion மார்க்கண்டு கிரிதரன்

**அகில இலங்கை சமாதான நீதிவான்**
**விமாகி - உரிமையாளர்**

**திதி : 26.03.2017**

அன்பு முகம் கண்டு ஆண்டு நான்கு ஆனதுவோ
அழியா நினைவலைகள் எம் இதயத்தில்
அணையற்ற வெள்ளமாக பெருகுகிறதே
ஆனாலும் அது நெஞ்சத்தை அனலாய் சுடுகிறது
காலம் மனப்புண்ணை ஆற்றும் என்பது
காலம் கடந்த பொய்யாய்த் தெரிகிறது
வாழ்ந்து முடிந்த காலம் வதையாய் தெரிய
உங்களிடம் வந்துவிட துடியாய் துடிக்கிறது மனம்.

**உயிரோட்டமான உங்கள் இனிய நீங்கா நினைவுகளுடன்**

**தொலைபேசி 077 770 1523**

அன்பு மனைவி றோகினி கிரிதரன்
ஆசை மகள் கிரிதரன் அம்ரிஷா.

---

**பாவனையில் உள்ள வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு**

இரட்டைக்கதவு LG குளிர்சாதனப் பெட்டி, LG சலவை இயந்திரம், Lumala ladies சைக்கிள், Rice cooker மலிவான விலையில் விற்கப்படும்.

**077 622 6091**

**வாடகைக்கு வீடு தேவை**

ஓய்வு பெற்ற இருவர் கொண்ட குடும்பத்திற்கு யாழ் பல்கலைக் கழகத்தில் இருந்து 4 மைல் சுற்றாடலுக்குள் முழுமை யாகவோ அல்லது பகுதியாகவோ வீடு வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு

**076 939 2105, 071 861 7998**

**யாழ்ப்பாணத்தில்வீடு விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு திரு நெல்வேலிச் சந்தியிலிருந்து கொக்குவில் சந்திக்குப் போகும் ஆடியபாதம் வீதியில். மருத்துவ பீடத்துக்கு அருகில் வீடு, கிணறு, நாற்பக்கமும் மதிலுடன் 21/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு

**077 899 3859**

**வீடு காணி விற்பனைக்கு**

கொள்ளுப்பிட்டி காா்மல் வீதியில் 7.2 P காணி உடன் விற்பனைக்குண்டு. (Galle Road, Liberty Plaza, Duplication Road, Bishops College அருகில்) IP-85 Lakhs விலைபேசித்தீர்மானிக்கலாம். தொடர்புகளுக்கு

**077 3506 089 / 077 7587 566**

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 5 Kg மேற்பட்ட பொதி 800/=
UK - 11 Kg மேற்பட்ட பொதி 500/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

**திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd.**
T.P. :- 077 755 4528
யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி, பருத்தித்துறை, சங்கானை, கிளிநொச்சி.

**உடல் எடை குறைய வேண்டுமா?**

- உடல் எடை குறைக்க வேண்டுமா?
- ஊளைச்சதையா?
- வயிறு மார்பு குறைக்க வேண்டுமா?
- எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா?
- 100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (டொனிக் குளிசை. கிறீம்)

**ஆச்சரியம் 10 நாள்களில் வயிறு மார்பு குறைக்கும் கிறீம் எம்மிடம் உண்டு**
விலை 3500/= 5500/= 9000/=
**இதனைப் பாவித்து 10 நாள்களில் அபரிதமான மாற்றத்தை உணர்வீர்கள்**

பதிவு இல: 16168
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
077 210 6155

**MAJESTIC CINEPLEX** A Ceylon Theatres Cinema Jaffna
**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

---

**Vacancy (தேவை)**

தெஹிவல, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, நுகேகொட, கிருலப்பன, ரத்மலான மேலும் பல இடங்களில்உள்ள எமது தனியார் நிறுவனங்களுக்கு பாதுகாப்பு அதிகாரிகள் தேவை .தகுந்த சம்பளம் வழங்கப்படும். வயது 60இற்கு உட்படவர்கள். உணவு தங்குமிடம் செய்து தரப்படும் முன் அனுபவம் தேவை இல்லை பயிற்சி அளிக்கப்படும். **விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துக்கு உடன் அழைக்கவும்.**

**072 720 0005, 011 721 4444, 072 6999886**
292 B 2/1, Havelock Road, Colombo - 05

## மரண அறிவித்தல்

### திருமதி விசாலாட்சி நடராசா



மணல் வீதி மட்டுவில் மத்தி சாவகச் சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி நடராசா 25.03.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் இராமலிங்கம் நடராசா வின் (ஓய்வு பெற்ற இயந்திர இயக்குனர்) அன்பு மனைவியும் ஸ்ரீகாந்தா (உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர், தென்மராட்சி) அன்பு தாயாரும் சசிகலாவின் அன்பு மாமியாரும் மஞ்சுகா, தனுஷ் ஆகியோரின் பாசமிகு போத்தியும் நெல்லியடியைச்சேர்ந்த சிவராசா, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ரகுபரனின் (Soft logic) மாமியாரும் கந்தசாமி(அருள்நாயகி புத்தகசாலை), அருணாசலம் (அருண்ரெக்ஸ், கொடிகாமம்) பரமேஸ்வரி, புவனேஸ்வரி அன்னலட்சுமி, வள்ளிநாயகி ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.03.2017) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 9.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மணல் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**
**தகவல் ந.ஸ்ரீகாந்தா 077 5251720**

## மரண அறிவித்தல்

### சண்முகம் பத்மநாதன்



உரும்பிராய்கிழக்கைபிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட சண்முகம் பத்மநாதன் 24.03.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் பவளம் தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்ற தம்பிராசா ஆச்சிமுத்து தம்பதியினரின் மருமகனும் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் தனபாலசிங்கம், மதுரை நாயகி, குணநாயகி, ஜெனநாயகி, செல்வநாயகி, சறோஜினிதேவி ஆகியோரின் சகோதரரும் சந்திரலீலா, திருநாவுக்கரசு, பசுபதி, பரமலிங்கம், குணரட்னம், தயாளன் ஆகியோரின் மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.03.2017 செவ்வாய்க் கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்**
**தகவல் த.திருநாவுக்கரசு(மைத்துனர்)**

## மரண அறிவித்தல்

### கனகசபை வாமதேவன்

**(சமாதான நீதிவான், பஜனைச்சபை செயலாளர், வழக்கம்பரை, உதயன் செய்தியாளர்)**

பண்ணாகத்தைச் சேர்ந்த கனகசபை வாமதேவன் 25.03.2017 சனிக்கிழமை வழக்கம்பரை முத்துமாரி அம்மன் பாதாரவிந்தங்களை சரணடைந்துவிட்டார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரி (நூலகர் யா/வட்டு இந்துக்கல்லூரி), பூரணி, சாந்தினி (ஜேர்மனி), கோமதி (பொறியியலாளர் முன்னாள் விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜீவன், பிரேமகுமார், துரையரங்கன் (ஜேர்மனி), பிரணவரூபன் (பொறியியலாளர் UK) ஆகியோரின் அன்பு மாமனும் ஜஸ்வர்யன், வேதநிலவன், நகுல் (ஜேர்மன்), தன்வி (UK) ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம், திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பண்ணாகம், சுழிபுரம்.**
**தகவல் : குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீண்டும் படுதோல்வி




இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் 90 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பங்களாதேஷ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் இக்பாலின் மிரட்டல் சதத்தால் நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 324 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக இக்பால் 127 ஓட்டங்களையும், சகிப் அல் ஹசன் 72 ஓட்டங்களையும், ரகுமான் 54 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லக்மல் 2 இலக்குகளையும், குமார, சமீர, சன்டகன் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 31 ஓட்டங்களுக்கு முன்வரிசையை இழந்து தடுமாறியது. சந்திமல் சிறிது போராட்டத்தை வெளிப்படுத்தி அரைச் சதம் கடந்தார். அவரின் ஆட்டமே இலங்கையின் சார்பாக வெளிப்பட்ட அதிசிறந்த ஆட்டமாகும். சீரான இடைவெளியில் இலக்குகள் சரிய 234 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை.

பந்துவீச்சில் ரகுமான் 3 இலக்குகளையும், மோர்ரசா, மிராஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், அகமட், சகிப் அல் ஹசன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். இக்பால் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)

## சிமித் மற்றுமொரு சதம் ஆஸி. சிறந்த ஆரம்பம்

இந்தியாவுக்கு எதிரான நான்காவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில், ஸ்ரீவ் சிமித்தின் சதம் கைகொடுக்க சிறந்த ஆரம்பம் கண்டது ஆஸ்திரேலிய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக ரென்சொவ் மற்றும் வோர்ணர் இருவரும் களமிறங்கினர். முதலாவது பந்துப்பரிமாற்றத்தில் முதலாவது பந்திலேயே வோர்ணர் கொடுத்த பிடியெடுப்பை தவறவிட்டார் கருண் நாயர். ஆனால் இணைப்பாட்டம் நீடிக்கவில்லை. ஆஸ்திரேலியா 10 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் வீழ்த்தப்பட்டார் ரென்சொவ். சிமித் வோர்ணர் இணை சிறப்பாகப் போராடியது. வோர்ணர் அரைச்சதத்தையும் சிமித் சதத்தையும் பதிவுசெய்தனர். அறிமுக வீரர் குல்தீப் யாதவ் சிறந்த பந்துவீச்சை வெளிப்படுத்தினார். அவர் வோர்ணர், ஹான்ட்ஸ்கொம், மக்ஸ்வெல், கும்மின்ஸ் போன்ற முக்கிய இலக்குகளை வீழ்த்தினார். சிமித்தை வெளியேற்றினார் அஸ்வின். 300 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது ஆஸ்திரேலியா. (ம)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

S-lon யாழ் பிராந்திய விநியோக நிலையத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

01. சாரதிகள் சாதாரண ,கனரக வாகனங்கள் ஓட்டுவதற்கான தகுதியிருக்க வேண்டும்.

02. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இரவு,பகல் வேலைசெய்யக்ககூடியவர்கள்

சக தொழிலாளர்களுடன் இணைந்து வேலை செய்யக்ககூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விண்ணப்பிக்க விரும்புபவர்கள் திங்கட்கிழமை 27.03.2017 மு.ப 10.00 மணிக்கும் பி.ப 1.00 மணிக்கும் இடையில் பின்வரும் விலாசத்தில் நேரில் சமுகமளிக்கவும்.

**உதயன் Guest House (கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) 392, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

**021 493 5555**

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கும் Dynamic Organization நிறுவனத்தின் புதிதாக திறக்கப்படவிருக்கும் கிளிநொச்சி, மன்னார், வவுனியா கிளைகளுக்கும் யாழின் புதியகிளைக்கும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. முன் அனுபவம் தேவையில்லை கவர்ச்சிகரமான சம்பளம் . கல்வித்தகைமை G.C.E O/L,A/L நேர்முகத்தேர்வுக்கு தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு.

**077 664 4442, 021 567 9001** — **No.74, Kannathiddy Road, Jaffna**

## உடன் வேலைவாய்ப்பு

அச்சுவேலி கைத்தொழில்பேட்டையில் இயங்கும் தொழிற்சாலை ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.

* கவர்ச்சிகரமான சம்பளம்
* EPF,ETF
* மேலதிகநேர வேலைக்கொடுப்பனவு
* பகுதி நேர வேலைவாய்ப்பு.

01. கடைச்சல் ,இயந்திர இயக்குனர். (05 வருட அனுபவம்)
02. வெல்டர், ஆர்க் வெல்டிங், காஸ் வெல்டிங். (03 வருட அனுபவம்)
03. கம்பி ஆணி, போல்ட் ஆணி இயந்திர இயக்குனர். பழக விரும்புபவர்களும் இணையலாம்.
04. கூலித்தொழிலாளர்கள் ,பார ஊர்திகளில் பொருள்கள் ஏற்றி இறக்குதல் மற்றும் துப்புரவாக்கல் வேலைகள்.

தொடர்புகளுக்கு.

**076 548 4683/021 205 8464**

Diploma in
**Teaching**

UNIVERSITY of CAMBRIDGE
AMI
City & Guilds



நீங்களும் சர்வதேச தகைமையுடைய ஆசிரியராகுங்கள்

உலகில் எந்தவொரு நாட்டிலும் இலகுவாக வேலை வாய்ப்பினை பெறக்கூடிய

- Diploma in English Teaching
- Diploma in Primary Teaching
- Diploma in Montessori Teaching

வெற்றிகரமாக பாடநெறியினை பூர்த்தி செய்யும் மாணவர்கள் அனைவருக்கும் சர்வதேச பாடசாலைகளில் வேலை வாய்ப்பு பெற்றுத்தரப்படும்

Duration : 8 Months
Industrials Training - 4 Months

More information : 0777-596148, 011-4377115

BRITISH COLLEGE OF EDUCATION
23, KACHCHARI NALLUR RD, JAFFNA. TEL : 021-4927113
103, MANNAR RD, VAVUNIYA. TEL : 024-4930041

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரப்பகுதி, நல்லூர், கந்தர்மடம், பலாலி வீதி, அரசடிவீதி, நாச்சிமார் கோயிலடி, ஆனைப்பந்தி, நாவலர்வீதி, பருத்தித்துறை வீதி, ஆகியபகுதிகளில் கொமட் வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.

**தொடர்பு. 077 936 1390**

## வாடகைக்கு உண்டு

யாழ் நகரை அண்டிய பகுதியில் அறைகள் (Rooms) வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு. **077 7283 811**

## வேலைவாய்ப்பு

சம்பளம் 35000 + மேலதிக வேதனம், உணவு தங்குமிடம் இலவசம். வென்னப்புவ, சிலாபத்தில் நாரிழை(Fibre), ஒடு (Tile), ஆடைத் தொழிற்சாலை(Garment) மற்றும் ஏனைய தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புண்டு. வாராந்த முற்பணம். தொடர்புகளுக்கு

**071 865 2510/077 104 2510**

## வேலையாள்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வாகன உதிரிப் பாகக்கடைக்கு வேலையாள்கள் தேவை. (எம்மிடம் TVS Original ) மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களை நியாயமான விலையில்பெற்றுக் கொள்ளலாம்.

**11/ 5, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்**
**070 344 8475, 076 825 9928**

## பதவி வெற்றிடம்

**யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும்** Leading Pest Control **கம்பனிக்கு பணியாளர்கள் தேவை.**

* Marketing Executive with Valid Driving/Riding license
* விண்ணப்பதாரி போதியளவு கல்வி தகமை (O/L) கொண்டிருத்தல் வேண்டும் (அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்)
* 30 வயதிக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
* அடிப்படை சம்பளம் 20 000 + சலுகைகள்

Technicians

கல்விதகைமை(O/L) சரளமாக ஆங்கிலத்தில் பேசக்கூடியவர் விரும்பத்தக்கது 10 நாள்களுக்குள் தங்களது சுயவிவரத்தை (CV) Termite.com@gmail.com இல 06 புகையிரத லேன், சுண்டுக்குளி ,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**தொடர்பு .076 315 6802, 0214927626**

## மணமக்கள் தேவை

1986, பூரம் நட்சத்திரத்தில் பாவம் 18 1/ 2 வெளிநாட்டு மணமகனுக்கு மணமகள் தேவை. 1987இல் பிறந்த மணமகனுக்கும் 1991இல் பிறந்த பெண்ணுக்கும் NRC மண மக்கள் தேவை. 1985 இல் பிறந்த ஜேர்மன் PR உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. உள்நாட்டு, வெளிநாட்டு குறிப்புகள் உண்டு.

அலுவலக வேலைக்கு பெண் தேவை.

**075 636 7361**

## வீட்டுவேலைக்கு பணிப்பெண் தேவை

வீட்டுவேலைசெய்யக்கூடிய பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம், தங்குமிட வசதிகள் உணவு, மருந்து தேவைகள் வழங்கப்படும். வயது 20 - 65.

**யாழ்ப்பாணம்-076 985 8670, 076 984 1560**

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல கடை ஒன்றிற்கு ஆண்/பெண் **வேலையாள்** தேவை.

**யாழ்ப்பாணம்-077 037 0677**

## ஜப்பான் சைக்கிள் மலிவு விற்பனைக்கு

யாழ். மண்ணில் மீண்டும் உதயம் Original Japan Ladies & Gents சைக்கிள்கள். R/C மலிவு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 037 0677

**கொட்டடி லைடன் சந்தி, யாழ்ப்பாணம்.**

## வெள்ளை சல்லி விற்பனைக்கு

3/4 கியூப் 5 நூல் சல்லி 7500
3/4 கியூப் 3/4 நூல் சல்லி 6500
3/4 கியூப் 1/2 நூல் சல்லி 5000

**076 978 3484**

அரச, தனியார் துறையில் தொழில் புரிபவர்களுக்கான சனி, ஞாயிறு மற்றும் இரவு நேர பாடநெறிகள் ஆரம்பமாகின்றன

Diploma in / Spoken
**English**

| | |
|---|---|
| Monday to Thursday | 6pm to 8pm |
| Sat. & Sunday | 9am to 1pm |
| Sunday only | 1pm to 5pm |

Spoken
**Sinhala**

| | |
|---|---|
| Monday & Wenesday | 6pm to 8pm |
| Sat. & Sunday | 3pm to 5pm |

BRITISH COLLEGE OF EDUCATION
23, Kachcharinallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Street, Mannar. Tel : 023-4924124
Hot Line : 0777-596148

## சேவை நலன் பாராட்டும் 60 ஆவது பிறந்த தின நல் வாழ்த்தும்



வேலணை பிரதேசசபையில் பிரதம முகாமைத்துவ உதவியாளராக சேவையாற்றி 2017.03.26 ஆம் திகதி இன்று சேவையில் இருந்து ஓய்வு பெறும்

**திருவாளர் ஐயாத்துரை குருச்சந்திரநாதன்**

வேலணை பிரதேசசபையதனில் விரும்பிடவே பதினெட்டு ஆண்டுகளாய் சீலமுடன் சிறப்பாக சேவையாற்றி செயல்வீரன் எனத்திகழ்ந்த ஐயா குருவே வாலிபன் போல் இருந்தாலும் அறுபதாண்டு வந்திடவே ஓய்வு பெற்றீர் உங்கள் வாழ்வு பாலினோடு பழம் தேன் கலந்தது போல் பல்லாண்டு சுகத்தோடு வாழ் வாழ்......

அவர்கள் தமது சேவைக்காலத்தில் எமது சபைக்கு ஆற்றிய சேவையை பாராட்டுவதுடன் அவரின் ஓய்வுக்காலம் சிறுடனும் சிறப்புடனும் அமைய வேண்டும் என்று நயினை நாகபூசனி அம்பிகையை பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர்
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ,பிரதேசசபை வேலணை.

கனடாவில் நிரந்தர குடியேறல் வேலைவாய்ப்பு கல்வி கருத்தரங்கு

இலகுவான அரிய வாய்ப்புகள் தவறவிடாதீர்கள்

குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேறலாம்

நாள்-26-03-2017
இன்று
மாலை 03 மணி

இறுதிச் சந்தர்ப்பம்
முற்பதிவு அவசியம்
V2 Travels
0768226236
49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்

## பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவரை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளத்துடன் உணவு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

**தொடர்பு: 077 449 0872/ 076 549 5855**

வடக்கின் முன்னணி பிறிண்டிங் நிறுவனத்திற்கு, பின்வரும்

## வேலையாற்கள் தேவை

- வரவேற்பாளர்
- கணனி டைப்பிங், டிசைனிங் (ஆண், பெண்)
- ஓவ் செற் மைன்டர்
- புத்தகம் கட்டுநர்
- உதவியாளர், பழகவிரும்புவோர்,
- பகுதிநேர வேலையாட்கள்

தங்குமிடம் இலவசம் உணவு வசதி.

கவர்ச்சிகரமான திறமைக்கு ஏற்ப சம்பளம்

நேரில் வரவும் (27.28.29.30.31 - 03.2017)

T.P :0783016203

K.K.S Road, Jaffna. காங்கேசன்துறை வீதி, யாழ்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2858 திகதி: 25.03.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 05 37 46 73 C

போனஸ் இல. 08 திங்கட்கிழமை ஜக்பொட் ரூ. 53,524,277/-

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

நீல நிற டிக்கட்டுக்கள் 27 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL சுப்பர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 632
சீட்டிழுப்பு திகதி 25.03.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 06 38 43 70 T

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 40, 000, 000/=

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

ஊதா நிற டிக்கட்டுக்கள் 27.03.2017 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Development Fortune அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 28
சீட்டிழுப்பு திகதி 25.03.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 18 19 24 61 | சுப்பர் இலக்கம்: 05 | அதிர்ஷ்ட மாதம்: நவம்பர்

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| 9, 335, 562/= | 2, 000, 000/= | 1, 844, 290/= |

2017.03.30 திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 5464-7 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org